வெளியீடு 18-02-2000 Issued 18-02-2000

397/2000.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 19, 1999 - தொகுதி 73 - எண் 2

**Monday, 19th April, 1999—Volume 73 - No. 2**

...ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
...Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

V211, 31N99.
N99.73-2.
221802

[Price Rs. 3.00

397/2000.

19-04-1999

# உள்ளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 221-253

2. அறிவிப்புகள்—

(அ) வினாக்களுக்கான விடைகளை உடனடியாக துறைகள் அனுப்பி வைத்தல். 254

(ஆ) உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி ஏற்பாடு. 270

(இ) தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆட்சிமன்றப் பேரவைகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு 358-359

3. கவன ஈர்ப்பு—

மயிலாடுதுறை-தரங்கம்பாடி இரயில் பாதை நீக்கப்பட்டுள்ள நிலத்தைப் பெற்று நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை அமைத்தல் 254-258

4. அறிக்கை அளித்தல்—

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 258

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள்
(ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு } 258-358

*மாண்புமிகு திரு. க. சுந்தரம் 258-259, 263, 272, 303-304, 323-324, 325, 344-352

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் 263, 269, 280-281, 286-288, 297, 309,310,326, 327, 329-343

*திரு. ந. கருப்பண்ண உடையார் 270-276

*திரு. ந. பாண்டுரங்கன் 276-281

திரு. லி. அய்யலுசாமி 282-284

*திரு. கே.கே. வீரப்பன் 284-290

திரு. சி. வேலாயுதன் 291-295

டாக்டர் காஞ்சனா கமலநாதன் 295-302

திரு. ஜி.கே. மணி 302-307

திரு. ஆர்.ஆர். சேகரன் 307-313

221802



பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் 313-318

*திரு. ரா. சேதுநாதன் 318-323

திரு. மு. அப்பாவு 323-329

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 359

D
V211, 31'N99
N99.73:2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 6, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 ஏப்ரல் 19, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

புலால் உண்ணாதவர்களையும், அதற்காக உயிர்களைக் கொல்லாதவர்களையும் எல்லா உயிரினங்களும் வணங்கி வாழ்த்தும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 421, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**421—**

### கலைக் கல்லூரியில் மேற்படிப்பு

***13479—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

[1999 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 422, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**422—**

### முதுகலைப் பட்ட வகுப்புகள் தொடங்குதல்

*** 15511—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் திரு. ஆ கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரியில் முதுகலைப் பட்ட வகுப்புகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

M.Sc. செயல்முறை அறிவியல் பாட வகுப்பு தொடங்க அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 423, டாக்டர் ஆ ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 19]

**423—**

### அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்

***14352—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைப் படிக்கிறேன்.

செஞ்சி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துவது குறித்த கருத்துரு 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டங்களில் சேர்க்கப்படுவதற்காக மாநிலத் திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. எனினும், அரசின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு, மாநிலத் திட்டக் குழு இத்திட்டத்தை ஏற்கவில்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி அரசு மருத்துவமனைக்கு ஒவ்வொரு நாளும் 900-லிருந்து 1000 புற நோயாளிகள் சிகிச்சைக்காக வருகை தருகின்றார்கள். அங்கே உள் நோயாளிகளுக்கு அனுமதி வழங்கும் வகையில் 58 படுக்கைகளே உள்ளன. மேலும், அந்த அரசு மருத்துவமனையில் 10 மருத்துவர்கள் இருக்க வேண்டிய நிலையில் இப்போது மூன்று மருத்துவர்கள்தான் இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே 10 மருத்துவர்களையும் உடனடியாக நியமனம் செய்வதற்கும், மேலும் அந்த அரசு மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயரத்துவதற்கும் இந்த நிதி ஆண்டிலேயே ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளுடைய சராசரி எண்ணிக்கை 96. புற நோயாளிகளுடைய எண்ணிக்கை 987. அங்கே 3 மருத்துவர்கள் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 6 ஆண் மருத்துவர்களும், 2 பெண்

[1999 ஏப்ரல் 19

மருத்துவர்களும் பணிபுரிய வேண்டும். ஆனால், தேர்வாணையம் மூலம் இன்னும் மருத்துவர்கள் தேர்வு பெற்று அரசுக்குப் பட்டியல் வராத காரணத்தினாலே இடங்கள் நிரப்பப்படவில்லை. அந்தப் பட்டியல் வந்ததும், தேவையான மருத்துவர்கள் அங்கே நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அடுத்த நிதி ஆண்டிலே படுக்கைகளினுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசு மருத்துவமனையில் E.C.G.machine இருக்கிறது X-ray எடுக்கக்கூடிய வசதி இருக்கிறது. ஆனால், machineகளையும் X-ray எடுக்கின்ற உபகரணங்களையும் உபயோகிப்பதற்குரிய technicians இதுவரையில் நியமிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையும் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வட்டத் தலைமை மருத்துவமனைகளில் அன்றாடம் Duty Doctors post செய்யப்படுகின்றார்கள். அவர்கள் பணியிலே இருக்கின்ற காலகட்டத்திலே ஒரு பஸ் விபத்தோ அல்லது வேறு ஏதேனும் விபத்தோ நடந்து, ஐந்து அல்லது ஆறு நோயாளிகள் அவசர சிகிச்சைக்காக அந்த மருத்துவமனைக்கு வந்துவிடுவார்கள் என்று சொன்னால், அந்த மருத்துவர்கள் தங்களுடைய அன்றாடப் பணியை, அதாவது மற்ற நோயாளிகளைக் கவனிக்கும் பணியைச் செய்வதில் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த நிலையைத் தவிர்க்க, அரசு வட்டத் தலைமை மருத்துவமனைகளில் Casualty Medical Officer — அதாவது அவசர சிகிச்சைப் பிரிவிற்கு என்று தனியாக ஒரு மருத்துவரை அமர்த்துகின்ற செயற்குறிப்பை அரசு பரிசீலிக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுள்ள நிதி நிலைமையில் அதைப்பற்றி அரசு பரிசீலிப்பதற்கான வாய்ப்பு இல்லை.



1999 ஏப்ரல் 19]

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 424, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

424—

### துணை மின் நிலையம் அமைத்தல்

***16296—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானலில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா, இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் இந்த ஆண்டு எத்தனை தொடங்கப்படவிருக்கின்றன. அப்படித் தொடங்கப்பட இருக்கிற அந்தத் துணை மின் நிலையங்களினுடைய எண்ணிக்கையை மாவட்டவாரியாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அந்தப் பட்டியலில், தொடர்ந்து சொல்லப்படுகின்ற கூத்தாநல்லூர், பறவைக்கோட்டை துணை மின் நிலையங்கள் இடம் பெற்றிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொடைக்கானல் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பது குறித்த கேள்வியாகும். அது அமைக்கப்படும் என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்கின்ற அந்தக் கேள்விக்குப் பதில், இந்த

[1999 ஏப்ரல் 19

ஆண்டு மின் வாரியத்திலே 60 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான திட்டம் ஏற்கெனவே தீட்டப்பட்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தத் துணை மின் நிலையங்கள் வருமா என்பதுபற்றி இப்போது எனக்குத் தெரியாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவை குறித்து எழுதிக் கொடுப்பாரேயானால், இந்த ஆண்டே அந்தத் துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதிக்கும், அதுபோல தருமபுரி தொகுதியினுடைய சில கிராமங்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு முன்பு துணை வினா கேட்ட உறுப்பினருக்கு பதில் அளிக்கும்போது, விவரம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். உங்களுக்கு மட்டும் என்ன?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினை. சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த பிரச்சினை. அதற்காகக் குறிப்பிடுகிறேன். ஏற்கெனவே இதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன், எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, துணை வினாவைக் கேளுங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதியில் சில கிராமங்களும், அதுபோல என்னுடைய தொகுதியாகிய பெண்ணாகரம் தொகுதிக்கு முழுமையாகப் பயன்படக்கூடிய 110 கி.வாட் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு ஓராண்டு காலம் இயங்காமல் செயலிழந்து இருக்கிறது. அதிலே, மத்தியிலே வரக்கூடிய நிலத்திற்குச் சொந்தக்காரர், பட்ட உரிமையாளர், மாவட்ட ஊராட்சிக் குழுவின் உறுப்பினருடைய கணவர், இப்படி ஒரு நல்ல அந்தஸ்தில் இருக்கக்கூடியவர் தடையாணை பெற்ற காரணத்தால் ஓராண்டு காலமாக அந்தத் துணை மின் நிலையம் செயலிழந்து இருக்கிறது. பல்வேறு அரசியல் கட்சிகளும் போராடின கடந்த வாரம்கூட சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்கள்.



1999 ஏப்ரல் 19]

இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். அவர்கள் உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளுங்கள் என்றும் விரைவில் நிறைவேற்றுவதாகவும் வாக்குறுதியளித்தார்கள். அதன் அடிப்படையில் உண்ணாவிரதம் முடிக்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவிலே அந்தத் துணை மின் நிலையம் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே தனியார் ஒருவர் Stay order வாங்கியதன் காரணமாக அந்தத் துணை மின் நிலையம் இயங்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்திலே இந்த விவரத்தைத் தெரிவித்த பிறகு, மின் வாரியத்திற்குச் சொல்லி அந்தத் தடை ஆணையை நீக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படித் தெரிவித்து இருக்கிறேன். விரைவிலே அதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல், திண்டுக்கல் தொகுதியில் தாடிக்கொம்பு, நத்தம் தொகுதியில் செங்குறிச்சி போன்ற பல்வேறு இடங்களில் 7 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்குப் பரிந்துரைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே திண்டுக்கல் மாவட்டத்தில் 'லைன் லாஸ்' ஏற்படுகிறது. அதனால் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. எனவே, திண்டுக்கல்லில் தாடிக்கொம்பு, கொடைக்கானல் மற்றும் செங்குறிச்சி ஆகிய இடங்களில் இந்த ஆண்டு துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா? அந்த மின்சாரத் தடையை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திண்டுக்கல்லில் சில அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தினை என்னிடத்தில் எடுத்துச்சொன்னார்கள். அப்போதே மின் வாரியத்திற்கு இந்தக் கருத்தைத் தெரிவித்து, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் திண்டுக்கல் பகுதியை புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பட்டியலில் சேர்க்கும்படி ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். இந்த ஆண்டு நிச்சயமாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

[1999 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 425, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

425—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***3850—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, பெரியகல்லப்பாடி மற்றும் அதைச் சுற்றியுள்ள ஆறு கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தண்டராம்பட்டு தொகுதி, பெரியகல்லப்பாடி மற்றும் அதைச் சுற்றியுள்ள ஆறு கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பரிசீலனையில் இல்லை. எனினும், மடுவங்கரை நீங்கலாக ஏனைய ஐந்து கிராமங்களுக்கும் தனித்தனித் திட்டங்கள் மூலம் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டன. மடுவங்கரை கிராமக் குடியிருப்புக்கு நீர் ஆதாரம் நிர்ணயிக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மின் இணைப்புப் பெற்று, வரும் மே மாதத்திற்குள் திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

முற்பகல் 9-40

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 கிராமங்கள் மட்டுமல்லாமல், 150-க்கும் மேற்பட்ட கிராமங்களில், என்னுடைய தொகுதியிலே கடந்த 3 ஆண்டு காலங்களிலே அங்கு வாழ்கின்ற மக்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்



1999 ஏப்ரல் 19]

தொட்டி அமைத்து மிகச் சிறப்பாகக் குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்வதோடு, சாத்தனூரிலே இந்த அணையைத் தாங்கி நிற்கின்ற சாத்தனூர் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் குடிநீர் இல்லாமல் அவதிப்படுகிற காரணத்தினாலே கூட்டுக் குடிநீர்த் திட்ட மதிப்பீடுகளைத் தயார் செய்து அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். சாத்தனூர் அணையிலிருந்து பல்வேறு பகுதிகளுக்குக் குடிநீரை வழங்கிக் கொண்டிருக்கின்ற அரசு, சாத்தனூர் மக்களுக்குக் குடிநீரை வழங்குகிற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துச் செயல்படுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த அறிவிப்பையொட்டி, ஆரம்பத்திலிருந்தே எப்படியும் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு எல்லா இடங்களிலும் ஆய்வுப் பணிகளை முடிந்தவரை மேற்கொள்ள வேண்டுமென்ற உத்தரவை அரசு வழங்கியிருக்கிறது. அத்துடன், அந்தப் பணி முடிந்தவுடன் தோராயமாக மதிப்பீட்டைத் தயாரிக்கச் சொல்லிப் பணித்திருக்கிறோம். அதற்கான காரணம், திட்டங்களை நிறைவேற்றுகின்ற வாய்ப்பைப் பெறுகிறபோதும், நிதியாதாரம் சரிப்பட்டு வருகிறபோதும், அந்தப் பணிகளைத் தொடங்குவதைவிட இவற்றையெல்லாம் முன்கூட்டியே எடுத்து வைத்துக்கொண்டால், பிறகு திட்டத்தைத் தொடங்குவதற்கு இலகுவாக இருக்கும் என்பதால், அந்த அடிப்படையில் இப்படிப்பட்ட நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து, மற்றைய தற்காலிக estimates எல்லாம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பட்டியலிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்வதும் இடம்பெற்று இருக்கலாம் என்று கருதுகின்றேன். இருந்தாலும், முறைப்படி அவை தகுதி பெறுகிற நிலையில், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 426, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

426—

**பேரூராட்சிக்குப் பெயர் மாற்றம்**

***15497—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்திலுள்ள ஆணைக்காரன் சத்திரம் பேரூராட்சி என்ற பெயரை, கொள்ளிடம் பேரூராட்சி எனப் பெயர் மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்திலுள்ள ஆணைக்காரன் சத்திரம் பேரூராட்சி என்ற பெயரையே தொடர்ந்து நீடிக்குமாறு ஏகமனதாக இப்பேரூராட்சி மன்றத் தீர்மானம் 15-7-1998-ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. கொள்ளிடம் பேரூராட்சி என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதைவிட, இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அந்தப் பேரூராட்சியை சிற்றூராட்சியாக ஆக்குகின்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டு இருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. எனவே, பேரூராட்சியாக இருப்பனவற்றுக்கு இப்போது தற்காலிக மாறுதல் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பெயர் மாற்றத்திற்குத் தகுந்த வேலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை. திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணைக்காரன் சத்திரம் என்ற பெயர் அந்தப் பகுதியிலே வாழ்ந்த ஒரு பெரிய மனிதருடைய நினைவாக வைக்கப்பட்டிருப்பதாகவும், எனவே, அந்தப் பெயரை மாற்ற வேண்டாம் என்றும் அந்தப் பகுதியிலிருந்து நேற்று இரவு எனக்குத் தொலைபேசி மூலமாகச் சொன்னார்கள். எனவே, அரசு அதிலே கவனம் செலுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைபேசித் தகவலுக்கு முன்னாலேயே தீர்மானத்தை



இந்தப் பேரூராட்சி நிறைவேற்றியிருக்கிறது. இப்போது பேரூராட்சியாக இருக்கும் நிலையே மாறும்போல் இருக்கிறது. எனவே, பெயர் மாற்றத்தைப் பற்றிக் கவலையில்லை. அப்படி மாற்றுவதாகவும் அரசுக்கு இப்போது எண்ணம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 427, திரு. ச.க. வெங்கடேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

427—

**மானிய விலையில் விதை நெல்**

***18664—திரு. ச.க. வெங்கடேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புது ரக நெல் விதைகளை மானிய விலையில் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தியினை அதிகரிக்க மத்திய அரசின் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கடந்த 10 வருடங்களுக்குள் அறிவிக்கை செய்யப்பட்ட நெல் ரக விதைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.2 மானிய விலையிலும், வீரிய ஒட்டு நெல் விதைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.5 மானிய விலையிலும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தின்கீழ் ஒட்டு ரக நெல் சாகுபடியை ஊக்குவித்து, விவசாயிகளிடையே பரவலாக்குவதற்கு ரூ.1000 மானியத்துடன் வீரிய ஒட்டு ரக நெல் செயல் விளக்கங்கள் அமைக்கப்படுகின்றன.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மையில் விஞ்ஞான ரீதியில் வளர்ச்சி காணும் இந்த நேரத்தில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் அனைத்து விவசாயிகளுக்கும் புது ரக நெல் விதைகளை மானிய விலையில் அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதை நெல் ஒட்டு ரகம், வீரிய ரகம் அறிவிக்கை செய்யப்பட்டு 10 ஆண்டுகள்வரை விவசாயிகளிடத்திலே இதை அறிமுகப்படுத்தி இதன்மூலம் நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்போது அவற்றை மாநில அரசு கிலோ 2 ரூபாய் மானிய விலையிலும், சிறு தானியங்களை 4 ரூபாய் மானிய விலையிலும் வழங்கி வருகின்றது. 1998-99 ஆம் ஆண்டு 10,912 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 203 மெட்ரிக் டன் சிறு தானிய விதைகளும் ரூபாய் 226.25 இலட்சம் மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுக்கக்கூடிய மானியத்தினுடைய அளவை இன்னும் அதிகரித்துக் கொடுக்க முடியுமா? மற்றொன்று, விவசாயிகளிடமிருந்து விதை கொள்முதல் செய்யும்பொழுது, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு இரண்டு ரூபாய்க் குறைத்திருக்கிறீர்கள். மீண்டும் அந்த இரண்டு ரூபாயைச் சேர்த்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக மானியம் வழங்குவதற்கான வாய்ப்பில்லை. விதைப் பெருக்கத் திட்டத்தின்கீழ் கொள்முதல் மானியமாக, சான்று பெற்ற விதைகளை விதைப் பண்ணை விவசாயிகளிடமிருந்து வாங்கும்போது நெல்லிற்கு முந்தைய ஆண்டில் சராசரி உள்ளூர் அங்காடி விலையுடன் 25 சதவீதம் கூடுதலாகவும், அத்துடன் கிலோவுக்கு இரண்டு ரூபாய் பிரீமியம் ஆகவும் வழங்கப்பட்டு, அதனடிப்படையிலேயே இப்போது விதை நெல் கொள்முதல் செய்யப்படுகின்றன. அதைத்தான் நாம் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புது ரக நெல் விதைகள் மற்றும் பல விதைகளைப்



1999 ஏப்ரல் 19]

பற்றி விவசாயிகள் தெரிந்துகொள்வதற்காக உழவர் பயிற்சி முகாம்கள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. அவர்களுக்கு வெறும் 15 ரூபாய்தான் படியாகக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு 50 ரூபாய் வரைகொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பயிற்சி முகாமுக்கு வழங்கப்படுகின்ற அந்த நிதிகூட கடந்த ஆட்சிக் காலத்திலே நிறுத்தப்பட்டு இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அந்தத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதுவும், கூடுதலாக, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு நாம் தந்துகொண்டிருக்கின்றோம். மேற்கொண்டு 50 ரூபாய் வழங்க வேண்டும் என்பதல்ல. ஊக்கப்படுத்துவதற்காகத்தான் அந்தத் தொகை வழங்கப்படுகிறதே தவிர, அவர்களுக்கு ஊதியமாகக் கொடுத்து விவசாயிகள் இதுபோன்ற விவசாயக் குழுக்களிலே பங்கெடுத்துக்கொள்ள அவர்களை ஈடுபடுத்துகின்ற நோக்கம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புது ரக நெல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நெல்லின் பெயர் என்ன என்பதையும் அதேபோல, ஒட்டு ரக நெல்லின் பெயர் என்ன என்பதையும், அது எவ்வளவு மகசூல் அளிக்கிறது என்பதையும், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே இதுபோன்ற நெல் ரகங்கள் வழங்கப்பட்டு வருகின்றனவா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 வருடங்களுக்குள் அறிவிக்கை செய்யப்பட்ட நெல் ரகங்கள் A.T.T. 39, I.R. 64, A.S.T.17, T.P.L. 2,3, A.D.T.42, கோ 45, வெள்ளைப் பொன்னி, P.K.M. 1, A.S.T. 19, A.S.T. 18, T.P.S. 2, கோ 46, A.S.T. 20, M.T.U.2, I.R. 50, K.R.H. 1 போன்ற புதிய ரக நெல் விதைகளுக்குத்தான் இப்பொழுது நாம் மானியம் வழங்கி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 428, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 19

**428—**

**கால்வாயைச் சீரமைத்தல்**

***6020—திரு. மீ.அ. வைதியலிங்கம் :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூர் மலையிலிருந்து பெருங்களத்தூர் சித்தேரிக்குச் செல்லும் நீர்வரத்துக் கால்வாய் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வண்டலூர் மலையிலிருந்து பெருங்களத்தூர் சித்தேரிக்குச் செல்லும் வரத்துக் கால்வாயில் 1996 ஆம் ஆண்டு பெய்த பெரும் மழையின் காரணமாக உடைப்பு ஏற்பட்டு, பின்பு சரி செய்யப்பட்டுள்ளது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கால்வாய் நெடுஞ்சாலைத் துறை சாலை வரையில் சரி செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு, நகருக்கு மத்தியில் 2 கிலோமீட்டர் தூரம் இந்த ஏரி வரையில் செல்லக்கூடிய இந்தக் கால்வாய் தூர் வாரப்படாமல், செப்பனிடப்படாமல் இருப்பதால் வெள்ளப் பெருக்கால் நகரம் பாதிக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எஞ்சியிருக்கிற 2 கிலோமீட்டர் தூரத்தையும் சரி செய்து கொடுக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுகுறித்து என்னிடத்திலே ஒரு விண்ணப்பம் கொடுப்பாரேயானால், அதிகாரிகளோடு கலந்துரையாடி, அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1999 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 429, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**429—**

**நல்லதங்காள் ஆற்றில் அணை**

***6454—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், பொன்னிவாடி ஊராட்சி மன்றப் பகுதியில் நல்லதங்காள் ஆற்றில் அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் மேற்கூறிய திட்டத்தினை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

முற்பகல் 9-50

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் வெள்ளக்கோவில் தொகுதியில் சுமார் 5,000 ஏக்கர் பாசனம் பெற வாய்ப்பை உருவாக்கித் தந்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்தத் தொகுதி விவசாயிகள் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்தத் திட்டப் பணி சம்பந்தமாக, அதை ஒழுங்குபடுத்துவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளையும், அலுவலர்களையும் அந்த அணை அமையவுள்ள இடத்தினுடைய நிலத்தின் உரிமையாளர்களையும் அழைத்துப்பேசி, அவர்களும் அதற்குரிய ஒப்புதலை வழங்கி உள்ளார்கள். அதேபோல, கடந்த மாதம் அந்தத் திட்டத்திற்குரிய பணியாளர்கள் இருப்பிடம்

[1999 ஏப்ரல் 19

மற்றும் அலுவலகம் கட்டுவதற்குரிய ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார்கள். ஆனால், அதையும் ஒத்தி வைத்துவிட்டார்கள். ஆகவே, அப்பணிகளை விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே எப்படி வேலைகளைப் பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோருவது என்பது குறித்து அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருந்தது. அரசாங்கமும் அதற்கான ஒப்புதலை வழங்கிவிட்டது. அடுத்த மாதத்திற்குள் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 430, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**430—**

## பேருந்து இயக்குதல்

***5438—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியிலிருந்து சேரிவடி வாய்க்கால், மஞ்சனவாடி, அய்யம்பேட்டை, வேர்குடி, அன்னுகுடி வழியாக வடபாதிமங்கலம் வரை பேருந்து இயக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட தடத்தில் அய்யம்பேட்டை முதல் அன்னுகுடி வரை 5 கி.மீ. தூரம், பேருந்து வசதி பெறாத பகுதியாகும். மற்ற பகுதிகள் அனைத்தும் பேருந்து வசதி பெற்ற பகுதிகளாகும். அய்யம்பேட்டை-அன்னுகுடி சாலை பல இடங்களில் பழுதடைந்து, பேருந்து இயக்கத் தகுதியற்ற நிலையில் உள்ளது. எனவே, அய்யம்பேட்டை முதல் அன்னுகுடி வரை பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.



1999 ஏப்ரல் 19]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற அந்த 5 கிலோ மீட்டர் சாலைகளும், மற்ற இடங்களிலே பேருந்து ஓடிக் கொண்டிருக்கிற சாலைகளைவிட மிகவும் பழுதடைந்த சாலைகளாக இல்லை. ஆகவே, அங்கே பேருந்தை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற 6 மாத காலத்திற்குள்ளாக கும்பகோணத்திலே ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அதில் கலந்து கொண்டார்கள். அதிலேயே, அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. அந்த வழித்தடம்தான் இது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, மறுபரிசீலனை செய்து அந்த வழியாகப் பேருந்தினை இயக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அவ்வளவு முக்கியமாக இருந்திருக்குமானால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்த இரண்டு வழித்தடங்களிலே ஒன்றை அதற்குக் கொடுத்திருக்கலாம். இருந்தாலும்கூட, இந்த 5 கிலோமீட்டர் தூரத்திலே பேருந்து வசதி இல்லாமல் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிற்றுந்தினை அந்தப் பகுதியிலே இயக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். முடியாவிட்டால், வருங்காலத்திலே அரசு இதுகுறித்துப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 431, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**431—**

## கூகையூர் ஆற்றில் பாலம்

***10555—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 ஏப்ரல் 19

கடலூர் மாவட்டம், கூகையூரையும், பெரம்பலூர் மாவட்டத்தையும் இணைக்க கூகையூர் ஆற்றில் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கூகையூரையும், பெரம்பலூர் மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய கூகையூர் ஆற்றின் பாலம், எதிர்வரும் NABARD திட்டத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆமெனில், வரும் நிதியாண்டிலேயே பரிசீலிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என உறுதியளிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 432, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**432—**

### நெடுஞ்சாலையை விரிவுபடுத்துதல்

*** 11180—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆழ்வார்திருநகரி-சாத்தான்குளம் (வழி) நாசரேத் நெடுஞ்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 433, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 19]

**433—**

### ஆலயத்தைச் செப்பனிடல்

***16037—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், சோலையார்பேட்டை வெலக்கல்நத்தம் ஊராட்சி நந்திபெண்டா நந்தீஸ்வரர் ஆலயத்தைச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 434, திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**434—**

### அங்காடி வளாகம் கட்டுதல்

***25842—மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, எழும்பூர் தொகுதியில் குயப்பேட்டையிலுள்ள அருள்மிகு கந்தசாமி கோவிலுக்குச் சொந்தமான அங்காடி மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதால், அதை இடித்துவிட்டுப் புதியதாக அங்காடி வளாகம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1999 ஏப்ரல் 19

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வணிக வளாகம் கட்ட போதிய நிதி வசதி இத்திருக்கோவிலில் இல்லாதபோதிலும், பழைய அங்காடியைச் சீரமைத்து, புதியதாக 80 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்ட ரூ.22.50 இலட்சத்தில் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி ஆதாரம் குறித்துப் பரிசீலித்த பிறகு மேல் நடவடிக்கை தொடரப்படும்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பழுதடைந்த அங்காடியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டதோடு அதைக் கட்டித் தருவதற்குப் போதுமான நிதி வசதி அந்தக் கோவிலுக்கு இல்லையென்றாலும்கூட, அதைக் கட்டித் தர வேண்டுமென்ற ஆர்வத்திலே ஓர் உத்தேச மதிப்பீட்டைத் தயார் செய்திருக்கிறார்கள். அதுகுறித்து மிகுந்த மகிழ்ச்சி. ஆனால், நிதியாதாரம் குறித்துப் பரிசீலித்த பிறகு மேல் நடவடிக்கை தொடரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நான்கு, ஐந்து வட்டங்களுக்கு அது ஒன்றுதான் பெரிய அங்காடி. எனவே, அந்த அவசர அவசியத்தைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாகப் பரிசீலித்து, அந்த அங்காடியைக் கட்டித்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டுதான் நேரடியாகப் பார்வையிட்டு, அதற்கான உத்தேச மதிப்பீட்டைத் தயார் செய்துள்ளோம். எனினும், பொதுவாக, அந்தக் கோவிலுடைய வருமானம், ஓர் ஆண்டுக்கு 2,50,834 ரூபாய்தான். எனவே, வருமானம் அந்தக் கோவிலுடைய அன்றாட நடவடிக்கை அல்லது ஆண்டுதோறும் உள்ள நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுகிறது. எனவே, அதிலிருந்து இந்த நிதியைப் பெற்று ஓர் அங்காடி அமைப்பதற்கு வாய்ப்பில்லை. எனினும், அதனுடைய இன்றியமையாமையைக் கருதியும், அந்தப் பகுதியினுடைய



1999 ஏப்ரல் 19]

முக்கியத்துவம் கருதியும் வேறு நிதியிலிருந்து மாற்றம் செய்து, கட்டி, பல பேர் வாடகையிலிருந்து கழித்துக்கொள்ளக்கூடிய ஏற்பாட்டை இந்த அரசு செய்யும். உறுதியாக அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 435, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**435—**

**நீதிமன்றத்திற்கு வழக்குரைஞர்கள் அறை**

***16194—திரு. டி. அமரமூர்த்தி:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நூற்றாண்டு விழாக் கொண்டாடிய திருச்சி மாவட்ட நீதிமன்றத்திற்கு வழக்குரைஞர்கள் அறை கட்டித்தர அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளியில் ரூ.54.50 இலட்சம் செலவில் வழக்கறிஞர் அறைகள்—Law Chambers—கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சியிலே வழக்கறிஞர்களுக்காக அறைகள் கட்டித் தருவது பரிசீலனையில் இருக்கிறது என்று கூறினார்கள். அதை வருமாண்டில் நிச்சயமாக எடுத்துக்கொண்டு உடனடியாகக் கட்டித் தருவார்களா? அதுபோல மாவட்டத் தலைநகரங்களில், சென்னையில் இருக்கக்கூடிய உயர்நீதிமன்றத்திலே கூட போதிய அறைகள் இல்லாமல், பாவம் நிறைய வழக்கறிஞர்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் பகடி கொடுத்து உங்கள் இடத்தை எடுக்க முடியாது. அந்தச் சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், ஏழ்மையைக் கருதி, அவர்களுடைய நிலைமையைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[1999 ஏப்ரல் 19

எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும், சென்னை உயர்நீதிமன்றத்திலும் அறைகள் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் வழக்கறிஞர்களுக்கான அறை கட்டுவதை பகுதி–2 திட்டத்தில் இணைப்பதற்காக நிதித் துறையைக் கேட்டோம். இசைவு அளிக்கவில்லை. ஆனால், அதற்குப் பிறகும் உயர் நீதிமன்றத்திலேயிருந்து பரிந்துரை வந்திருக்கிறது. வழக்கறிஞர்களுக்கான அறைகள் கட்டப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. எனவே, அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. நிதித் துறை அதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதற்கிடையில் மாண்புமிகு உறுப்பினர் மற்ற இடத்திலேயுள்ள விரிவாக்கம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். நம் தமிழ்நாட்டில் இருக்கிற மாநகராட்சிகளில் திருச்சி மாநகராட்சிதான் வழக்கறிஞர்கள் அறையே இல்லாத ஒரு பகுதியாகும். எனவே, அதற்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் மற்ற மாநகரங்களிலேயுள்ள விரிவாக்கம் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் திருச்சி வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து தொலைபேசியிலே தொடர்புகொண்டு, இதுகுறித்து கேட்கச் சொன்னார்கள். ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் அங்கே இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல வழக்கறிஞர்களுக்கான அறை ஒன்றுகூட அங்கேயில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அவசியம் அந்த வழக்கறிஞர்களுக்கு 20,30 அறைகளையாவது வரும் நிதியாண்டில் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகரத்தில் சுமார் 600-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் அரசுக்குத் தெரியும். எனவே, இப்போது இந்த ரூ.54.50 இலட்சத்தில் ஏறத்தாழ 27 அறைகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதுகூடப் போதுமானதல்ல என்பது அரசுக்குத் தெரியும். ஆனால் இதற்கு முன்னால், இதுபோன்ற



1999 ஏப்ரல் 19]

வழக்கறிஞர்களுக்கு அறைகள் கட்டுவதற்கு மத்திய அரசு 50 சதவீதம் மானியம் கொடுத்துக்கொண்டு வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அதை நிறுத்திவிட்டது. எனவே இவற்றை மாநில அரசின் பொறுப்பிலேயே செய்ய வேண்டிய நிலையும், நிர்ப்பந்தமும் இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 436, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

436—

## சலுகை விலையில் மீனவர்களுக்குக் கட்டுமரம்

***15930—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காடுகளில் வளரும் மீனவர்களுக்குக் கட்டுமரம் செய்யப் பயன்படும், அல்பீசியா மரங்களை திருநெல்வேலி மாவட்ட மீனவர் சங்கத்தின் மூலமாக சலுகை விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மீனவன் கட்டுமரம் கட்டவேண்டுமென்றால், 5 அ சுற்றளவுகொண்ட 15 அடி நீளமுள்ள 5 மரங்கள் தேவைப்படுகின்றன. சுமார் 35 ஆயிரம் ரூபாய் மரங்கள் வாங்கி, 20 ஆயிரம் ரூபா ஆசாரி கூலி கொடுத்து கட்டுமரம் தயாரித்து, அதன் பின்பு Out Bo Engine பொருத்தவேண்டுமென்றால், அதற்கும் 50 ஆயிரம் ரூபாய்க் மேல் செலவு செய்த பின்புதான் அல்லது ஒரு இலட்சம் ரூபாய்க் மேல் செலவு செய்த பின்புதான் அவர்கள் கடலில் மீன் பிடிக் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அவ்வாறு சென்றால்கூட, 6 நாட்களில் அவர்கள் சாப்பிடுவதற்குக்கூட மீன் கிடைக்க

நிலையெல்லாம் இருக்கிறது. அதை எதிர்த்துத்தான் இன்றைக்கு நாகப்பட்டினத்தில் மீனவர்கள் மானிய விலையில் மண்ணெண்ணை வேண்டுமென்று கேட்டு கடலில் மீன்பிடிக்கச் செல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே மீனவர்களுக்கு நம்முடைய வனப் பகுதியிலே வளர்கின்ற அல்பீசியா மரங்களை இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ ஆங்காங்கே இருக்கின்ற மீனவர் சங்கங்கள் மூலம் கட்டுமரம் கட்டுவதற்காக அமைச்சர் அவர்கள் கொடுத்து உதவுவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அல்பீசியா மரங்களின் அறுவடைக் காலம் 10 வருடங்களாகும். கன்னியாகுமரி கோட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டு அறுவடை செய்ய வேண்டிய அல்பீசியா மரங்கள் கொண்ட தோப்புகளின் எண்ணிக்கை 54. இவற்றில் 27 தோட்டங்கள் அறுவடைக்கு ஏற்றவை அல்ல என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள 27 தோட்டங்களில் 14 தோட்டங்கள் மட்டுமே அறுவடை செய்ய ஏற்றவை எனவும், மீதமுள்ள தோட்டங்கள் இயற்கை, சுற்றுச்சூழல் மற்றும் வன உயிரினப் பாதுகாப்புக்காக அறுவடை செய்ய இயலாதவை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசு ஆணை எண் 362, சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனம், நாள் 21-9-1992-ன்படி கட்டுமரம் செய்யப் பயன்படும் மரத்திற்கு கனமீட்டருக்கு 609 ரூபாய் எனவும், தீக்குச்சி செய்யப் பயன்படும் மரத்திற்கு கன மீட்டருக்கு 87 ரூபாய் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அல்பீசியா மரத்தின் தற்போதைய வெளிச் சந்தை நிலவரம் மேற்படி மரங்களுக்கு முறையே, கன மீட்டருக்கு ரூ.1,250 எனவும், ரூ.650 எனவும் உள்ளது. ஆகவே, உரிய சங்கங்கள் மூலமாக விண்ணப்பங்கள் வந்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு அவர்களுக்கு உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காடுகளில், அதாவது 'வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகளில் உள்ள பலவிதமான மரங்கள்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அவையெல்லாம்



தானாக வளர்வதில்லை. அவற்றை வனத் துறை மூலம் Plantation செய்து இருக்கிறார்கள். 10 ஆண்டுகாலம், 12 ஆண்டுகாலம் பூர்த்தியாகின்றபோது, அந்த மரங்களினுடைய தன்மை கெட்டுவிடுகின்றது. எனவே, உரிய காலத்தில், குறிப்பாக தொடலிக்காடு, கடும்புமூடு, பேச்சிப்பாறையினுடைய சுற்று வட்டாரப் பகுதிகளிலே அந்த மரங்கள் முற்றிப்போய் உள்ளன. அவற்றைக் கண்டறிந்து மீனவ மக்களுக்குப் பயன்படும் வகையில் கூட்டுறவுத் துறையின் மூலம் ஏலம் விட்டு, அந்த மீனவர்கள் நலன் அடையவும், நம்முடைய வனத் துறையின் வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் வீடு கட்டுவது என்பது மிகவும் சிரமமான காரியம். 'கல்யாணம் பண்ணிப் பார்; வீட்டைக் கட்டிப் பார்' என்று பழமொழியே உள்ளது. நடுத்தர மக்கள், ஏழை மக்கள் தேக்கு மரத்தைக் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது. ஆகவே, வருமானம் குறைவாக உள்ளவர்களுக்குத் தேக்கு மரம் சலுகை விலையில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு, தேக்கு மரங்கள் வனங்களில் அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவற்றை நட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஏராளமான தேக்கு மரங்கள் கடந்த காலங்களிலே புயல் காற்றினால் விழுந்து, அவை ஏலம் விடப்பட்டு, 15 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வந்துள்ளது. தனியாக, தேக்கு மரங்களை வெளியே எடுத்து விற்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 437, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

437—

## புதிய விடுதிக் கட்டடம்

***8559—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மங்கலம்பேட்டையில் ஆதிதிராவிட மாணவர்களுக்காக புதிய விடுதிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. நிதி நிலைமைக்கேற்ப, வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம்பேட்டை பேரூராட்சியிலே ஆதிதிராவிட மாணவர் விடுதி கடந்த 20 ஆண்டுகாலமாக இயங்கி வருகிறது. அது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற காரணத்தினால், வாடகைக்கு விடுகின்றவர்கள் அதைக் காலி செய்யச் சொல்கின்றபோதெல்லாம் காலி செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும், வாடகைக்குப் போகின்ற கட்டடத்தில் மாணவர்களுக்கு வேண்டிய வசதி இல்லாமலும் இருக்கிறது. அதனால் கடந்த ஆண்டிலே இதுபற்றி நான் பேரூராட்சியிலே தெரிவித்து 12 சென்ட் நிலத்தை ஆதிதிராவிடர் நலத் துறைக்கு மாற்றி தீர்மானம் போட்டு, அதையும் அரசின் ஆதிதிராவிடர் நலத் துறைக்குத் தெரிவித்து இருக்கிறோம். எனவே, இதற்குக் கொஞ்சம் முன்னுரிமை கொடுத்து—நிதி நிலைமைக்கேற்ப என்று அடிக்கடி தெரிவிக்கிறார்கள்; இருந்தாலும்—கொஞ்சம் கனிவு காட்டி, அந்த மாணவர்களுடைய நிலையைக் கருதி, இந்த ஆண்டு கட்டடம் கட்டித்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களின் கல்வித் தரத்தை



உயர்த்துவதற்கு, அவர்களுக்கு விடுதி வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதும், விடுதிகளைக் கட்டிக் கொடுப்பதும் இந்த அரசினுடைய கொள்கையாக இருந்து வருகிறது. நிதி நெருக்கடி காரணமாக வரும் ஆண்டில் பரிசீலிக்கப்படும் என்று பதில் கூறியிருந்தாலும், இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'இனி வருங்காலத்திலாவது முன்னுரிமை கொடுக்கப்படுமா' என்று கேட்கிறார். நிதி நிச்சயமாக நீதியுடன் நடந்துகொள்ளும். நிதி நெருக்கடியைத் தவிர்த்து, வரும் ஆண்டில் அவருடைய கோரிக்கையின் அவசியத்தை உணர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 438, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

438—

## கிருட்டிணகிரி நீர்த்தேக்க அணையைச் சுற்றுலா மையமாக்குதல்

***10165—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரி நீர்த்தேக்க அணையில் உள்ள பூங்காவை நன்கு பராமரித்து, அழகுபடுத்தி, அணையைச் சுற்றுலா மையமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருட்டிணகிரி நீர்த்தேக்க அணை மற்றும் அங்குள்ள பூங்கா இடங்கள் பொதுப்பணித் துறையைச் சார்ந்தவையாகும். எனவே, அவ்விடங்களைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே சுற்றுலா மையங்களாக குறிப்பிடத்தக்க அளவில் 2 இடங்கள் இருக்கின்றன. ஒன்று, ஒகேனக்கல். அடுத்தது கிருட்டிணகிரி நீர்த்தேக்க அணை. எங்களுடைய பகுதிக்கு அருகிலே கர்நாடக மாநிலம், பெங்களூர் இருக்கிற காரணத்தினாலே, அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற கிருட்டிணகிரி நீர்த்தேக்க அணையைப் பார்த்துவிட்டு, அதற்குப் பின்னால் ஒகேனக்கல் வருகிறார்கள். ஆகவே, இது மிகவும் வருமானம் தரக்கூடிய பகுதியாக இருக்கிற காரணத்தாலே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் சென்ற ஆண்டு அங்கே

[1999 ஏப்ரல் 19

வருகை தந்தபோது, தோட்டங்கள் அமைப்பதற்கும், பூங்காக்கள் அமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து தருவதாகச் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை— சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்தாலும், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தாலும், அந்த நீர்த்தேக்கப் பகுதியை அழகு படுத்தி, சுற்றுலாத் தலமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே சில நேரங்களில் சினிமா படப்பிடிப்புகள்கூட நடக்கின்றன. ஆகவே, அரசுக்கு இதனால் வருவாய் வருகிறது. ஆகவே அரசு இதைக் கவனித்து ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருட்டிணகிரி நீர்த்தேக்க அணை பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும், பொதுப்பணித் துறையின் மூலம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. சுற்றுலாப் பயணிகள் மன நிறைவடையக்கூடிய அளவிற்குப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, சுற்றுலாத் துறையின் மூலமாக, ஒகேனக்கல்லில் தொங்குபாலம் போன்றவை அமைக்கப்பட்டு, அங்கு வரக்கூடிய மக்கள் முழு அளவிற்கு நிறைவு பெற்றிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருட்டிணகிரி நீர்த்தேகக அணை பூங்கா பகுதியில், பொதுப்பணித் துறையின் மூலமாக கடந்த 4 மாதங்களுக்கு முன்பு, ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் செலவில், 3 பகுதிகளாக, அந்தப் பூங்கா பகுதியை அழகுபடுத்த, ஒப்பந்தப் புள்ளிகள் எல்லாம் கேட்டுப்பெற்று, முடிவு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப் பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குவது ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி. நம்முடைய மதிப்பீட்டுக் குழு சென்ற ஆண்டு அங்கே சென்றபோது, அங்கே சுற்றுலாத் தலத்தினுடைய



1999 ஏப்ரல் 19]

தூய்மை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மைல் கல்லுக்கும், 10 அடிக்கு ஒரு முறை, 'எயிட்ஸ் உயிரைக் குடிக்கும்' என்பதைப் போன்று எய்ட்ஸ் பற்றி பல விளம்பரங்கள் பயமுறுத்துகிற அளவிற்கு அங்கே காணப்படுகின்றன. ஏன் இந்த நிலைமை? சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளிலிருந்து வருகிறபோது, அவர்களைப் பயமுறுத்துகிற அளவிற்கு, சொல்லப் போனால் திரும்பி ஓடிச் செல்கிற அளவிற்கு அந்த இடத்தில் மட்டும் அளவுக்கு மீறிய எயிட்ஸ் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பதில் அளிக்க வேண்டும். இந்த அமைச்சரிடத்திலே கேட்க முடியாது, உட்காருங்கள்.

வினா எண் 439, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**439—**

## கதர் கிராமத் தொழில் தொடங்குதல்

***19130—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டியில் கதர் கிராமத் தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எடப்பாடி தொகுதி, கோரணம்பட்டியில் கதர் கிராமத் தொழில் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டியில்

[1999 ஏப்ரல் 19

மிகமிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மிகப் பெருவாரியாக வசித்து வருகிறார்கள். அங்கு ஏராளமாக பனை மரங்கள் இருக்கின்றன. அதிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய பனங்கற்கண்டு, வெல்லம் மற்றும் நாரினால் செய்யக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிலைத் தொடங்க அரசு முன்வருமா? அந்த ஏழையெளியவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரணம்பட்டி பகுதியிலுள்ள மக்கள் விவசாய வேலைக்கும், காட்டு வேலைக்கும் சென்றுவிடுவதால், கதர் நூற்பு மற்றும் பனைத் தொழில் செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. எனவே, அங்கு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் கிராம நூற்பு நிலையம் மற்றும் கிராமத் தொழில் செய்ய அலகுகள் தொடங்கிடும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 440, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**440—**

### மீன்வளர்ப்புப் பண்ணைகள்

***20019—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு சார்பில் மீன் வளர்ப்புப் பண்ணைகள் செயல்படுத்தப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



1999 ஏப்ரல் 19]

(ஆ) தமிழ்நாடு முழுவதும் அரசு, மீன் துறை சார்பாக 15 மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகளைச் செயல்படுத்தி வருகிறது. மேற்படிப் பண்ணையில் உற்பத்தி செய்யும் நுண் மீன்குஞ்சுகளை, துறை சார்பாக 17 இடங்களில் உள்ள வளர்ப்புக் குளங்களில் இட்டு, விரலளவு மீன் குஞ்சுகளாக உற்பத்தி செய்து, பின், பெரு நீர்த்தேக்கங்கள் மற்றும் அரசு நீர்நிலைகளில் விட்டு மீன்களாக உற்பத்தி செய்யப்படுகின்றன. தனியாருக்கும் மீன் குஞ்சுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் பொதுப்பணித் துறை மூலமாகப் பல்வேறு அணைக்கட்டுகளும், உள்ளாட்சித் துறை மூலமாக நூற்றுக்கணக்கான குளங்களும் இருக்கின்றன. அவற்றில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் நலிந்து போயிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு இலவசமாக மீன் குஞ்சுகள் வழங்கப்படுமா? மானிய விலையில் வலைகள் வாங்கிக் கொடுக்கப்படுமா? நீண்டகாலக் கடன் மானியத்துடன் வழங்கி, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை சார்பாகவும், மீன் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாகவும் மீன்கள் வளர்க்கப்பட்டு நீர்த்தேக்கங்களில் விடப்படுகின்றன. அந்த மீன்களையெல்லாம் துறையும், கழகமும் வளர்த்து அவற்றைப் பிடிப்பதற்காக மீனவர்களுக்கு 2:1 என்ற விகிதாச்சாரத்தில், அதாவது துறைக்கு இரண்டு பங்கும், மீனவர்களுக்கு ஒரு பங்கும் என்ற விகிதாச்சாரத்தில் அனுமதி வழங்கப்படுகிறது. சில இடங்களில் உரிமங்கள் (licence) வழங்கி மீன்களைப் பிடிக்க அனுமதி வழங்கப்படுகிறது. அவர்களுக்குக் கடலில் உள்ள மீனவர்களைப் போல அல்லாமல், பரிசல், வலைகள், முதலியவை I.R.D.P. மூலம் வழங்கப்படுகின்றன. அந்தச் சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆண்டு முழுவதும் நீர்நிலைகளில் மீன்பிடிக்கும்

[1999 ஏப்ரல் 19

மீனவர்களுக்கு மட்டும் வீடு கட்டும் திட்டமும் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் வனத் துறை சார்பான கேள்வியில் துணை வினா கோட்கும்போது, மீனவர்களுக்குக் கட்டுமரம், வலை மற்றும் என்ஜின் போன்ற பொருட்களையெல்லாம் வாங்குவதற்கு அவர்களுக்கு அதிகமான பணம் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். இருந்தாலும், தமிழக அரசு சார்பாகவும், மத்திய அரசு சார்பாகவும் அவர்களுக்கு மானியங்களெல்லாம் வழங்கப்படுகின்றன. மேலும் என்ஜினுக்கு மத்திய அரசு, மாநில அரசு சார்பாக மானியம் வழங்கினாலும், டாக்டர் கலைஞர் அவர்கள் வரிச் சலுகை வேறு தந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நாகப்பட்டினத்தில் இப்பொழுது மீனவர்கள் மண்ணெண்ணெய் மானியம் கேட்டுப் போராட்டம் நடத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அதுவல்ல உண்மை. அவர்கள் எரிபொருள், டீசல் போன்ற பொருட்கள் அதிக அளவில் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவை நிர்ணயிக்க வேண்டியது அரசும், கடலோரக் காவல்படையும்தான். ஏனென்றால், அவர்கள் அதிக தூரம் தவறான வழியில் செல்லக்கூடாது என்ற காரணத்திற்காக ஓர் அளவை நிர்ணயித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவை உயர்த்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளர்ப்புப் பண்ணைகள் 15 இடங்களில் செயல்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அவை எந்தெந்த இடங்களில் செயல்படுகின்றன? அதில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த லால்பேட்டையின் பங்கு இருக்கிறதா? அது எவ்வாறு செயல்படுகிறது? எவ்வளவு குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 இடங்களில் மீன் வளர்ப்புப் பண்ணைகளும், 17 இடங்களில் தமிழக அரசு சார்பாக வளர்ப்புக் குளங்களும் இருக்கின்றன. லால்பேட்டை பற்றி தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏரி, குளங்களில் இருக்கிற நாட்டு மீன்கள் அத்தனையும் virus நோயினால் இப்போது செத்துக் கொண்டிருக்கின்றன. இதன் மூலமாகப் பல்வேறு நோய்கள் பொதுமக்களுக்கும் பரவுகின்றன. அந்த நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படுமா? எதனால் மீன் சாகிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் மூலமாக அதுபோன்ற Virus நோய் பரவுகிறது என்ற காரணத்தால், இப்பொழுது இறால் வளர்ப்புக்குத் தடை உள்ளது. மேலும் நல்லமுறையில் அரசு சார்பாக நடத்தப்படும் மீன் பண்ணைகளில் எல்லாம், நோய்கள் வராமல் கட்டுப்படுத்த மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல நிச்சயமாக எந்தப் பகுதியிலும் Virus நோயினால் மீன்கள் பாதிக்கப்பட்டதாக எங்களுக்குத் தகவல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1999 ஏப்ரல் 19

முற்பகல் 10-15

## 2. அறிவிப்புகள்

### (அ) வினாக்களுக்கான விடைகளை உடனடியாக துறைகள் அனுப்பி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அனுமதிக்கப்பட்டு பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள வினாக்களில் இன்றைய நிலவரப்படி 1,916 வினாக்களுக்கான விடைகள் இன்னமும் வரவேண்டியுள்ளன. நடப்புக் கூட்டத் தொடர் தொடங்கிய உடனேயே அனைத்துத் துறைச் செயலாளர்களுக்கும், பேரவைச் செயலாளரால் நினைவூட்டுகள் அனுப்பப்பட்டிருந்தும் இத்தனை வினாக்கள் துறைகளில் நிலுவையாக இருப்பது வருந்துதற்குரியது. இதே நிலை தொடருமானால், நாள்தோறும் ஒரு சில உறுப்பினர்கள் பெயரிலான ஒன்றுக்கு மேற்பட்ட வினாக்களைப் பட்டியலில் சேர்க்க வேண்டிய நிலை ஏற்படலாம். எனவே, இந்த அறிவிப்பின் மூலம், நிலுவையிலுள்ள வினாக்களுக்கு விடைகளை உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அனைத்துத் துறைச் செயலாளர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### மயிலாடுதுறை - தரங்கம்பாடி இரயில் பாதை நீக்கப்பட்டுள்ள நிலத்தைப் பெற்று நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை-தரங்கம்பாடி மார்க்கம் இரயில்கள் நிறுத்தப்பட்டு இருப்புப் பாதைகள் அகற்றப்பட்ட நிலையில் தனியார் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க தமிழக அரசே இரயில்வே துறையிடமிருந்து அந்தப் பாதையை நெடுஞ்சாலைத் துறை மூலம் பெற்று சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது



1999 ஏப்ரல் 19] [திரு. குத்தாலம் பி. கல்யாணம்]

முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பாக நான் கருதவில்லை. மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தைக் காட்டுகின்ற கவன ஈர்ப்பாக நான் இதைக் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதும். அதற்குப் பிறகு பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது:

### அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள, மயிலாடுதுறையில் இருந்து தரங்கம்பாடி வரை அமைந்திருந்த மற்றும் ஏற்கெனவே போக்குவரத்து நிறுத்தப்பட்ட இருப்புப் பாதையின் நீளம் 30.00 கி.மீ. ஆகும். இந்த மார்க்கத்தில் இரயில்கள் போக்குவரத்து நிறுத்தப்பட்டதனால் இருப்புப் பாதை முழுவதும் அகற்றப்பட்டுள்ளது. இரயில்வேத் துறைக்குச் சொந்தமான இந்த 30.00 கி.மீ. தூரம் உள்ள இருப்புப் பாதை நிலத்தை மாநில அரசுக்கு மாற்றி, அந்த மார்க்கத்தில் 9.00 மீட்டர் அகலத்திற்கு புதிதாகச் சாலை அமைத்து அதில் 7.00 மீட்டர் அகலத்திற்கு ஓடுதளம் உடைய தார்ச் சாலை அமைப்பதற்கு தற்போதைய விலை விகிதப்படி தோராயமாக ரூ.13.50 கோடி தேவைப்படும். தற்போது, மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடி செல்வதற்கு தரங்கம்பாடி - மயிலாடுதுறை எனும் சாலை 29.6 கி.மீ. (கி.மீ.0/00-29/6) நீளமுடைய அரசு மாவட்டப் பெருஞ்சாலை, இரு வழித்தட அகலத்துடன் உள்ளது. தற்போது இச்சாலை கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அகற்றப்பட்ட இருப்புப் பாதை மார்க்கத்திற்கு அருகில் இணையாகவே அமைந்துள்ளது. மேலும் தரங்கம்பாடி - மயிலாடுதுறை சாலை கி.மீ. 0/0-11/2 வரை அதாவது தரங்கம்பாடியிலிருந்து ஆக்கூர் வரையுள்ள சாலைப் பகுதி மத்திய அரசால் தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள 8 சாலைகளில் ஒன்றான நாகப்பட்டினம் - சிதம்பரம் - கடலூர் (பாண்டி) சாலை வழித்தடத்தில் இடம் பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில் மயிலாடுதுறையில் இருந்து தரங்கம்பாடி செல்வதற்கு ஏற்கெனவே நல்ல நிலையிலுள்ள அரசு சாலை அமைந்துள்ளதாலும், அச்சாலையின் ஒரு பகுதி (0/0-11/2) தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட உள்ளதாலும் மிகப் பெரும் பொருட் செலவில் ஏற்கெனவே அமைந்துள்ள அரசு சாலைக்கு இணையாக மற்றொரு சாலை அமைக்கப்பட வேண்டிய அவசர அவசியம் தற்போது இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். இந்தச் சாலையை தார்ச் சாலையாக அமைக்க 13½ கோடி ரூபாய் செலவாகும் என்ற விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது ஏற்கெனவே சாலையாக பார்மேஷன் செய்யப்பட்ட நிலையில் இருக்கிறது. அதைச் செய்யவேண்டுமானால் 5 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். அதைக்கூட, கழித்துப் பார்த்தால் 8 கோடி ரூபாய் அளவில் ஒரு நல்ல சாலையை அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலும், தேசிய நெடுஞ்சாலை ஆக்கூரிலிருந்து தரங்கம்பாடி வரை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் வரையுள்ள சாலை தேசிய நெடுஞ்சாலையிலே வரவில்லை. மேலும் குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஆக்கூர் சாலையில் மயிலாடுதுறை, நாகை பகுதிகளிலிருந்து செல்லுகின்ற கனரக வாகனங்களால் போக்குவரத்து இடையூறு நிறைய இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மிகவும் சுருக்கமாக இருக்க வேண்டும்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** எனவே எதிர்காலத்தில் எப்போது வேண்டுமானாலும் தமிழக அரசு பயன்படுத்தும் வகையில் நெடுஞ்சாலைத் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இரயில்வேத் துறையிடமிருந்து இந்தச் சாலையை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதோடு, இந்தச் சாலை முடிகின்ற இடத்தில் தரங்கம்பாடியில் இரண்டு புதிய பாலங்கள் கட்டப்பட்டு, விரைவில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்படுவதற்கான நிலையில் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கு வருகின்றபோது நான் சொல்லக்கூடிய விவரங்களின் அடிப்படையில் இந்த இடத்தை நேரில் சென்று பார்த்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட





இந்தச் சாலை அமைக்கும் இடத்தை நான் ஏற்கெனவே நேரில் சென்று, அவரையும் அழைத்துச் சென்று பார்த்திருக்கிறேன். இரயில்வேத் துறைக்குச் சொந்தமான அந்த இடத்தில் ஏற்கெனவே இரயில்வே பாதை இருந்தது. இப்போது இரயில்வே பாதை அகற்றப்பட்டிருக்கிறது. இந்த இடத்தை இரயில்வேத் துறை முதலில் நமக்குக் கொடுப்பதற்கு முன்வரவேண்டும். அதுவும் free of cost—பணம் இல்லாமல்—இலவசமாக நமது அரசுக்கு அவர்கள் தர முன்வரவேண்டும். அப்படியே தந்தாலும், ஏற்கெனவே தரங்கம்பாடி - மயிலாடுதுறை சாலை ஏறத்தாழ 29.6 கிலோமீட்டர் தூரத்திலே நல்ல சாலையாக இப்போது அமைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அதிலே ஒரு பகுதி தேசிய நெடுஞ்சாலையாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இந்தப் பாதையும் ஏறத்தாழ 30 கிலோமீட்டர் வருகிறது. ஆகவே, ஏற்கெனவே 30 கிலோமீட்டர் அளவில் ஒரு நல்ல சாலை இருக்கிறபோது, தரங்கம்பாடி-மயிலாடுதுறையை இணைக்கக்கூடிய, 30 கிலோமீட்டருக்கு இன்னொரு சாலையை அமைப்பதற்கு ஏறத்தாழ 13½ கோடி ரூபாய் தேவைப்படுகிறது. சாலையில்லாத ஊர்களுக்குச் சாலை அமைக்கின்ற பணியில் இந்த அரசு மிகுந்த கவனம் செலுத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், ஏற்கெனவே நல்ல சாலை இருக்கிற இந்தப் பகுதியில் இன்னொரு புதிய சாலையை அமைப்பதற்கு ஏராளமான நிதியாதாரம் இருந்தால்தான் மேற்கொள்ள முடியும். இப்போது இருக்கிற நிதி நெருக்கடியில் இந்தச் சாலையை உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாது. இருந்தாலும் அந்தப் பகுதியில் தொழிற்சாலைகள் வளருகிறபோது, அந்தத் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களையெல்லாம் கொண்டு போவதற்கு அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வெளியிலே எடுத்துச் செல்வதற்கு வாய்ப்புகள் உருவாகின்றபோது இதுபற்றிப் பரிசீலிக்கலாம். அதற்கு முன்பு, இரயில்வேத் துறையிடமிருந்து இந்த இடத்தை நம்முடைய தமிழக அரசின், நெடுஞ்சாலைத் துறைக்குத் தருவார்களா என்பதற்கும் முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையைப் பொறுத்த அளவில், இடையிலே கவனம் செலுத்தாத காரணத்தினால், ஆக்கிரமிப்புகள் ஏற்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எனவேதான் நான் சொல்கிறேன். சாலை போடுவது சூழ்நிலையைப் பொறுத்து இருந்தாலும்கூட, தமிழக அரசு

[திரு. குத்தாலம் பி. கல்யாணம்] [1999 ஏப்ரல் 19

அந்தச் சாலையைத் தன்வசம் பெறக்கூடிய முயற்சியில் விரைந்து செயல்பட்டு, நெடுஞ்சாலைத் துறையின்கீழ் அது கொண்டுவரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டி, இரயில்வேத் துறைக்குக் கடிதம் எழுதி, எந்தவிதச் செலவும் இல்லாமல் அந்த இடத்தை நெடுஞ்சாலைத் துறைக்கு இரயில்வேத்துறை தரசம்மதித்தால் நெடுஞ்சாலைத் துறை அதை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது. அந்த முயற்சியிலே இந்தத் துறை ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

## 4. அறிக்கை அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கையை அளித்தல், திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவையின் 1998-99 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 10 - பால் வழங்கு செயல் திட்டங்கள்**
**(ஆ) கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு**

**(அ) கோரிக்கை எண் 10 - பால் வழங்கு செயல் திட்டங்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள். மானியக் கோரிக்கை எண் 10 - பால் வழங்கு செயல் திட்டங்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக்



1999 ஏப்ரல் 19] [திரு. க. சுந்தரம்]

கோரிக்கையின்கீழ் ரூ.26,21,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2775, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள வேலூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்குப் புதிய பால் ஏற்றிச் செல்லும் டேங்கர் லாரிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1855, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகபடுத்தும் வகையில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் கடன் தொகையை விரைந்து அளித்திட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3065, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கொள்முதல் தொகையை உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3092, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், கடையாலுமூடு மற்றும் களியல் பகுதிகளில் செயல்படும் பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாகன வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3199, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பால் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் விலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2271, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்கு உட்பட்ட கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க தேவையான அளவு கடன் கொடுத்து உதவ வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4185, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிராமப்புறங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் விலை உயர்த்தித் தர வேண்டியதன்



அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4494, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2831, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மன்னார்குடி தொகுதி, பெருகவாழ்ந்தான் கிராமத்தில் ஒரு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1503, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆண்டிமடம் தொகுதி, வாரியங்காவல், குறிச்சிகுளம், பொன்பரப்பு, ஆண்டிமடம் ஆகிய இடங்களில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்து இருப்பதால் நிதி உதவி அளித்து அவற்றை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2879, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் பால்பண்ணை தொடங்க முன்வரும் ஏழை விவசாயிகளுக்கு மானியத்தோடு கடன் வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 455, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு பால்வளத் துறையில் பணியாற்றும் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3849, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புவனகிரி தொகுதியில் உள்ள சேத்தியாத்தோப்பு பால் குளிரூட்டும் நிலையத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2471, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,21,95,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3667, திரு. பி. வெங்கடசாமி.





**Thiru B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'to discuss the need to start a Milk Supply Society for ladies at Poonapalli in Hosur Taluk ', I move—

"that the sum of Rs.26,21,95,000/- allocated under Demand No.10-Milk Supply Schemes be reduced by Rs.100/-'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களை தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.157,79,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

**@. 361 முதல் 383 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2754, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாலமதி கிராமத்தில் கால்நடை கிளை நிலையத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1938, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதி, இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தூரில் உள்ள புளியம்பட்டி, பில்லுக்குறிச்சி ஆகிய இடங்களில் புதிதாக கால்நடை கிளை மருத்துவமனை நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3081, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெருந்துறை வட்டம், நல்லாம்பட்டி—செங்கம்பள்ளி கால்நடை கிளை நிலையங்களை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3280, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பி. அக்ரகாரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2320, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஜம்பை, வைரமங்கலம், பெரிய புலியூர், சின்ன புலியூர், வரதநல்லூர், பருவாச்சி, பூவாச்சி, அட்டவணை புதூர், முகாதி, ஓடத்துறை, எல்.எம். பாலப்பாளையம், ஓரிச்சேரி, புன்னம் ஆகிய இடங்களில் கால்நடை கிளை மருத்துவ நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4227, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பேராவூரணி தொகுதி, சானகரையில் ஒரு கால்நடை கிளை நிலையம் தொடங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2719, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி வில்லுக்குறி பேரூராட்சியில் பரசேரி கால்நடை பராமரிப்பு நிலையத்தை மேம்படுத்தி மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2799, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மன்னார்குடி தொகுதி, ஆலங்கோட்டை கிராமத்தில் சுற்றுப்புற கிராமங்கள் பயன்படும் வகையில் புதிய கால்நடை கிளை மருத்துவமனை துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1545, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆண்டிமடம் தொகுதி, ஆர்.எஸ். மாத்தூரில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2970, திரு. ந. கருப்பண்ண உடையார்.



**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் சட்டமன்ற தொகுதி இன்னம்பூரில் ஒரு புதிய கால்நடை கிளை நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 539, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3869, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புவனகிரியில் கால்நடைப் பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2521, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வேப்பிலை பொம்மியம்பட்டி, கொங்குப்பட்டி ஊராட்சிகளில் பகுதிநேர கால்நடை மருத்துவமனைகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3652, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'to discuss the need to start Veterinary dispensaries at Mudugam Palli and Uddanapalli in Hosur Taluk', I move—

"that the sum of Rs.157,79,35,000 allocated under Demand No.22-Animal Husbandry be reduced by Rs.100"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4096, திரு. வி. அய்யலுசாமி.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவில்பட்டி தொகுதி குருவிகுளம் ஒன்றியம் மைப்பாறை பஞ்சாயத்தில் புதிய கால்நடை மருத்துவமனை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4572, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தண்டராம்பட்டு தொகுதி, தென்கரும்பலூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 112, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.





**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாங்குனேரியில் உள்ள கால்நடை மருத்துவமனை கட்டடம் இடியும் நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1775, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பனகுடி கால்நடை மருத்துவனைக்குக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.157,79,35,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 384 முதல் 433 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டு அமைச்சர் பெருமக்கள் பதிலும் சொல்லவிருக்கிறார்கள். முதலில், திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களை விவாதத்தைத் தொடங்கி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் ஆவின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி கொடுக்க விரும்புகின்றார்கள் என்பதை அறிவிக்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**கோரிக்கை எண் 10-பால் வழங்கு செயல் திட்டங்கள்**
**கோரிக்கை எண் 22-கால்நடை வளர்ப்பு** —தொடர்ச்சி

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டுக்கான பால் வழங்கு செயல் திட்டங்கள் மானியக் கோரிக்கை எண் 10, கால்நடை வளர்ப்பு மானியக் கோரிக்கை எண் 22 ஆகியவற்றில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் பால் என்பது ஏழைகள் முதல் வசதி படைத்தவர்கள் வரை உபயோகப்படுத்தக்கூடிய தேவையான ஒன்றாகும் என்பதைக் கருத்தில் கொண்டு அந்தத் துறையை நல்ல முறையில் செயல்படுத்தி வரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பால் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 10-30

தமிழகத்திலே முதன்முதலாக 1963-ஆம் ஆண்டுதான் மாதவரத்திலே, பால் பண்ணை, எல்லா நவீன வசதிகளுடன் திரு. குரியன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அவர்களது எண்ணத்திற்கு ஏற்ப அது செயல்படவில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், குஜராத்திலே அன்றாடம் 45 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்கிறார்கள். தமிழகத்திலே, 15 இலட்சம் லிட்டர் பால்தான் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும், தமிழகத்திலே விவசாயிகளிடத்திலே அல்லது பால் உற்பத்தியாளர்களிடத்திலே கொள்முதல் செய்கின்ற விலையானது ரூ.8.50. அதைத்தான் பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பிலே ரூ.9 என்றிருக்கிறது. இன்னும் சில கிராமங்களிலே ரூ.6.50க்குதான் பாலை எடுத்துக் கொண்டு வந்து விற்கிறார்கள். இதையெல்லாம் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பால் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும், அப்படிக் கொடுத்தால்தான், பல இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்வதற்கு வழிவகை கிடைக்கும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே, நிதி விதிக்குப் புறம்பாக ரூ. 10 கட்டிய உறுப்பினர்கள் எல்லாம் தேர்தலிலே நின்றுள்ளார்கள். அது தவறான கொள்கை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறைந்த அளவு கறவை மாடுகளை வைத்துக் கொண்டு, அதிக அளவு பால் உற்பத்தி செய்தால்தான், இலாபம் ஈட்ட முடியும். இன்று மாட்டுத் தீவனத்தினுடைய விலைகள் எல்லாம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அதையெல்லாம் மானிய விலையிலே பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குஜராத் மாநிலத்திலே பின்பற்றி வருகின்ற, அங்கே எப்படி பால் உற்பத்தி முறையைப் பின்பற்றுகிறார்களோ, பாலுக்கு அதிக விலை கொடுக்கிறார்களோ அதைக் கருத்திலே கொண்டு, அதேபோல்,

தமிழகத்திலேயும் பின்பற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். பால் உற்பத்தியாளர் சங்கங்களிலே...

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குஜராத்தை ஒப்பிட்டார்கள். ஒன்றை மட்டும் கவனிக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே உள்ள தமிழகத்திலே நாம் 9 ரூபாய்க்குக் கொள்முதல் செய்கிறோம். ஆனால், குஜராத்திலே கொள்முதல் விலை ரூ. 8.52. அவர்களுடைய விற்பனை விலை ரூ. 11. அப்படி இருந்தால் இன்னும் நல்லமுறையிலே நாமும் உற்பத்தியைப் பெருக்கலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 8.52 என்று சொன்னார்கள். எனக்கு வந்த செய்தியானது ரூ. 8.50 என்று என்னிடம் சொன்னார்கள். ஆனால் நாம் விற்பனை செய்வது ரூ. 11 தான். இதிலே ஒன்றும் கூடுதலோ குறைவோ நான் சொல்லவில்லை. அதிலே வித்தியாசம் ரூ. 2-1/2 இருக்கிற காரணத்தினால், இன்னும் அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு வழிவகை இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில், பால் உற்பத்தியாளர் சங்கத்திலே தலைமைப் பொறுப்பிலே உள்ளவர்கள், எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும்கூட, அவர் நடுநிலையைப் பின்பற்றினால்தான் நிச்சயமாகக் கிராமங்களிலே, ஏழையெளிய, நடுத்தர விவசாயிகளுக்கு அதிகமாக கறவை மாடுகளை வாங்க கடன் கொடுத்து, அதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது, குறிப்பாக என்னுடைய பாபநாசம் சட்டமன்றத் தொகுதியை எடுத்துக் கொண்டாலும்கூட, 64 கிராம ஊராட்சிகள் அதிலே இருக்கின்றன; 4 பேரூராட்சிகள் இருக்கின்றன. இவற்றிலே ஒருசில இடங்களில்தான் பால் வழங்கும் சங்கங்கள் இருக்கின்றன. சென்ற மாதத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகை தந்தபோதுகூட நான் பலவிதமான கோரிக்கைகளை அவரிடத்திலே கொடுத்திருக்கிறேன். அவர்கள் அதை



நிச்சயமாக ஆராய்ந்து, ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு பால் வழங்கும் சங்கம் என்ற நிலையை ஆரம்பித்துக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் பயனடைவதற்கு வாய்ப்பிருக்கும்.

அதேநேரத்திலே, கிராமங்களிலே வேலை இல்லாத, விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற ஏழை மக்கள், பால் உற்பத்தி மூலமாகத் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிலே பால் கொள்முதல் செய்யும் போது 15 நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று விதிமுறையிருந்தாலும்கூட, மூன்று வாரம், நான்கு வாரம் அல்லது 10 முதல் 12 வாரம் வரை பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை. எனவே, இதனையும் கருத்தில் கொண்டு நமது அமைச்சர் அவர்கள் கூடியவிரைவிலே அந்தப் பாலைக் கொடுத்தவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

நல்ல தரமான பசுக்கள் மற்றும் எருமைகள் மூலமாகத் தரமான கன்றுகளைப் பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்தால்தான் அதிகமான பாலினை நாம் உற்பத்தி செய்ய முடியும். ஜெர்சி, பெர்சியன் போன்ற கறவை மாடுகளை எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். தேசிய பிற்பட்ட வகுப்பினருக்கான மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் முன்னேற்றக் கழகம் மூலம், ஒவ்வொரு சிறு கிராமத்திலும் கறவை மாட்டுக் கடன் வழங்க வகை செய்தல் வேண்டும். சில இடங்களில் I.R.D.P. லோன் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது சில தவறுகள் நடக்கின்றன. கடன் வாங்காத தனியார் ஒருவருடைய மாட்டைக் காண்பித்து கடனைப் பெற்றுக்கொள்கிறார்கள். பாலைக் கறந்து கொடுப்பது இல்லை. இரண்டாவது, பால் ஒழுங்காக பால் வழங்கும் சங்கங்களுக்குச் சென்று சேருவதில்லை. எனவே, இதிலே கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியார் வங்கிகளிலோ அல்லது மற்ற வங்கிகளிலோ பொதுவாக கடன் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். தொடக்க வேளாண்மை வங்கியில் அந்தக் கடனைக் கொடுப்பதற்கு அந்தந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள் சொன்னால்தான் தருகிறார்களே தவிர, மற்ற வங்கிகள்

[திரு. ந. கருப்பண்ண உடையார்] [1999 ஏப்ரல் 19

எல்லாம் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். ஏனென்றால், கிராமங்களிலுள்ள சங்கங்களுக்குக் கடன் கொடுத்தால் பணத்தை அவர்கள் திருப்பிக் கட்டுவதில்லை. அப்படிச் சரியாகப் பணத்தை வங்கியிலே கட்டாததால் இரண்டாவது லோன் கிடைப்பதில்லை.

எனவே, இந்த மாதிரி எல்லாம் இல்லாமல் அவர்கள் அந்தக் கடனைக் கட்ட வேண்டும் மற்றும் இரண்டாவது கடன் வழங்கி மாடுகள் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பன போன்றவற்றையெல்லாம் கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைகளைச் சொல்வதாக நினைக்க வேண்டாம். சில குறைகள் இருக்கின்றன, அந்தக் குறைகளைத் திருத்திச் செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பாராமரிப்புத் துறை மூலமாகக் கால்நடைகளுக்கு நல்ல மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான், கால்நடைகளுக்கு ஏதாவது வியாதிகள் வந்தால் சிகிச்சை அளிக்க முடியும். மக்களுக்கு வியாதி வந்தால் காரிலோ அல்லது ஆம்புலன்சிலோ அழைத்துக் கொண்டு போகிறோம். கால்நடைகளுக்கு வியாதி வந்தால் அப்படிப் போக முடியாது. எனவே, நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அவசியம் இருக்க வேண்டும். நல்ல டாக்டர்கள் நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களில் அடிக்கடி வந்து சிகிச்சை அளித்தால் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

புதியதாகப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படும்போது, நல்லபடியாக கடமையைச் செய்யக்கூடியவர்களையும் மற்றும் கடன்களை ஒழுங்காகத் திருப்பிக் கொடுக்கக்கூடியவர்களையும் கொண்டு ஏற்படுத்திட வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பால் வளத் துறையிலே மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். கிராம அளவிலே கூட்டுறவுச் சங்கம், மாவட்ட அளிவிலே ஒன்றியம், மாநில அளவிலே ஒன்றிய இணையம் இருக்கிறது. அப்படி 28 மாவட்டங்களிலே 17 மாவட்டங்களில் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாக்கி 11 மாவட்டங்களிலேயும் மாவட்டத்திற்கு ஓர் ஒன்றியம் என்ற முறையிலே முழுமையாக 28 மாவட்டங்களுக்கும் அதை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 19] [திரு. ந. கருப்பண்ண உடையார்]

கொள்கை விளக்கக் குறிப்பிலே 9892 சங்கங்கள் இருப்பதாகவும் அதிலே 9100 சங்கங்கள் இறுதித் தணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன என்றும் இருக்கிறது. மேலும் அதிலே 7728 சங்கங்களுக்கு தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லி இருக்கிறார்கள். மீதமுள்ள 1372 சங்கங்களில் 1273 சங்கங்களிலே தணிக்கைக்கு தேவையான புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சங்கங்களினுடைய நிலை எப்படி இருக்கிறது என்பதை அதாவது, பால் வழங்கு சங்கங்கள் எப்படி இருக்கிறது என்பதை இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம். கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இது இருக்கிறது. இப்படி இந்தச் சங்கங்களில் தணிக்கை புத்தகங்கள் கிடைக்கவில்லை, அதனாலே தணிக்கை செய்ய முடியாத நிலையிலே இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, அவற்றையெல்லாம் கண்டுபிடித்து, தவறுகள் இருந்தால் தவறு செய்தவர்கள்மீது சரியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்திக்கு நல்ல உயர்தரமான மாடுகளை அதாவது ஜெர்ஸி, ஹோல்ஸ்டைன்-ப்ரீசியன் கலப்பினம் ஹலிக்கார், காங்கேயம், சிந்தி, மூர்ரா போன்ற உயர்தரமான மாடுகளை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஏழை விவசாயிகளுக்கு நிறைய நல்ல உயர்தர ஜமுனாபாரி வெள்ளாடுகளையும், செம்மறி ஆடுகளையும் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல அதிகமாக கன்றுகளை ஈன்றக்கூடிய ஆடு, மாடுகளை வாங்கிக் கொடுத்தால்தான் உற்பத்தி அதிகமாகும். அவர்களுக்கும் இலாபம் கிடைக்கும். அதை நீங்களே எந்தெந்தப் பகுதியில் வாங்கினால் அந்த ஆடுகள் தரமானவையாக இருக்கும், எவை அதிகமான இன விருத்தி செய்யக்கூடிய ஆடுகளாக இருக்கும், எவை அந்த விவசாயிகளுக்கு நல்ல இலாபமாக இருக்கும் என்பதையெல்லாம் கருத்தில் கொண்டு அந்த மாதிரி செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

கோழிப் பண்ணைகளிலுள்ள முட்டைகளைச் சத்துணவு மையத்திற்குக் கொடுத்ததினாலே நாட்டின் தேவைக்கு அதிகமான முட்டைகள் தேவைப்படுகிறது. அதனாலே, அதற்கு நல்ல தரமான கோழிகளையெல்லாம் வாங்கிக் கொடுத்து, அதன்மூலம் தமிழகத்திலே

இருக்கின்ற கிராமங்களிலே இருக்கின்ற ஏழை விவசாயிகள் சிறுபண்ணைகள் அமைத்து, அவர்கள் பலன் அடைவதற்கு ஏற்ற வகையிலும், அதே நேரத்தில் நகரங்களிலே வசிக்கின்றவர்களுக்கு நல்ல முட்டைகள், நல்ல இறைச்சி கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டும். அதைப்போல நல்ல தரமான பால் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. பாண்டுரங்கன்.

***திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வழங்கும் செயல் திட்டங்கள் மற்றும் கால்நடைத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்கு தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு
சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசுமாடு
பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு
பூப்போல வைத்துனைக் காப்பதென்பாடு"

என்று அரசு இந்தக் கால்நடைகளைப் போற்றிப் பாதுகாத்து வருகிறது என்பதை நான் முதலிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இன்றைய தினத்தில் செய்த நன்றியை மறந்து காலை வாரி விடுபவர்களைப்போல் இல்லாது, வளர்ந்த இடத்தை மறக்காத செல்வமாக, வாய் மட்டும் இருந்தால் மொழி பேசும் தெய்வமாக இந்தக் கால்நடைகள் விளங்குகின்றன என்பதை நான் கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். நமக்கு உணவாகவும், மருந்தாகவும், எருவாகவும், வருவாய் ஈட்டக் கூடியதாகவும் இந்தக் கால்நடைத் துறை விளங்குகிறது. எனவே, இந்தக் கால்நடைத் துறைக்கு தற்போது ஒதுக்கீடு செய்திருக்கிற நிதியைக் கூட்டி அதிகமாக நிதியை இந்தத் துறைக்கு வழங்குமாறு தங்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மனிதனுக்கு தொடக்கம் முதல் அவன் இறக்கும் வரை அன்றாடத் தேவையாகப் பால் இருக்கிறது. ஏன் செத்த பிறகும் அவனுக்குப் பால் வைக்கிறார்கள். தெய்வத்திற்குக்கூட பால் தேவைப்படுகிறது, அபிஷேகம் செய்வதற்கு. எனவே, அப்படிப்பட்ட





பால் வழங்கும் துறைக்கும் கூடுதலாக நிதி ஒதுக்குமாறு தங்களை அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்திலே எங்கள் மாவட்டத்தில்தான் பால் அதிகமாக உற்பத்தி ஆகிறது. வேலூர், திருவண்ணாமலை ஒன்றியத்திலே 2 இலட்சத்து 51 ஆயிரம் லிட்டர் பால் வழங்கப்படுகிறது. ஆனால், அதிலே 1½ இலட்சம் லிட்டர் எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்துதான் உற்பத்தியாகிறது. இது அரசாங்கத்தில் மட்டும் கொள்முதல் செய்யப்படுகிற பால் ஆகும். இது மட்டுமல்லாமல் தனியார் மூலமாகவும், பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், 6,000 லிட்டர், 7,000 லிட்டர் கூட பல ஒன்றியங்களில் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. புதுக்கோட்டையில் 6,000 லிட்டர் பால் நாள் ஒன்றுக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. அதேபோல, பல சிறிய மாவட்டங்களில் 7,000, 8,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், திருவண்ணாமலை மாவட்டத்திலே 1½ இலட்சம் லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யப்பட்டும், அங்கே திருவண்ணாமலை மாவட்டத்திற்கென ஒரு பால் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்படாதது உண்மையிலேயே கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. எனவே, பால் கூட்டுறவு ஒன்றியத்தை இந்த நிதியாண்டிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

20.000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டால் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கலாம் என்று அரசு கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில்கூட அல்ல. பொரணமல்லூர் ஒன்றியத்தில் மட்டுமே, அனக்காவூர் சில்லிங் சென்டர், அனக்காவூரில் 20,000 மட்டுமல்ல, 21,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தனியாருக்கு ஏறக்குறைய 20,000 லிட்டர் பால் செல்கிறது. எங்களுடைய தொகுதியில் மட்டும் ஏறக்குறைய 50,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, பெரணமல்லூர் தொகுதியிலோ அல்லது பெரணமல்லூர் ஒன்றியத்திலோ பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கண்டிப்பாக உங்களுக்குத் தேவையான இடங்கள் தருகிறோம். உங்களுக்குத் தேவையான அத்தனை சாத்தியக்கூறுகளும் இருக்கின்ற இந்தப் பெரணமல்லூர் தொகுதியிலே பால் குளிரூட்டும் நிலையத்தை உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக்

[திரு. ந. பாண்டுரங்கன்] [1999 ஏப்ரல் 19

கேட்டுக்கொள்கிறேன். இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-45*

சென்னைக்கு ஒரு வருடத்திற்கு 12 இலட்சம் ஆடு இறைச்சிக்காக தேவைப்படுகிறது. இதிலே, இந்த ஆட்டிறைச்சிக்காக அதிகமான ஆடுகள் எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலேயிருந்துதான் சென்னைக்கு வருகின்றன. எனவே அப்படி ஆடுகளை வளர்த்து, அதேபோல அனைத்து இறைச்சிகளையும் வழங்குவது எங்களுடைய மாவட்டம்தான். பாலாக இருக்கட்டும், உணவுப் பொருளாக இருக்கட்டும், அதைப்போல இறைச்சி ஆகட்டும் அதிகமாக வழங்குவது எங்கள் மாவட்டம்தான். ஆனால், கால்நடைப் பண்ணை என்று வருகிறபோது, எங்கள் மாவட்டத்திலே அமைக்கவேயில்லை. எனவே, மாவட்ட கால்நடைப் பண்ணை எனது தொகுதியிலேயே அமைக்க வேண்டும். அதேபோல, பால்பவுடர் தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்கான வாய்ப்பு எங்களுடைய தொகுதியிலே இருக்கிறது. அதேபோல தீவன உற்பத்தி நிலையங்கள், குஞ்சு பொரிப்பகங்கள், கோழி வளர்ப்புப் பண்ணை இவற்றை எங்கள் பகுதியிலேயே அமைக்க வேண்டுமென்று நான் அன்போடு, கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எந்த வசதி வாய்ப்பும் இல்லாமல், வேளாண்மைத் தொழிலையும், வேளாண்மைத் துணைத் தொழிலாக இருக்கிற இந்த கால்நடைத் தொழிலையும் நமபி வாழுகிற எங்கள் மாவட்டத்திற்கு, குறிப்பாக என்னுடைய தொகுதிக்கு நீங்கள் முன்னுரிமை அடிப்படையிலே நான் கூறிய கருத்துக்களை கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மணல் குவாரி, கல் குவாரி, புளிய மரம் என்று நாம் மகசூலின் மூலம் ஊராட்சிகளின் வருவாயைப் பெருக்குகிறோம். அதைப்போல ஏரிகளில் மற்றும் உள்ள குட்டை குளங்களிலே நாம் மீனை வளர்க்கலாம். இப்போதெல்லாம் மேரே என்ற ஒன்றை வைத்துக்கொண்டு கிராமங்களிலே குட்டைகளிலும் குளங்களிலும் மீனை வளர்க்கிறார்கள். அப்படி வளர்க்கிறபோது யார் யாரோ அதாவது வாய்ப்பு இருக்கிறவர்கள் அந்தக் குளங்களிலும் குட்டைகளிலும் மீனைப் பிடித்து விடுகிறார்கள். நான் என்னுடைய பெரணமல்லூர் பேரூராட்சியிலே, இதுபோன்று தனியார்கள் ஆக்கிரமித்து, அந்த



1999 ஏப்ரல் 19] [திரு. ந. பாண்டுரங்கன்]

மீன்களை எடுத்துச் செல்வதைத் தடுத்து ஒரு வருடத்திற்கு 50,000 ரூபாய் தந்தால், அவர்கள் மீனை வளர்த்து எடுத்துக்கொள்ளலாம் என்று ஏலம் விட்டோம். அந்த வருவாயை வைத்து, பெரணமல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு நாங்கள் பெஞ்ச், சேர் இதுபோன்ற உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இதுபோன்ற ஏரிகள், குளங்கள், குட்டைகள் மூலம் மீனை வளர்த்து, ஊராட்சியினுடைய வருவாயைப் பெருக்கலாம் என்று நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கடல் மீனைவிட, உள்நாட்டு மீன்கள் சிறந்த உணவாகக் கருதப்படுகின்றன (மணியடிக்கப்பெற்றது). ஊராட்சியிலே விரால், ஜிலேபி, அயிரை போன்ற சிறப்பான மீன்களை வளர்ப்பதற்கு இது வாய்ப்பாக அமையும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, எங்கள் மாவட்டத்திலே தாட்கோ மூலம் அதிகமான கறவை மாட்டுக் கடனும், ஆடு வளர்ப்புக் கடனும் தர வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்) தலைமை]

பெரணமல்லூர், சேத்துப்பட்டு, தேசூர் போன்ற கால்நடை மருந்தகங்களை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூர் கால்நடை மருந்தகத்திலே கட்டடம் இடிந்து விழுந்திருக்கிறது. அதற்குப் போதுமான கட்டட வசதி இல்லை. அதைப்போல, சேத்துப்பட்டு மருந்தகத்திலே அந்தக் கால்நடை மருந்தகம் இடிந்து விழுந்திருக்கிறது. அதற்குச் சுற்றுச் சுவர் போன்றவை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, சேத்துப்பட்டு ஒன்றியத்திலே மன்சுராபாத்திலே 1000 லிட்டர் பால், ஒரு நாளைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், அங்கே கால்நடை பார்வைக் கிளை நிலையம் ஒன்றுகூட இல்லை. எனவே, கால்நடை பார்வைக் கிளை நிலையமாவது அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தச்சாம்பாடிக்கு இந்த அரசு கால்நடை மருந்தகம் வழங்கியிருக்கிறது.

[திரு. ந. பாண்டுரங்கன்] [1999 ஏப்ரல் 19

அதற்குக் கட்டட வசதி இல்லை. எனவே, கட்டட வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மடம், நமத்தோடு, வயலூர், மேல்மிஞ்சியம்பாடி ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்கள் தொடங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குண்ணகம்பூண்டி, ஆயலவாடி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகக் கட்டடங்கள் இருக்கின்றன. ஆனால், கால்நடை மருந்தகங்கள் 5 வருடங்களாக இயங்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிலே இருக்கின்ற 2126 கால்நடைக் கிளை நிலையங்களுக்கு இணையாக, 2126 பார்வைக் கிளை நிலையங்களை அமைக்க ஆணையிட்டு, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அங்கே இருக்கின்ற 5 பார்வை நிலையங்களுக்கு இடம் தேர்வு செய்து தரலாம் என்று சொல்லி, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, அந்த 5 பார்வைக் கிளை நிலையங்களில் ஒன்றாக அது இருக்கலாம் என்று கருதுகிறேன். அப்படி இல்லையென்றால், அதைப் பரிசீலனை செய்யலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், இதிலே அவர்கள், அந்த ஏ.டி.—ஆக இருப்பவர்கள், அவ்வளவாக ஆர்வம் செலுத்தவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அவர்கள் 2, 3 இடங்களிலே மட்டும் செயல்படுத்திவிட்டு விட்டுவிடுகிறார்கள். மருத்துவர்களே செல்வதில்லை. ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக, ஆயலவாடி, குண்ணகம்பூண்டி ஆகிய இடங்களில் கால்நடைக் கிளை நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கே மருத்துவர்களே செல்வதில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. அதேபோல....(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்டு தேர்வு செய்து கொடுத்த இடங்களில் எந்தெந்த இடங்கள் திறக்கப்படவில்லை என்று



1999 ஏப்ரல் 19] [புலவர் பூ.ம. செங்குட்டுவன்]

சொன்னால், உடனடியாகத் திறப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** ஒரேயொரு நிமிடம். அதேபோல, ஜப்திகாரணியில் பகுதி நேர மருத்துவமனை இருக்கிறது. அந்தப் பகுதிக்கு மருத்துவர்கள் செல்வதில்லை என்று சொல்கிறார்கள். அதேபோல், நாம் புறாக்களை அதிகமாக வளர்க்க வேண்டும். இதிலே கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், புறா நமக்கு அந்தக் காலத்திலேயிருந்து காதலர்களுக்குத் தூதுவர்களாக, மன்னர்களுக்குக் கடிதம் எடுத்துச் செல்கிற ஒரு வாகனமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. நாம் அதிலே அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். மருத்துவக் கல்விக்கு ஆராய்ச்சிக்கும், புற்றுநோய் ஆராய்ச்சிக்கும், மருந்தியல், உடலியல் நோய் குறியியல் துறை, நுண்ணுயிரியல் துறை என்று அனைத்துத் துறைகளுக்கும் இந்தப் புறா பயன்படுத்தப்படுகிறது. ஆனால், நாம் இந்தப் புறாவை அதிகமாக வளர்ப்பதில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அதேபோல், வான்கோழி. நாம் அதிகமாக வான்கோழி வளர்ப்பதில் ஈடுபட வேண்டும். காரணம், இது நல்ல ஒரு ஏற்றுமதிப் பொருளாகவும், அதேபோல, கிறிஸ்துவர்கள் எல்லாம், நட்சத்திர ஓட்டல்களில் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** அயல்நாட்டுத் தூதரகங்களில் எல்லாம் இது சிறப்பான உணவாக இருக்கிறது. அமெரிக்காவில் 13 பவுண்டு வான்கோழிக் கறியை அவர்கள் சாப்பிடுவதாகக் குறிப்பு இருக்கிறது. எனவே, வான்கோழியை ஏற்றுமதி செய்வதன் மூலமாக நல்ல உணவுப் பொருளைத் தரமுடியும். இதில் வருவாயும் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. லி. அய்யலுசாமி அவர்கள்.

[1999 ஏப்ரல் 19

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பால் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 10, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கை எண் 22 ஆகியவற்றின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் தெரிவித்துள்ளபடி, பால் உற்பத்தியை அதிகப்படுத்தி உள்ளதை வரவேற்கிறேன். மேலும், இந்த மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

உறுப்பினர்கள் எண்ணிக்கை, 25 இலட்சத்து, 98 ஆயிரம் பேர் உள்ளனர். பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 19 இலட்சத்து, 16 ஆயிரம் லிட்டர் ஆகிறது. இந்த உற்பத்தியில் உள்ளூர் விற்பனை போக, நாள் ஒன்றுக்கு 15 லட்சத்து, 10 ஆயிரம் லிட்டர் ஒன்றியங்களின் மூலமாகவும், பால் குளிரூட்டு நிலையங்களின் மூலமாகவும் சேகரிக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 7-4-1998 அன்று பால் கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளதை வரவேற்கிறேன். அதேபோன்று, நுகர்வோருக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா குறைத்துள்ளதையும் வரவேற்கிறேன்.

உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பால் அளவு உற்பத்தி ஆகவில்லை என்று தெரிகிறது. ஆகவே, பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு இத்துறை மூலமாகக் கறவை மாடுகள் வாங்க அதிகமான மானியத்துடன் கடன் வழங்க வேண்டும்.

கால்நடைகள் விலையேற்றம், மாட்டுத் தீவனம் விலையேற்றம் ஆகியவை கூடியிருப்பதனால், உறுப்பினர்கள் உற்பத்தி செய்கின்ற பாலுக்குக் கொள்முதல் விலையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தியதைப் பாராட்டுகிறேன். தற்போது பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் நிர்வாகஸ்தர்கள் ஜனநாயக முறைப்படி சங்கங்களை நிர்வகிக்கிறார்கள். சங்கத்திற்கு ஊழியர்கள் நியமிப்பது சம்பந்தமாக செயலாளரை நியமிப்பதற்கு பால்வளத் துறை பதிவாளர் மூலம் அனுமதி பெற்று நியமிக்கலாம். பால் சேகரிக்கும் ஊழியர்களை



1999 ஏப்ரல் 19] [திரு. வி. அய்யலுசாமி]

நியமித்து, இலாபத்தின் அடிப்படையில் சம்பளம் மற்றும் பஞ்சப்படி உயர்த்துவதற்கு, மேற்படி தலைவருக்கும் மற்றும் நிர்வாகஸ்தர்களுக்கும் அதிகாரம் வழங்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் சங்கங்களில், இலாபத்தின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு முத்தரப்புப் பேச்சுவார்த்தை அடிப்படையில், ஊதியம் நிர்ணயம் செய்ததை, பால்வளத் துறைத் துணைப் பதிவாளர் அவர்கள் விசாரணை என்ற தன்மையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைத் தர அனுமதிக்காமல் மறுக்கப்பட்டு வருகிறது. முத்தரப்புப் பேச்சுவார்த்தை மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத் தொகையை வழங்கிட அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும். அடுத்து, கால்நடை மருத்துவக் கிளை நிலையத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 6000 ரூபாய் அளவிற்குத்தான் மருந்துகள் வழங்கப்படுகின்றன. இது போதுமானது அல்ல. ஆகவே, மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்குவதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும்.

முற்பகல் 10-55

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

செயற்கை முறைக் கருவூட்டலுக்குத் தற்போது ஒவ்வொரு மாட்டிற்கும் 12 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதனை முற்றிலும் ரத்து செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருந்தகக் கிளை நிலையங்களில் காலியாக உள்ள இடங்களில், அந்தக் காலி இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோழி வளர்ப்பு முறை, விவசாய வேலை முறையைச் சார்ந்தது. கோழி வளர்ப்புக் கூடங்களுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு வியாபாரக் கணக்கீட்டுக் குறியீட்டின் அடிப்படையில் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விவசாயத் தொழிலைச் சார்ந்த கோழி வளர்ப்புப் பண்ணைக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்குச் சாதாரண மின் கட்டண முறையைப் பின்பற்றத் தமிழக அரசு உத்தரவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுதியினுடைய சில கோரிக்கைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில்,

தாமிரபரணி படுகைகளிலிருந்து ஆலங்குளம், சங்கரன்கோவில் மற்றும் குருவிகுளம் ஒன்றியப் பகுதிகளில், கோவில்பட்டி தொகுதிக்கு உட்பட்ட 21 பஞ்சாயத்துக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காகத் திட்டமிட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்திட அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சங்கரன்கோவில் தாலுக்காவில் உள்ள கோவில்பட்டி தொகுதிக்கு உட்பட்ட குருவிகுளம் ஒன்றியம் இளையரசனேந்தல் பிர்க்கா ஆகிய பகுதிகளைக் கோவில்பட்டி வட்டாட்சி அமைப்புடன் இணைக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சாலை சீரமைப்புப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கோவில்பட்டி முதல் குருமலை, கடலையூர் முதல் முத்துலாபுரம், கோவில்பட்டி முதல் ஈராச்சி, கடலையூர் முதல் எட்டயாபுரம், தெற்கு திட்டங்குளம் முதல் செமப்புதூர் வழியாகச் செல்லும் கீழஈரால் ஆகிய தார்ச் சாலைகள் பழுதடைந்து உள்ளன. பழுதடைந்து உள்ள தார்ச் சாலைகளுக்குப் புதியதாகத் தார்ச் சாலை போட அரசு உடனடியாக உத்தரவிட வேண்டுமாய்த் தாழ்மையுடன், அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய தூத்துக்குடி மாவட்ட மருத்துவமனையைக் கல்லூரியாக உயர்த்தித் தந்ததற்காக மாண்புமிகு முதலமைச்சரவர்களையும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவில்பட்டி நகர் தூத்துக்குடியின் இரண்டாவது நகரம்; மிகப் பெரிய தொழில் நகரம். பல தொழிற்சாலைகள், தீப்பெட்டித் தொழிற்சாலைகளெல்லாம் நிறைய இருக்கின்றன. அப்படிப்பட்ட நகரம் சென்னை-கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் இருக்கிறது. விபத்துக்கள் அதிகமாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் கோவில்பட்டி நகரத்திற்கு மாவட்ட மருத்துவமனை அந்தஸ்து கொடுத்து உதவும்படி அன்போடு அரசைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.கே. வீரப்பன்.

***திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பால் வளத் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத்





துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வரவர்கள் 1989-லே ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த காலத்திலேதான், விவசாயத் துறையும், கால்நடைத் துறையும் ஒன்றாக இருந்ததைத் தனியாகப் பிரித்து, ஆசியாவிலேயே முதன்முதலாக ஒரு "கால்நடை மருத்தவ அறிவியல் பல்கலைக் கழகத்தை" இங்கே ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

அதேபோன்று, இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற எண்ணத்திலே, இந்தத் துறைக்கு ஓர் இயக்குநர் என்று இருந்ததை மாற்றி, தற்போது 17-11-1998 முதல் "கால்நடை பராமரிப்பு இயக்ககம்" என்றும், "கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககம்" என்றும் இரண்டாகப் பிரித்து இரண்டு இயக்குநர்களை நியமித்து மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

முற்பகல் 11-00

தற்பொழுது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொள்கை விளக்கக்குறிப்பிலே, தமிழ்நாட்டிலே மொத்தம் 996 கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், இதற்கு மேலே 353 நடமாடும் கால்நடை மருத்துவமனைகளும், 54 மருத்துவப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். சென்ற ஆண்டு 40 புதிய மருந்தகங்கள் தொடங்கப்பட்டன. இன்றைக்கு நம்முடைய கொள்கை விளக்கக்குறிப்பில் பார்க்கிறபோது, 1999-2000-ல் 10 புதிய மருந்தகங்கள் மட்டும்தான் தொடங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவானதாகும். தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரைப்படி, நம்முடைய தமிழ்நாட்டில் மொத்தம் 2722 கால்நடை நிலையங்கள் செயல்பட வேண்டுமென்று கொள்கை விளக்கக்குறிப்பிலே, குறிப்பிட்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு மட்டும் 10 இடத்தில் புதிய மருந்தகங்கள் திறக்கப்படும் என்று சொல்லியிருப்பது மிகமிகக் குறைவானதாகும். குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு 50 என்ற வகையிலாவது புதிய கால்நடை மருந்தகங்களைத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருந்தகங்கள் உள்ள இடங்களில் மட்டும்தான் இன்றைக்குப் பால்வளம் பெருகியுள்ளது. காரணம், அங்கே நல்ல

[திரு. கே.கே. வீரப்பன்] [1999 ஏப்ரல் 19

மருத்துவ வசதிகளும், அதேபோன்று, செயற்கை முறைக் கருவூட்டல் பசுக்களுக்குக் கிடைப்பதால், கலப்பினப் பசுக்கள் அங்கே பெருக்கம் அதிகமாக ஏற்பட்டு நமக்குப் பால்வளம் பெருகியுள்ளது. ஆகவே, குறைந்தது, ஓர் ஆண்டுக்கு 50 இடங்களிலாவது கால்நடை மருந்தகங்களைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாநிலத்தில் 2126 கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே, 1997-98-லே மேலும் தொகுதிக்கு 5 பார்வைக் கிளை நிலையங்கள் ஆரம்பிக்க அனுமதி வழங்கினார்கள். அவையும் இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கால்நடைக் கிளை நிலையங்கள் கால்நடை ஆய்வாளர்களுடைய கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. கால்நடை ஆய்வாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது, இடையில் கொஞ்ச காலம் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்குப்பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு மறுபடியும் கால்நடை ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புவது, படித்த பட்டதாரிகள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்தப் பட்டதாரிகளை இந்த கிளை நிலையங்களிலே, நியமிக்கலாம். ஆய்வாளர்களுக்கு என்ன சம்பளம் வழங்குகிறோமோ, அதே சம்பளத்தில் பணியாற்றுவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அல்லது ஒட்டுமொத்தச் சம்பளம்—consolidated pay—என்று சொல்கிற அளவுக்கு 2000, 2500 ரூபாயில் ஐந்தாண்டு காலத்திற்கு அவர்களை நியமித்து, அவர்கள் செயல்படுவார்களேயானால், அங்கே நல்ல முறையில் மருத்துவ வசதிகளைச் செய்துகொடுக்கலாம். அங்கே பால் வளம் பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கால்நடைப் பட்டதாரிகளை ஆய்வாளர்களாக, consolidated சம்பளத்தில் நியமிக்கலாம் என்று சொன்னார்கள். ஓர் இடத்திலே கால்நடை ஆய்வாளர்களாக, கால்நடைப் பட்டதாரிகளை நியமித்து, அங்கே



1999 ஏப்ரல் 19] [புலவர் பூ.ம. செங்குட்டுவன்]

கால்நடைப் பட்டதாரி டாக்டர்களையும் நியமித்தால், இரண்டு பேரும் B.V.Sc. படித்தவர்களாக இருக்கிறபோது, யார் உதவியாளராக இயங்க நினைப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்தந்தத் தகுதியில் இருப்பவர்கள், அந்தந்த நிலையில்தான் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே. வீரப்பன்:** கால்நடை ஆய்வாளர்களுடைய கல்வித் தகுதி, அதாவது பிளஸ் 2 வரை படித்த பிறகு, அவர்களுக்குப் பயிற்சி வழங்குகிறார்கள். ஆனால், இவர்கள் பட்டதாரிகள். பட்டதாரிகள் என்கிறபோது அவர்கள் consolidated pay-யில் வேலை செய்யத் தயாராக இருக்கிறபோது, அதனுடைய தரம் மிக உயருகிறது. ஆகவே, அவர்கள் நல்ல முறையில் மருத்துவ வசதி செய்கிறபோது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது...

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற தரம் வேறு. ஒரு மருந்தகத்தில் B.V.Sc. படித்த ஒரு பட்டதாரி கால்நடை உதவி மருத்துவராகப் பணியாற்றுகிறார். அங்கே, B.V.Sc. படித்த ஒருவரையே உதவியாளராக நியமித்தால், எப்படி அவர்கள் உதவியாளர்களாகப் பணியாற்றமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே.கே. வீரப்பன்:** அமைச்சர் அவர்கள், நான் சொல்வதைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். நான் சொல்வது கால்நடைக் கிளை நிலையங்களில்.....

*முற்பகல் 11-05*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் B.V.Sc. படித்தவர்களைத்தான் போடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்போது 800 இடங்கள் காலியாக இருக்கின்றன. நீங்கள் B.V.Sc. படித்தவர்களையாவது அந்த இடங்களிலே போடலாமே? யாரையுமே போடாமல் காலி இடங்களை வைத்துக்கொள்வது, எப்படி இந்தத் துறைக்கு வலுச்சேர்க்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 125 பேர்களை, 12 ஆம்

[புலவர் பூ.ம. செங்குட்டுவன்] [1999 ஏப்ரல் 19

வகுப்பு படித்தவர்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தேர்வுசெய்து, அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட இருக்கிறது என்பதையும், அடுத்தடுத்து, படிப்படியாகக் கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே தெரிவிப்பது, கால்நடைக் கிளை நிலையங்களிலே கால்நடை ஆய்வாளர்கள், அதாவது Plus Two படித்தவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களை நியமிக்கின்றார்கள். அதற்குப் பதிலாக, அதே சம்பளத்திலே டாக்டர்களுக்குப் படித்தவர்கள் வேலை செய்வதற்குத் தயாராக இருக்கும்போது, அவர்களை நியமித்தால் அங்கே பணி சிறப்பாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்திலே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு ரூ.6500-ம், மத்தியிலே பணிபுரிகின்றவர்களுக்கு ரூ.8000 என்றும் சம்பள வித்தியாசம் இருக்கிறது. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக அனைத்து ஊழியர்களுக்கும் பெருந்தன்மையோடு, தாயுள்ளத்தோடு சம்பளம் வழங்குகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், இவர்களுக்கும் அதே அளவுக்குச் சம்பளம் வழங்க வேண்டுமென்று, கால்நடை மருத்துவர்கள் அவர்களுடைய சங்கத்தின் மூலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பால்வளத்தைப் பொறுத்தவரையில், சொல்ல வேண்டுமானால், 1991-92-லே கலப்பினப் பசுக்கள் மூலம் பால் உற்பத்தி 21.7 சதவிகிதம் என்று கொள்கை விளக்கக்குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோன்று, 1997-98-லே 33 சதவிகிதமாக வளர்ந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது நல்ல வளர்ச்சிதான். இருந்தாலுங்கூட, இன்னும் அதிக அளவிலே கலப்பினப் பசுக்களை உற்பத்தி செய்து, இன்னும் பால் உற்பத்தியை அதிகமாக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் ஒரு இலட்சம் லிட்டருக்கும் அதிகமாகப் பால் உற்பத்தியாகின்றது. ஆகவே, எங்களுடைய புதிய மாவட்டமான



1999 ஏப்ரல் 19] [திரு. கே.கே. வீரப்பன்]

நாமக்கல் மாவட்டத்திற்குத் தனியாக பால்வள ஒன்றியத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பான திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம், ஆதிதிராவிடர் நலன் கருதி, இப்படிப் பல்வேறு திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, அயல்நாட்டு நிதி உதவியுடன், இன்றைக்கு உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை அபிவிருத்தித் திட்டம்; உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாடு முனைப்புத் திட்டம்; Danida உதவியுடன் விவசாய மனிதவள மேம்பாட்டு முனைப்புத் திட்டம்; Danida உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பாக நம்முடைய அமைச்சரவர்களுடைய மேற்பார்வையில் பல்வேறு திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், என்னுடைய தொகுதிக்கு, கே. புதுப்பாளையம் என்ற இடத்திலே கால்நடை மருந்தகம் ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கினார்கள், அதற்காக அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வருடத்திலே என்னுடைய நாமக்கல் மாவட்டம், நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்திலே கீழ்சாத்தாம்பூர் என்ற இடத்திலேயும், (மணியடிக்கப்பெற்றது) நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலே புதுப்பட்டி என்ற பேரூராட்சியிலும் இரண்டு கால்நடை மருந்தகங்களை புதியதாகத் தொடங்க வாய்ப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருந்தகங்களிலும், மருத்துவமனைகளிலும் தொலைபேசி வசதி வேண்டுமென்றும், அப்போதுதான் மக்களைத் தொடர்பு கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்றும் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரேயொரு கோரிக்கை. என்னுடைய தொகுதியைப்பற்றி மட்டும் சொல்லி விடைபெற விரும்புகிறேன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மோகனூர்-வாங்கல் இடையிலே, காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம், தனியார் துறை மூலம் கட்டுவதற்கான சூழ்நிலை

[திரு. கே.கே. வீரப்பன்] [1999 ஏப்ரல் 19

இருக்கிறது. தலைமைப் பொறியாளர் அவர்களும், அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தயார் செய்யும் நிலையில் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அதை விரைவுபடுத்தி, முடித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சருக்கு வேண்டுகோளாக ஒன்றை வைக்கின்றேன். நீண்டநாட்களாக எங்களுடைய பகுதியிலே ராஜவாய்க்கால் பிரச்சினை இருக்கிறது. நேரடியாக அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்த ராஜவாய்க்காலைச் செப்பனிட்டு, Remodel செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மோகனூர் வாய்க்காலுக்கு நிரந்தரமாகக் கொறம்பு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே. வீரப்பன் அவர்கள், வாங்கல் அருகில் ஒரு பாலம் கட்டுவதற்கு B.O.T. மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியைச் சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால், அதற்குரிய அங்கீகாரம் மத்திய அரசிடமிருந்து தரவேண்டும். கட்டுதல், இயக்குதல், ஒப்படைத்தல் என்று சொல்கிற B.O.T. திட்டத்தில் உருவாகயிருக்கிற இந்தப் பாலத்திற்கு, அல்லது இதுபோன்ற பல திட்டங்களுக்கு ஒப்பந்தச் சரத்துகள் தயார் செய்கின்ற முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டிருப்பதாகவும், அந்த ஒப்பந்தச் சரத்துக்கள் இன்னும் சட்டத் துறையால், மத்திய அரசினுடைய சட்டத் துறையால் முடிவு எடுக்கப்படவில்லையென்றும், அது முடிவடைந்த பிறகு, அந்த ஒப்பந்தச் சரத்துக்கள் வெளியிடப்பட்டு இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் மத்திய அரசிலேயிருந்து தெரிவிக்கிறார்கள். பல்வேறு அரசியல் காரணங்களினால் மத்திய அரசிலே பல நிகழ்ச்சிகள் தடைபட்டிருப்பதைப்போல, இதுவும் தடைபட்டிருக்கிறது. எனவே, மத்திய அரசு அந்த முடிவு எடுத்த பிறகு, அந்த ஒப்பந்தச் சரத்துக்கள்



1999 ஏப்ரல் 19]

தயாரான பிறகு இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மற்றும் பால்வளத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்று காலை அவையினை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், பிற உயிர்களையும் தன்னுயிர் போல நேசிக்கின்ற பாங்கு வேண்டும் என்று சொல்லக்கூடிய குறளைச் சொல்லி ஆரம்பித்தார்கள். உண்மையிலே கால்நடை அழிந்து விடுமோ என்று சொல்லக்கூடிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. 'மனிதனை மனிதன் சாப்பிடுறாண்டா தம்பிப்பயலே அது மாறுவதெப்போ? தீருவதெப்போ? நம்ம கவலை' என்று ஒரு திரைப்படத்தில் பாட்டு கேட்ட ஞாபகம். அந்த நிலை எந்த அளவுக்கு இருந்ததோ, அதைவிட மோசமான நிலை இப்போது இருக்கிறது. விவசாயிகளுக்கு ஏர் மாடுகள் கிடைப்பதில்லை. அந்த அளவுக்கு விலங்கினங்களை மனிதன் சாப்பிட்டு முடித்து விடுகிறான் என்று சொன்னால் அது மிகையாகாது. கேரளாவிற்கு, லாரிகளில் விலங்கினங்களை ஏற்றிச் செல்கிறார்கள். அதைக் கொல்வது மிகச் சித்ரவதையாக இருக்கிறது. கல், மணலை லாரிகளில் ஏற்றிக்கொண்டு எப்படிச் செல்கிறார்களோ, அதைப்போன்று அடைத்துப்போட்டு சித்ரவதை செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை அரசு நிச்சயமாகத் தடுத்தாக வேண்டும். தடுக்கவில்லையென்றால் காலப்போக்கில் ஏர் மாடுகள் விவசாயத்திற்குக் கிடைக்கக்கூடிய நிலை இல்லாமல் போய்விடும். இதை அரசாங்கம் நிச்சயமாகக் கருத்திற்கொண்டு, குறைந்தபட்சம் வெளி மாநிலங்களுக்காவது நம்முடைய மாடுகளை ஏற்றிச் செல்லக்கூடாது என்ற அளவில், தடை விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள், விபத்தில், நோய்வாய்ப்பட்டு, வயது முதிர்ந்த மாடுகள் இறந்துவிட்டால்கூட தனக்காக உழைத்துப்போட்ட மாடு என்று சொல்லி, கசாப்புக் கடைகளுக்குக் கொடுப்பதில்லை. அதை தன்னுடைய விளைநிலத்திலேயே, தென்னந்தோப்பிலேயேகூட புதைத்து விடுகிறார்கள். அந்த அளவுக்கு உழைத்ததற்கு ஒரு நன்றிக் கடனோடு பார்க்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் இந்த மிருக வதையைக் கூடுமான வரையில், விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய மாடுகளையாவது கொலை

[திரு. சி. வேலாயுதன்] [1999 ஏப்ரல் 19

செய்யாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்துவதற்காக முந்தைய காலங்களில் எல்லாம் மாட்டுப் பொங்கல் நாளில், கால்நடைப் பராமரிப்பு மருத்துவமனைகளில் கன்றுகாளைகளுக்கு என்று போட்டிகள் நடத்துவார்கள். நல்ல கன்றுகாளைகளைக் கொண்டு வரக்கூடியவர்களுக்கு பரிசு கொடுப்பது என்ற நிலை இருந்தது. அது இப்போது மாறிவிட்டது. எனவே, அரசாங்கம் இந்த மாட்டுப் பொங்கல் நாளன்று, கன்றுகாளைகளைக் கொண்டு வந்து, நல்ல கன்றுகாளைகளுக்கு பரிசு கொடுக்கக்கூடிய முறையை மீண்டும் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கால்நடைகளைக் காப்பாற்றக்கூடிய முகமாக, கால்நடை வதை செய்வது சரியல்ல என்று சொல்லக்கூடிய திருக்குறளின் வாசகங்களை மற்றும் உயிரினங்களைக் கொலை செய்வது முறையல்ல, அனைத்து உயிர்களும் இறைவன் படைத்தது என்று சொல்லக்கூடிய வாசகங்களையெல்லாம்கூட கால்நடை மருத்துவமனைகளில் எழுதிவைத்தால் இந்த உயிர்வதை சற்றுக் குறையுமோ என்று கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், பத்மநாபபுரம் தொகுதியில் பரசேரி என்று சொல்லக்கூடிய ஊரில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கால்நடை மருத்துவமனை இருக்கிறது. சுற்றியிருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் சேர்ந்து—என்னுடைய ஊரும் அதில் அடங்கும்—ஓர் ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிய கட்டடம் சரியில்லாமல், இப்போது ஒழுங்காக அங்கு சீர்செய்ய முடியாத நிலை இருக்கிறது. பரசேரியைப் பொறுத்தவரையில், சுற்றி இருக்கக்கூடிய அனைத்து ஊர்களும் விவசாயிகள் வாழக்கூடிய ஊர். அந்த ஊரில் இருக்கக்கூடிய மாடுகளை, நோய்வாய்ப்பட்ட நேரத்தில் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தூரம் வரை, திங்கள்சந்தை, தக்கலை அல்லது நாகர்கோவில் அல்லது குறுந்தன்கோடுக்குச் சென்று தான் டாக்டரிடம் காட்ட வேண்டியிருக்கிறது. அந்த மாடுகளை நகர்ப்புறங்களில் அழைத்துச் செல்லுவதுகூட மிகக் கடினமாக இருக்கிறது. வாகனங்களைக் கண்டு அவை பயப்படுகின்றன. ஒரு விவசாயி பசுவினை அழைத்துச் செல்லும்போது, பசு இழுத்து கை ஒடிந்துபோன கதை உண்டு. எனவே, பரசேரியில் விவசாயிகள்



1999 ஏப்ரல் 19] [திரு. சி. வேலாயுதன்]

வாழக்கூடிய அந்த ஊரின் மத்திய பகுதியில் போதுமான இடவசதி இருப்பதால் ஒரு டாக்டரை நியமித்து பெரிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதேபோன்று, இந்த நவீன பசுக்கள் எல்லாம் வந்து ஏராளமான பால் கறக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், அந்தப் பசுக்கள் இரண்டு மூன்று பேறு கழிந்தவுடன் ஒன்றுக்கும் உதவாத சக்கை போன்று ஆகிவிடுகின்றன. எனவே, நம்முடைய நாட்டுப் பசு எனக்குத் தெரியும், என்னுடைய பக்கத்து வீட்டில் 13 கன்றுக்குமேல் ஈன்ற அந்தப் பசு, இன்னும்கூட நல்ல ஆரோக்கியமாக இருக்கிறது. எனவே இந்த நாட்டுப் பசுவினுடைய இனம் அழிந்துவிடக்கூடாது. அவற்றைக் காப்பாற்றுவதற்காக உரிய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சமீபத்தில் கால்நடைகளுக்கு கால்நோய், வாய்நோய் என்று வந்து ஏராளமான கன்றுகாளைகள் இறந்திருக்கின்றன. அந்த நோய் வருவதற்கு முன்னால் தடுக்கக்கூடிய அந்த நோய்த் தடை மருத்துவ சிகிச்சை இப்போது செய்யப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். நோய் வந்ததற்குப்பிறகுதான் சிகிச்சை பண்ணக்கூடிய முறை இருக்கிறது. தடுப்பு ஊசி போடக்கூடிய முறையைச் செயல்படுத்துவதில்லை என்று சொல்கிறார்கள். தடுப்பு ஊசி போடக்கூடிய முறையைத் திரும்பவும் செயல்படுத்த வேண்டும்.

800 கால்நடை ஆய்வாளர்கள் பணியிடம் காலியாக இருக்கிறது. அதை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டும். அரசு ஆணை எண் 91, நாள் : 15-5-1998 இதற்கென்று பிறப்பிக்கப்பட்டது. அந்த அரசாணை இன்னும் அமல்படுத்தப்படவில்லை. அரசு அதை உடனே அமல்படுத்த வேண்டும். கால்நடை ஆய்வாளர்கள் 35 ஆண்டுகளாக ஆய்வாளர்களாகவே பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 3,000 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பணி உயர்வு கிடைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு திருநெல்வேலியில் ஏராளமான ஆடுகளுக்கு நீலநாக்கு நோய் வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட 6 கோடி ரூபாய் அனுமதித்ததாகவும், அந்தத் தொகை சரிவரப் பயன்படுத்தப்படவில்லை என்றும் புகார் இருக்கிறது.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 6 கோடி ரூபாய் அளித்தார்கள் என்று சொன்னார்கள், அது தவறு. 1997-98 ஆம் ஆண்டில் தென் மாவட்டங்களில் கடுமையான வெள்ளம், புயல் ஏற்பட்டபோது. ஆடுகள் இறந்த நேரத்தில் யாரும் கோரிக்கை வைக்காமலேயே, இறந்த ஆடு ஒன்றுக்கு 300 ரூபாய் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 105 இலட்சங்கள் அளித்தார்கள். ஆடு ஒன்றுக்கு 300 ரூபாய் வழங்கலாம் என்று சொன்னவுடன் ஆடு வைத்திருந்தவர்கள், வைத்திருக்காதவர்கள் எல்லோரும் தவறான கணக்குகளைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். எனவே, ஒரு தேர்வுக் குழு அமைத்து சரியான முறையில் அதனைப் பரிசீலனை செய்து வழங்க வேண்டுமென்று சொல்லி, அது முறையாக வழங்கப்பட்டிருக்கிறது. அது 6 கோடி ரூபாய் அல்ல.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிளை மருத்துவமனைக்கு மருந்துகள் வாங்குவதற்கு வருடத்திற்கு 6 ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏழை விவசாயிகளிடம் மருந்துச் சீட்டுக் கொடுத்து வெளியிலே சென்று வாங்கக்கூடிய நிலை உள்ளது. நிச்சயமாக அது மிகக் கஷ்டமான காரியம். ஏழைகளால் முடியாது. இந்தத் தொகை போதவில்லை. விவசாயப் பசுமைப் புரட்சி கொண்டுவரவேண்டுமென்று விரும்பக்கூடிய நம்முடைய அரசு, குறைந்தபட்சம் ஆண்டு ஒன்றுக்கு 20,000 ரூபாயாவது ஒதுக்கி அந்தக் கிளை மருத்துவமனைக்கு....

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கால்நடை மருந்தகத்திற்குக் கடந்த 5 ஆண்டுகளில் 30,000 ரூபாய் வழங்கப்பட்டது. இப்போது 45,000 ரூபாய் வழங்கப்படுகிறது. ஏற்கெனவே, மருத்துவமனைக்கு 60,000 ரூபாய் வழங்கப்பட்டது. இப்போது 90,000 ரூபாய் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோன்று, இந்தக் கால்நடை பராமரிப்பு நிலையத்தில் இருக்கக்கூடிய உதவியாளர்களுக்கு மாதம் 60 ரூபாய் மட்டும் வழங்கப்படுகிறதாம். அதை வைத்து ஓர் ஆளை அந்த வேலைக்குப் பயன்படுத்துவது என்பது மிகச் சிரமமாக உள்ளது. அங்கே நிச்சயமாக உதவியாளர்கள்



அந்த உதவியாளர்களுக்கு அந்தத் தொகையை சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு, வந்தேமாதரம் வந்தேமாதரம் என்று சொல்லி அமைகிறேன்.

வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

*முற்பகல் 11-20*

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீரம், காதல், மானம் என்று தன் இனம் வாழ்ந்த வாழ்வின் அருமை, பெருமைகளை அறியாமல், வாழ்ந்த இனம் வீழ்ந்ததற்கான காரணத்தைத் தெரிந்துகொள்ளாமல் மீண்டும் எழுந்திருக்க வேண்டுமென்ற எண்ண வேகம் இல்லாமல் இருந்த தமிழ் இனத்தைத் தட்டி எழுப்பி, உரமூட்டித் திறம் காட்டி, வளர்த்துவிட்ட மாபெரும் பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அந்தப் பேரியக்கத்தின் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனிப் பெருந்தலைவர், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர். தான் கடவுள் வாழ்த்துப் பாடாமல், கடவுள் வாழ்த்துப் பாடுவதற்கு கொடிநிலை கந்தளி என்று இலக்கணம் சொன்ன எங்களின் தொல்காப்பியம். வணக்கத்திற்குரிய தளபதி இளம்பூரணனின் இனிய தந்தை, சூறாவளிக்குப் பின்னால் நிமிர்ந்து நிற்கும் நாணல் ஆசியாக் கண்டத்திலேயே முதன்முதலாகக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைத் தமிழகத்தில் ஏற்படுத்திக் கொடுத்தவர், பழமையைப் போற்றி, புதுமையை வரவேற்று, இரண்டையும் பாலமாக நின்று இணைத்துப் பின்னி இண்டர்நெட் உருவாக்கியவர் அவர்களை வணங்கி இந்தக் கூட்டத்தொடரில் முதன்முதலாக இந்த மானியத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்ல விழைகின்றேன்.

நான் இந்த மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கேட்டதே, கிருஷ்ணகிரியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைப்பதற்காகத்தான். ஏனென்றால், சேலத்தில், மிக அருகில் இருக்கக்கூடிய சேலத்தில் ஏற்கெனவே மருத்துவக் கல்லூரி கொண்டுவந்து விட்டார்கள். சமீபத்திலே, இந்தப் பேரவையிலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி அமைத்துக்

[டாக்டர் காஞ்சனா கமலநாதன்] [1999 ஏப்ரல் 19

கொடுக்கப்படும், எதிர்காலத்தில் நிதிநிலையைப் பொறுத்து என்று அறிவித்திருந்தாலும்கூட, சமீபத்திலே கிருஷ்ணகிரியிலே அப்படியொரு மருத்துவக் கல்லூரி அமைத்துக் கொடுப்பார்களா என்பது ஒரு கேள்விக் குறியாக இருக்கின்ற காரணத்தினால்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் திருமணமே ஆகவில்லை, அதுமட்டுமல்ல, அப்படியே தருமபுரிக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வருமானால் அது தருமபுரிக்குத்தான் வருமே தவிர, கிருஷ்ணகிரிக்கு வராது.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவேன். அது மாவட்டத் தலைநகர். அதிலே எந்தவிதமான, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு மறுகருத்து சொல்கின்ற அளவுக்கு நான் பெரியவள் இல்லையென்ற காரணத்தினால், முன்கூட்டியே எங்களுடைய ஊரில் Diet இருக்கிறது, நிறைய கல்லூரிகள் இருக்கின்றன. பொறியியல் கல்லூரி வந்திருக்கிறது. அங்கே ஒரு கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி அமைத்துத் தருவதிலே எந்தவிதமான இடர்பாடும் இருக்காது, அமைத்துக் கொடுக்கலாம் என்ற அந்த நம்பிக்கையில் நான் இந்தக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில், இந்த மானியத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தருமபுரிக்கு எவ்வளவு நலன்கள் வந்தாலும், என்னுடைய மாவட்டத் தலைநகருக்குத்தான் வருகிறது. அதற்காக, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், என்னுடைய தொகுதிக்கு வேண்டியவைகளை நான் கேட்காமல் இருக்க முடியுமா? எனவே, தயவுசெய்து வருங்காலத்தில் அப்படியொரு வாய்ப்பு வருகிறபோது கிருஷ்ணகிரியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி - பக்கத்தில் ஓசூர் இருக்கிறது. அங்கே கால்நடைப் பண்ணையிருக்கிறது, நிறைய வசதிகள் 40வது கிலோ மீட்டரில் இருக்கின்றபோது, மருத்துவக் கல்லூரி அமைக்கின்ற காலகட்டத்தில் மாணவர்கள் சென்று வருவதற்கு அதிக வாய்ப்புகள் எல்லாம் இருக்கும். எனவே, practical purposes-க்காக அந்தக் கல்லூரியை நீங்கள் கிருஷ்ணகிரியிலே அமைத்துத்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1999 ஏப்ரல் 19]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற, கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் ஆகியவற்றில் படித்த மாணவர்களுக்கே வேலை வாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. எனவே, இனிமேலும் புதியதாக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் குழந்தை பிறந்த உடனே அண்டா குண்டா வாங்கத் தொடங்கி விடுகிறார்கள். அதைப்போல, இதையெல்லாம் ஒரு பாதுகாப்புக்காக, முன்னெச்சரிக்கையாகக் கேட்டு வைக்கின்ற கோரிக்கைகள்.

அடுத்தபடியாக, கால்நடைகள் நோய் புலனாய்வுப் பிரிவு. கிருஷ்ணகிரியில் கால்நடை மருத்துவமனை இருக்கிறது. பன்முக மருத்துவமனை என்று கொள்கை விளக்கக்குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். Operation எல்லாம் செய்கின்ற வசதி இருக்கக்கூடிய அளவுக்குப் பெரிய மருத்துவமனையாக அது இல்லாமல் இருந்தாலும்கூட, கால்நடைகள் நோய் புலனாய்வுப் பிரிவு ஒன்று ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற கிருஷ்ணகிரி கால்நடை மருத்துவமனையில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கிருஷ்ணகிரி ஒன்றியம், பெரியமுத்தூர், கிருஷ்ணகிரி அணை அமைந்திருக்கின்ற அந்தப் பகுதி, நிறைய புல் எல்லாம் வளர்க்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. அந்தப் பகுதியிலே ஆடுகள், மாடுகள் வளர்ப்பதற்கு நிறைய வசதிகள் இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே வெறும் மருந்தகம் மட்டும்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது, 30 ஆண்டு காலமாக. அதனை நிலை உயர்த்தி, மருத்துவமனையாக நீங்கள் ஆக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-25*

அதைப்போலவே, இந்த நடமாடும் மருந்தகங்கள் பற்றி, Mobile Veterinary Dispensaries பற்றி இங்கே பேசினார்கள். இங்கே உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட, கொடுத்து

[டாக்டர் காஞ்சனா கமலநாதன்] [1999 ஏப்ரல் 19

இருக்கிறீர்கள். 54 நடமாடும் கால்நடைப் பிரிவுகள், ஒவ்வொன்றும் ஒரு கால்நடை உதவி மருத்துவர் தலைமையில் தேவையான பணியாளர்களுடனும், ஊர்தியுடனும் அங்கே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த ஏரியாக்களிலே செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று நீங்கள் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்து இருக்கின்றீர்கள். மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைக்கும் நான் ஒன்றை மட்டும் என்னுடைய பணிவான வேண்டுகோளாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த mobile dispensaries ஒரு நாளைக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியிலே, ஓரிரு கிராமங்களுக்கு மட்டுமே சென்றுவிட்டு, அவர்கள் கிட்டத்தட்ட ஓய்வு எடுத்துக் கொள்ளக்கூடிய நிலையை அடைந்துவிடுகிறார்கள். அந்தப் பகுதியிலே, Live Stock Inspectors—ஆக இருக்கக்கூடியவர்கள், Joint Director அளவிலே பணியாற்றக்கூடியவர்கள்—இவர்களை இன்னும் ஊக்கப்படுத்தி, எல்லாக் கிராமங்களுக்கும் அவர்கள் சென்று வர வேண்டும்; எல்லா ஏழை விவசாயிகளின் நோய்வாய்ப்பட்டிருக்கின்ற அந்தக் கால்நடைகளுக்கு மருத்துவ உதவி கிடைக்கக்கூடிய வகையிலே, அவர்கள் இன்னமும் சுறுசுறுப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று நீங்கள் அவர்களை விரைவுபடுத்த வேண்டும் என்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனிக் கவனம் இந்த நடமாடும் கால்நடைப் பிரிவுகளிலே செலுத்தப்பட வேண்டும் என்பதை என்னுடைய கோரிக்கையாக வைப்பது கடமை என்று நான் கருதுகின்றேன்.

அதைப்போலவே, செம்மறி ஆடுகளைப் பொறுத்தவரையில், செம்மறி ஆட்டுக் கடன் முதலிலே பிற்படுத்தப்பட்ட நலத் துறையிலே அதிகமாக கொடுத்தார்கள்; அதைப்போல, தாட்கோ மூலமாகவும் கொடுத்தார்கள். இப்போது என்ன காரணத்தாலோ செம்மறி ஆட்டுக் கடன் கொடுக்கின்ற அந்த அலகுகளின் அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டு, செம்மறி ஆடுகளுக்கு இப்போது அவ்வளவாகக் கடன் கொடுப்பதில்லை. ஆட்டுக்கு, மாட்டுக்கு என்று வருகின்றபோது, equal-ஆக சரிசமமாக விவசாயிகள், ஏழை விவசாயிகள் அந்த ஆடுகளை வளர்ப்பதிலே, மாடுகளை வளர்ப்பதிலே ஈடுபட்டு இருக்கிறார்கள், அவர்களுக்கு ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவாவது வேண்டிய அளவுக்கு இந்த செம்மறி ஆட்டுக் கடன்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.



1999 ஏப்ரல் 19] [டாக்டர் காஞ்சனா கமலநாதன்]

அடுத்தபடியாக நம்முடைய பால் வளத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய கிருஷ்ணகிரி யூனிட்டிலிருந்து ஒரு லட்சத்து 72 ஆயிரம் லிட்டர் பால் தினமும் சென்னையை நோக்கி அனுப்பிக் கொண்டு இருக்கிறோம். அங்கு குளிரூட்டும் நிலையத்திலே பணியாளர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். 1-வது 2-வது மட்டத்தில் பணியாளர்கள் இல்லை. மேலும், 3-வது 4-வது மட்டத்திலே கிளார்க்குகள் அளவிலே இருக்கிற பணியாளர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது என்றும் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த ஒன்றியத்திற்கு அதிகமான பணியாளர்களை வழங்கி, இன்னமும் நாங்கள் வேகமாக செயல்பட நீங்கள் எங்களுக்கு உதவ வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பால் பணம் பட்டுவாடாவைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்த சொசைட்டிகளிலே எல்லாம் தலைவர்களாக இருக்கிறார்களோ, அவற்றிற்காவது வாரா வாரம் பால் பணத்தை பட்டுவாடா செய்கின்ற அளவுக்கு பணத்தை கொடுப்பீர்கள் என்று சொன்னால் அது மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதை என்னுடைய பணிவான கோரிக்கையாக உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

பயிற்சி கால்நடை ஆய்வாளர்களைப் பொறுத்தவரையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. கே.கே. வீரப்பன் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். இங்கே ஓர் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண் 91, நாள் 15-5-1998-ல், பயிற்சி, கால்நடை ஆய்வாளர்களுடைய பயிற்சி 1998-99 ஆம் ஆண்டு முதல், ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணை மற்றும் ஓசூர் பண்ணையில் கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்க கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்களின் ஆணை வெளியிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், இன்னமும் அந்தப் பயிற்சி தொடங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்தப் பயிற்சி வகுப்புகள் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை ஒரே ஒரு செய்தியை மட்டும் இங்கே உங்களிடத்திலே வேண்டுகோளாகச் சொல்லி, என்னுடைய உரையை நான் முடிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[டாக்டர் காஞ்சனா கமலநாதன்] [1999 ஏப்ரல் 19

என்னுடைய தொகுதியிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்—அது இந்தத் துறைக்கு சம்பந்தப்பட்டது இல்லை என்று சொன்னாலும்கூட—ஒரு மணித்துளி நீங்கள் எனக்கு அவகாசம் கொடுக்க வேண்டும்.

"மருங்குவண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை அது போர்த்து
கருங்கயற்கண் விழித் தொல்கி
நடந்தாய் வாழி காவேரி
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தவெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி!"

என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே காவேரியைப் பற்றி பாடுகிறார்கள். அவ்வளவு சிறப்பு மிகுந்த அந்தக் காவேரி நதி நீரை தருமபுரி மாவட்டம்தான் பெற்று தஞ்சைக்குக் கொடுக்கின்றது. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய ஊருக்குத்தான் முதலில் அந்தத் தண்ணீர் வருகின்றது. ஆனால், நாங்கள் விவசாயத்திற்கு ஒரு துளி நீரைக்கூட கேட்கவில்லை; குடிநீருக்காக மட்டுமே நாங்கள் அதைப் பயன்படுத்த விரும்புகின்றோம். அப்படிப் பயன்படுத்துவதற்கு ஏற்கெனவே கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. ஆனாலும்கூட, ஒசூர் நகரத்திற்கு, ஒன்றியத்திற்கு கிருஷ்ணகிரி தொகுதியினுடைய வேப்பனபள்ளி, கெலமங்கலம் போன்ற ஒன்றியப் பகுதிகளுக்கு அந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக தண்ணீர் கிடைக்காமல் போய்விடுமோ என்ற ஒரு பயம் எங்களுக்கு இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களும் இதனை தயவுசெய்து கருத்திலே கொண்டு தருமபுரி மாவட்ட விவசாயத்திற்கு, ஒரு சொட்டு காவிரி நீரைக்கூட கேட்காமல் பெருந்தன்மையாக. இருக்கின்ற தருமபுரி மாவட்டத்தினுடைய எல்லா ஊர்களுக்கும் காவேரித் தண்ணீர் அந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் வழங்கப்பட வேண்டுமென்று பணிவான வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-30

ஒரு நிமிடத்திலே பேசி முடித்து விடுகிறேன். இந்த B.V.Sc., டாக்டர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் M.B.B.S., டாக்டர்களுக்கு



1999 ஏப்ரல் 19] [டாக்டர் காஞ்சனா கமலநாதன்]

எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்று நான் கருதுகின்றேன். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து. ஏனென்றுசொன்னால் அவர்களும் 4 ஆண்டுகள் படிக்கிறார்கள். ஹவுஸ் சர்ஜென்சியைத் தவிர மற்றபடி படித்து, 24 மணி நேரமும் கிராமப்புறங்களிலே பணியாற்றக்கூடிய அந்தக் கால்நடை மருத்துவர்கள் தங்களை அனைத்துக் கஷ்டங்களுக்கும் ஆட்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால், மத்திய அரசுக்கு இணையாகவோ அல்லது மாநிலத்திலே பணியாற்றக்கூடிய டாக்டர்களுக்கு அளிக்கப்படுகின்ற சம்பளத்திற்கு இணையாகவோ அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்ற பெருங்குறையைத் தெரிவித்திருக்கிறார்கள். கருணை உள்ளம் படைத்த நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்—அதுவும் pet animals என்றால் அவருக்கு அதிகமாகப் பிடிக்கும். அவர்கள் மிக மிக நேசிக்கக்கூடிய இந்தக் கால்நடைத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு—ஏற்கெனவே அவர்கள் அந்த மாநாட்டிலே கலந்துகொள்கிறபோது அந்த உறுதிமொழியை வழங்கியிருக்கிறார்கள். B.V.Sc., படித்துவிட்டு கால்நடை மருதுவர்களாகப் பணியாற்றக்கூடிய மருத்துவர்களுக்கு நல்ல சம்பளத்தை வழங்கி, இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தில் பெரும்பங்கு வகிக்கின்ற இந்தக் கால்நடைகளை வளர்ப்பதற்கும், நோயின்றி அவை வளர்வதற்கும் உதவக்கூடிய அளவில் உள்ள இந்த மருத்துவர்கள் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய பணிவான கோரிக்கையை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

அதைப்போலவே, நம்முடைய பல்கலைக்கழகம். இந்தப் பல்கலைக் கழகத்திலே 4 பட்டப் படிப்புகளை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். B.V.Sc., M.V.Sc., மீனள மருத்துவம் என்று பாடப் பிரிவுகளைத் தொடங்கியிருப்பதைப்போல, Dairy Science அதாவது, பால் பண்ணை தொடர்பான பட்டப் படிப்பினை நம்முடைய பல்கலைக் கழகத்திலே அறிமுகப்படுத்த வேண்டும். நம்முடைய மாணவர்களுக்கு அப்படி Dairy Science படிப்பு படிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்குமென்று சொன்னால் எதிர்காலத்தில் பால் பண்ணைகள் அமைக்கப்பட்டு, பாலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு இன்னும் உதவியாக, உற்சாகமாக, ஊக்கம் ஊட்டுகின்ற அளவிற்கு பால் உற்பத்தியைப் பெருக்கினால், இந்தியாவிலே இரண்டாவது இடத்திலே இருக்கின்ற தமிழ்நாடு முதலாவது இடத்திற்கு வருகின்ற அளவில் [illegible]

D
V211,31'N99
N99.73:2
221802

ஆகவே Dairy Science என்ற பாடப் பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்ற என்னுடைய பணிவான கோரிக்கையை வைத்து, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான பால் வளம் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை நான் இங்கே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

"கோமாதா எங்கள் குல மாதா" என்று சொல்லி தமிழர்கள் பசுவை வணங்கிய காலம் எல்லாம் போய், இன்று கால்நடை வளர்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்காத ஒரு நிலை இருப்பதை இந்த நேரத்திலே என்னுடைய மனக் குறையாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குழந்தைகள் முதலாக பெரியவர்கள், நோயாளிகள் அனைவரும் அறுசுவை உணவாக உண்ணக்கூடியது பால். பால் உற்பத்திக்காக தமிழக அரசு எத்தனையோ திட்டங்களைத் தீட்டியிருந்தாலும்கூட, பால் உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறதே தவிர, இன்னும் மக்கள் உற்பத்திக்கு ஏற்ப பால் உற்பத்தி இருக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக அது கேள்விக் குறியாக இருக்கும். ஆகவே, அந்த வகையிலே பால் உற்பத்திக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி, பால் உற்பத்தி செய்து வந்தாலும்கூட, அரசினுடைய குறைகளையெல்லாம் உணர்ந்து, விவசாயிகள், தனியார் பால் பண்ணைகளை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். இப்போது எந்த மாவட்டத்தினை எடுத்துக்கொண்டாலும், நகரங்களை எடுத்துக்கொண்டாலும், சிறிய நகரங்களில்கூட தனியார் பால் பண்ணைகள் ஓங்கி நிற்கின்றன. இப்படி ஓங்கி வளர்ந்திருக்கிற நிலைகளையெல்லாம் உணர்ந்து தமிழக அரசின் பால்வளத் துறையில் இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் அரசு களைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய பால்வளத் துறை அமைச்சரை நான் குறை சொல்லவில்லை. அவர் நல்லவர். வேகமாகப்





பணியாற்றக்கூடியவர். யார் சொன்னாலும் அந்தக் குறையைப் போக்க, செவிசாய்த்து கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று செயலாற்றிக் கொண்டிருக்கிறவர்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே வெற்றி பெற்று, மாவட்ட அளவிலே இருக்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிர்வாகிகள், அங்கே பணியாற்றக்கூடிய நிர்வாக இயக்குநர், இப்படிப்பட்டவர்கள் அங்கே குட்டி ராஜாக்களாக செயல்பட்டு, அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்களையெல்லாம் வாட்டிக் கொண்டிருக்கிறார்கள்; வதக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகுந்த வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், அங்கே பால் பணம் பட்டுவாடா செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். அடிக்கடி சொல்கிறார்கள் உத்தரவு போடுகிறார்கள். மாதா மாதம் வழங்குவதாகச் சொல்கிறார்கள். ஆனால் நான் பகிரங்கமாக கேட்கிறேன். எந்த மாவட்டத்திலே மாதா மாதம் தொடர்ந்து பட்டுவாடா செய்யப்படுகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை இல்லை.

முற்பகல் 11-35

அதேநேரத்தில் பாலை அளவு செய்கின்ற நேரத்திலே கொழுப்புச் சத்து, புரதச் சத்து போன்றவற்றையெல்லாம் அங்கே அளவிடுகிறார்கள். தினந்தோறும் அளவினைக் குறித்துக் கொடுத்துவிட்டு, மாத இறுதியிலே பட்டியல் வருகிறபோது, விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் இவ்வளவு வரும் என்று எதிர்பார்த்த நிலையிலே, கடைசியில் அவர்கள் தொகையைப் பெறுகிற நேரத்திலே மிகவும் குறைந்துவிடுகிறது. ¼ பங்குத் தொகை குறைந்து விடுகிறது. இதையெல்லாம் விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் கருத்தில் கொண்டுதான் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுப்பதற்குப் பதிலாக, தனியாருக்கு பால் கொடுத்தால் தவறாமல் பணம் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பால் பணம் பட்டுவாடா சரியாக இல்லையென்று சொன்னார். இந்தக் குறை எங்களிடத்திலிருந்து வரவில்லை. கடந்தகால ஆட்சியில் ஏற்பட்ட விளைவு 16 வாரங்கள்

என்பதை படிப்படியாக நாங்கள் குறைத்திருக்கிறோம். இப்பொழுது 4 வாரங்கள், 5 வாரங்கள்தான் ஆகின்றன. அடிக்கடி இந்தச் சட்டமன்றத்திலே நாங்கள் சொல்வது—இந்தக் காலதாமதத்தை வெகுவாகக் குறைப்பதற்கு நேர்மையான முறையில் இந்தத் துறை செயல்படும் என்பதுதான். அதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய எண்ணத்தை நாங்கள் பெரிதும் புரிந்து கொண்டிருக்கிறோம்; வரவேற்கிறோம். அமைச்சர் அவர்கள் சரியாகச் செய்கிறார்கள். இருந்தாலும்கூட அங்கிருக்கிற குட்டி ராஜாக்கள், தாதாக்கள் இவர்களால் ஏற்படும் குறைகளைப் போக்க மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கத் தேர்தல் என்று சொன்னாலே தில்லுமுல்லு, முறைகேடு என்பது வாடிக்கையான ஒன்று. கூட்டுறவுச் சங்கத் தேர்தல் முடிந்த பின்னாலும்கூட, கிராமங்களிலே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் தொடங்க வேண்டுமென்று சொல்லி போகின்றபோது அதிகமான பால் உற்பத்தி இருக்கிற கிராமங்களில், விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் முன்வந்தால்கூட, அங்கு தொடங்குவதில்லை. அப்படிப்பட்ட கிராமங்களையெல்லாம் விட்டுவிட்டு, பால் உற்பத்தியே இல்லாத கிராமங்களிலே தொடங்கக்கூடிய நிலை இருக்கிறது. அப்படியே தொடங்கினாலும் இவர்கள் தொடங்கக்கூடாது, அவர்கள்தான் வரவேண்டுமென்று சொல்லி ஒதுக்கித் தள்ளி வைக்கக்கூடிய நிலை இருக்கிறது; வருடக் கணக்கில் காத்திருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதுதான் அங்கு நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் போக்கை மாற்றி, எங்கெல்லாம் விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தொடங்க முன்வருகிறார்களோ, அங்கெல்லாம் அந்தச் சங்கங்களை தொடங்குவதற்கு முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, பால் அதிகமாக வருகின்ற நேரத்திலே மாவட்டத்திற்கு ஒரு இடம் அல்லது இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு இடம் என்று சொல்லி பால் குளிரூட்டும் நிலையம் இருக்கிறது. இப்பொழுது நிருவாக வசதிக்காக எவ்வளவோ அதிகாரங்களைப் பரவலாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இடங்களிலோ அல்லது தேவை எங்கெல்லாம் இருக்கிறதோ



அங்கெல்லாம் பால் குளிரூட்டும் நிலையம் தொடங்க வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சென்னையைப் பொறுத்தவரையில், மிகப் பெரிய வளர்ந்து வருகிற, இந்தியாவிலேயே முக்கியமான நகரம். இங்கே பால் உற்பத்தியாளர்கள் அதிகமாக கறவை மாடுகளை வைத்து இலட்சக்கணக்கானவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தை மேம்படுத்துவதற்காக நல்ல திட்டங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிற மாநகராட்சியினுடைய திட்டங்களை வரவேற்கின்றோம். அதேநேரத்தில், கறவை மாடுகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொல்லி ஓர் அதிரடி நடவடிக்கையை எடுக்கப் போவதாக அறிந்து சென்னை மாநகர மக்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகப் போராட்டத்திலே ஈடுபடப் போவதாகக்கூடச் சொன்னார்கள். நாங்கள் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு, போராட்டம் வேண்டாமென்று சொல்லி, முதல்வர் அவர்கள், அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த வகையிலே பால் அதிகமாகத் தேவைப்படுகிற இந்த காலகட்டத்தில், கறவை மாடுகளை அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக மாற்று ஏற்பாடு ஏதையாவது செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரை ஒட்டியோ அல்லது வேறு பகுதியிலோ இந்தக் கறவை மாடுகளை வைத்திருப்பதற்கு ஒரு நல்ல மாற்று ஏற்பாட்டை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பால்வளம், கால்நடை வளம் என்பது பால் உற்பத்திக்கு, உணவுக்கு மாத்திரம் அல்ல, பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறையாகும். இந்தத் துறைக்கு அதிக நிதி ஒதுக்க போதிய கவனம் செலுத்தவில்லை என்று கருதுகிறேன். குறிப்பாக கிராமங்களை எடுத்துக் கொண்டோமேயானால், விவசாயக் குடும்பத்திலே விவசாயத்தை விட்டுவிட்டு, இப்பொழுது கறவை மாடுகளை வைத்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்திலே இரண்டு மாடுகள் இருந்தால் போதும், அந்தக் குடும்பத்தினுடைய வருமானம் போதுமானதாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது). கிராமங்களிலே பெண் குழந்தை பிறக்கும் என்று சொன்னால், கறவை மாடுகளை வைத்துக் கொண்டு தினந்தோறும் ஊற்றுகின்ற பாலை வைத்துக்

[திரு. ஜி.கே. மணி] [1999 ஏப்ரல் 19

கொண்டு சேமித்து வைக்கிற அந்தப் பணத்தால் அந்தப் பெண்ணின் திருமணத்தை நடத்தக்கூடிய அளவுக்கு வருமானம் இருப்பதாகக் கருதுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் இன்னும் ஆடுகளை அதிக அளவில் வளர்ப்பதற்கு, அதிக அளவில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டென்மார்க் நாட்டை பார்ப்போம் என்று சொன்னால், அங்கே ஆடு வைத்திருப்பவர்கள், மாடு வைத்திருப்பவர்கள் யாராக இருந்தாலும் அந்த டெக்னாலஜியைப் படிக்க வேண்டும் என்று இருக்கிறது. அங்கே அதற்கான முன்னுரிமை அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்த வகையில் தமிழக அரசு அந்த டையரி டெக்னாலஜி என்று சொல்லப்படுகின்ற அந்த டெக்னாலஜியை விவசாயிகள் படிப்பதற்கு, பயிற்சி கொடுப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்து, உறை விந்து தயாரிப்பதற்காக தமிழ்நாட்டில் 312 பொலி காளைகள் இருக்கின்றன. அதைக் கூடுதலாக்க வேண்டும். உறை விந்து தயாரிக்கும் நிலையங்கள் தமிழ்நாட்டில் 4 இடங்களில்தான் இருக்கின்றன. அந்த நிலையங்களைக் கூடுதலாக்க வேண்டும். அந்த 312 பொலி காளைகளில் டென்மார்க்கிலிருந்து கொண்டு வரப்பட்ட காளைகள் 10 தான். இது மிகவும் குறைவான எண்ணிக்கையாக இருக்கிறது. கால்நடை வளர்ப்பிலே உலகத்திலேயே டென்மார்க் நாடு முக்கியத்துவம் பெற்று இருக்கின்ற காரணத்தால், அங்கேயிருந்து பொலி காளைகளை இன்னும் அதிகமாக வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கால்நடைக் கிளை நிலையங்கள் இருக்கின்றன. ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு கிளை நிலையம் என்று கொண்டு வந்தால் அது விவசாயிகளுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அந்தக் கிளை நிலையங்களுக்குக் கட்டடம் கட்டித்தர வேண்டும். இப்போது ஒரு கிளை நிலையத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் மருந்துக்காக வழங்கப்படுகிறது. அது பற்றாக்குறையாக இருக்கிறது. அதைக் கூடுதலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாடுகளுக்கு செயற்கை கருவூட்டல் கட்டணமாக ரூ.12 வசூலிக்கப்படுகிறது. இதனால் அரசுக்குப் பெரிய இழப்பு வந்துவிடாது. கிராமப்புறங்களில் இருக்கின்ற சாதாரண மக்களுக்கு உதவி



1999 ஏப்ரல் 19] [திரு. ஜி.கே. மணி]

செய்யக்கூடிய வகையில், அந்தக் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, ஏறக்குறைய 450 கிளை நிலையங்களில் ஆய்வாளர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். உடனடியாக அவர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். கால்நடை ஆய்வாளர்களுக்கு ஆபத்து ஈட்டுப்படி வழங்கப்படுகிறது. இதனால் 750 பேர்கள் மட்டும் பயனடைகிறார்கள். மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஏறத்தாழ 2126 பேர் பயனடையாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அதை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். அங்கே ஒரு கால்நடை ஆராய்ச்சி மையம் அல்லது கால்நடை பல்கலைக்கழகம் கொண்டு வந்தால் மிகவும் சாத்தியமாக இருக்கும். அதைக் கொண்டு வர வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இன்டூரிலே பெரும்பாளையிலே, பாளையம்புதூர் போன்ற இடங்களிலே கால்நடை மருந்தகங்களை நடப்பு ஆண்டிலே தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000ஆம் ஆண்டுக்கான கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே பங்குபெற வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நாடு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு. விவசாயத்திற்குக் கால்நடைகளுடைய தேவை மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். விவசாயம் மேம்பாடு அடைந்தால்தான் கால்நடை வளம் மேம்பாடு அடையும். அதேபோல கால்நடைகள் வளர்ச்சி அடைந்தால்தான் விவசாயம் மேம்பாடு அடையும். இவை ஒன்றுக்கொன்று தொடர்புடைய துறைகளாகும். குறிப்பாக, இன்னும்கூட கிராமப்புறங்களிலே விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், நவீன Tractor போன்ற வசதிகள் வந்தும்கூட, பொருள் போக்குவரத்துக்கும், உழவுக்கும் நாம் கால்நடைகளை பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட முக்கியமான துறையில் நாம் இன்னும் அதிக கவனம்

செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடைகளின் ஒவ்வொரு பாகமும் மனிதனுடைய தேவைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் இன்றியமையாதவையாக இருக்கின்றன. இறைச்சி உணவுப் பொருளாகவும், எலும்பு போன்றவை டை-கால்சியம், பாஸ்பேட் போன்ற உரங்களைத் தயாரிப்பதற்கான மூலப் பொருளாகவும் பயன்படுகிறது. தோல் பொருள் ஏற்றுமதியால் அந்நியச் செலாவணி, இப்படிப்பட்ட கால்நடைத் துறையிலே அரசு இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, கிராமப்புற இளைஞர்களை கால்நடைத் துறையிலே ஈடுபடுத்தினால், அது அவர்களுடைய வேலை வாய்ப்புக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் மேம்பாடாக அமையும். ஆகவே, அரசு இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கோழியின வளர்ச்சிக் கழகம் என்று ஒன்று இருக்கிறது. நான் சென்ற ஆண்டு இதே மானியத்தில் பேசும்போது இந்த 'டேப்கோ' நிர்வாக இயக்குநரின் முறைகேடுகளைப்பற்றி இங்கே குறிப்பிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விரைவிலே நடவடிக்கை எடுக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

முற்பகல் 11-45

என்னுடைய சேலம் மாவட்டத்திலே, சத்துணவுத் திட்டத்தின்கீழ் கோழி முட்டை சாப்பிட்ட குழந்தைகள் மயக்கமடைந்து, அவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையிலே அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, உயிர் இழக்கும் தருவாயில் அவர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம், தரம் குறைந்த முட்டைகளை சத்துணவிலே வழங்கியதுதான் என்று அரசேகூட அறிவித்து, அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், சுமார் 42 இலட்சம் முட்டைகளைக் கைப்பற்றி, அங்கே நவீன முறையிலே குழி வெட்டி, பாலிதீன் பைகளில் எல்லாம் போட்டு, அந்த முட்டைகளை அழித்திருக்கிறார்கள். 'வருமுன் காப்போம்' என்பதற்காக நான் ஏற்கெனவே சென்ற ஆண்டிலே, இந்தத் துறையின் மீதான விவாதத்திலே குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் ஆவன செய்வேன் என்று





குறிப்பிட்டார்கள். ஆனால், இப்போது இந்த முட்டைகளைச் சாப்பிட்ட அந்தக் குழந்தைகள் கதி, ஏதேனும் அசம்பாவிதம் நடந்திருந்தால்...

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கோழி வளர்ச்சிக் கழகம், 1973ஆம் ஆண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, இடையிலே, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் ஆட்சி செய்தவர்களின் காலத்திலே— வாரியத் தலைவர்களாக வந்தவர்கள் 4 பேர்கள் வந்ததிலே திரு ஈ.டி. பொன்னுவேலு அவர்களுடைய காலத்திலே—ஊழல்களும், முறைகேடுகளும், அதிகமாக ஏற்பட்டு, அதை விற்பனை செய்த மேலாளர்களும், துணை மேலாளர்களும் அதிலே தவறு செய்து 'கறையான் புற்றெடுக்க கருநாகம் புகுந்ததுபோல' பல கருநாகங்கள் அந்தக் கோழி வளர்ச்சிக் கழகத்திலே புகுந்து, நாசம் செய்த காரணத்தினால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த நடவடிக்கையினுடைய குறிப்பு 120-பி, 409 என்ற பிரிவுகளின்கீழ், 1998-வது ஆண்டு, 3-வது மாதம், 4வது எண்ணாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, குற்றப் புலனாய்வுத் துறையின் நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அவர்கள் அந்த வாரியத் தலைவர்களாக இருந்ததைப்பற்றி மட்டும் குறிப்பிட்டுள்ளார்கள். இப்போது நிர்வாக இயக்குநராக இருப்பவர், கடந்த ஆட்சியிலே 'கிரானைட்' ஊழலிலே தொடர்புடையவர். அவர்மீது இன்றும் வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. அவர் இதே துறையிலே தொடர்ந்து ஊழலைச் செய்து வருகிறார். குறிப்பாக, குஞ்சு பொரிப்பகங்களை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டிலே மட்டும் 4 இடங்களிலே, அந்தக் குஞ்சு பொரிப்பகங்கள் இருக்கின்றன. ஆனால் இரண்டுதான் சென்ற ஆண்டு வரை செயல்பட்டு வந்தன. தற்போது அவற்றினுடைய நிலை என்ன என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அவர், தனியார் குஞ்சு பொரிப்பகங்களை ஊக்குவிக்கிறார் என்று நான் சென்ற ஆண்டே குற்றம் சாட்டியிருந்தேன். அவர்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?

அதுபோலவே, சமூக நலத் துறைக்குத் தேவையான முட்டைகள் கொள்முதல் செய்வதற்காக 18 கோடி ரூபாய்க்கு சென்ற ஆண்டு ஆர்டர் கொடுக்கப்பட்டிருந்தது. அதிலே இலாபத்திற்குப் பதிலாக

நட்டம் வந்திருக்கிறது. அரசு நிர்ணியித்த விலையைவிட கூடுதல் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது இந்தத் துறை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த அதிகாரிகள் பேரிலே—கடந்த ஆட்சிக் காலத்திலே வேண்டுமானால் அதற்கான குற்றச்சாட்டு இருக்கலாம். ஆனால் கோழி வளர்ச்சிக் கழகத்தைப் பொறுத்தவரையில்—அதற்கான குற்றச்சாட்டு இல்லை. குற்றச்சாட்டுகள் இருந்தால்தான் ஒருவர்மேல் நடவடிக்கை எடுக்க முடியும். சத்துணவு முட்டைகளைப்பற்றிச் சொன்னார்கள். சத்துணவு முட்டைகளை வழங்க, கோழி வளர்ச்சிக் கழகம், கடந்த ஆண்டு, 3,4 மாவட்டங்களுக்குத்தான் ஆர்டர் கொடுத்திருந்தது. அந்த 3,4 மாவட்டங்களிலும் விற்பனையிலே ஓரளவு அதிக இலாபம் கிடைத்திருக்கிறது. நட்டம் அதிலே ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** கோழி முட்டைகளைப் பொறுத்தவரையில், டெண்டர் விடாமல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 42 இலட்சம் முட்டைகள் சேலம் மாவட்டத்தில் அழிக்கப்பட்டிருக்கிறதே, அவற்றினுடைய இழப்பை யார் ஈடுசெய்வது? டாப்கோ ஈடு செய்கிறதா? அரசு ஈடு செய்கிறதா? ஏன் இந்த நட்டம் என்பதை அரசு கவனத்திலே கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, தனியார் கோழி தீவன உற்பத்தி...

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் மாவட்டத்திலே 42 இலட்சம் முட்டைகள் அழிக்கப்பட்டதைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தஞ்சையிலே, அளிக்கப்பட்ட முட்டைகளைச் சாப்பிட்டு குழந்தைகள் வாந்தி எடுத்தவுடனே, என்னைத் தொடர்பு கொண்டு, அதற்குக் காரணம் என்ன என்று ஆய்வு செய்யச் சொல்லி, நானும் சேலம் சென்று பார்த்தபோது, அங்கே—Cold Storage— குளிர்பதனக் கிடங்கில், புளி மற்றும் இருக்கக்கூடிய ஆப்பிள் போன்ற பல பழ வகைகள்



வைக்கிற இடத்திலேயே, ஒரே இடத்திலேயே முட்டைகளையும் வைத்திருந்தார்கள். இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அழைத்து, சுகாதாரத் துறையிலே இருக்கக்கூடிய அலுவலர்களை—technical people—அழைத்து, முட்டைகள் கெட்டுப் போனதற்குக் காரணம் என்ன என்று ஆய்வு செய்தபோது, முட்டைகள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் புளி இருந்தால், அந்த முட்டைகள் கெடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று உறுதியாக அவர்கள் தெரிவித்தார்கள். இதுதான் காரணம் என்று அவர்கள்—சொன்ன காரணத்தால்தான், உடனடியாக உரியவர்கள்மீது கிரிமினல் வழக்கே போடப்பட்டிருக்கிறது. நாளைய குழந்தைகளுடைய எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற ஒரே காரணத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அறிவுரையின் பேரிலே, கிரிமினல், வழக்குப் பதிவு செய்து, அந்தக் காண்ட்ராக்டையும் உடனே கான்சல் செய்து விட்டோம். ஆக, எந்தத் தவறும் அதிலே நடப்பதற்கு வாய்ப்பில்லை, இந்த அரசு, உரிய நேரத்திலே உரிய நடவடிக்கை எடுத்து, வந்த ஆபத்தைத் தடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் விரைந்து நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், தனியார் கிடங்கிலே அந்த முட்டைகளை வைக்க வேண்டிய அவசியம் என்ன? ஏன் துறையின் சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முட்டைகளை வைத்துக் கொள்வதற்கு ஒரு குளிர்சாதனக் கிடங்கை ஏற்படுத்தக்கூடாது என்பதற்கு, அரசு சிந்திக்க...

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நான் அங்கு நேரிடையாகச் சென்று ஆய்வு செய்த நேரத்திலே, ஒரு வாரத்திற்குத் தேவைப்படுகின்ற முட்டைகள், அதாவது ஈரோட்டிலே ஒரு நாளைக்கு உற்பத்தி செய்கின்ற முட்டைகள்தான், ஒரு வாரத்திற்கே நமக்குத் தேவைப்படுகின்றன. ஆக, ஒரு மாதத்திலே 4 நாட்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற முட்டைகளே நம்முடைய திட்டத்திற்குப் போதுமானதாக இருக்கிறது. எனவே, நாங்கள் அவர்களுக்கு உரிய அறிவுரை வழங்கியிருக்கின்றோம். இருக்கக்கூடிய

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 19

முட்டைகளை 15 நாட்களுக்குள் கொடுத்தாக வேண்டும், எந்தக் காரணத்தைக் கொண்டும் 15 நாட்களுக்கு மேல் போகக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 21 நாட்கள் ஆகிவிட்டன என்றால் முட்டைகள் கெடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, சப்ளை செய்யக்கூடிய அத்தனை பேருமே அந்த முட்டைகளை, அதாவது முட்டையிட்ட 15 நாட்களுக்குள்ளாகவே வழங்கிட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம்; அதற்கான அறிவுரைகளை வழங்கியிருக்கின்றோம். அந்த அடிப்படையிலே இப்போது வருகின்ற முட்டைகள் மிகவும் தரமான முட்டைகள். அதனுடைய எடை அளவு எல்லாமே சரியாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஏனென்றால், ஊட்டச்சத்து, குழந்தைகளுக்கு வேண்டுமென்பதற்காகத்தான் முட்டைகளை நாம் வழங்குகின்றோம். (மணியடிக்கப்பெற்றது) எனவே, நல்ல தரமான முட்டைகளை வழங்குவதற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுகக வேண்டும்.

கால்நடைப் பராமரிப்பு இயக்ககம் என்றும், கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககம் என்றும் இரண்டு இயக்குநர்களின் தலைமையில் பிரித்து அரசு அறிவித்திருக்கிறது. இதிலே, ராஜஸ்தான் மாநிலத்திலே உள்ளது போன்று செம்மறி ஆடுகளுக்கு என்று தனியாக இயக்ககம் ஒன்றை ஏற்படுத்தினால், சேலம் மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இந்த ஆடு வளர்ச்சிக்கு ஆதரவாக இருக்கும்.

அதேபோல, உறைவிந்து திரவ நைட்ரஜன் உற்பத்தி நிலையம் தமிழ்நாட்டிலே மொத்தம் 4 இடங்களிலே மட்டும்தான் இருக்கிறது. இது கால்நடைகளின் வளர்ச்சிக்குப் போதாது. ஆகவே, சேலம் மாவட்டம்-ஏற்காடு போன்ற குளிர்பிரதேசங்களிலே இந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்களை அரசு இன்னும் அதிக அளவில் தொடங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு மருத்துவக் கிளை



1999 ஏப்ரல் 19] [திரு. ஆர்.ஆர். சேகரன்]

நிலையமும் அதற்குச் சொந்தக் கட்டடத்தையும் ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தடுப்பூசி போடுவதற்கென்று உதவியாளரையும் ஒரு தனிக் குழுவையும் கால்நடை நிலையங்களிலே ஏற்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ஓமலூர் தொகுதியிலே தும்பிப்பாடி, பூசாரிப்பட்டி, வள்ளாலப்பட்டி போன்ற பகுதிகளிலே கால்நடைக் கிளை மருந்தகங்களைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே, பால் வளத்தைப் பொறுத்தவரையில், பால் வழங்கப்பட்டதற்கான பணத்தை முறையாகப் பட்டுவாடா செய்ய வேண்டும். 15 தினங்களுக்குள் அவர்களுக்குப் பட்டுவாடா செய்தால்தான் நன்றாக இருக்கும். ஏனென்றால், கிராமங்களிலே தனியார் பால் கொள்முதல் நிலையங்கள் ஏராளமாகத் தொடங்கப்பட்டுவிட்டன. விவசாயிகள் எல்லாம் அந்தத் தனியார்களிடம் செல்வதற்கான காரணம் அங்கே உடனுக்குடன் பணத்தைக் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, இந்தக் கூட்டுறவுத் துறை நல்ல முறையிலே நடத்தப்பட வேண்டுமானால், அந்தப் பணத்தினை உடனுக்குடன் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, தீவனத்திற்கும் முழு மானியம் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு ஒன்றியங்களுக்கு ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தையாவது ஏற்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்திலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11-ஆவது சட்டமன்றக் கூட்டத்தில் நடைபெறும், இன்றைய மானியக் கோரிக்கைகளான கால்நடைத் துறை மற்றும் பால்வளத் துறை ஆகியவற்றின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [1999 ஏப்ரல் 19

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே சிறப்பாக செயலாற்றி வருகின்ற கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும், பால் வளத் துறை அமைச்சர் அவர்களும் பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டு காலத்திலே தமிழகத்திலே நல்ல முறையிலே, தங்களது துறையைத் திறம்பட நடத்தி தமிழகத்திலே வாழுகின்ற ஏழையெளிய மக்கள் மற்றும் நடுத்தர மக்களுக்கெல்லாம், இந்தத் துறையின் மூலமாக பல செயல்திறன்களைச் செய்து காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு தமிழக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

கடந்த மூன்று ஆண்டு காலத்திலே பால்வளத் துறை மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு, உற்பத்தியைப் பெருக்கி இன்றையதினம் கிராமங்கள்தோறும் நல்ல பால், ஆங்காங்கு இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சிறப்பான முறையிலே வழங்கப்பட்டு பால்வளம் பெருகி இருக்கிறது. பல பால் சங்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் என்னுடைய தொகுதியின் சார்பிலே அங்கே சங்கங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையினை விடுத்திருக்கின்றேன். கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மூலமாக, இந்த ஆண்டு இரண்டு சங்கங்கள் தொடங்கப்படும் என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனது தொகுதியான அரவக்குறிச்சி தொகுதியிலே அரவக்குறிச்சியிலே ஒன்றும், பள்ளிப்பட்டியில் ஒன்றும் பால் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடத்திலே இந்த நேரத்திலே கோரிக்கையாக வைக்க விரும்புகின்றேன். இந்த ஆண்டு மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே பால்வளத் துறையும், கால்நடைத் துறையும் எடுத்துக்கொள்ளப்பட்டு, தமிழகத்திலே உள்ள அத்தனை மாவட்டங்களிலேயும் மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக இந்தப் பால் வளத் துறையையும், கால்நடைத் துறையையும் ஆய்வு செய்கின்ற நேரத்தில் கிராமங்கள்தோறும் செல்கின்றபோது, "பால் நன்றாக உற்பத்தியாகி இருக்கிறது, எங்களுக்குரிய கடன் உதவி கிடைக்கப்பெறவில்லை, கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன் வழங்குகின்றார்கள், அதைக் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கிறார்கள்; பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த எங்களுக்கு நாங்கள் சங்கத்திலே உறுப்பினர்களாக இருந்தாலும் அதிலே பாகுபாடு காட்டுகிறார்கள்" என்ற குறைபாடுகளை எங்களிடத்திலே எடுத்து வைத்தார்கள்.



1999 ஏப்ரல் 19] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

அப்படி இருக்கின்ற சங்கங்களையும் நேரிடையாக ஆய்வு செய்து, உரிய தலைவர்களையும், இயக்குநர்களையும் அழைத்து நேரடியாகப் பேசி அவர்களிடத்திலே குறைபாடுகளைக் கேட்டோம். "8,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை மாடு, பசு, எருமை வாங்குவதற்காகக் கொடுக்கிறார்கள். அது எங்களுக்குப் போதவில்லை. இப்போது 12,000 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரை கொடுத்து வாங்க வேண்டிய நிலையிருக்கிறது. மீதித் தொகையை நாங்கள் கையிலிருந்து போட்டு வாங்க வேண்டிய நிலையிருக்கிறது" என்பதை எங்கள் குழுவிலே அறிக்கையாகச் சொன்னார்கள். நாங்கள் அமைச்சரிடத்திலே அதை எடுத்துச் சொல்லி, அவருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதைப் பெற்றுத் தருவதற்கு முயற்சி செய்கிறோம் என்று சொல்லி, அதைக் கோரிக்கையாக வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே இப்போது பசு, எருமை வாங்குவதற்கான அரசினுடைய நிதியுதவியை தயவுசெய்து நீங்கள் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஐ.ஆர்.டி.பி. கடன் உதவி போன்ற திட்டங்கள் அங்கே வழங்கப்படுகின்றன. அதிலும் பாகுபாடு காட்டப்படுவதாகச் சொன்னார்கள். அதைப் பொறுத்தவரை சட்டமன்ற உறுப்பினர்கள் முன்பெல்லாம் கலந்து பேசி அங்கே பயனாளிகள் தேர்வு செய்கின்ற நிலை இருந்தது. ஆனால், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்கள் அங்கே பொறுப்பேற்றதற்குப் பின்னால், அங்கிருக்கிற ஒன்றியத் தலைவர்கள் மூலமாக இவை தேர்வு செய்யப்படுகின்ற காரணத்தினால், உரியவர்களுக்கு உரியவை கிடைக்காமல் காலதாமதம் ஏற்படுகிறது. அதிலே பாரபட்சம் காட்டப்படுகிறது என்ற நிலையை அறிய முடிகிறது. ஆகவே, அதிலேயும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பரிந்துரையை ஏற்று அவற்றை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பால்வளத் துறை அமைச்சருடைய மேலான கவனத்திற்கு இதை வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, பால்வளத் துறையைப் பொறுத்தவரை அங்கே இருக்கின்ற சங்கங்களுக்கு பால் ஊற்றுகின்றவர்களுக்கு உரிய தொகை கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகின்றது. 15 தினங்களுக்கு மேல் அல்லது 20 தினங்களுக்கு மேல்தான் எங்களுக்குப் பணம் கிடைக்கிறது என்ற முறையீட்டை எங்கள் குழுவின் முன்பு வைத்தார்கள். உரிய சங்கங்களை அழைத்து அவர்களிடம் நாங்கள் பேசினோம். 7 தினங்களில்

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [1999 ஏப்ரல் 19

கொடுக்கக்கூடிய சில சங்கங்களும் இருக்கின்றன. திருவண்ணாமலை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திற்கெல்லாம் சென்றிருந்த நேரத்திலே, அங்கே 7 தினங்கள், 10 தினங்களுக்குள்ளாக அந்தப் பயனாளிகளுக்குப் பணம் கிடைக்கின்ற நிலையை வைத்திருக்கிறார்கள். தமிழகத்திலே சில சங்கங்களிலே மட்டும் சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. அதை வரன்முறைப்படுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா பகுதியிலேயும் அந்தப் பால் ஊற்றுகிறவர்களுக்கு 10 தினங்களுக்குள்ளாக பணம் கிடைப்பதற்கு உரிய முயற்சியை மேற்கொண்டால் நன்றாக இருக்கும் என்று இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற நேரத்திலே என்னுடைய கருத்தாக வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, கால்நடைத் துறை. தமிழகத்திலே மிகச் சிறப்பாக பணியாற்றி வருகின்றது. கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில் கிளை நிலையங்களுக்காக 6,000 ரூபாய் வரை இப்போது மருந்தகத்திற்கு வழங்குகின்றார்கள். அது போதவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. மருந்து எங்களுக்குப் போதவில்லை என்று அங்குள்ள டாக்டர்கள் கூறுகின்றார்கள். இவற்றை தயவுசெய்து கூடுதல் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், செயற்கை கருவூட்டலுக்காக கட்டணம் ரூபாய் 12 வசூல் செய்து வருகின்றார்கள். நாங்கள் தமிழகம் முழுவதும் சென்று பார்க்கிற நேரத்திலே 2 முறை அல்லது 3 முறை கருவூட்டலுக்கு அனுப்பிய பின்னர்தான் சினை ஏற்படுகிறது என்ற செய்தியினைத் தெரிவித்தார்கள். ஆகவே, ஒவ்வொரு முறைக்கும் 12 ரூபாய் செலவிடப்படுகின்ற நேரத்திலே வருகின்ற விவசாயிகள், மாடு கன்று வைத்திருப்பவர்களுக்குச் சிரமமாக இருக்கும் என்ற கோரிக்கையை எங்களிடத்திலே எடுத்து வைத்தார்கள். கடந்த வாரத்திலே நடந்து முடிந்த கூட்டத்திலேகூட கால்நடைத் துறையைச் சார்ந்த இயக்குநர்களையெல்லாம் அழைத்து எங்களுடைய மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக கலந்துரையாடல் செய்தோம். ஆகவே, இது கூடுதலாக இருந்தாலும், 2வது முறை 3வது முறை வசூலிக்கக்கூடிய கட்டணத்தைப் பாதியாகக் குறைத்து வசூல் செய்தால், விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். முதல் கட்டணம் வசூலிப்பதில் 15 ரூபாய் என்று வசூல் செய்து கொண்டு, இரண்டாவது முறை 50 சதவிகிதமாகவும், மூன்றாவது முறை 25 சதவிகிதமாகவும் குறைத்து முறையாகச் செய்தால் அது மக்களுக்குப் பயன் உள்ளதாக



1999 ஏப்ரல் 19] [திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்]

இருக்கும் என்ற கருத்தை அங்கே வலியுறுத்தி சொல்லியிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, செலுத்த வேண்டிய கட்டணம் குறித்து பரிசிலனை செய்து, விவசாயிகளுக்கு, மாடு வைத்திருப்பவர்களுக்கு, கருவூட்டல் முறைக்கு நீங்கள் கட்டணத்தை குறைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பகல் 12-00

அதேபோன்று, கால்நடைத் துறையைப் பொறுத்தவரை அங்கேயிருக்கின்ற ஆய்வாளர் பணியிடங்கள் ஏறத்தாழ 800க்குமேல் காலியாக இருக்கின்றன என்று அங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அருள்கூர்ந்து இவற்றையெல்லாம் நீங்கள் பார்வையிட்டு பணியிடங்களை நிரப்புவதற்கு (மணியடிக்கப்பெற்றது) ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

செல்கின்ற இடங்களிலே நாங்கள் கிளை நிலையங்களைப் பார்வையிட்டோம். மருந்தகங்களைப் பார்வையிட்டோம். நடமாடும் கால்நடை மருந்தகங்கள்மூலம், கிராமங்களுக்குச் சென்று பார்த்து வரக்கூடிய ஆய்வாளர்களை நியமனம் செய்வதால், சில இடங்களில், தொலை தூரத்திலே இருக்கின்ற பிறந்த கன்றுகளைப் பார்ப்பதற்கு செல்கின்றவர்கள் அவற்றை மருத்துவமனைக்குக் கொண்டு வர முடியாமல், கன்றுகள் அங்கேயே இறக்கக்கூடிய சூழ்நிலையும் உருவாகி இருக்கின்றது என்று எங்களிடத்திலே சொன்னார்கள். இன்சூரன்ஸ் செய்யப்பட்ட நேரத்திலே அவற்றுக்குரிய முதலீடு கிடைக்கிறது. அவற்றுக்கு உரிய இன்சூரன்ஸ் செய்யப்படாத நிலைமையிலே இழப்பு ஏற்படுகின்றது என்பதையெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். அதேபோல, ஆடு வளர்ப்புத் துறையைப் பொறுத்தவரையில் மிகச் சிறந்த முறையில் நடந்து வருகின்ற இந்த நேரத்திலே, ஆடு வளர்ப்புத் துறைக்கு ஒரு வாரியத்தை அமைத்து அதைத் திறம்படச் செய்தால் நன்றாக இருக்கும். சாதாரண மக்கள், நடுத்தர மக்கள், (மணியடிக்கப்பெற்றது) பணக்காரர்கள் அத்தனைபேரும் ஆட்டிறைச்சியைச் சாதாரணமாக உபயோகப்படுத்தி வருகின்றார்கள்.

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [1999 ஏப்ரல் 19

ஆட்டிறைச்சிக்கு இன்றைக்கு நல்ல விலை இருந்தாலும், அதனுடைய தோல் போன்ற பொருள்களினுடைய விலை உயர்வாக நல்லமுறையிலே இருந்து வருகின்ற காரணத்தால் ஆடு வளர்ப்புத் துறையைப் பொறுத்தவரையில் ஆடு வளர்ப்புக்கென்று ஒரு வாரியத்தை உருவாக்கி, தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் பொறுப்பேற்றிருக்கின்ற நேரத்திலே, இந்த வாரியத்தை—எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்களெல்லாம் பேசியிருக்கின்றார்கள். இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆடு வளர்ப்புத் துறைக்கு ஒரு வாரியத்தை உருவாக்கிக் கொடுத்து ஏழை, எளிய மக்களின் துயர் துடைக்க இந்த அரசு முன் வர வேண்டுமென்று கூறி, என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்து பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்து கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

***திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளத் துறை ஆகிய துறைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பளித்த அன்புத் தலைவர், தாழ்ந்து கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தைத் தலைநிமிரச் செய்ய வேண்டுமென்று அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற அன்புத் தலைவரை வணங்கி, சென்னையைச் சிங்காரச் சென்னையாக மாற்ற வேண்டுமென்று அயராது பாடுபடுகின்ற, சென்னை மாநகரத் தந்தை அவர்களையும் வணங்கி, உங்களையும் வணங்கி, அனைவரையும் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

கால்நடைத் துறையும், பால்வளத் துறையும் ஒன்றோடொன்று பிணைந்திருக்கின்ற துறைகள் என்பதற்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டு. கிராமங்களிலே இருக்கின்ற, வாழ்கின்ற 75 சதவீதம் மக்களில், 50 சதவீதம் மக்கள் ஆடு மாடுகளைச் செல்வங்களாக மதித்து வாழ்கின்றார்கள். தங்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கு ஆடு மாடுகளையே நம்பியிருக்கிறார்கள். எனவே, இப்போது ஆடு மாடுகளுக்கு வழங்குகின்ற கடன்கள்—மாடுகளுக்கு வழங்கிக் கொண்டிருந்தாலும், ஆடுகளைப் பொறுத்தவரையிலும் அந்தக் கடன்கள் இடைத்தரகர்களால்



1999 ஏப்ரல் 19] [திரு. ரா. சேதுநாதன்]

நிறுத்தப்பட்டிருக்கிறது. இடைத்தரகர்களால் நிறுத்தப்பட்ட கடன்களைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து, தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகத் தொடர்ந்து ஆட்டுக்கான கடன்களை வழங்க வேண்டும், ஏழைகளினுடைய வாழ்வில் ஒளி பிறக்கச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் இந்தத் துறை மிகச் சிறந்த செயல்பாட்டைப் பெற்றிருக்கிறது. கிராமத்திலே இருக்கின்ற படித்த இளைஞர்கள் ஆட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை, பால் பண்ணை என்று பண்ணைகளை ஆரம்பித்து தங்களுடைய வாழ்க்கையை வளமாக்கிக் கொள்வதற்கு முயற்சித்தாலும்கூட நிதிப் பிரச்சினையால் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், துறை அமைச்சர் அவர்களும் பேசி இந்த ஏழை இளைஞர்களுக்கு, படித்துவிட்டு வேலையற்று இருக்கின்ற இளைஞர்களுக்குக் கடனை வழங்கி, பால் பண்ணையையோ, கோழிப் பண்ணையையோ, ஆட்டுப் பண்ணையையோ உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே சுகாதார நிலையங்கள் வழங்கப்பட்டு மக்களுக்குச் சேவை செய்து கொண்டிருந்தாலும், அதே நேரத்தில் கால்நடைகளுக்கு அங்கே நிலையங்கள் இல்லையென்ற குறை இருக்கிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஓர் அற்புதமான திட்டம். அனைத்து மக்களுக்கும், அனைத்து சாராருக்கும் நல்லது அளிக்கும் திட்டம். எனவே, நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வது, கால்நடைகளுக்கு மருந்தகங்களையோ பார்வை நிலையங்களையோ, மருத்துவமனைகளையோ அல்லது அங்கிருக்கின்ற கால்நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப உருவாக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கால்நடை மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. கால்நடை மருத்துவர் முதல் உதவியாளர் வரை அனைத்துக் காலியிடங்களையும் நிரப்புவதற்கு அரசுத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறங்களில், 2,500 மக்கள் வாழ்கின்ற

[திரு. ரா. சேதுநாதன்] [1999 ஏப்ரல் 19

கிராமங்களில் ஒரு பார்வை கால்நடை நிலையத்தையாவது ஏற்படுத்தி, கால்நடைகளுக்குத் திடீரென்று வருகின்ற நோய்களைப் போக்கி, அந்த ஏழை எளிய மக்களுடைய செல்வங்களைக் காப்பாற்ற நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

திண்டிவனத்தில் இருக்கின்ற மருந்தகத்தை மருத்துவமனையாக உயர்த்தித் தாருங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன். நமது அரசு 1997-98 ஆம் ஆண்டு 60 மருந்தகங்களை வழங்கியிருக்கிறது. 1998-99 ஆம் ஆண்டு 40 மருந்தகங்களை வழங்கி, இந்த ஆண்டிலே பத்தே மருந்தகங்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வது, மருந்தகங்களை அதிகமாக்கி கால்நடைகளைக் காப்பாற்றுங்கள்; மருந்தகங்களை அதிகமாக்குங்கள்; மருத்துவமனையாக உயர்த்துங்கள் அல்லது பார்வை நிலையங்களை உருவாக்குங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. குழந்தை தமிழரசன் அவர்கள் கோரிக்கையை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விருத்தாசலத்தில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று அவர் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம் என்ற இரண்டு மாவட்டங்களுக்குமாக, விழுப்புரம் மாவட்டத்தில் பால் வள ஒன்றியம் இருக்கிறது. ஆனால் கடலூர் மாவட்டத்திற்குத் தனியாக வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் தாங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தொகுதிப் பிரச்சினையையும் இந்த நேரத்திலே நான் பேசுவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். விழுப்புரம் மாவட்டத்திற்கு மருத்துவ கல்லூரி நம்முடைய் அன்புத் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் கொடுத்தார்கள். ஆனால், அதற்கு இன்னும் அடிக்கல் நாட்டப்படவில்லை. அடிக்கல் நாட்டி அதை உருவாக்கித் தாருங்கள் என்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.



1999 ஏப்ரல் 19] [திரு. ரா. சேதுநாதன்]

ஓ.பி.ஆர். என்று அழைக்கப்படுகின்ற ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் திண்டிவனத்திலே, ஓமந்தூரிலே பிறந்தார்கள். அவர்கள் எளிமையோடு வாழ்ந்து மறைந்தார்கள். அவர்களுடைய நினைவாக அனைவருக்கும்—அனைத்துத் தலைவர்களுக்கும் மணிமண்டபம் அமைக்கின்ற தாங்கள்—ஓ.பி.ஆர். அவர்களுக்கும் மணிமண்டபம் அமைத்துத் தாருங்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

வியாபாரிகள் ஒரு கோரிக்கையை வைக்கிறார்கள். எடைகளைச் சோதனையிடுவது, அரசு முத்திரைகளைப் பதிப்பது ஒரு வருடத்திற்கு ஒரு முறை என்று இப்போது இருக்கிறது. ஏற்கெனவே இருந்த முறையின்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை எடைகளைச் சோதித்து முத்திரைகளைப் பதிக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்க, வருடா வருடம் எடைகளுக்கு முத்திரைப் பதிக்க வேண்டும் என்ற நிலையை மாற்றி, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை முத்திரைப் பதித்தால் போதும் என்ற நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நகரத்தில் பட்டாக்களை வழங்குவதைப்பற்றி நான் பேசியாக வேண்டும். ஏனென்றால், நகரத்தில் 50, 60 ஆண்டு காலமாக ஏழை எளிய மக்கள் அரசுக்குப் பயன்படாத இடங்களில் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அந்த ஏழை எளிய மக்கள் இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். அதை வரவேற்கின்றார்கள், பாராட்டுகின்றார்கள், நன்றியுணர்வோடு எண்ணிப் பார்க்கிறார்கள். ஆனால், பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். கிராமங்களிலே பட்டாக்களை வழங்குவதைப்போல நகரத்திற்கு தடை இருக்கிறது, அந்தத் தடையை நீக்கி, அரசுக்குத் தேவையில்லாத இடங்களில் 50 ஆண்டு காலம் 60 ஆண்டு காலமாக வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த ஏழை எளிய மக்களுக்குப் பட்டாக்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் அதேபோல, unapproved area என்று சொல்லுகிறார்கள். ஆனால், வீடுகளைக் கட்டிவிடுகிறார்கள். மின் இணைப்பும் பெறுகிறார்கள். தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்கிறார்கள். ஆனால், அந்த area unapproved என்று

[திரு. ரா. சேதுநாதன்] [1999 ஏப்ரல் 19

சொல்கிறார்கள். அவற்றை நம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலித்து unapproved area என்று சொல்கின்ற அந்த ஏரியாக்களுக்கு ஏதாவது ஒரு கட்டணத்தை விதித்து, கட்டிய வீடுகளுக்குக் கட்டணத்தை விதித்து அங்கே அதை approved area-க்களாக மாற்றினால் பல நன்மைகள் அரசு சார்பாக அங்கே கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதையும் செய்து தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம், தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற ஒரு பகுதி. நமக்கு அங்கே இரயில் போக்குவரத்து வசதியாக இருக்கிறது. சாலைப் போக்குவரத்து இருக்கிறது. அங்கே நீங்கள் ஒரு சிப்காட் வளாகத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் சர்க்கரை ஆலை ஏற்கெனவே கேட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்து South India Sugars Company-க்கும் Tharani Sugars Company-க்கும் (மணியடிக்கப்பெற்றது) அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இதுவரையில் நம்முடைய திண்டிவனம் தொகுதியில் எந்தப் பணியையும் ஆரம்பிக்கவில்லை. எனவே, அதையும் உருவாக்கித் தர வேண்டும். திண்டிவனத்திற்கு ஒரு சிப்காட் வளாகத்தையும் ஒரு சர்க்கரை ஆலையையும் உருவாக்கித் தர ஆவன செய்து தாருங்கள், எங்களுக்கு ஆதரவு தாருங்கள், ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற அந்த மாவட்டத்திற்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

திண்டிவனத்திற்கு ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றம் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் இருக்கின்ற அதைத் தாங்கள் விரைவுபடுத்தி, ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் எங்களுடைய பகுதியில் தர்பூசணிப் பழத்தை நிறைய பயிரிடுகிறார்கள். ஆனால், அவை ஒரே நேரத்தில் அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தால் அவை அடிமாட்டு விலைக்கு விலை போகின்றன. அதற்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தாருங்கள். தமிழகத்திலேயே அதிகமாக தர்பூசணி விளைகின்ற ஒரே பகுதி திண்டிவனம் பகுதி என்ற காரணத்தால், தர்பூசணிப் பழங்களை ஒருசில நாட்களாவது சேமித்து வைப்பதற்கு ஒரு குளிர்சாதன அறையை அமைத்துத் தரவேண்டும் என்றும், அதேநேரத்திலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அவற்றை வைத்து விற்பதற்கு மாண்புமிகு



1999 ஏப்ரல் 19] [திரு. ரா. சேதுநாதன்]

விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும், விதிகளைத் தளர்த்தித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல், பெரியதச்சூர் கிராமம் என்பது ஒரு பெரிய கிராமம். அங்கே ஜாதிப் பிரச்சினை இருக்கிறது. அங்கே ஒரு காவல் நிலையத்தை, அல்லது புறக்காவல் நிலையத்தை இந்த ஆண்டு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஏதோ ஆண்டுக்கு ஒரு முறை பட்ஜெட் வருகின்றது; ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பட்ஜெட் என்ற முறையில் இந்த விவாதம் நடைபெறுகின்றது. துறை அதிகாரிகளும், செயலாளர்களும் நம்முடைய மானியக் கோரிக்கை என்று நடைபெறும், என்று முடியும், அப்பா முடிந்துவிட்டது என்று செயல்படுகிற ஒரு நிலைதான் இருந்துகொண்டிருக்கிறதே தவிர, இதிலே இந்தத் துறையை எவ்வாறு முன்னேற்றலாம் என்று ஓரளவு இன்னும் அதிகாரிகள் நல்ல கவனத்தோடு செயல்பட வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், குஜராத்திலே National Dairy Development Corporation மூலம் 'ANAND' Milk Dairy விவசாயிகளுக்கு இலவசமாகவே கறவை மாடுகளைக் கொடுத்து, காலையில் பாலைக் கொடுத்தால் மாலையில் அவர்களுக்குப் பணத்தைப் பட்டுவாடா செய்கின்றார்கள். ஒரு மாடு இறந்துவிட்டால் உடனடியாக அவர்கள் இலவசமாக மாடு கொடுக்கிறார்கள். இலவசமாக மாடு கொடுத்து, பாலைக் குறைந்த விலைக்கு வாங்கி, மிக அதிக அளவில் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக அந்த குஜராத் மாநிலத்திலே அவ்வாறு அவர்களால் செயல்பட முடியும் என்றால் ஏன் தமிழகத்தில் நம்மாலே முடியாது என்பதை நீங்கள், துறை அதிகாரிகளும், துறை அமைச்சரவர்களும் இதிலே கவனம் செலுத்தி, அந்த அடிப்படையில் பரிட்சார்த்தமாக....

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குஜராத்தை

மேற்கோள் காட்டினார்கள். எங்களுடைய வேண்டுகோளாக, குஜராத்திலே 8 ரூபாய் 52 காசுக்குக் கொள்முதல் செய்து 11 ரூபாய் விற்பனை விலையாக விற்கின்றார்கள். ஆகவே, அது இலாபத்திலே இயங்கக்கூடிய வகையிலே இருக்கின்றது. நாம் 9 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து 10½ ரூபாய்க்கு விற்கின்றோம். ஆகவே, இதில் உடன்பாடு ஏற்பட்டால் இன்னும் நல்லமுறையிலே இந்தப் பாலை உற்பத்தி செய்யலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இலவசமாக நீங்கள் மாட்டைக் கொடுத்து, இலவசமாக மாடு கொடுத்தவர்களிடம் அந்த அளவில் நீங்கள் பாலை வாங்குங்கள். நிச்சயமாக விவசாயிகள் பயன் அடைவார்கள்; உங்களுடைய "ஆவின்" நிறுவனமும் நிச்சயமாக வளரும் என்பதில் ஐயமில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு நீல நாக்கு நோயினால் நெல்லை மாவட்டத்தில் மிக அதிகமான, ஆயிரக்கணக்கான ஆடுகள் இறந்து போயின. அதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் உடனடியாக நிவாரணம் வழங்கினார்கள். ஆனால், நிவாரணம்தான் யாருக்கும் கிடைக்கவில்லை. காரணம், நிலம் இல்லாதவர்களுக்கு மட்டும்தான் அது வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டார்கள். குறிப்பாக, 20 ஆடுகள் ஒருவர் வைத்திருந்து, 20 ஆடுகளும் இறந்துவிட்டால் அவரிடம் 50 சென்ட் நிலம் இருந்தால் போதும், அவருக்கு நிவாரணமே கிடையாது என்று அறிவித்து நீங்கள் விவசாயிகளுக்கு நிவாரணம் இல்லை என்றால்கூட நிம்மதியாக இரண்டு நாட்கள் அழுதுவிட்டு வேறு ஏதாவது அடுத்த கட்டத்திற்குச் சென்றிருப்பார்கள். ஆனால், நானே பலமுறை, அவர்களை—பாதிக்கப்பட்டவர்களை, நானே தரக்கர்குளத்திலிருந்தும் மற்றும் சங்கரன்கோவில் பகுதியிலிருந்தும் மாலூர் பகுதியிலிருந்தவர்களை அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பலமுறை அலைந்தும்கூட அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை. ஆகவே, நீல நாக்கு வியாதியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கண்டிப்பாக அனைவருக்கும் நிவாரணத் தொகையை வழங்க வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நெல்லையில் நெல்லை பால்பண்ணை ஒன்றியக் கூட்டுறவுச் சங்கத்திலே பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றது மாண்புமிகு



அமைச்சரவர்களுக்குத் தெரியும். அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். அங்கிருந்த நிர்வாக இயக்குநர் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றாரே தவிர மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் அவர்மீது எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. இருந்தபோதிலும் நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பும் 13,15,474 ரூபாய் 92 காசு மீண்டும் தணிக்கைக் குழுவினால் தணிக்கை செய்யப்பட்டு 1997ஆம் ஆண்டு இதேபோன்று ஊழல் நடைபெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, இந்த மாமன்றத்திலே சொன்ன பின்பும் அவர்கள்மீது இன்றளவும்.....

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கடந்த மானியக் கோரிக்கையிலேயும் சொன்னார். 13,15,474 ரூபாய் ஊழல் என்பது நம்முடைய ஆட்சியிலே நடந்தது கிடையாது. கடந்த ஆட்சியில், அதாவது அப்பொழுது இருந்த நிர்வாக இயக்குநர், அப்பொழுது இருந்த பெருந்தலைவர், செய்த தவறுதான். அது 31-3-1997-ல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இது நடந்தது இந்தக் கால ஆட்சியில் கிடையாது. இது கடந்த கால ஆட்சியினுடைய தவறு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-15

**திரு. மு. அப்பாவு:** தவறு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் நடைபெற்றது என்பதைத்தான் நானும் குறிப்பிடுகிறேன். 31-3-1997 அன்று தணிக்கையின்போது இதைக் கண்டுபிடித்தபின்பும் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரே என்னிடத்திலே சொன்னார். நடவடிக்கை எடுத்தபிறகு, அந்த அதிகாரி முன் ஜாமீன் எடுத்துச் சென்றுவிட்டார் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆவின் மூலம் ஒரு லிட்டர் மோர் 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 200 மில்லி லிட்டர் மோர் 3 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதேபோல சூடாக்கிய பால் ஆவின் மூலம் ஒரு லிட்டர் 32 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விலையைச் சற்று குறைத்துக் கொள்ளும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறு, குறு விவசாயிகளுக்குக் கடன் வழங்கும்போது மானியத்தோடு கடன் வழங்கி, கால்நடைகளை வாங்கிக் கொடுக்கிறீர்கள். விவசாயிகள் அங்கும் இங்கும் அலைவதைப் பார்த்தால் மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆகவே சிறு, குறு விவசாயிகள் என்றால், ஒரு பெட்டிக்கடை வைத்திருப்பவர், ஒரு வங்கியில் ஓவர் டிராப்ட் மூலம் 20 ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொள்ளலாம் என்ற ஓர் அனுமதியைப் பெற்று வைத்திருக்கிறார். அதேபோன்று இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர், மூன்று ஏக்கர் நிலம் வைத்திருப்பவர், 15,000 ரூபாய்க்கான கறவை மாடுகளை வாங்கிக் கொள்ளலாம். கூட்டுறவு வங்கிகளில் அந்தச் சான்றிதழை மட்டும் கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாம் என்ற ஒரு நிலையை உருவாக்கி, புதிதாக அந்த விவசாயிகளுக்குக் கறவை மாடுகளை வாங்கவேண்டுமானால் எளிதாக வாங்குகிற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது கால்நடை மருத்துவத் துறையில் பயிற்சி பெற்று இன்னும் அதிகம்பேர் வேலைவாய்ப்பின்றி காத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்று நம்முடைய மருத்துவமனைகளிலே 450-க்கு மேற்பட்ட மருத்துவர் பணியிடம் காலியாக இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டுகாலமாக கால்நடை மருத்துவத் துறையிலே மருந்தகங்கள் தொடங்கப்பட்டு, மொத்தம் கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனை, பெருமருத்துவமனை 996 இருக்கின்றன. அந்த 996-ல் 163 கால்நடை மருந்தகங்களில் மருத்துவர்கள் பதவிகளைத் தோற்றுவித்து 174 கால்நடைப் பட்டதாரிகளை வரலாற்றிலேயே கடந்த ஆண்டு ஒரே தடவையில் நியமித்த ஓரே ஆட்சி, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞருடைய ஆட்சி என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** ஒரு மருத்துவமனையையொட்டி, ஒரு சட்டமன்ற ஒன்றியத்துக்குட்பட்ட பகுதியில் 6 பார்வை இடங்களுக்கு நீங்கள் எழுதித் தாருங்கள் என்று கேட்டீர்கள். அந்த அடிப்படையில் ஆறு ஆறு இடங்களுக்கு ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் எழுதித் தந்து, இன்றளவும் அந்தப் பார்வை மையம் செயல்படவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு....





**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் திறக்கப் பட்டுவிட்டதாக துறையின் குறிப்பு சொல்கிறது. துறையில் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்திலே அவர் எழுதிக் கொடுத்து, திறக்கப்படவில்லை என்று சொன்னால் உடனடியாகத் திறக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் எழுதிக் கொடுத்திருக்கின்ற எந்த இடத்திலும் இன்றளவும் பார்வை மையம் திறக்கப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். செட்டிக்குளத்திலே பகுதிநேர கால்நடை மருத்துவமனை செயல்படுகிறது. அதை முழுநேர மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பெட்டைக்குளத்துக்கு ஒரு கால்நடை மருத்துவமனையையும், வடக்கன்குளத்திலே ஏற்கெனவே செயல்பட்டு வந்த கால்நடை மருத்துவமனையை மீண்டும் அங்கே திறந்து தரவேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெல்லைக்கு சட்டக் கல்லூரியைத் தந்தது போன்று நெல்லையிலே ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியையும் இந்த ஆண்டு அனுமதிக்கவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

நம்முடைய ஆவின் நிறுவனத்திற்கு பாலிதீன் பிலிம் வாங்குவதற்கு கிட்டத்தட்ட 2000 டன் பாலிதீன் பிலிம் தேவைப்படுவதற்கு டெண்டர் விடப்பட்டு பின் அந்த டெண்டரானது நிறுத்திவைக்கப்பட்டு, சிறு தொழில் செய்கிறவர்களுக்கு அது கொடுக்கப்பட்டது. அது வரவேற்கத் தக்க விஷயம். ஆனால், சிறு தொழில் செய்கிறவர்களுடைய மொத்த உற்பத்தித் திறனே 2000 டன்னுக்குக் குறைவாக இருப்பதால், ஒன்று, மேலும் சிறு தொழிலை ஊக்குவிக்கும்வண்ணம் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு இந்தப் பாலிதீன் பிலிம் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்; அல்லது இதிலே 15 கோடி ரூபாய் மதிப்புள்ள பாலிதீன் பிலிம் வாங்குவதற்குக் குறைந்தபட்ச டெண்டரை நீங்கள் வரவேற்று அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. அப்பாவு] [1999 ஏப்ரல் 19

அடுத்து, எல்லா இடங்களுக்கும் நாம் தேர்தலை நடத்தி விட்டோம். ஆனால், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம், சென்னைக்கு மட்டும் தேர்தல் நடைபெறவில்லை. ஆகவே, அதற்கும் விரைவிலேயே தேர்தல் நடத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஆவின் கலப்புத் தீவனங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனுடைய தீவனத்துக்கான விற்பனை வரியை முழுமையாக ரத்துச் செய்தார்கள். நன்றி. ஆனால் அதில் ஒரு கிலோவுக்கு 20 பைசா வீதம் இன்னும் அந்த ஆவின் நிறுவனத்தின்மூலம் கொடுக்கப்படவில்லை என்பதை மட்டும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல் பால் விலையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 50 பைசா குறைத்தார்கள். ஆனால், குறைக்கப்பட்ட அந்த தொகை எந்த உற்பத்தியாளர் சங்கத்துக்கும் சென்றடையவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12-20

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தில், முதுகுளத்தூரில் இயங்கி வந்த பால் குளிரூட்டும் நிலையமானது தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் அந்த நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று.

சென்னையிலே, நம்முடைய மாநகர மேயர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, இங்கே சில குறிப்பிட்ட பகுதிகளிலே பால் மாடுகள் வளர்ப்பதைத் தடை செய்திருக்கிறார்கள். சில குறிப்பிட்ட பகுதி என்பதைவிட, பால் மாடுகளை நீங்கள் வளர்க்க வேண்டுமானால் இன்னின்ன வசதிகள் இருக்க வேண்டுமென்பதை எல்லாப் பகுதிகளுக்கும் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த அளவில் இப்போது 10,15 வார்டுகளில் ஆரம்பிக்கக் கூடாது என்று சொல்லி, இப்படியே சென்றால், சென்னை நகரத்திலே பால் உற்பத்தி செய்கின்ற கறவை மாடுகளே இல்லாமல் போய்விடும். ஆகவே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, கிளை நிலையங்கள் தமிழகத்திலே மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. ஒரு revenue firka-வுக்கு ஒன்று என்ற அளவில் நீங்கள் தொடங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நிரந்தரக் கட்டடம் ஒரு கால்நடை மருத்துவமனைக்கும் இல்லை. ஆகவே, நிரந்தரக் கட்டடம் இருக்க வேண்டும். அதோடு, மருத்துவமனை



1999 ஏப்ரல் 19] [திரு. மு. அப்பாவு]

மருத்துவருக்கு உதவியாளர் என்ற ஒருவர் இல்லை. ஒரு மருத்துவர், ஆறு Centre-களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால், உதவியாளருக்கு 60 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்றால், எப்படி அவை செயல்படும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதேபோல, செயற்கை முறையில் கருவூட்டலுக்கு ஒரு மாட்டிற்கு ரூ. 12 வசூல் செய்கிறீர்கள். அதை முழுவதுமாக நீங்கள் நிறுத்த வேண்டும். இலவசமாகக் கருவூட்டல் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

அதேபோன்று, ஆவின் நிறுவனத்தின் மூலம் தஞ்சையில் நடைபெறுகின்ற பால் பண்ணை உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் வழங்குகிறீர்கள். ஆனால் மற்ற இடங்களில், பால் உற்பத்தி செய்கின்ற அனைத்துச் சங்கங்களிலும் வேலை செய்கின்ற நிர்வாகிகளுக்குச் சம்பளம் மிகக் குறைவாக வழங்கப்படுகிறது. தஞ்சையிலே, உங்களுடைய நேரடிக் கண்காணிப்பில் இருக்கின்ற அந்த நிறுவனம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் நட்டத்தில் இயங்குகிறது. ஆனாலும், அங்குள்ள ஊழியர்களுக்கு முறைப்படி ஊதிய உயர்வு கொடுக்கிறீர்கள். அதேபோன்று மற்ற இடங்களிலே பணிபுரிபவர்களுக்கும் (மணியடிக்கப்பெற்றது) இந்த உயர்வை வழங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'இனித்த பாலினும், தேனினும், இன்சுவை
கனித்தொகையினும், கட்டிக் கரும்பினும்,
நினைத்த வாயுஞ்சொல் நெஞ்சுமினித்திடும்'

தனித் தமிழ் பெருந்தாயினைப் போற்றி, 'சுடும் வெயில், சுடும் மணல், பொடி நடை, நீண்ட தூரம், சுகமான பயணம்' என்ற பேரறிஞர் அண்ணாவின் கூற்றுக்கிணங்க அரசியல் தட்ப வெப்பங்களின் சீற்றங்களை எதிர்கொண்டு, கோழி தன் குஞ்சுகளைப் பாதுகாப்பதைப் போல, இந்தத் தமிழ்ச் சமுதாயத்தைக் காத்து நிற்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், ஒப்பற்ற தலைவர், கலைஞர் அவர்களை

[புலவர் பூ.ம. செங்குட்டுவன்] [1999 ஏப்ரல் 19

வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் இரண்டு தடவைகளும், கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில் இரண்டு தடவைகளும் ஆக நான்காவது தடவையாக இந்த மாமன்றத்தில் மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்ததற்கு வாய்ப்பினை அளித்தமைக்கு தலைவர் கலைஞர் அவர்களுக்கு என் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் பதிலுரையை அளிக்கின்றேன்.

கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையில் மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ந. பாண்டுரங்கன், வி. அய்யலுசாமி, கே.கே. வீரப்பன், சி. வேலாயுதன், ந. கருப்பண்ண உடையார், டாக்டர் காஞ்சனா கமலநாதன், திரு. ஜி.கே. மணி, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. ரா. சேதுநாதன், திரு. மு. அப்பாவு ஆகிய மாண்புமிகு 11 உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள்.

கால்நடை பராமரிப்புத் துறை எதிர்காலத்திலே இந்தச் சீரிய கருத்துகளை எடுத்துக்கொண்டு, அந்தக் கருத்துகளையெல்லாம் இந்தத் துறையின் வளர்ச்சிக்கு உரமாக ஆக்கிக்கொண்டு, சிறப்பாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறை என்பது வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வியல் நலன்களோடு பின்னிப் பிணைந்தும், அவர்களுடைய பொருளாதார வளங்களை உள்ளடக்கிய, பல பண்ணைத் தொழில்களுக்கு நேரடியாகவும், துணைத் தொழிலாகவும் விளங்கி, கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழையெளியவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியதும், பற்றுக் கோடாகவும் இருக்கின்ற ஆடுகள், மாடுகள், எருமைகள், கோழிகள், முயல்கள், நாய்கள், குதிரைகள், பன்றிகள் போன்ற கால்நடைகளைப் பராமரித்துப் பாதுகாக்கவும், வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றங்களுக்குத் தக்கவாறு மிகுந்த பயன்களை விரைந்துதரக்கூடிய வீரிய உயர்ரகக் கலப்பினக் கால்நடைகளை உருவாக்கி, அதன்மூலம், பால், முட்டை, இறைச்சி போன்ற புரதச் சத்து மிக்க உணவுத் தேவைகளை நிறைவு செய்யவும் கால்நடைகளிலிருந்து கிடைக்கின்ற உபரிப் பொருள்களான தோல், எலும்பு, சாணம், கொம்பு, ரோமம் போன்ற பயன்தரத்தக்க பொருள்களின் பெருக்கம் கண்டு அதன் அடிப்படையில் சமூக, பொருளாதாரத்தில் வளர்ச்சி காணவும், அந்த அடிப்படையிலே



1999 ஏப்ரல் 19] [புலவர் பூ.ம. செங்குட்டுவன்]

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஈடுகாணவும் இந்தத் துறை சிறப்போடு பணியாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

நீண்ட நெடிய காலமாக ஒரே இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த இந்தக் கால்நடை பரமரிப்புத் துறையின் செயல்பாடுகள் தீவிரமாக்கப்பட வேண்டும்; முனைப்போடு செயல்பட்டு மக்களுக்கு விரைந்து பயன் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நம்முடைய அனைத்துத் துறைகளிலும் ஆற்றல் முத்திரைகளைப் பதித்திருக்கின்ற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், இந்தக் கால்நடை பராமரிப்புத் துறையின் மீதும் தன்னுடைய கனிவான பார்வையைச் செலுத்தி மேலும் ஒரு இயக்குநர் பதவியைத் தோற்றுவித்து, தமிழகத்திலே சுமார் 10,500 ஏக்கர் நிலப் பரப்பளவு கொண்ட 8 மாட்டுப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், டேனிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டங்கள், மத்திய மாநில அரசுகளின் சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்டங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற பிரிவிற்கு கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர் என்றும், அதேபோல மருந்தகம், மருத்துவமனை பெருமருத்துவமனை போன்ற 996 கால்நடை மருத்துவ நிலையங்களையும், 383 ஊராட்சி ஒன்றியங்களில் நடமாடும் கால்நடை விரிவாக்க மருந்தக நிலையங்களையும், கோட்ட அளவிலான 54 நடமாடும் வாகனப் பிரிவு மருந்தகங்களையும், இங்கே ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 2126 கால்நடைக் கிளை நிலையங்களையும், அதற்கு இணையாக 2126 பார்வைக் கிளை நிலையங்களையும், 3510 செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களையும் கொண்ட அந்தப் பிரிவிற்கு கால்நடை மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் என்றும் நியமித்து சிறப்பாகச் செயல்பட ஆணையிட்டிருக்கிறார்கள்.

1969-70 ஆம் ஆண்டு முதன்முதலாக பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள், வேளாண்மைத் துறையிலே உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்ததைப்போல, கால்நடை பராமரிப்புத் துறையில், பால், முட்டை உற்பத்தியில் வெண்மைப் புரட்சியையும், அதேபோல மீன்வளத் துறையில் நீலப் புரட்சியையும் தோற்றுவித்து, இன்றையதினம் அதனுடைய பெருக்கங்களின் அடிப்படையில் இந்தியாவிலேயே, பால், முட்டை, இறைச்சி உற்பத்தியில் இரண்டாவது மாநிலமாக தமிழகம் இருக்கிறது

[புலவர் பூம. செங்குட்டுவன்] [1999 ஏப்ரல் 19

என்று சொன்னால், திடமான கொள்கை, தெளிவான பாதை, பண்பட்ட மூதறிவு, தமிழ்ப் பகை வெல்லும் போர்க்குணம், புடம்போட்ட உள்ளம், பொங்கும் தமிழ் உணர்ச்சி, கடைக்கோடி மாந்தரும் இடைத்தரகு இல்லாமல் கடைத்தேறும் திட்டங்கள், மத நல்லிணக்கம், (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயம் வளர மகத்தான அணுகுமுறை, சாதியம் தகர்க்கும் சான்றாண்மை மிக்க பெரியார் சமத்துவபுரத் திட்டங்கள், அடுத்த நூற்றாண்டில் அன்னைத் தமிழை அரியாசனம் ஏற்ற சீரிய முறையில் செயல்தரும் திட்டங்கள், இந்த மூல உட்கூறுகளின் மொத்த உருவமாகத் திகழும் முத்தமிழ் அறிஞர் அவர்களுடைய காலத்திலேதான் இது நடைபெற்று இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே கால்நடை பராமரிப்புத் துறையில் அதனுடைய செயல்பாடுகள். இந்த அடிப்படைச் செயல்பாடுகளுடைய விளைவாக—தமிழ்நாட்டில் 1995-96-ல் பால் உற்பத்தி 37910 இலட்சம் கிலோ, கலைஞர் ஆட்சியிலே, 1998-99-ல் 42,728 இலட்சம் கிலோ—இந்த மூன்றாண்டு காலத்தில் 4818 இலட்சம் கிலோ கூடுதலாகப் பால் உற்பத்தியில் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், சிறப்பான சாதனை அல்லவா! அதேபோல ஒரு நாளைக்கு தனி நபருக்குக் கிடைக்கும் பாலின் அளவு 1991-92-ல் 163 கிராம்; 1997-98-ல் 183 கிராம்; 1998-99-ல் 192 அது கிராமாக உயர்ந்துள்ளது. அதேபோல முட்டை உற்பத்தியை எடுத்துக்கொண்டால், 1995-96-ல் 304.9 கோடி, 1998-99-ல் 358.9 கோடி. மூன்றாண்டு காலத்தில் கலைஞர் ஆட்சியில் கூடுதல் உற்பத்தி 54 கோடி, 1995-96-ல் ஒரு நபருக்கு ஆண்டு ஒன்றுக்கு கிடைத்த நபர்வாரி முட்டை 54, 1998-99-ல் 59, நபர்வாரி முட்டை கூடுதலாக 5 கிடைத்து இருக்கிறது.

இறைச்சி உற்பத்தி என்று எடுத்துக்கொண்டு சொன்னால், 1997-98-ல் 363 இலட்சம் கிலோ, 1998-99-ல் 381 இலட்சம் கிலோ. முந்தைய ஆண்டைவிட கடந்த ஆண்டு 18 இலட்சம் கிலோ கூடுதல் உற்பத்தி இறைச்சி கிடைத்திருக்கிறது.

பிற்பகல் 12-30

அதுபோல தோல் உற்பத்தி பற்றிச் சொன்னார்கள். கால்நடைகளின்மூலம் வருவாய், அந்நியச்செலாவணி ஈட்டித்தரக்கூடிய ஓர் வருவாய் தோல் உற்பத்தி. இந்திய அளவில் 1997-98 ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட தோல், தோல் பொருட்கள், தோல் ஆடைகள்,



1999 ஏப்ரல் 19] [புலவர் பூம. செங்குட்டுவன்]

காலணிகள், தொடர்புடைய பொருட்கள் ஏற்றுமதி 2314.80 கோடி ரூபாய். அதிலே தமிழ்நாட்டில் மட்டும் மேற்கண்ட தலைப்பில் தோல் ஏற்றுமதி 1083 கோடி ரூபாய். ஏறக்குறைய 47 விழுக்காடு கால்நடைகளுடைய தோல் தமிழகத்திலேயிருந்துதான் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது சாதனையல்லவா ?

அதுபோல, கால்நடைத் துறையில் கால்நடை மருத்துவத்தின் சிறப்பான செயல்பாடுகளைக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், ஜெர்சி, பிரிசியன், சிந்தி போன்ற வெளிநாட்டினம், ஓங்கோல், காங்கேயம், தார்ப்பார்க்கர், உம்பளாச்சேரி ஆகிய உள்நாட்டினங்களிலும் வீரியமிக்க கலப்பினங்களை உருவாக்க 1995-96-ல் செய்யப்பட்ட செயற்கை முறைக் கருவூட்டலில் போடப்பட்டவை 25,73,287 சினை ஊசிகள், 1998-99-ல் போடப்பட்ட அந்தக் கருவூட்டல் சினை ஊசிகள் 29,65,714. முந்தைய ஆட்சியைவிட கடந்த ஆண்டு கூடுதலாகச் செய்யப்பட்ட கருவூட்டல் பணிகள் 3,92,427. ஆகவே, செயற்கைமுறை கருவூட்டல் அதிகமாகச் செய்யப்பட்டிருக்கின்றது.

அதுபோல கன்று பிறப்பு பற்றி இங்கே சொன்னார்கள். மூன்று தடவை, நான்கு தடவை போடப்பட்டும்கூட கன்று பிறக்கவில்லை என்று சொன்னார்கள். 1995-96-ல் செய்யப்பட்ட 25 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டலில் கிடைத்த கன்றுகள் செயற்கை முறை கருவூட்டல் செய்தால் 10 மாதம் கழித்துத்தான் கன்று பிறக்கும், அப்படிப் பிறந்த கன்றுகள்—7,54,251. 1997-98 ஆம் ஆண்டு செய்யப்பட்ட 26 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டலில் 1998-99 ஆம் ஆண்டு கிடைத்த கன்றுகள் 8,85,369. எனவே, 34.05 விழுக்காடு கன்று ஈனும்திறன் நடைபெற்று இருக்கிறது. கூடுதலாக 4 விழுக்காடு கன்று ஈனும் திறன் அதிகமாகக் கிடைத்திருக்கிறது.

அதுபோல, சினைப் பரிசோதனை. 1995-96-ல் பசு மற்றும் எருமை இனங்களுக்குச் செய்யப்பட்ட சினைப் பரிசோதனை 21,24,910; 1998-99-ல் சினைப் பரிசோதனை 23,63,092, கடந்த கால ஆட்சியைவிடக் கூடுதலாக செய்யப்பட்ட சினைப் பரிசோதனை 2,38,182.

அதுபோல உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தியில் 1995-96-ல் 19.58 இலட்சம், 1998-99-ல் 23.50 இலட்சம். கூடுதல் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி 3.92 இலட்சம் ஆகும். அதுபோல திரவ நைட்ரஜன் உற்பத்தி. திரவ நைட்ரஜன் என்று சொன்னால், உறைவிந்துக் குச்சிகளை

பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய ஒரு பொருள். வீரிய கலப்பின, உறைவிந்துக் குச்சிகளை பல்வேறு இடங்களுக்கு அதனுடைய சக்தி குறையாமல் எடுத்துச் செல்லப் பயன்படும் திரவ நைட்ரஜன் உற்பத்தி 1995-96-ல் 1.55 இலட்சம் லிட்டர்; 1998-99 ல் 2.39 இலட்சம் லிட்டர். கூடுதல் உற்பத்தி 0.84 இலட்சம் லிட்டர் கடந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

அதுபோல கால்நடை நோய்த் தடுப்பூசிப் பணிகள். தொண்டை அடைப்பான், சப்பை நோய், கோமாரி நோய், வெக்கை நோய், கோழிக் கழிச்சல் என்ற பல்வேறு வகையான நோய்த் தடுப்பு முறைகளில் மாடுகள், எருமைகள், ஆடுகள், கோழிகள் ஆகியவற்றிற்கு 1995-96-ல் போடப்பட்ட தடுப்பூசிகள் 1,88,12,482, 1998-99-ல் போடப்பட்ட தடுப்பூசிகள் 1,89,30,026.

அதுபோல கால்நடைகளுக்குச் சிகிச்சை. குதிரைகள், மாடுகள், ஆடுகள், நாயினம் ஆகியவற்றைப் பொறுத்தவரை 1995-96-ல் சிகிச்சையளிக்கப்பட்டவை 1,42,63,661; 1998-99-ல் சிகிச்சையளிக்கப் பட்டவை 1,46,40,151. 3,76,490 கூடுதலாகக் கிடைத்திருக்கிறது.

அதுபோல கோழிகளுக்குத் தடுப்பூசி. கோழிகளைத் தாக்கக்கூடிய கோழிக் கழிச்சல் நோயைத் தடுப்பதற்காக 1995-96-ல் போடப்பட்ட தடுப்பூசி 1,00,10,000; 1998-99-ல் கோழிகளுக்குப் போடப்பட்ட தடுப்பூசி 1,44,00,000. எனவே 43,90,000 தடுப்பூசி கடந்த ஆண்டு கூடுதலாகப் போடப்பட்டிருக்கிறது. அதைப்போல, குடற்புழு நீக்கம். 1995-96-ல் 54,02,544. 1998-99-ல் 1,00,14,289.

அதைப்போல, ஆண்மை நீக்கம். 1995-96-ல் 5,98,204. 1998-99-ல் 7,66,121. கடந்த ஆண்டு கூடுதலாக செய்யப்பட்டவை 1,67,917.

பிற்பகல் 12-35

அதைப்போல, கால்நடை நிலையங்களுக்கு வெகு தொலைவில் உள்ள குக்கிராமங்களுக்கு கால்நடை மருத்துவர்கள் குழுவாகச் சென்று மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தி, கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்ததைப் பொறுத்தவரை 1995-96-ல் 30,148 கிராமங்களில் முகாம்கள் நடைபெற்றன. 1998-99-ல் 34,189 கிராமங்கள். கூடுதலாக 4,041 கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெற்றுள்ளன.





அதைப்போல, புதிய பெருமருத்துவமனைகள் தோற்றுவித்தல். இந்த மூன்றாண்டு காலத்தில் கால்நடைகளுக்கு X-ray மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய அறுவைச் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளக்கூடிய வகையில் கரூர், திருவாரூர், ஊட்டி ஆகிய இடங்களில் உள்ளவை புதிய பெருமருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

புதிய இணை இயக்குநர் மண்டலங்கள் உருவாக்குதல். திருவள்ளூர், கரூர், பெரம்பலூர், திருவாரூர், நாமக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில், புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

அதைப்போல, புதிய உதவி இயக்குநர் கோட்டம் உருவாக்குதல். கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதாக உதவி இயக்குநர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

புதிய நோய்ப் புலனாய்வுப் பிரிவு. விழுப்புரத்தில் கால்நடைகளுக்குப் புதியதாக நோய் புலனாய்வுப் பிரிவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மருந்தகம், மருத்துவமனை போன்ற கால்நடை மருத்துவ நிலையங்களை எடுத்துக் கொண்டால், கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் தோற்றுவிக்கப்பட்டவை 106 மட்டுமேதான். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பின்பு இந்த மூன்று ஆண்டு காலத்தில் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட மருந்தகம், மருத்துவமனை, பெருமருத்துவமனை போன்ற கால்நடை மருத்துவ நிலையங்கள் 163. இந்த ஆண்டு பகுதி 2 திட்டத்தில் புதியதாகத் தொடங்க மாண்புமிகு முதல்வர் அனுமதி அளித்துள்ளது 10. ஆக மொத்தம் 173 இந்த மூன்று ஆண்டு காலத்தில் உருவாக்கப்பட்டது மிகப் பெரிய சாதனை இல்லையா?

அதைப்போல, புதிய, பார்வைக் கிளை நிலையங்கள் 2,126 சென்ற ஆண்டு உருவாக்க ஆணையிட்டு, அவை செயலபட்டு வருகின்றன.

அதைப்போல, மருந்துகள் இங்கே பல்வேறு நிலையங்களுக்குப் போதாது என்று சொன்னார்கள். 1995-96-ல் கால்நடைகளுக்கு மருந்து வாங்க அரசு அனுமதித்தது ரூபாய் 5 கோடி மட்டுமே. 1998-99-ல் கலைஞர் ஆட்சி வந்த பின்பு 3 கோடி ரூபாய் உயர்த்தி 8 கோடி ரூபாய்க்கு இன்றையதினம் அதிகமாக மருந்து வாங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[புலவர் பூ.ம. செங்குட்டுவன்] [1999 ஏப்ரல் 19

அதைப்போல, பணியாளர்கள் நலனை எடுத்துக்கொண்டால் தலைவர் கலைஞர் ஆட்சி ஏற்பட்ட பின்பு கால்நடைப் பட்டதாரிகள் வேலைவாய்ப்பினைக் கருத்தில்கொண்டு தேர்வாணைக் குழு மூலம் 174 பேர் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

அதைப்போல, 35 கால்நடை உதவி மருத்துவர்கள் உதவி இயக்குநர்களாகவும், 31 உதவி இயக்குநர்கள் துணை இயக்குநர்களாகவும், 34 துணை இயக்குநர்கள் இணை இயக்குநர்களாகவும், 5 இணை இயக்குநர்கள் கூடுதல் இயக்குநர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

பத்தாண்டுகளுக்கு மேல் கால்நடைப் பண்ணைகளில் தினக்கூலிப் பணியாளர்களாகப் பணியாற்றியவர்களில், 826 பேரை நிரந்தரமாக்க கருணை உள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன்படி சென்ற ஆண்டு 759 பேருக்கும், இந்த ஆண்டு 67 பேருக்கும் ஆணை வழங்கப்பட்டது.

அதைப்போல கால்நடை ஆய்வாளர்களுக்கான பயிற்சி. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். இந்த மூன்று ஆண்டு காலத்தில் கால்நடை பராமரிப்பு உதவியாளர்களில் கல்வித் தகுதி பெற்றவர்கள் 275 பேர்களுக்கு ஒரத்தநாட்டில், துறையின் சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி முடித்தவர்களுக்கு பணி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 125 பேர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு 11 மாத பயிற்சிக்கு அனுப்பப்பட உள்ளனர்.

அதைப்போல கால்நடைப் பண்ணைகள். 11 பண்ணைகளைப் பொறுத்தவரை ஒசூர், அபிசேகப்பட்டி, ஈச்சங்கோட்டை, ஊட்டி ஆகிய நான்கு பண்ணைகளில் திரவ நைட்ரஜன், உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கும் பணிகளும், மீதி உள்ள 7 பண்ணைகளில் தீவிர இனப்பெருக்க முறைகளில் கன்று விநியோகம் குறித்த செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதைப்போல அயல்நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட உயர் ரக பொலிகாளைகள். வீரியக் கலப்பினங்களை உருவாக்க, 1998-99-ல் 31 பொலிகாளைகள், நாளொன்றுக்கு 20 லிட்டருக்கு மேல் பால் தரக்கூடிய ஜெர்சி, ஹோல்ஸ்டீன்பிரிசியன் ஆகிய இனங்களைச்



1999 ஏப்ரல் 19] [புலவர் பூ.ம. செங்குட்டுவன்]

சேர்ந்தவை ரூபாய் 41 இலட்சங்களில் வாங்கப்பட்டுள்ளன. ஒரு பொலிகாளையில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 8,000 சினை ஊசிகள் கருவூட்டலுக்காகத் தயாரிக்கப்படுகின்றன.

அதைப்போல சென்ற ஆண்டு, தீவிர ஆடு வளர்ப்புத் திட்டத்தில் 1998-99-ல் திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றுக்கு 20 பயனாளிகள் வீதம் 22 ஊராட்சிகளில் 440 பேருக்கு கிடாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதைப்போல, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 3,000 பயனீட்டாளர்கள் பயனடையும் வகையில் 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் 5.4 இலட்சம் செலவில் தாது உப்புகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

பிற்பகல் 12-40

அதைப்போல தீவிர ஆடு வளர்ப்புத் திட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, சேலம், நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 3.55 இலட்சம் செலவில் 50 பயனாளிகளுக்கும் ஒருவருக்கு 10 கிடாக்குட்டிகள் வீதம் 500 கிடாக்குட்டிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

அதைப்போல வளர்ப்புப் பிராணிகளுக்குச் சிகிச்சைக் கட்டணம் இரத்து. செல்லப் பிராணிகளான நாய், பூனை, போன்ற வளர்ப்புப் பிராணிகள் சிகிச்சைக்கு வரும்பொழுது அனுமதிக் கட்டணம் ரூபாய் ஐந்தும், மருத்துவச் செலவுக் கட்டணம் ரூபாய் ஐந்தும் வசூலிக்கப்பட்டு வந்தன. இக்கட்டணங்களை 1996 டிசம்பர் முதல் இந்த அரசு அறவே இரத்து செய்து ஆணை வழங்கி இருக்கிறது.

அதைப்போல கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கப் பணி மேற்கொள்வதால் கால்நடைகளின் வளர்ச்சி அதிகரிப்பதுடன், அதன் உற்பத்தித் திறனும் கூடுகிறது. எனவே, குடற்புழு நீக்கம் செய்ய வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ. 1 ரத்து செய்யப்பட்டு, 1998-99-ல் மட்டும் 1,00,14,289 கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல வான்கோழி வளர்ப்புத் திட்டம். குதிரை அபிவிருத்தித் திட்டம்; இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டிலிருந்து டானிடா உதவி கால்நடை மேம்பாட்டுத் திட்டம் என்ற அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம் ஒன்றியத்திலும், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை ஒன்றியத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புல்லாணி ஒன்றியத்திலும் தற்போது இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் அடுத்தடுத்து தொடர் ஆண்டுகளில் செய்யப்பட இருக்கிறது. இதன் அடிப்படையில் கிராம அளவில் தீவன பராமரிப்பு, கருவூட்டுதல், கால்நடை பராமரிப்பு போன்ற புதிய உத்திகளைப் பயிற்றுவிக்கும் நோக்கத்தோடு இந்த டேனிடா திட்டம் 27½ கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதைப்போல மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம். மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் கால்நடைகளின் பராமரிப்பிற்காக 2 நடமாடும் கால்நடை மருந்தகங்களும், 1 கால்நடை நோய்த்தடுப்பு நிலையமும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அதைப்போல மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை. இராணிப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் 8 வகையான நுண்ணுயிர்த் தடுப்பு மருந்துகளையும், 11 வகையான வைரஸ் நோய்த் தடுப்பு மருந்துகளையும், நோய் கண்டறியும் சாதனங்களையும், மருந்து வகைகளையும் ஊநீர்வகைகளையும் தயாரித்து மாநிலத்தில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு அவற்றின் தேவைக்கேற்ப விநியோகித்து வருகிறது. இந்நிலையத்தில் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 59.64 லட்சம் மதிப்பில் 22,68,734 டோஸ் நுண்ணுயிர்த் தடுப்பு மருந்துகளும், ரூ. 32.30 இலட்சம் மதிப்புடைய 2,08,30,040 டோஸ் வைரஸ் நோய்த் தடுப்பு மருந்துகளும் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அதைபோல தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம். இது 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு படிப்படியாக கடந்த ஆட்சிக் காலத்திலே அதனுடைய செயல்பாடுகளில் எல்லாம் ஊழல்களும் முறைகேடுகளும் ஏற்பட்டு, அது இன்றையதினம் அங்கே பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்கக்கூட முடியாத நிலையில்





இருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் திருமதி கே.ஆர்.ஆர். கல்யாணி ராமசாமி, திரு. சதக்கத்துல்லா, திரு. வி. கோபாலகிருஷ்ணன் மற்றும் முன்னாள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. இடி. பொன்னுவேலு ஆகியோரை வாரியத் தலைவர்களாக நியமித்து இருந்தார்கள். திரு. இடி. பொன்னுவேலு காலத்தில் அதிலே 80 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஊழல்களும் முறைகேடுகளும் செய்து, இன்றைய தினம் அதிலே பணியாற்றுகின்ற 288 பணியாளர்களுக்குக்கூட சம்பளம் வழங்க முடியாத நிலை தொடர்ந்து இருக்கிறது. ஆகவே, அதில் அரசுக்கு இழப்பு ஏற்படாமலும், பணியாளர்களுக்கு எந்தவிதமான பாதகம் ஏற்படாமலும், சிறந்த முறையில் தீர்வு காண அந்த மேலாண்மை இயக்குநருக்கு அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம். இந்தப் பல்கலைக்கழகம் முதன் முதலாக இந்தியாவிலே மட்டுமல்ல, ஆசிய கண்டத்திலேயே தலைவர் கலைஞர் அவர்கள்தான் தோற்றுவித்து (மேசையைத் தட்டும் ஒலி) கால்நடைகளின் மேலுள்ள சிறப்பான கனிவைத் தெரிவித்தார்கள். 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தப் பல்கலைக்கழகம், 1997ஆம் ஆண்டு வரை புதிய பல்கலைக்கழகத்திற்கு கட்டடம் கட்டப்பட்டு தொடங்கப்படவில்லை. அதற்காக ஒதுக்கீடு செய்த பணத்தை அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு சென்றுவிட்டார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 1996-ல் பொறுப்பேற்றபின்பு 80 இலட்சம் ரூபாய் அதற்கு வழங்கி, கட்டடம் முடிவுற்று, சென்ற ஆண்டு அதைத் திறந்து வைத்தார்கள். கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் அந்தப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் பருவக் கட்டணம் ரூ. 1,500-லிருந்து ரூ. 1,000 ஆகக் கடந்த ஆண்டு குறைக்கப்பட்டது.

B.V.Sc., இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு பயிற்சிக்கால உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 250 ஆக இருந்ததை ரூ. 750 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

கிராமப்புற மாணவர்களுக்கு, B.V.Sc., பட்டப் படிப்பில் சேர 15 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த முதல் மதிப்பெண் பெறும் 10 மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 12-45

பட்டுக்கோட்டை அழகிரி பெயரில் ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீட்டில் அறக்கட்டளை ஒன்று தொடங்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பெறும் வட்டித் தொகை மூலம் சிறந்த மாணவர்களுக்கு கல்வி பயில முழு உதவித்தொகை வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் சிறந்த மைய ஆய்வுக்கூடம் செயல்பட்டு வருகிறது. அதைப்போல மனிதவள மேம்பாட்டுத் திட்டம், சிகிச்சைப் பணிகள், பயிற்சி மையங்கள் எல்லாம் இந்தப் பல்கலைக்கழகத்திலே செயல்பட்டு வருகின்றன.

நெருப்புக்கோழி வளக்கும் திட்டம் பற்றி சென்ற ஆண்டு அறிவித்தேன். வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டு, மருத்துவப் பயன் மிக்க அந்த நெருப்புக்கோழி வளர்க்கப்படுமென்று சொன்னேன். அதற்காக 10 இலட்சம் ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மத்திய அரசினுடைய தடையின்மைச் சான்று தற்போதுதான் கிடைத்திருக்கிறது. 7 இணை நெருப்புக்கோழி விலை ரூபாய் 16,17,000. 7 இணை, 14 உருப்படிகள், 16,17,000 என்ற அளவில் ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, அமெரிக்காவில் டெக்சாஸ் ஆகிய உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம், அது மிக விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல கல்லூரி ஆசிரியர்கள். கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில், கழக அரசு பொறுப்பேற்றவுடன், 91 உதவிப் பேராசிரியர்கள், 7 பேராசிரியர்கள் மற்றும் 33 இணைப் பேராசிரியர்கள் பணி நியமனமும், பதவி உயர்வும் அளிக்கப்பட்டுள்ளனர்.

அதைப்போல செம்மறி ஆடு, வெள்ளாட்டைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். இந்த ஆண்டு மைய அரசின் நிதியுதவியோடு மாநில அரசின் செயலாக்கத்தில் நடைபெறவிருக்கும் ஆதிதிராவிட நலத் துறையிலிருந்து வழங்கப்பெற்றிருக்கின்ற ஒரு சிறப்பான திட்டம் இது.

தமிழ்நாட்டில் பராமரிக்கப்படும் பால் மறந்த கன்றுகள் நல்ல தீவனம் அளிக்கப்படாமல், தேவையான பராமரிப்பு இல்லாமல் குறைந்த வளர்ச்சி உள்ளதாக, நல்ல பால் தரும் தன்மை குறைந்து உள்ளதால், பால் இன மாடுகள் வளர்ப்பில் முன்னோடியாக உள்ள அரியானா மாநிலத்தில் உள்ள கர்ணாலைச் சுற்றியுள்ள தனியார் விவசாயிகள்



பால் பண்ணைகளிலிருந்து நல்ல பால் தரவல்ல கருவுற்ற பசுங்கிடேரிகளை வாங்கி வழங்கினால் அவை கன்றுகள் ஈனும்போது நமது தட்பவெட்ப நிலைக்கு ஒத்துப்போய் குறைந்த விலையில் பெறப்பெற்ற ஒரு நல்ல பசுவாக, பயனாளி வைத்துப் பராமரித்துப் பலனடைய ஏதுவாக அமையும் என்ற அடிப்படையில் 12 கோடியே 38 இலட்ச ரூபாயை மைய அரசு தந்திருக்கிறது. இந்த 12 கோடியே 38 இலட்ச ரூபாயில் மானியமாக 6,64,03,500 ரூபாயைத் தந்திருக்கிறார்கள். இதிலே 1,000 கருவுற்ற பசுங்கிடேரிக் கன்றுகள் அரியானா மாநிலத்திலிருந்துதான் வாங்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையோடு தந்திருக்கிறார்கள். இந்தப் பசுக்களை எப்படி வழங்க வேண்டுமென்று சொன்னால், ஒரு திட்டத்தினுடைய மதிப்பீடு 15,000 ரூபாய் என்று சொன்னால் 7,500 ரூபாயை அரசு மானியமாகத் தருகிறது. அதற்குக் காப்பீடு உறுதித் தொகையைத் தருகிறது. மீதித் தொகையை வங்கிக் கடன் மூலமாக ஈடுசெய்ய வேண்டுமென்று 1,000 பசுங்கிடேரிக் கன்றுகள் ஆதிதிராவிடர்களுக்காக இந்த ஆண்டு தமிழ்நாட்டிலே வழங்கப்பட இருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல இந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் ஆதிதிராவிடர்கள் 2,700 பேருக்கு 56,700 செம்மறி ஆடுகள் வழங்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இது மிகப் பெரிய சிறப்பான ஒரு திட்டம். 56,700 செம்மறி ஆடுகள் 2,700 ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன. அதைப்போல 2,700 பேருக்கு 29,700 வெள்ளாடுகளும் வழங்கப்பட இருக்கின்றன. ஏறக்குறைய 80,000 வெள்ளாடு, செம்மறியாடுகள் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படுகின்ற சிறப்பான திட்டத்தினை தமிழ்நாட்டிலே தலைவர் கலைஞருடைய அரசு இந்த ஆண்டு நிறைவேற்றும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய திட்டங்கள். புதிதாக 10 கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்துதல், ஒரத்தநாட்டிலுள்ள பயிற்சி மையத்தினை வலுப்படுத்துதல், 9 இலட்சம் செலவில் தீவன புல்கரணைகளை உற்பத்தி செய்வதற்காக கால்நடைத் தீவன விதை உற்பத்திப் பிரிவை வலுப்படுத்துதல், இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் ஊசி மருந்து தயாரிப்பதற்குரிய மருந்தாக்கியல் பிரிவை விரிவுபடுத்துதல்—இதற்கு 20 இலட்ச ரூபாய்—மேலாண்மை தகவல் முறைகளை நவீனப்படுத்துதல்—10 இலட்ச ரூபாய், மாதவரத்தில் உள்ள கொள்ளை நோய் தடுப்பூசி மருந்து ஆராய்ச்சி மையத்தை

வலுப்படுத்துதல்—5.50 இலட்ச ரூபாய், மாதவரம் மத்திய பல்கலைக் கழக ஆய்வுக் கூடத்தில் உள்ள நச்சு ஆய்வியல் பிரிவை வலுப்படுத்துதல்— 17 இலட்ச ரூபாய் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் சிறிய விலங்குகளுக்கான அறுவை சிகிச்சைக் கூடத்தை ஏற்படுத்துதல்—8.07 இலட்ச ரூபாய், நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் இறைச்சித் தொழில் நுட்பவியல் தரக்கட்டுப்பாடு ஆய்வுக் கூடம் ஒன்றை ஏற்படுத்துதல்—15.54 இலட்ச ரூபாய், மீன்வளக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் நச்சுக் கிருமிகளால் பரவும் நோய்களைக் கண்டறிவதற்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்—12.05 இலட்ச ரூபாய், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் மதிப்புக்கூடிய மீன் பொருட்கள் குறித்து மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தல்—ரூ. 2.89 இலட்சம், காட்டுப்பாக்கம், கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் போயர் (Boer) வெள்ளாடு வளர்ப்புப் பிரிவு புதியதாக ஏற்படுத்துதல்—ரூ. 8.05 இலட்சம். ஆக மொத்தம் 156 இலட்சங்கள் செலவில் இந்தப் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-50*

அதேபோல தமிழகத்தில் அண்மைக்காலத்தில் வெறிநாய்கள் அதிகமாகத் தோன்றிவிட்டன. நல்ல நாய்கள் மறைந்து, வெறிநாய்கள் அண்மைக்காலத்தில் அதிகமாகத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெறிநாய்களை அறிந்து கட்டுப்படுத்துவதற்காக புதிய அறிவிப்புகளை அறிவிக்க இருக்கிறோம்.—வெறிநாய்களைக் கட்டுப்படுத்துவதற்காக—(சிரிப்பு) ஏனென்றால், வெறிநாய்கள் அதிகமாக உற்பத்தி ஆகிவிட்டன. (சிரிப்பு) அந்த வெறிநாய்களைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு முழுவதும் இன்றைய தினம் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள வெறிநாய்களை—ஏனென்றால் மாவட்டந்தோறும் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. (சிரிப்பு)—கட்டுப்படுத்த 4.35 இலட்சம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வெறி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் வெறிநாய்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்வதற்காக ஏற்கெனவே திட்டம் இருக்கிறதே அதை நடைமுறைப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)



**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** குடும்பக் கட்டுப்பாடு. செய்தாலும் இனப் பெருக்கம் அதிகமாகிக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பல்வேறு திட்டங்களையெல்லாம் இந்தக் கால்நடை பராமரிப்புத் துறையிலே செயல்படுத்த இருக்கிறோம். இங்கே ஏறத்தாழ 22 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களில் கால்நடை மருந்தகங்களைப் புதிதாகத் தோற்றுவித்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, கனிவோடு பரிசீலித்து, கால்நடை பராமரிப்புத் துறை சிறப்பாகச் செயல்பட இருக்கிறது.

எழுபத்தைந்தாண்டு கால வாழ்க்கை வரலாற்றில்
எண்ணற்ற இன்ப துன்பங்களை நுகர்ந்து
வெற்றி தோல்விகளைப் பகிர்ந்து
தொலைவில் இருந்தாலும் தொய்வின்றிப் பழகி
நன்றிப் பெருக்காளர் நயம் கண்டு தெளிந்து
நெருக்கத்தில் இருந்தாலும் துரோகிகளைப் புரிந்து
துதிபாடித் துதிபாடிச் சதிவிட்டுத் தடை நீங்கி
மதிகெட்டு அதிதூரம் மறைந்துமே போனாலும்
கதியென்று வரும்போது கண்ணீரைத் துடைத்து
கருணைப்பொழிவோடு கைகோர்த்துக் கனிந்து
தமிழென்னும் சொல்லுக்குத் தலைப்பாகி நின்று
தலைப்பின்றித் திரிந்திட்ட தமிழ்தேச மாந்தர்க்கு
மலைப்பின்றி இனம்காக்கத் தணலாகக் கனன்று
பெரியாரை அண்ணாவைப் பேச்சில் மட்டல்லாமல்
உயிரோட்டக் கொள்கையாய் உணர்விலே பயின்ற
ஒப்பற்ற தலைவர் கலைஞர் ஆட்சியிலே

கால்நடை பராமரிப்புத் துறை பீடுநடை போடுகிறது என்று சொல்லி வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று இந்த மானியத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, இத்துடன் நிறைவு செய்கிறேன்.

[1999 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக பால்வளத் துறை மானியத்தின்மீது இம்மாமன்றத்தில் உரையாற்றுகின்ற நல்லதொரு வாய்ப்பினை வழங்கி, தமிழக மக்களின் நல்வாழ்விற்காக நாளும் சிந்தித்துச் செயலாற்றி வரும் நம்முடைய தமிழினத்தின் தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் தொடங்குகிறேன்.

1958 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பால்வளத் துறை முதலில் 1970 வரை சென்னை மற்றும் மதுரை மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் மட்டுமே செயல்பட்டு வந்த நிலையினை மாற்றி 1972 ஆம் ஆண்டு நமது முதல்வர் கலைஞர் அவர்களின் சீரிய சிந்தனையால் தமிழ்நாடு பால்வள நிறுவனம் பொது நிறுவனமாக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களுக்குப் பயன்தரும் வண்ணம் 'ஆவின்' என்ற சிறப்புமிக்க பெயர் முதல்வர் அவர்களால் சூட்டப்பட்டது என்பதைத் நீங்கள் எல்லாம் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

இந்தத் துறையின் தலையாய குறிக்கோளான, தமிழ்நாட்டில் வாழும் பால் உற்பத்தியாளர்களாகிய கிராமங்களில் வாழும் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும் அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்குக் கட்டுப்படியாகும் நியாயமான விலை கிடைத்திடவும், அதே போன்று நுகர்வோருக்குச், சீரான முறையில் நியாயமான விலையில் சுகாதாரமான தரமான பால் மற்றும் பால் உபபொருட்கள் கிடைத்திடவும், தலைவர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இத்துறை நேர்மையாகவும், தூய்மையாகவும் செயல்பட்டு வருகிறது.

1981 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலம் ஆனந்த் நகரில் செயல்பட்டுவரும் அமுல் பாணியில் தமிழ்நாடு பால்வள நிறுவனம், கூட்டுறவு அமைப்பாக மாற்றப்பட்டு, மூன்றடுக்கு முறையில் தற்போது செயலாற்றி வருகிறது.



1999 ஏப்ரல் 19] [திரு. க. சுந்தரம்]

கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாகவும், மாவட்ட அளவில் மாவட்ட பால் உற்பத்தியளார்கள் கூட்டுறவு ஒன்றியங்களாகவும், மாநில அளவில் ஒன்றியங்கள் ஒருங்கிணைந்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமாகவும் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

பால்வளத் துறையானது, பாலை உற்பத்தி செய்யும் விவசாயிகளும் அந்தப் பாலை விநியோகம் செய்திடும் விற்பனையாளர்களும், ஆவின் பால் அருந்தி மகிழ்ந்திடும் நுகர்வோர்களும் இணைந்து நாள்தோறும் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் செயலாற்றும் சிறப்புமிக்க அமைப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் மற்றும் அனைத்துத் தரப்பு நுகர்வோர்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற்று ஒவ்வொருவரின் இல்லத்திலும் 'ஆவின் குடும்பப் பெயராகி விட்டது என்றால் அது மிகையாகாது.

தற்போது சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களுக்கும், மாவட்ட அளவிலான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் 1 மட்டும் நிர்வாக வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளன.

விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கா அல்லும் பகலும் அயராது பாடுபட்டுவரும் நமது தமிழக முதல்வ கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு பால் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து பா கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசுகள் என்று உயர்த்தி வழங்கியது அனைவரும் அறிந்ததாகும். மற் மாநிலங்களோடு குறிப்பாக தென்னிந்தியாவில் ஒப்புநோக்கினால் பா விற்பனை விலை தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவானதாகும் என்ப இம்மான்றம் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டு ஒலி)

பால் உற்பத்தியாளர்களுக்குக் கொள்முதல் விலையை உயர்த் வழங்கியபோது, நுகர்வோர் நலன் கருதி பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசுகள் என உயர்த்தாமல், 1 ரூபா மட்டுமே உயர்த்தி, அதன் காரணமாக ஏற்படும் இழப்பை ஈடுகட் லிட்டர் ஒன்றுக்கு 50 காசுகள் மானியமாக வழங்க நமது முதல்வ அவர்கள் உத்தரவிட்டார்கள்.

[திரு. க. சுந்தரம்] [1999 ஏப்ரல் 19

இந்த மானியத்திற்காக நடப்பு நிதியாண்டில் 15 கோடி ரூபாய் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பால் கொள்முதல் விலை உயர்வு காரணமாக 7-4-1998க்கு முன்னர் நாளொன்றுக்கு சராசரியாக 11 இலட்சத்து 20 ஆயிரம் லிட்டர் மட்டுமே பால் கொள்முதல் என்ற நிலை மாறி, தற்போது நாளொன்றுக்கு 15 இலட்சம் லிட்டர் முதல் 16 இலட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இது 35 சதவிகித வளர்ச்சி ஆகும். இதனால் இன்றைய தினம் கேரளாவுக்கு நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பாலையும், அதேபோல மைசூருக்கும் 50 ஆயிரம் லிட்டர் பாலையும் தினமும் விற்பனை செய்கிறோம்.

இதன் விளைவாக பால் அட்டைகள் வழங்குவதிலிருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் நீங்கி தற்போது மாதம் முழுவதும் பால் அட்டைகள் தாராளமாக வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல பால் பவுடர், வெண்ணெய், நெய் போன்ற பால் பொருட்களின் உற்பத்தியும், விற்பனையும் கடந்த 5 ஆண்டுகளை ஒப்புநோக்கினால் மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. கடந்த ஆண்டில் 4,384 டன் பால் பவுடர், 7,898 டன் வெண்ணெய், 3,392 டன் நெய் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்தப் பொருட்கள் மாதா மாதம் தேக்கமில்லாமல் அதற்கென அரசால் நியமனம் செய்யப்பட்ட—தவறுகள் ஏதும் நடைபெற முடியாமல்—'பால் பொருட்களின் விலை நிர்ணயக் குழு' Products pricing Committee யின் பரிந்துரையின்படி விற்கப்படுகின்றன.

பால் உற்பத்தி அதிகரித்த காரணத்தால் கடந்த 1-9-1998 முதல் 4.5 சதவிகிதக் கொழுப்புச் சத்தும் 8.5 சதவிகித இதரச் சத்தும் நிறைந்த பதப்படுத்தப்பட்ட, நிலைப்படுத்தப்பட்ட பால்விற்பனை அறிமுகம் செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த நிதியாண்டில் 282 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, குறியீட்டிற்கு அதிகமாக 797 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 364 சங்கங்கள் மகளிருக்காக மட்டுமே என்று அமைக்கப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றையும் சேர்த்து 9,821 முதன்மைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. முதற்கட்டமாக பிப்ரவரி 1997-ல் முதன்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஜனநாயக முறையில்



1999 ஏப்ரல் 19] [திரு. க. சுந்தரம்]

வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து கடந்த நிதிநிலைக் கூட்டத் தொடரில் அறிவித்தவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு மாவட்ட அளவிலான கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் ஒன்றியங்களில் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் தவிர, ஏனைய 16 ஒன்றியங்களில் நிர்வாகக் குழுவிற்கான தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்று சிறந்த முறையில் பணியாற்றிவரும் மாவட்ட ஒன்றியங்களின் தலைவர்களுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த பயிற்சி ஒன்று கடந்த 19-2-1999 மற்றும் 20-2-1999 அன்று சென்னையில் நடத்தப்பட்டது.

பிற்பகல் 1-00

கால்நடைகளுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் கிராம அளவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்படுகிறது. 1998-99-ஆம் ஆண்டில் உறைவிந்து மூலம் 10.05 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல் செய்யப்பட்டுள்ளன. 1998-99ல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், நடமாடும் கால்நடைப் பிரிவிலுள்ள நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் மூலம் 9.10 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தன.

செயற்கைமுறைக் கருவூட்டலின் பயனாக 1998-99 ஆம் ஆண்டு 1,00,000 வீரியமுள்ள கிடேரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும் ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு 11 இலட்சத்து 63 ஆயிரம் உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

: பால்வளத் துறை மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியுதவியின்கீழ் கடந்த நிதியாண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2,700 பால் கேன்களும் 267 பால் தரமனக்கும் (மில்கோடெஸ்டர்) கருவிகளும் வாங்கித் தரப்பட்டுள்ளன.

இதைபோன்று, தலா ஒரு இலட்சத்து 80 ஆயிரத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் 305 பால் சேகரிப்பு மையக் கட்டடங்கள், ஊரக வளர்ச்சி முகமை மூலமாக கட்டித் தரப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களது கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, 1980-ல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களில் 688 நபர்களுக்குப் பணி அமர்வு செய்து வேலையிலில்லாக் காலத்தை, வேலையில் உள்ள காலமாகக் கருத்தில் கொண்டு சம்பள மறுநிர்ணயம் செய்ய உத்தரவிடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில் தொழிலாளர்கள் தொழில் தகராறு சட்டவிதி எண் 18 (1)-ன்படி ஒப்பந்தம் தர இசைவளித்து சம்பளம் மறுநிர்ணயம் செய்து தரப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் ஆவின் நிறுவனத்திற்குக் கூடுதல் செலவாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனையைப் பொறுத்தவரை, ஆவின் பெரிய சாதனையைப் படைத்திருக்கிறது. ஆவின் பால் பொருட்களான பாலாடைக்கட்டி, Tetra பாக்கெட்டுகளில் வழங்கப்படும் நறுமணமிக்க சுவையூட்டிய பால், மாம்பழச்சாறு (மாவின்), ஐஸ்கிரீம், சுவையூட்டிய தயிர் (யோகர்ட்). பால்கோவா ஆகியவை தமிழ்நாடு மற்றும் இதர இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. ஆவின் நெய், குறிப்பாக வடமாநிலங்களான இராஜஸ்தான், டில்லி, மத்தியப்பிரதேசம் போன்ற இடங்களில் பெரிதும் விரும்பப்படுகின்றன.

பழச்சுவை சேர்க்கப்பட்ட புதுவகைச் சுவையூட்டிய தயிர் (யோகர்ட்) ஸ்ட்ராபெரி, பேரீச்சை, மாம்பழ மற்றும் வெண்ணிலா சுவைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்புதுவகை யோகர்ட்களுக்கு நட்சத்திர ஓட்டல்களில் நல்ல வரவேற்பு உள்ளது. ஆவின் பால் பொருட்களின் சிப்பங்கள் புதுமையாகவும் கவர்ச்சிகரமாகவும் வண்ணமயமாகவும் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

வணக்கத்திற்குரிய மாநகர மேயர் அவர்களின் 'சிங்காரச் சென்னை' திட்டத்திற்கு வலிமை சேர்க்கும் வண்ணம், மாநகரில் உள்ள ஆவின் பாலகங்கள் புதுப்பிக்கப்படத் திட்டமிடப்பட்டு, முதற் கட்டமாக பெருமை வாய்ந்த அடையார், அண்ணாநகர், அண்ணாசாலை





பாலகங்களின் தோற்றம் மேம்படுத்தப்பட்டும், விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டும் அழகிய பெயர்ப் பலகைகளுடனும் பன்னாட்டு நிறுவனங்களின் பாலகங்களுக்கு ஈடாகவும், புதுப்பிக்கப்பட்டுள்ளன. அடையாறு பாலகம் - Drive-in பாலகமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் ஆவினுக்கு அதிக வாடிக்கையாளர்களை ஈர்த்துள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சாந்தோம் பதிவாளர் அலுவலகம், ஆயிரம் விளக்கு, திருவல்லிக்கேணி பெரியதெரு, புரசைவாக்கம், தலைமைச்செயலகம் மற்றும் குறளகத்தில் அமைந்துள்ள பாலகங்களும் புதுபிக்கப்பட உள்ளன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போலவே, மாவட்டத் தலைநகரங்களில் நவீனமான ஆவின் பாலகங்களைப் பெருமளவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த மானியக் கோரிக்கையில் தெரிவித்தவாறு, 'ஆவின் யோகர்ட்' இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்களில் வழங்கப்பட்டு வந்தது. விமானப்பயணிகளின் நல்ல வரவேற்பு காரணமாக வெளிநாட்டு வழித்தடங்களிலும் வழங்கப்பட்டது. வெளிநாட்டு விமான நிறுவனமான 'லுப்தான்சா' நிறுவனத்தின் விமானங்களிலும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையில் உள்ள நட்சத்திர உணவு விடுதிகளிலும் 'ஆவின் யோகர்ட்' விநியோகம் செய்யப்படுகிறது. இதனால், வெளிநாட்டிலிருந்துவரும் உல்லாசப் பயணிகளிடம் நல்லாதரவினைப் பெற்றுள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவின் மூலம் விநியோகிக்கப்படும் பாலில் வைட்டமின் 'ஏ' சத்து சேர்த்து வழங்கப்படுவதால் கண்புரை போன்ற நோய் குறைபாடுகளைக் களைய ஆவின் நிறுவனம் பாடுபடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அறிவிப்புகள். நடப்பு 1999-2000 ஆம் நிதியாண்டில் மாதவரம் பால்பண்ணைக் குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள கட்டடங்களைப் பழுது பார்க்கவும், குறுக்குச்சாலைகளைப் பராமரிக்கவும் 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு நடப்பு நிதியாண்டில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் அலுமினிய கேன்களும், 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் பால் தரமளக்கும் கருவிகளும் (மில்கோடெஸ்டர்) ஊரகக்

[திரு. க. சுந்தரம்] [1999 ஏப்ரல் 19

கூட்டமைப்பு நிதி வசதிகள் மூலம் தரப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-05*

நடப்பு நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பால் உற்பத்தியாளர்களுக்கு 2 ஆயிரத்து 666 கறவை மாடுகள் 80 இலட்சம் ரூபாய் மானியத்துடன் வாங்கித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி). இந்நிதியாண்டில் 'தாட்கோ' திட்டத்தின் மூலமாக 13 ஆயிரம் கறவை மாடுகள் 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் மானியத்துடன் வாங்கித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கூறிய இரண்டு திட்டங்கள் மூலம் கறவை மாடுகள் வாங்க ஒரு கறவை மாட்டிற்கு 6 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விலையை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தாட்கோ நிதி உதவியுடன் இந்நிதியாண்டில் 2 ஆயிரம் கலப்பினக் கிடேரிக் கன்றுகளுக்கு நூறு சதவீத மானியமாக முப்பது மாதங்களுக்குத் தீவனம் வழங்கி, பராமரிக்க ஒரு கன்றுக்கு 10 ஆயிரத்து 680 ரூபாய் வீதம் 2 கோடியே 13 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மைய அரசு நிதியுதவியுடன், கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம். குறிப்பாக, தென்மாவட்டங்களிலுள்ள சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களிடம், உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, கன்று வளர்ப்புத் திட்டத்தில் சுமார் 5,000 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 7 கோடியே 30 இலட்சத்திற்கு கருத்துரு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 3,000 சிறு மற்றும் குறு விவசாயிகளும் 2,000 விவசாயத் தொழிலாளர்களும் பயனடைவார்கள்.

கடந்த நிதியாண்டில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில், 2,000 நபர்களுக்கு 4,000 கறவை மாடுகள், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழக நிதியுதவியின்கீழ் மானியமற்ற கறவை மாட்டுக்கடன் கடந்த 1998-99 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.



1999 ஏப்ரல் 19] [திரு. க. சுந்தரம்]

அதேபோன்று, இந்த நிதியாண்டில் 2,250 நபர்களுக்கு 4,500 கறவை மாடுகள் வாங்கித்தரப்பட உள்ளன. இதற்காக 5 கோடி ரூபாய் நிதியுதவி தர பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இசைவளித்துள்ளது.

சிறுபான்மைச் சமுதாய மக்களின்மீது என்றென்றும் தனி அன்பு கொண்ட நமது தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய மற்றும் கிருத்துவ பால் உற்பத்தியாளர்களில் 250 நபர்களுக்குத் தனி ஒதுக்கீடு செய்து தரப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் குளிரூட்டும் நிலையங்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறையில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பாலைக் கையாளும் திறன் கொண்ட ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம், திருச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் 100 சதவிகித மானியமாக வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய் நிதியுடன் ஒன்றிய நிதியினைக் கொண்டும் கட்டப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் இக்குளிரூட்டும் நிலையம் செயல்படத் தொடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

தர்மபுரி மாவட்டம் மொரப்பூரில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் பாலைக் குளிர்விக்கும் திறன் கொண்ட ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை 183 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்ட கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டு, தேசிய பால்வள வாரியத்தின் நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. தேசிய பால்வள வாரியத்தின் இசைவினைப் பெற்றவுடன் கட்டுமானப்பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் சுமார் 3 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பாலைக் குளிர்விக்கும் திறனுடன் கட்டுவதற்குத் தக்க கருத்துரு தேசிய பால்வள வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வானின்றி பொழியாது மழை
நீரின்றி அமையாது உலகு"

'ஆவின் இனமின்றி இல்லை இத்துறை'
எனவே,

பால்வளம் பெருக்குவோம்
பார்நிலை உயர்த்துவோம்

என்ற கொள்கைக்கு வலிவு சேர்க்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் தங்களது அரிய கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உங்கள் மேலான கருத்துகளைக் கவனத்தில் கொண்டு இத்துறை மேலும் சிறப்பாக நடைபெற தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியைக்கூறி மாண்புமிகு உறப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். மேசையைத் தட்டும் ஒலி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், கிருஷ்ணகிரி போன்ற பால் பண்ணைகளில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலூரைப் பற்றி கேளுங்கள். கிருஷ்ணகிரியை எதற்காக கூடச் சேர்க்கிறீர்கள்? உங்கள் சத்துவாச்சாரியைப் பற்றி மட்டும் கேட்டு முடியுங்கள். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** திருநெல்வேலி போன்ற பால் பண்ணைகளில் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நஷ்டத்தை எல்லாம் மீட்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன? ஏதாவது பணம் மீண்டும் அரசிற்கு அல்லது பால் பண்ணைக்கு வந்திருக்கிறதா என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடுகள் நடந்த அனைத்து ஒன்றியங்களிலும் இப்போது வழக்கு பதிவு செய்யப்பட்டு ஒருசிலர் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்கள். வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. வழக்கு முடிந்தால்தான் அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.





**(அ) கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா :** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 157,79,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடைப் பாரமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 10 - பால்வழங்கு செயல் திட்டங்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10 - பால் வழங்கு செயல்திட்டங்கள்.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.



**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"பால்வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.26,21,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 2. அறிவிப்பு - தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவைகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களுக்கான ஆட்சி மன்றப் பேரவைகளுக்கு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையான நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

தமிழ்நாடு டாக்டர் எம்ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்:
டாக்டர் வை. இராமசாமி.
டாக்டர் தே. குமாரதாஸ்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
திரு. ச. அழகுவேலு
திரு. குழந்தை தமிழரசன்
திரு. ச. அழகிரி

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்ற நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர்கள், அந்தந்த



பல்கலைக்கழக ஆட்சி மன்றப் பேரவைக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதுமில்லை —

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

105. மானியக் கோரிக்கை எண் 10-பால் பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

106. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) கையேடு. (தமிழ், ஆங்கிலம்).

107. மானியக் கோரிக்கை எண் 22 - கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

108. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்).

109. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை, 1998-99.

## இணைப்பு - I

*(263 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**கோரிக்கை எண்-10**

**பால் பெருக்குத் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000**

**முன்னுரை**

பால் வளத் துறை 1958 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதல் முதலாக சென்னையில் நவீன பால் பண்ணை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப்போல் பால் கூட்டுறவு சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்குக் கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகவும், மத்தியில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல்மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றது.

*பால்வளத் துறையின் முக்கியமான குறிக்கோள்கள்*

(அ) நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்குப் பாலும் மற்றும் பாலிலிருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

*நடவடிக்கைகள்*

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு பின்வரும் முக்கியமான நடவடிக்கைகள் பால்வளத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(அ) பால் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள அங்கத்தினர்களுக்கு சொந்தமான கால்நடைகளுக்குக் கால்நடை மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. மேலும் செயற்கை முறைக் கருவூட்டல் சரிவிகித

கால்நடைத் தீவனம் அளித்தல், அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடைப் பராமரிப்புப் பயிற்சி அளித்தல் ஆகியவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் அதன்மூலம் காலப்போக்கில் கறவைகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதலைக் கருத்தில் கொண்டும் செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) அதிக பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும் பாலை விற்பனை செய்யவும் தகுந்த அளவில் உள்ளீடு வசதிகள் அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், மற்றும் நவீன பால் விற்பனை முறையை மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்தல் போன்ற வணிக நடவடிக்கைகள் 1981ஆம் ஆண்டு நிறுவப்பட்டத் தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விணையம் பால்வளத் திட்டங்களைத் தேசிய பால்வள மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் செயல்படுத்தியது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் பால்வளத் துறையின் மூலம் மாநில/மத்திய திட்ட நிதியிலிருந்து பால்வளத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

சில சிறப்புத் திட்டங்களான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஆதிதிராவிடர் நலத் திட்டம் முதலியன சம்பந்தப்பட்ட துறைகளின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 23 பால்பத துணைப் பதிவாளர்கள் உள்ளனர். மற்றும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும், செயற்கை முறைக் கருவூட்டல் வசதியும் அளிக்கும் வகையில் 11 பால்சேகரிப்புக் குழுக்களும், 13 நடமாடும் கால்நடை பிரிவுகளும், பால் பெருக்குத் திட்டம் செயல்படாத (Non-operation Flood) விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.





தற்போது பால் உற்பத்தியாளர் கூட்டுறவுத் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல், அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்துதல், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் 1988 தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய முக்கியப் பணிகளைப் பால் பெருக்குத் துறை மேற்கொள்கிறது.

கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை, காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் மேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலை பரிசோதித்து, அதன் தரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கொள்முதல் மற்றும் இடுபொருட்கள், மருத்துவப் பிரிவுகளில் இருக்கும் கால்நடை உதவி மருத்துவர்களால் பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே செய்யப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறைக் கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகின்றது. இச்சங்கங்களின் செயலாளர்களுக்குச் சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்களுக்குச் சொந்தமாக முதலுதவிப் பெட்டிகள் வைத்துள்ளன. இக்கிராமச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில், உள்ளூர் உபயோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக் கொண்டு எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தலைவர்களுக்குக் கூட்டுறவுகளின் தத்துவங்கள், 'ஆனந்த்' பாணி கூட்டுறவு அமைப்புகள் தலைவரின் கடமைகளும் பொறுப்புகளும், மற்றும் பால் உற்பத்திக்கான தொழில்நுட்ப இடுபொருள்கள் தொடர்பாக பால்வளத் துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமும் சேர்ந்து 19-2-1999 மற்றும் 20-2-1999 ஆகிய இரண்டு நாட்கள் பயிற்சி அளித்தன.

[1999 ஏப்ரல் 19

**பால்வளத் துறையின் முன்னேற்றம்**

அரசு திட்ட நிதி உதவியுடனும் மற்றும் பிற சிறப்புத் திட்ட ஒதுக்கீட்டுடனும், கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பால்வளத் துறை அடைந்துள்ளது :

| | | |
|---|---|---|
| 1. முதன்மைச் சங்கங்களின் எண்ணிக்கை (நுகர்வோர் கூட்டுறவுகள் மற்றும் பால் வழங்கும் கூட்டுறவுகள் உள்ளடக்கியது) | 9892 | |
| 2. மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 | |
| 3. உறுப்பினர்களின் எண்ணிக்கை | 25.98 | இலட்சம் |
| 4. பால் உற்பத்தி (சங்கங்களின் அளவில்) நாள் ஒன்றுக்கு | 19.16 | இலட்சம் லிட்டர் |
| 5. பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்) நாள் ஒன்றுக்கு | 15.10 | இலட்சம் லிட்டர் |
| 6. சென்னை நகரத்தில் பால் விற்பனை நாள் ஒன்றுக்கு | 7.78 | இலட்சம் லிட்டர் |
| 7. பால்பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை திறன் நாள் ஒன்றுக்கு | 19<br>27.39 | <br>இலட்சம் லிட்டர் |
| 8. குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை திறன் நாள் ஒன்றுக்கு | 41<br>11.38 | <br>இலட்சம் லிட்டர் |
| 9. தானியங்கி பால் நிலையம் | 209 | |

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி**

1997-98 இல் 350 சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-3-1998 வரை 358 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. 1997-98ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டச்



1999 ஏப்ரல் 19]

சங்கங்களில் 31-3-1998 வரை 100 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 282 கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 28-02-1999 வரை 7907 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 364 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

**பால் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களும், புள்ளி விவரங்களும் தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பால் கூட்டுறவுச் சங்கங்கள்/ஒன்றியங்கள்**

| | |
|---|---|
| (அ) உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | 9,821 |
| (ஆ) பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் | 5 |
| (இ) கூட்டுறவுப் பால் பண்ணை | 1 |
| (ஈ) பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 64 |
| (உ) கூட்டுறவுப் பால் வழக்கும் ஒன்றியம் | 1 |
| (ஊ) மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 |
| (எ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (மாநில அளவு இணையம்) | 1 |

**பால் பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் தொடர் திட்டப் பணிகள்**

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் விருதுநகர் மாவட்டத்திலுள்ள திருவில்லிபுத்தூரில் பால் பண்ணை அமைப்பதற்கு ரூ.465.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் திட்டமொன்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட மதிப்பீட்டில் 70 விழுக்காடு ரூ.325.85 இலட்சங்கள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் கடனாகவும், 30 விழுக்காடு ரூ.139.65 இலட்சங்கள் அரசு மானியம்/பங்குத் தொகையாகவும் பெற்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.465.50 இலட்சங்கள் தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் பங்கான ரூ.325.85 இலட்சங்கள் உட்பட அரசால் அளிக்கப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் கடன் தொகையான ரூ.325.85 இலட்சங்கள் அந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

[1999 ஏப்ரல் 19

## கறவை மாடுகள் மானியம் மற்றும் கடன் திட்டம்

ஆதிதிராவிடர், கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோருக்குக் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மேம்பாட்டுக்கழகம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார முன்னேற்றக்கழகம் ஆகியவை மூலம் 100 சதவிகிதம் கடனில் கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்டச் கட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் ஒருங்கிணைந்த முகவர்களாக இருந்து செயல்படுத்தி வருகின்றன. 1998-99 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டங்களுக்குக் கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது :

| வ.எண். | திட்டத்தின் பெயர். | இலக்கு எண்ணிக்கை கறவை மாடுகள். | நிதிஒதுக்கீடு. |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நலத் திட்டம் | 2666 | ரூ.79.98 இலட்சம் |
| 2. | ஆதிதிராவிடர் இனத்திலிருந்து கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்கள். | 50 | ரூ.1.50 இலட்சம் |
| 3. | பிற்பட்ட வகுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வழங்குதல் | 4000 | ரூ456.00 இலட்சம் |
| 4. | தாட்கோ நிதியுதவியுடன் | 13000 | ரூ390.00 இலட்சம் |
| 5. | தாட்கோ நிதியுதவியுடன் (கன்று வளர்ப்பு திட்டம்) | 2000 | ரூ213.60 இலட்சம் |

**பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் :**

தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த 8607 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு ஆணை எண் 160, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 27-9-1996-இன்படி அனைத்து உறுப்பினர்களும், தேர்தலில் போட்டியிடவும் வாக்களிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டு 8594



1999 ஏப்ரல் 19]

சங்கங்களுக்கும் பிப்ரவரி 1997 இல் தேர்தல்கள் நடத்தப்பட்டு தற்போ ஜனநாயக முறைப்படி அனைத்து உறுப்பினர்களாலு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகக் குழுவினரால், பிரதம பா உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்ற தற்போது இதில் 71 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்க பல்வேறு நிர்வாக காரணங்களால் இத்துறையைச் சார்ந்த த அலுவலர்களின் பொறுப்பில் உள்ளன.

சிவகங்கை மாவட்டக் கூட்டுறவுச் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தவிர ஏனைய 16 ஒன்றியங்களுக்கு நிர்வாகக் குழு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்று நடத்தி வருகிறார்கள்.

**பகுதி 1 திட்டம் :**

பகுதி 1 திட்டத்தின்கீழ் 1999-2000 ஆண்டிற்கு ரூ. 8.50 இலட்சங்கள் மதிப்பீட்டில் கருத்துரு முன்மொழியப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 5.00 இலட்சங்கள் மாதவரம் பால் பண்ணையில் கட்டடப் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல், சாலைகளைப் பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல் ஆகிய பணிகளுக்காகவும், ரூ. 3.50 இலட்சம் புதிய அம்பாசிடர் சீருந்து வாங்குவதற்காகவும் கருத்துரு முன்மொழியப்பட்டுள்ளது.

**பகுதி 2 திட்டம் :**

பகுதி 2 திட்டம் 1999-2000 ஆண்டிற்கு ரூ. 20.00 இலட்சங்கள் மொத்த மதிப்பீட்டில் கருத்துரு முன்மொழியப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 10.00 இலட்சங்கள் அலுமினியக் கேன்கள், மற்றும் ரூ. 10.00 இலட்சங்கள் செலவில் பால் தரமளக்கும் கருவிகள் வாங்கி, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் பெற்றுத்தரும் பொருட்டு முன்மொழியப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நாள் முதல் பால் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல், பால் மற்றும் பால் பொருட்களை விநியோகம் செய்தல் ஆகிய வணிக சம்பந்தமான நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் செய்து வருகிறது. தேசியப் பால்வள வாரிய நிதி உதவியுடன் இவ்விணையம் கீழ்க்காணும் 23 மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால்வள மேம்பாட்டு நடவடிக்கைகளைக்

[1999 ஏப்ரல் 19

செயல்படுத்தியது. பால் பெருக்குத் திட்டம் - III, 31-03-1996 அன்றுடன் முடிவடைந்தது.

1. சென்னை
2. காஞ்சிபுரம்
3. திருவள்ளூர்
4. விழுப்புரம்
5. கடலூர்
6. வேலூர்
7. திருவண்ணாமலை
8. தருமபுரி
9. சேலம்
10. நாமக்கல்
11. ஈரோடு
12. கோயம்புத்தூர்
13. மதுரை
14. தேனி
15. திண்டுக்கல்
16. நீலகிரி
17. திருச்சிராப்பள்ளி
18. கரூர்
19. பெரம்பலூர்
20. தஞ்சாவூர்
21. திருவாரூர்
22. நாகப்பட்டினம்
23. புதுக்கோட்டை

சென்னை நீங்கலாக மற்ற 28 மாவட்டங்களுக்கும் நிர்வாக வசதிக்காக 17 மாவட்ட அளவிலான ஒன்றியங்கள் கீழ்க்கண்டவாறு இயங்கி வருகின்றன :

1. காஞ்சிபுரம்-திருவள்ளூர்
2. விழுப்புரம்-கடலூர்
3. வேலூர்-திருவண்ணாமலை



1999 ஏப்ரல் 19]

4. தருமபுரி
5. சேலம் - நாமக்கல்
6. ஈரோடு
7. கோயம்புத்தூர்
8. மதுரை - தேனி
9. திண்டுக்கல்
10. நீலகிரி
11. திருச்சிராப்பள்ளி - பெரம்பலூர் - கரூர்
12. தஞ்சாவூர் - திருவாரூர் - நாகப்பட்டினம்
13. புதுக்கோட்டை
14. விருதுநகர்
15. சிவகங்கை - இராமநாதபுரம்
16. திருநெல்வேலி - தூத்துக்குடி
17. கன்னியாகுமரி

பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஆனால் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்த தேவைப்படும் உறைவிந்து தயாரிக்கத் தேவையான பொலிகாளைப் பண்ணைகள், உறைவிந்து நிலையங்கள் போன்ற பொதுவான வசதிகளைத் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அமைத்து நிர்வகித்து வருகிறது. தற்சமயம் இவ்விணையத்தின்கீழ் அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர் மற்றும் அயனாவரம் ஆகிய நான்கு இடங்களில் பால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அம்பத்தூர் பால் பண்ணை நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்டது. 01-05-1996 முதல் இயங்கி வரும் சோழிங்கநல்லூர் பால் பண்ணையும் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்டது. மாதவரம் பால் பண்ணை நாளொன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்டது. இப்பால் பண்ணைகள் பாலைப் பதப்படுத்தி பாலித்தீன் பைகளில் நிரப்பி சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விநியோகம் செய்து வருகின்றன. அயனாவரத்தில் நாளொன்றுக்கு 12,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்ட பால் பண்ணையில் பால்

பொருட்களான சுவையூட்டிய தயிர் (யோகர்ட்), ஐஸ்கிரீம், பால்கோவா ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒன்றியங்களை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைத்து வழிநடத்தி அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக திட்டமிடல், பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல் ஆகிய பணிகளையும் இயந்திர சாதனங்கள் நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் பணிகளையும் "டர்ன் கீ" (Turn Key) அடிப்படையில் இணையம் மேற்கொள்கிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பாலையும் பால் பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி போன்ற பால் பொருட்களையும், இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது.

**மாவட்ட ஒன்றியங்களில் பால் கொள்முதல்**

தமிழ்நாடு கடந்த ஆண்டில் பால் கொள்முதலில் ஒரு வியத்தகு சாதனையைப் புரிந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து 07-04-1998 அன்று பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.49 உயர்த்தி அறிவித்ததுடன் தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் எதிர்பாராத அளவுக்குச் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பாலை வழங்கி பால் கொள்முதலில் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தி பால் கூட்டுறவுச் சங்கங்களின்மேல் தங்களுக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தினர். வழக்கமாக பால் கொள்முதல் விலை உயரும்போது அதற்கு ஈடாக பால் விற்பனை விலையும் உயர்த்தப்படும். ஆனால் முதல் முறையாக விற்பனை விலையை கருத்தில்கொள்ளாமல் பால் கொள்முதல் விலையை மட்டும் கணிசமாக உயர்த்தி கவர்ச்சிகரமான விலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

இதன் விளைவாக 07-04-1998-க்கு முன்னர் பால் கொள்முதல் நாளொன்றுக்கு 11.20 இலட்சம் லிட்டர் என்று இருந்த நிலை மாறி தற்போது சராசரியாக நாளொன்றுக்கு 15.10 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.



மாவட்ட ஒன்றியங்களால் கொள்முதல் செய்யப்பட்ட பாலின் விவரம் :

| மாவட்ட ஒன்றியம் | | 1998-99 (பிப்ரவரி 1999 முடிய) நாளொன்றுக்கு சராசரியாக (ஆயிரம் லிட்டர்கள்) |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம்-திருவள்ளூர் | 35 |
| 2. | விழுப்புரம்-கடலூர் | 108 |
| 3. | வேலூர்-திருவண்ணாமலை | 251 |
| 4. | தருமபுரி | 171 |
| 5. | சேலம் - நாமக்கல் | 253 |
| 6. | ஈரோடு | 169 |
| 7. | கோயம்புத்தூர் | 114 |
| 8. | நீலகிரி | 20 |
| 9. | மதுரை - தேனி | 81 |
| 10. | திண்டுக்கல் | 43 |
| 11. | திருச்சி - கரூர் - பெரம்பலூர் | 160 |
| 12. | தஞ்சாவூர் - திருவாரூர் - நாகப்பட்டினம் | 13 |
| 13. | புதுக்கோட்டை | 6 |
| 14. | காரைக்குடி - சிவகங்கை | 15 |
| 15. | விருதுநகர் | 8 |
| 16. | திருநெல்வேலி - தூத்துக்குடி | 55 |
| 17. | கன்னியாகுமரி | 8 |
| | | 1510 |

பால் வழங்காத உறுப்பினர்கள் மீண்டும் கூட்டுறவுக்குள் திரும்பி வந்து பால் வழங்கியது மற்றொரு வளர்ச்சியாகும். 1998 ஜூன் மாதம் பால் வழங்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 4.7 இலட்சம் பேராக இருந்தது. செப்டம்பர் 1998-ல் 5.14 இலட்சம் பேராக உயர்ந்தது. இவ்விதமான வளர்ச்சி உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட கொள்முதல் விலை உயர்வு கவர்ச்சிகரமாகவும் போதுமானதாகவும் இருந்தது என்பதைக் காட்டுகிறது. மேலும் நமது மாநிலத்தில் வழங்கப்படும் பால் கொள்முதல் விலை அண்டை மாநிலங்களிலுள்ள பால் கொள்முதல் விலையுடன் ஒப்பிடத்தக்கதாக இருக்க வேண்டும். மேலும் பால் உற்பத்தியாளர்களுக்குத் தாமதமின்றிப்

[1999 ஏப்ரல் 19

பால் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும் என்பதையும் காட்டுகிறது. 1998 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.49 உயர்த்தி அறிவித்தபிறகு கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 7.51-லிருந்து ரூ. 9.00-க்கு உயர்ந்தது. அதேநேரத்தில் கர்நாடக மாநிலத்தில் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 8.67 என இருந்தது. ஆனால் 1996 அக்டோபர் மாதம் அறிவிக்கப்பட்ட ரூ. 1 உயர்வு தற்காலிகமானதாகவும் கர்நாடக மாநிலத்தின் பால் விலையுடன் ஒப்பிடத்தக்கதாகவும் இல்லை. உண்மையில் சரியான விலையை சரியான நேரத்தில் கொடுத்ததால் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுக்கு மீண்டும் திரும்ப முடிந்தது. இந்திய வெண்மைப் புரட்சியின் தந்தை டாக்டர் வி. குரியன் அவர்கள் பால் கொள்முதலில் தமிழ்நாடு நிகழ்த்திய சாதனையைப் பாராட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

**பால் கொள்முதல் விலை (உற்பத்தியாளர்களுக்கான விலை)**

பால் உற்பத்திக்குத் தேவைப்படும் தீவனம் மற்றும் இடுபொருட்கள் மற்றும் கால்நடைப் பராமரிப்புச் செலவின் உயர்வைக் கருத்திற் கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் கொள்முதல் விலை 07-04-1998 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது :

| காலம் | எருமைப் பால் (கொழுப்புச் சத்து கிலோ ஒன்றுக்கு). ரூ. | ஒரு லிட்டரின் விலை. ரூ. | பசும்பால் கிலோ (மொத்த திடப் பொருள் கிலோ ஒன்றுக்கு). ரூ. | ஒரு லிட்டரின் விலை. ரூ. |
|---|---|---|---|---|
| 07-04-1998 லிருந்து இன்று வரை | 135.00 லிருந்து 156.28 | 9.45 லிருந்து 10.94 | 57.74 லிருந்து 69.23 | 7.51 லிருந்து 9.00 |

**விற்பனை விலை:**

பால் உற்பத்தியாளர்களுக்குக் கொள்முதல் விலை உயர்வு, மின் கட்டணம், பெட்ரோலியப் பொருட்கள், பாலித்தீன் பை தயாரிப்பதற்குத் தேவையான பாலித்தீன் பிலிம் விலை அதிகரிப்பு ஆகியவற்றைக்



1999 ஏப்ரல் 19]

கருத்திற்கொண்டு பால் விற்பனை விலை 16-04-1998 முதல் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது :

| | பாலித்தீன் பைகளில் (லிட்டர் ஒன்றுக்கு) | தானியங்கி நிலையங்களில் (லிட்டர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| பால் அட்டை | ரூ. 10.50 | ரூ. 10.50 |
| ரொக்கத்திற்கு | ரூ. 11.00 | ரூ. 10.50 |

மேற்படி விலை ஏற்றத்திற்குப் பிறகும் பெரும்பாலான மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, பால் விற்பனை விலை தமிழ்நாட்டில் குறைவாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**விற்பனை :**

*பால்—*

1998-99 ஆம் வருடத்தில் பிப்ரவரி 1999 முடிய இணையம் சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 7.78 இலட்சம் லிட்டர் பாலை விற்பனை செய்துள்ளது. சென்னை நகரில் நுகர்வோருக்கும் நிறுவனங்களுக்கும் 209 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் 294 கண்ணாடியிழை பிளாஸ்டிக் தொட்டிகள் 511 பூத்துகள் மற்றும் 36 பாலகங்கள் மூலம் பால் விற்பனை செய்யப்படுகிறது. சென்னை மற்றும் அதன் புறநகரங்களிலும் 34 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் பால் விற்பனை செய்யப்படுகிறது.

பால் அட்டைகள் வழங்குவதிலிருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் கடந்த கால நிகழ்ச்சிகளாகிவிட்டன. தற்போது மாதம் முழுவதும் பால் அட்டைகள் தாராளமாக வழங்கப்படுகின்றன.

*நிலைப்படுத்திய பால் விற்பனை—*

பால் கொள்முதல் அதிகரிப்பினால் இணையம் 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து மற்றும் 8.5 விழுக்காடு இதரச் சத்து கொண்ட நிலைப்படுத்திய பாலையும் 1-9-1998 முதல் சென்னை நகர நுகர்வோருக்கு விற்பனை செய்து வருகிறது. சராசரியாக நாளொன்றுக்கு 16,000 லிட்டர் நிலைப்படுத்திய பால் பாலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறாக 3.0 விழுக்காடு கொழுப்புச் சத்து 8.5 விழுக்காடு இதரச் சத்து கொண்ட பதப்படுத்திய பாலும் 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து 8.5 விழுக்காடு

இதரச் சத்து கொண்ட நிலைப்படுத்திய பாலும் 6 விழுக்காடு கொழுப்புச் சத்து 9 விழுக்காடு இதரச் சத்து கொண்ட முழுமையான கொழுப்புச் சத்து பாலும் சென்னை மாநகரில் விற்பனை செய்யப்படுகிறது. நுகர்வோர்கள் தங்கள் தேவை மற்றும் பண வசதியைப் பொறுத்து மேற்கண்ட மூன்றுவகை பாலில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்து வாங்கிக் கொள்கிறார்கள். பதப்படுத்திய பால் நீல கலரில் அச்சடிக்கப்பட்ட பால் பைகளிலும் நிலைப்படுத்திய பால் பச்சைக் கலரில் அச்சடிக்கப்பட்ட பால் பைகளிலும் முழுமையான கொழுப்புச் சத்துப் பால் பழுப்புக் கலரில் அச்சடிக்கப்பட்ட பால் பைகளிலும் கிடைக்கிறது.

பால் பொருட்கள் விற்பனை :

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் 17 மாவட்ட ஒன்றியங்கள் இணைந்த தலைமை நிறுவனமாகும். அரசாணை எண் 555 விவசாயம் (பா.உ.1) நாள் 21-03-1980-ன்படி சென்னைப் பெருநகரில் பால் விற்பனையை மேற்கொள்வதும் அதனுடன் இணைந்த மாவட்ட ஒன்றியங்கள் உற்பத்தி செய்த பால் பொருட்களை விற்பனை செய்வதும் இணையத்தின் பொறுப்பாகும். 17 மாவட்ட ஒன்றியங்களில் சேலம், ஈரோடு, மதுரை மற்றும் தருமபுரி ஒன்றியங்களில் சமன் படுத்தும் பால் பண்ணைகள் (பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால் பண்ணைகள்) உள்ளன. மற்ற ஒன்றியங்களிலுள்ள உபரி பால் அருகிலுள்ள பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால் பண்ணைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பால் பொருட்களாக மாற்றப்படுகின்றன. இப்பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால் பண்ணைகள் உள்ளூர் பால் விற்பனை போக எஞ்சியுள்ள பாலிலிருந்து வெண்ணெய், பால் பொடி மற்றும் நெய் ஆகியவற்றைத் தயாரிக்கின்றன.

இப்பால் பொருட்கள் தவிர, ஊட்டியிலுள்ள பால் பண்ணையில் பாலாடைக் கட்டிகளும் சேலம் பால் பண்ணையில் டெட்ரா பாக்கெட்டுகளில் டெட்ரா பாலும் சுவையூட்டப்பட்ட நறுமண பாலும் தயாரிக்கப்படுகின்றன. இன்சுவை பொருட்களான ஐஸ்கிரீம், யோகர்ட், பால்கோவா போன்றவை இணையத்தின் பொறுப்பில் இயங்கிவரும் சென்னை அயனாவரம் பால் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பால் மற்றும் பால் பொருட்கள் 'ஆவின்' என்ற வணிக முத்திரைப் பெயருடன் இணையத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இன்சுவைப் பொருட்கள் 'ஆவின் குட்னெஸ்' எனும் பெயருடனும், ஆவின் நெய் மற்றும் வெண்ணெய் 'அக்மார்க்'





முத்திரையிடப்பட்டும், பால் பொடி மற்றும் பாலாடைக் கட்டி இந்திய தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் சான்றுடனும் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆவின் பால் உபபொருட்கள் தமிழ்நாடு மற்றும் இதர இடங்களில் இணையத்தால் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு விற்கப்படுகின்றன :

சென்னைப் பெருநகர் :

சென்னைப் பெருநகரிலும் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் பால் உபபொருட்கள் இணையத்தால் நேரடியாக கோடம்பாக்கத்தில் உள்ள உபபொருட்கள் விற்பனைப் பிரிவின்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. உபபொருட்கள் அம்பத்தூர் மற்றும் அயனாவரத்தில் உள்ள கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு விற்பனை நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

உபபொருட்கள் விற்பனை ஆவின் பாலகங்கள், சில்லறை விற்பனை உரிமம் பெற்றவர்கள், மொத்த விற்பனையாளர்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் சிறப்பு விற்பனை ஆணைகள் மூலம் பூர்த்தி செய்கிறது.

பாலகங்கள் :

இணையத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 36 ஆவின் பாலகங்கள் உள்ளன. அவற்றில் 9 பாலகங்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் அனுப்பப்பட்ட மகளிராலும், 2 பாலகங்கள் முன்னாள் இராணுவத்தினராலும் மற்றும் 25 பாலகங்கள் இணையத்தின் பணியாட்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன.

சில்லறை விற்பனை உரிமங்கள் :

சென்னைப் பெருநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 138 சில்லறை விற்பனை உரிமம் பெற்ற நிலையங்கள் உள்ளன. பணம் பெற்றுக் கொண்ட பிறகே உபபொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. சில்லறை விற்பனை உரிமையாளர்களுக்கு ஐஸ்கிரீமிற்கு 25 சதவீதமும் இதர உபபொருட்களுக்கு 6 சதவீதமும் தரகு கொடுக்கப்படுகிறது.

மொத்த விற்பனையாளர்கள் :

இணையம் சென்னைப் பெருநகரில் 8 மொத்த விற்பனையாளர்களை நியமனம் செய்துள்ளது. மொத்த விற்பனையில் 60 சதவிகித விற்பனை

[1999 ஏப்ரல் 19

மொத்த விற்பனையாளர்கள்மூலம் செய்யப்படுகின்றது. மொத்த விற்பனையாளர்கள் நகரின் பால் உபபொருட்கள் தேவையை சுமார் 2000 சில்லறை விற்பனை நிலையங்கள்மூலம் பூர்த்தி செய்கின்றனர். மொத்த விற்பனையாளர்கள் பகுதி வாரியாக நியமிக்கப்பட்டு நகரின் எல்லா பகுதிகளின் தேவையும் பூர்த்தி செய்யப்படுகின்றது. மொத்த விற்பனையாளர்களிடமிருந்து உபபொருட்களுக்கான தொகையை கேட்புக் காசோலையாகப் பெற்ற பின்னரே, அவர்களுக்கு உப பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மொத்த விற்பனையாளர்கள் 4 விழுக்காடு தரகும் சில்லறை விற்பனையாளர்கள் 6 விழுக்காடு தரகும் பெறுகின்றனர்.

1998-99 ஆம் வருடத்தில் பிப்ரவரி 1999 முடிய சென்னை நகரிலும், மற்ற மாநில இணையங்களுக்கும் மற்றும் பிற மாநில சி அண்டு எப் முகவர்களின் மூலமாகவும் பால் பொருள்கள் விலைக்கு விற்கப்பட்டு கீழ்க்கண்ட சாதனை படைத்துள்ளது : -

| உபபொருட்கள் | 1996-97 | 1997-98 | 1998-99 (பிப்ரவரி 1999 முடிய) |
|---|---|---|---|
| | (மெட்ரிக் டன்கள்) | | |
| **வெண்ணெய் :** | | | |
| சென்னைப் பெருநகர் | 1035.40 | 953.73 | 986.00 |
| பிற மாநிலங்களில் (சி அண்டு எப் முகவர்கள் மூலம்) | — | — | — |
| மொத்த விற்பனை | — | — | 1836.00 |
| மொத்தம் .. | 1035.40 | 953.73 | 2822.00 |
| **நெய் :** | | | |
| சென்னைப் பெருநகர் | 415.30 | 467.46 | 534.20 |
| பிற மாநிலங்களில் (சி அண்டு எப் முகவர்கள் மூலம்) | 2457.00 | 1278.00 | 3160.00 |
| மொத்த விற்பனை | — | — | 18.00 |
| மொத்தம் .. | 2872.30 | 1745.46 | 3712.20 |



1999 ஏப்ரல் 19]

| | | | |
|---|---|---|---|
| **பால் பொடி** | | | |
| பிற இணையங்களுக்கு | 122.90 | 7.96 | 12.00 |
| பிற மாநிலங்களில் (சி அண்டு எப் முகவர்கள் மூலம்) | — | — | — |
| மொத்த விற்பனை | — | — | 1236.00 |
| மொத்தம் .. | 122.90 | 7.96 | 1248.00 |

**உள்ளீட்டுப் பணி :**

**பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்**

இவ்வாண்டு 1998-99 பிப்ரவரி 1999 முடிய மாவட்ட ஒன்றியங்களால் நாளொன்றுக்கு சராசரியாக 15.10 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது.

பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1998-99 (பிப்ரவரி 1999 முடிய) 797 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டு 13.95 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் உறைவிந்து மூலம் செயற்கை முறைக் கருவூட்டல் செய்யத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன, பால் உற்பத்தியாளர்களுக்குக் கால்நடைத் தீவனமும், பசுந்தீவனமும் வழங்கப்படுகின்றன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் சிகிச்சையும், வெக்கை, கோமாரி மற்றும் தைலேரியாசிஸ் போன்ற நோய்களுக்கு எதிராகத் தடுப்பு ஊசி போடும் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் கிராம அளவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்படுகிறது. 1998-99 (பிப்ரவரி 1999 முடிய) உறைவிந்து மூலம் 9.23 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன.

1998-99 (பிப்ரவரி 1999 முடிய) மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் நடமாடும் கால்நடைப் பிரிவிலுள்ள நல்ல தேர்ச்சி பெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் 8.31 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தன. கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர கால அழைப்பிற்காக அவசர

கால சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டன. 1998-99 ஆம் ஆண்டு (பிப்ரவரி 99-ல்) 99 நடமாடும் கால்நடைப் சிகிச்சைப் பிரிவுகளும் 44 அவசர கால சிகிச்சைப் பிரிவுகளும், செயல்பட்டன.

உள்நாட்டுக் கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி

செயற்கை முறைக் கருவூட்டலின் பயனாக 1998-99 ஆம் ஆண்டு (பிப்ரவரி 99 முடிய) 95,163 வீரியமுள்ள கிடேரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இனப் பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கால்நடைத் தீவன உற்பத்தி ஆலை

மூன்று கால்நடைத் தீவன உறபத்தி ஆலைகள் கீழ்க்கண்ட மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

| மாவட்ட ஒன்றியம். | தீவன ஆலை அமைந்துள்ள இடம். |
|---|---|
| 1. காஞ்சிபுரம்-திருவள்ளூர் | மாதவரம் |
| 2. ஈரோடு ஒன்றியம் | ஈரோடு |
| 3. மதுரை ஒன்றியம் | கப்பலூர் |

இவ்வாலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும்.

இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் தீவனங்கள் பெல்லட் (Pellet) மற்றும் மேஷ் (Mash) வகைகள் அனைத்து மாவட்டப் பால் உற்பத்தியாளர்களுக்குக் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் இத்தீவனம் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கும், மாவட்டக் கால்நடைப் பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணை, உதகை**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் உதகமண்டலத்தில் கருவூல நிலைய ஜெர்சி பொலிகாளைப் பண்ணை





ஒன்றைப் பராமரித்து வருகிறது. பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் தேசிய அளவில் இயங்கி வரும் அனைத்து பொலிகாளைப் பண்ணைகளிலும் இது இரண்டாவது இடத்தில் உள்ளது என தேசிய பால்வள வாரியத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. இப்பண்ணை இலாபத்தில் இயங்கி வருவதோடு இப்பண்ணையில் அமைந்துள்ள உறைவிந்து நிலையம் அகில இந்திய அளவில் பெருமைப்படும் அளவில் புகழ் வாய்ந்தது.

1998-99 ஆம் ஆண்டு (பிப்ரவரி 1999 முடிய) உதகமண்டலத்தில் உள்ள கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணையில் 9.20 இலட்சம் உயர் இன உறைவிந்து குச்சிகள் உற்பத்திச் செய்யப்பட்டன. ஈரோட்டில் உள்ள எருமை இன உறைவிந்து நிலையத்தில் 1.36 இலட்சம் முர்ரா எருமை இன உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

**வம்சாவழி மூலம் பொலிகாளைகள் தேர்வுத் திட்டம்**

பால் உற்பத்தியை மேம்படுத்த நல்ல தரமானக் கலப்பினப் பொலிகாளைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வம்சாவழி மூலம் பொலிகாளைகளைத் தேர்வு செய்யும் திட்டம் வேலூர், தர்மபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சிறந்த பொலிகாளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் உறை விந்து நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மத்திய அரசு நிதி உதவியுடன் கலப்பின கன்று வளர்ப்புத் திட்டம்**

தென் மாவட்டங்களிலுள்ள சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களிடம் உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு சுமார் 5,000 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 730.34 இலட்சத்திற்கு (அரசு மானியம் ரூ. 385.67 இலட்சம், வங்கிக்கடன் ரூ. 344.67 இலட்சம்) கருத்துரு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 3,000 சிறு மற்றும் குறு விவசாயிகளும் 2,000 விவசாயத் தொழிலாளர்களும் பயனடைவர்.

**கால்நடை பராமரிப்புத் துறையின் செயலாக்கப் பணிகள்**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை இனவிருத்தி வசதிகளை

[1999 ஏப்ரல் 19

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் செய்யப்படாத இடங்களில் மேற்குறிப்பிட்ட பணிகளை கால்நடைப் பாரமரிப்புத் துறை செய்து வருகிறது. கால்நடை மருத்துவம் மற்றும் இனவிருத்தி வசதிகளை, பரவலாக உள்ள கால்நடைப் பாரமரிப்புத் துறை, கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம், கிளை நிலையங்கள் ஆகியவை மூலம் வழங்குகிறது. கால்நடைப் பராமரிப்புத் துறை தொண்டை அடைப்பான், சப்பை நோய், கோமாரி மற்றும் வெக்கை நோய் ஆகிய நோய்கள் கால்நடைகளுக்கு வராமல் தடுப்பதற்காக, தடுப்பு ஊசிகளை கால்நடைகளுக்குப் போடுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நோய் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு புலனாய்வு செய்து நோயை கண்டுபிடிக்க உதவுகிறது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்விக்கும் திறனுடன், அதை நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலை குளிர்விக்கும் திறன் கொண்டதாக விரிவாக்கம் செய்யக்கூடிய வகையில் புதிதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ரூ. 10.00 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு இதற்கு மேல் தேவைப்படும் நிதியை, திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் தனது நிதியிலிருந்து செலவிடும். 1999-2000 ஆண்டின் இறுதிவாக்கில் இக் குளிரூட்டும் நிலையம் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய பால்வள வாரியத்திடமிருந்து 100 விழுக்காடு கடனாகப் பெற்று செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள்**

தர்மபுரி மாவட்டத்திலுள்ள மொரப்பூரில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்விக்கும் திறனுடன் அதை நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலை குளிரூட்டும் திறன் கொண்டதாக விரிவாக்கம் செய்யக்கூடிய வகையில் ஒரு புதிய குளிரூட்டும் நிலையம் சுமார் ரூ. 183 இலட்சத்தில் அமைக்கவும், சென்னையில் சுமார் ரூ. 4 கோடி செலவில் ஒரு பால் உபபொருட்கள் பண்ணை அமைக்கவும் ஆனந்திலுள்ள தேசிய பால்வள வாரியத்திற்கு கருத்துரு நிதி உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.



999 ஏப்ரல் 19]

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் 50,000 லிட்டர் பாலை குளிரூட்டும் திறன் கொண்ட, புதிய பால் குளிரூட்டும் நிலையம் ரூ. 3.00 கோடி செலவில் அமைக்க கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது, தேசியப் பால்வள வாரியத்தின் ஆலோசனைப்படி தமிழகத்திலுள்ள அனைத்து வகையான பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொண்டிருந்த தணிக்கை வாரியம் கலைக்கப்பட்ட பின்னர் 01-10-1987 முதல் தொடங்கப்பட்டு தனித்துறையாக செயல்பட்டு வருகிறது. தொடக்க நிலையிலுள்ள 9,892 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 17 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் இயங்கும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவைகளின் சட்டரீதியான தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை முன்னேற்றம்**

*அ. தொடக்கநிலைப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, 1997-98 ஆம் ஆண்டு இறுதி தணிக்கை.*

28-02-1999 வரை பதிவுசெய்யப்பட்டுள்ள 9,892 சங்கங்களில் 1997-98 ஆண்டிற்கு 9,100 சங்கங்கள் சட்டரீதியான இறுதித் தணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள் 28-02-1999 வரையில் 7,728 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,372 சங்கங்களில் 1,273 சங்கங்களின் தணிக்கைக்குத் தேவையானப் புத்தகங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தாலும், புத்தகங்கள் எழுதப்படாதக் காரணத்தாலும் தணிக்கை மேற்கொள்ள இயலவில்லை. இதற்கான உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பால்வளத் துறையின் நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. 99 சங்கங்களில் இறுதித் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

*ஆ. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை 1994-95 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை*

மாவட்ட அளவில் இயங்கும் மொத்தமுள்ள 17 ஒன்றியங்களில், 16 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு இறுதித் தணிக்கை அறிக்கைகளின் மீது தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைப் பொறுத்தமட்டில் அவ்வொன்றியத்திலிருந்து முழுமையான அறிக்கை பெறப்பட்டவுடன், தணிக்கைச் சான்று வழங்கப்படும்.

**1995-96 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை**

மொத்தமுள்ள 17 மாவட்டப் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 15 கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள காஞ்சிபுரம்-திருவள்ளூர் மற்றும் திருநெல்வேலி ஒன்றியங்களின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

**1996-97 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை**

தமிழ்நாட்டில் உள்ள 17 மாவட்ட ஒன்றியங்களில் 5 ஒன்றியங்களில் 28-02-1999 வரை தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 ஒன்றியங்களின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

**1997-98 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை**

17 ஒன்றியங்களில் 5 ஒன்றியங்களின் தணிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

**இ. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்**

| வ.எண் | ஆண்டு | தணிக்கையின் தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | 1991-92 | 31-05-1996-ல் தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. |
| 2. | 1992-93 | சென்னை மண்டல துணை இயக்குநர் சோதனைத் தணிக்கை மேற்கொண்டுள்ளார். இணையத்திடமிருந்து குறைகளைவு அறிக்கை பெறப்பட்டவுடன் பால் கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரால் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கைச் சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 3. | 1993-94 | சென்னை மண்டல துணை இயக்குநர் சோதனைத் தணிக்கை 1-9-1997 முதல் 9-12-1997 முடிய மேற்கொண்டுள்ளார். சோதனைத் தணிக்கையின் பேரிலான குறைகள் நிவர்த்திக்காகத் தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைகளைவு அறிக்கை பெறப்பட்டவுடன் தணிக்கைச் சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 4. | 1994-95 | மண்டல துணை இயக்குநர், சென்னை 1994-95 ஆம் ஆண்டிற்கு 2-3-1998-ல் சோதனைத் தணிக்கை மேற்கொண்டுள்ளார். சோதனைத் தணிக்கை அறிக்கை தொகுக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 5. | 1995-96 | 1995-96 ஆம் ஆண்டிற்கு சோதனைத் தணிக்கை மண்டல துணை இயக்குநரால் மேற்கொள்ளப்பட உள்ளது. |
| 6. | 1996-97 | பட்டயக் கணக்காயரிடமிருந்து இறுதித் தணிக்கை அறிக்கை பெறப்படவில்லை. |
| 7. | 1997-98 | கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் வளத் (பா.உ.11) துறை ஆணை (டி) எண்.137 நாள் 17-6-97-ன்படி ஒரு உதவி இயக்குநர்/ தணிக்கையாளர் மற்றும் 12 முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர்கள் கொண்ட ஒரு குழுவினை நியமித்து 1997-98 ஆம் ஆண்டிற்கான தணிக்கைத் தொடங்கப்பட்டுள்ளது. இணையத்தின் தணிக்கையை மேற்கொள்வதற்குத் தேவையானக் கூடுதல் பணியாளர்கள் கிடைக்கப்பெறும் என்ற எதிர்பார்ப்புடன் இணையத்தின் தணிக்கை 23-12-1998-ல் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. |



**அரசு வருவாய்**

1998-99 ஆம் நிதியாண்டின் நிதிநிலையறிக்கையில் தணிக்கைக் கட்டணம் மற்றும் அ.வி. கட்டணத்தின்கீழ் ரூ. 1,12,00,000 வருவாய் வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ்விலக்கில் 31-03-1999 முடிய ரூ. 94,97,305 வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 19

## இணைப்பு II

*(269 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு**

**கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000**

**பாகம்-1**

**பொது விவரம்**

கால்நடைப் பராமரிப்புத் துறை கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கியப் பங்கு வகிப்பதுடன், வருமானமும் மற்றும் வேலைவாய்ப்பும் அளிக்கக்கூடிய வகையில் ஒரு கூட்டுத் தொழிலாக செயல்பட்டு வருகிறது. கிராமப் பொருளாதாரத்திற்கு ஏற்ப தானிய விளைச்சலைப் பெருக்க வழி வகுக்கின்றது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப குறைந்தளவே வேலைவாய்ப்பு கிட்டும் இவ்வேளையில், உபரி வருமானத்தை அளிக்கும் வகையில் தானிய விளைச்சல் மூலமாக வேலைவாய்ப்பு அளிக்கின்றது. இவ்வகையான வேலைவாய்ப்பு கிராமப்புற வறுமையை ஒழிப்பதோடு மட்டுமல்லாமல், பால், இறைச்சி மற்றும் முட்டையின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. தேவைக்கேற்ப பெருகிவரும் இப்பொருள்களினால், தனி நபர் வருமானம் பெருகுவதுடன், நுகர்வோரின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளது. மற்றும் சரிவிகித உணவை உட்கொள்வதால், தேக ஆரோக்கியம் ஏற்படுகிறது.

கால்நடைப் பராமரிப்பின் பிரிவிலிருந்து பெறப்படும் பால், இறைச்சி, முட்டை, கம்பளி, தோல் மற்றும் தோல் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களாலான இரத்தம், எலும்பு, கொழுப்பு, நிலத்திற்குத் தேவையான உரம், போக்குவரத்திற்குப் பயன்படக்கூடிய சக்தி மற்றும் சாணம் கிடைக்கிறது. தோல் மற்றும் தோல் பொருட்களை தோல் உற்பத்தியாளர்கள் ஏற்றுமதிக்கும், தங்கள் வாணிபத்திற்கும் ஈடுபடுத்தி வருகிறார்கள். இறந்த பிராணிகளின் உடலில் இருந்து இறைச்சி, எலும்பு, கொழுப்பு, கொம்பு, குளம்பு, குடல் பாகம் ஆகியவைகள் கிடைக்கின்றன. கால்நடைகளிலிருந்து பால் மற்றும் பால் பொருட்கள், முட்டைகள், இறைச்சி, கம்பளி போன்ற வீட்டு உபயோகத்திற்குத் தேவையான பொருட்கள் மட்டுமல்லாது, வேளாண்மைத் தொழில் நடவடிக்கைக்கும் பல வகையான வேளாண்மை தழுவிய தொழில்கள் தயாரிப்புகளுக்கும், தேவைப்படும் பொருட்களாக உள்ளன. சோப்புகள், மெழுகுப் பொருட்கள், உணவுப் பொருட்கள், வஜ்ஜிரம், எலும்பிலிருந்து



1999 ஏப்ரல் 19]

தயாரிக்கப்படும் பொருட்கள், கத்திப் பிடிகள், பொடி டப்பாக்கள், சட்டைப் பித்தான்கள், அழகு சாதனப் பொருட்கள் போன்ற பொருட்கள் தயாரிப்புக்களினால், நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு அளித்து வருமானத்தைப் பெருக்குகின்றன.

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியின் மதிப்பீடு 1997-98-ம் ஆண்டு 40.61 இலட்சம் டன்னாகும். மொத்த பால் உற்பத்தியின் அளவில் 40% எருமையினத்தாலும், மீதமுள்ள 60% பசுவினம் மூலமாகவும் கிடைக்கிறது. இதில் 27% நாட்டின பசுக்களின் மூலமாகவும், 33% உயரினம் மற்றும் கலப்பின பசுக்களின் மூலமாகக் கிடைக்கிறது. 1991-92 ஆம் ஆண்டில் பசுவினத்தின் மூலமாகக் கிடைத்த பாலின் அளவில் 21.7% உயரினம் மற்றும் கலப்பின பசுக்களின் வாயிலாக கிடைத்ததாகும். இது 1997-98-ல் 33% உயர்ந்துள்ளது. இவ்வுயர்வு நிலையான அளவில் கால்நடைப் பராமரிப்புத் துறையில் செயல்படுத்திய தீவிரக் கலப்பின பசுக்கள் உற்பத்தித் திட்டத்தின் பயனால்தான் என்பது கண்கூடு. இதன் பயனாக 1 நாளைக்கு ஒரு நபருக்கு கிடைக்கும் பாலின் அளவு 1991-92 ஆம் ஆண்டு 163 கிராமாக இருந்தது, 1997-98-ல் 183 கிராமாக உயாந்துள்ளது.

1985-86-லிருந்து 1 நபருக்கு ஆண்டிற்குக் கிடைக்கும் முட்டையின் அளவு முட்டை உற்பத்தி மதிப்பீட்டின் மூலம் கணிசமாக உயர்ந்துள்ளது என்பது அறியப்படுகிறது. முட்டை உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கிறது. 1997-98 ஆம் ஆண்டு முட்டை உற்பத்தி மதிப்பீடு 32,170 இலட்சம் எண்களாகும். தமிழகத்தில் 1985-1986 ஆம் ஆண்டில், 1 ஆண்டிற்கு நபருக்கு கிடைக்கும் முட்டையின் அளவு 38 எண்ணிக்கையாக இருந்தது. 1997-1998 ஆம் ஆண்டில் 54 என்ற எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

கால்நடைகளிலிருந்து கிடைக்கும் இறைச்சி ஒரு முக்கிய உணவாக மனிதனுக்கு இருந்து வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிக் கூடங்களிலிருந்து கிடைக்கும் அளவு 1997-98ல் 363 இலட்சம் கிலோவாகும். மொத்த இறைச்சி உற்பத்தியில், 32% செம்மறியாடுகளிலிருந்தும், '22% வெள்ளாடுகளிலிருந்தும் 25% மாட்டினங்களிலிருந்தும், 19% எருமையினங்களிலிருந்தும், 2% பன்றியினங்களிலிருந்தும் கிடைக்கிறது.

தேசிய அளவிலான பொருளாதார வளர்ச்சிக்கும், வேளாண் தொழிலுக்கு உகந்த வகையில் முன்னேற்றத்திற்கும், வருவாய்ப்

[1999 ஏப்ரல் 19

பெருக்கத்திற்கும், வேலைவாய்ப்பிற்கும் கால்நடை வளர்ப்பு முக்கிய அங்கம் வகித்து வருகிறது என்பது தெளிவாகின்றது. சீரிய முறையிலான அண்மை காலத்துக்கு உகந்த தொழில்நுட்ப உத்திகளை கையாள்வதினால், பல வகைகளிலும், மேலும் வேலைவாய்ப்பும், அதிக வருவாயும் கிட்டுகிறது. இவ்வகை காரணங்களினால், குறிப்பாக கிராமப் புறங்களிலிருந்து, நகர்ப்புறங்களுக்கு, வேலைவாய்ப்புத் தேடி வரும் குறைந்த அளவு படித்த, மக்கள் குடியேறுவதைத் தடுக்க இயலும்.

இத்துறையின் அண்மைக் காலம் வரையிலும் ஒரு இயக்குநரின் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. இத்துறையின் பணிகள் பன்மடங்கு விரிவாக்கம் அடைந்ததைத் தொடர்ந்து அரசு ஆணை பல்வகை எண் 254, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் : 17-11-1998-ன்படி துறையை கால்நடைப் பராமரிப்பு இயக்ககம் மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இரண்டு இயக்குநர்களும் இத்துறையின் வெவ்வேறு பணிகளைக் கவனித்து வருகின்றனர்.

## பாகம்-2

## கால்நடை மற்றும் கோழியின அபிவிருத்தி

### 1. கால்நடை அபிவிருத்தி

*அ. கால்நடைக் கணக்கு:*

முதன் முதலாக சென்னை மாகாணத்தில் கால்நடைக் கணக்கெடுப்பு 1887-88 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்த பின்பு திட்டமிட்டு முழுமையானக் கணக்கெடுப்புப் பணி 1951-ல் மேற்கொள்ளப்பட்டது. குறைந்த ஆண்டுகளே வாழும் கால்நடைகளின் கணக்கெடுப்பினைக் கருத்தில் கொண்டு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடைசியாக 15-வது கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்புப் பணி 1994-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. 16-வது கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்புப் பணி 15-10-1997 அன்றைய தேதியை அடிப்படை நாளாகக் கொண்டு ரூ. 27.22 இலட்சம் செலவில் மாநில அரசின் புள்ளியியல் மற்றும் பொருளியல் துறையினரால் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முழுமையான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.



1999 ஏப்ரல் 19]

தமிழகத்தில் 1994 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி கால்நடைகளின் இனவாரியான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| வ. எண் | இனம் | எண்ணிக்கை | எண்ணிக்கை சதவீதம் |
|---|---|---|---|
| 1. | மாட்டினம் | 90,96,121 | 35.42 |
| 2. | எருமையினம் | 29,31,177 | 11.41 |
| 3. | செம்மறியாடு | 56,12,242 | 21.86 |
| 4. | வெள்ளாடு | 58,65,442 | 22.84 |
| 5. | பன்றியினம் | 6,13,133 | 2.40 |
| 6. | குதிரைகள் | 10,604 | 0.04 |
| 7. | கழுதைகள் | 42,352 | 0.16 |
| 8. | நாய்கள் | 15,08,077 | 5.87 |
| 9. | ஒட்டகங்கள் | 9 | - |
| | மொத்தம் .. | 2,56,79,157 | 100 |

தமிழகத்தில் கோழியினங்கள் 4 கோடி எண்ணிக்கையை எட்டியுள்ளது. 1951-ம் வருடம் முதற்கொண்டு கடந்த ஒன்பதாவது கணக்கெடுப்பில் எடுக்கப்பட்ட கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்பின்படி 43 வருடங்களில் கால்நடைகளில் 3.5% மட்டுமே சரிவு காணப்படுகிறது. இனவாரியான வேறுபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன :—

| | இனவாரியான சதவீத வேறுபாடுகள் 1951 முதற்கொண்டு |
|---|---|
| மாட்டினம் | (-) 10.96 |
| எருமையினம் | (+) 27.60 |
| செம்மறியாடுகள் | (-) 30.06 |
| வெள்ளாடுகள் | (+) 45.17 |
| பன்றி இனங்கள் | (+) 49.88 |
| கோழியினம் | (+) 184.72 |
| மொத்த் கால்நடைகள் .. | (-) 3.48 |

[1999 ஏப்ரல் 19

மாட்டினத்தில் 10.96 சதவீதம் சரியாக சரிவு காணப்படுகிறது. இச்சரிவு துறையில் தீவிரக் கலப்பின இனவிருத்தி திட்டச் செயல்பாட்டினால் திட்டமிட்ட இனவிருத்தி கொள்கைப்படி திறனற்றக் கால்நடைகளை கழிவு செய்வதாலும் ஏற்பட்டதாகும்.

41.93 இலட்சம் பசுவினங்களில் 78.09 சதவீதம் இனவிருத்திக்கு ஏற்ற வயது வந்த பசுவினங்களாகும். அதே போல், 17.96 இலட்சம் எண்ணிக்கையுள்ள பெண் எருமையினங்களில், 73.94 சதவீதம் இனவிருத்திக்கு ஏற்ற வயது வந்த எருமையினங்களாகும்.

ஆ. இனவிருத்தி:

நம் மாநிலத்தில் பசுவினம் மற்றும் எருமையினங்களில் அதிக எண்ணிக்கையில் நாட்டினங்களே உள்ளன. அவற்றின் திறன் குறைவு, நோய் எதிர்ப்பு சக்தியும், தட்ப வெப்ப சீதோஷ்ண நிலை தாங்கக்கூடியதாக இருந்தாலும் முதல் கன்று ஈனும் வயது, ஒரு கன்றுக்கும் மற்றொரு கன்றுக்கும் இடைப்பட்ட நாட்கள், பால் அளவு, பாலின் கறவை நாட்கள் ஆகியவை மிகவும் குறைவு.

மேற்சொன்னவைகளைக் கருத்தில் கொண்டு இதற்கு மாற்று அடிப்படையில் திறனை அதிகரிக்கக்கூடிய வகையில் நாட்டின மாடுகளை கலப்பின இனங்களைக் கொண்டு அபிவிருத்தி செய்வதாகும். பொருளாதார மேம்பாட்டுக்கு உகந்த வகையில் பால் உற்பத்தி, முதல் குட்டி ஈனுவது, இரண்டு குட்டிகளுக்கும் இடைப்பட்ட காலம் முதலியவைகளை மேம்படுத்துவதும் ஆகும். குறைந்த காலத்தில் நிறைந்தப் பயனை அடைவது தொடர்பாகவும் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெருக்குவது போன்றவைகளுக்காகச் செலவு செய்வதும், மேற்சொன்ன காரணங்களை கருத்திற்கொண்டு அயலின பசுவினங்களான ஹோல்ஸ்டைன், ப்ரீசியன் மற்றும் ஜெர்சி இனங்கள் தேர்வு செய்யப்பட்டன. முதல் திட்டக் காலத்தில் இத்துறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட கால்நடை உற்பத்தியைப் பெருக்கி சிறந்தத் திட்டமான கேந்திர கிராமத் திட்டமும், அதனைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட திட்டமான கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களின் பலனாக சிறந்த கால்நடைகளின் உற்பத்தியும், பால் உற்பத்திப் பெருக்கமும், பசுந்தீவனங்கள் தேவைக்கும் நாட்டில் கிடைக்கக்கூடிய அளவிற்கும் ஏற்ற வகையில் பால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது.

மேற்கண்டுள்ள இரண்டு திட்டங்களின் செயலாக்கத்தின் பலனை கருத்தில் கொண்டு அவற்றை ஒருங்கிணைப்புச் செய்து 20 கால்நடை



1999 ஏப்ரல் 19]

பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திக் குழுக்கள் மூலம் செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தின் இனவிருத்திக் கொள்கை பின்வருமாறு:

1. உள்நாட்டின் பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய இனங்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனவிருத்தி செய்தல்.

2. வம்சாவழி வந்த நாட்டின இனவிருத்திக்கு உகந்த பசுக்களை அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்ஸி மற்றும் ப்ரீசியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

3. கிராமப்புறங்களில் உள்ள நாட்டின எருமைகளை முர்ரா வகை பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்துதல்.

4. கலப்பினப் பசுக்களை கலப்பினப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

தவிர பொதுக் கொள்கையாக கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற ஏனைய சமவெளிப் பகுதிகளில் ஜெர்ஸி இன பொலிகாளைகளும், எல்லா மலைப் பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் ப்ரீசியன் இனக்காளைகளும் பயன்படுத்தப்படுகின்றன. தரம் வாய்ந்ததும் சத்து மிக்கதுமான தீவனங்கள் கிடைப்பதைக் கருத்தில்கொண்டு கறவை மாடுகளுக்கு, சமவெளிப் பகுதிகளில் விந்தின் உபயோகம் அமைகிறது. தற்போது தேவைக்கேற்ப நகரப் பகுதிகளில் ப்ரீசியன் காளைகளின் விந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது :—

கீழ்க்கண்ட இடங்களில் 4 உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
3. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

மொத்தம் 312 எண்ணிக்கையிலான ஜெர்ஸி, ஹோல்ஸ்டைன்-ப்ரீசியன் கலப்பினம், ஹலீக்கார், காங்கேயம், சிந்தி மற்றும் முர்ரா இன பொலிகாளைகள் மேற்கண்ட நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. செப்டம்பர் 1998-ல் டென்மார்க்கிலிருந்து இறக்குமதி

[1999 ஏப்ரல் 19

செய்யப்பட்ட 21 ஜெர்ஸி மற்றும் 10 ப்ரீசியன் பொலிகாளைகள் இவற்றுள் அடங்கும்.

உறைவிந்தினை உறைய வைக்கவும், சேமித்து வைக்கும் பொருட்டும், தேவைப்படும் திரவ நைட்டிரஜனை உற்பத்திச் செய்வதற்கு, தமிழகத்தில் 10 திரவ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன.

உறைவிந்து மற்றும் திரவ நைட்டிரஜன் முறையே எல்லா கருவூட்டல் நிலையங்களுக்கும் விநியோகம் செய்யும்பொருட்டு 12 உறைவிந்து சேமிப்பு வங்கிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. வேலூர்
2. கோயம்புத்தூர்
3. மதுரை
4. திருச்சிராப்பள்ளி
5. தருமபுரி
6. திருநெல்வேலி
7. தஞ்சாவூர்
8. கடலூர்
9. சிவகங்கை
10. சென்னை
11. திண்டுக்கல்
12. சேலம்

1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரி '99 முடிய 20.41 இலட்சம் டோஸ் உறைவிந்தும் 2.08 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்டிரஜனும் உறைவிந்து தயாரிப்பு மற்றும் திரவ நைட்டிரஜன் ஆலைகளில் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளது.

செயற்கைமுறை கருவூட்டல் பணி நடைபெறாத குக்கிராமப் பகுதிகளில், இனவிருத்தி வசதியை ஏற்படுத்த 300 எண்ணிக்கையிலான கலப்பினப் பொலிகாளைகள் இயற்கை முறை இனவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ளன.

### இ. கலப்பின கிடேரிக் கன்றுகளுக்கு தாது உப்புகள் வழங்குதல்

மனிதனுக்குத் தேவைப்படுவது போலவே தாது உப்புகள் கால்நடைகளுக்கும் தேவைப்படுகின்றன. இவற்றின் பற்றாக்குறைக்



1999 ஏப்ரல் 19]

காரணமாக கால்நடைகளின் வளர்ச்சி குன்றுவதுடன் அவற்றின் இன அபிவிருத்தித் திறனும், உற்பத்தித் திறனும் குறைகிறது.

இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு தாது உப்புகள் கால்நடை தீவனத்துடன் அளிக்கும் பொருட்டு தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 3,000 கலப்பின கிடேரிக் கன்றுகளுக்கு ரூ. 5.40 இலட்சம் செலவில் தாது உப்புகள் வழங்கப்பட்டன. இதனால் 3,000 ஏழை விவசாயிகள் பயனடைந்தனர்.

### ஈ. மேய்ச்சல் வசதி மற்றும் பசுந்தீவன உற்பத்தி

பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ப நகர்புறங்களில் குடியிருக்கும் இடத்திற்குத் தேவை அதிகரித்துள்ளது. நிலமானது தொழிற்சாலை, வாணிபம், போக்குவரத்து, பொழுதுபோக்கு மற்றும் இதரத் தேவைகளுக்கும் அதிகத் தேவை உள்ளது.

பசுந்தீவனம், உலர்தீவனம் மற்றும் அடர் தீவனம் ஆகிய மூன்றும் தீவன வகைகளில் முக்கியமானதாகும். இதில் உலர் தீவனமே அதிக அளவிலான பங்கு வகிக்கின்றது. தற்சமயம் 15 முதல் 20 சதவீதம் வரைதான் கால்நடைகளுக்குத் தீவனமாக அடர் தீவனம் அளிக்கப்பட்டு வருகிறது. பயிறு, தானிய வகைகள் மற்றும் வாணிபப் பயிறுகள் பயிரிடப்படும் இடங்களில் உலர் தீவனம் கிடைக்கின்றது.

தமிழகத்தில் பசுந்தீவனம் அநதந்தக் குறிப்பிட்டப் பருவகாலங்களில் மட்டுமே கிடைக்கின்றது. கிராமப்புறங்களில் பொதுவாகக் கால்நடைகள், தரிசு நிலங்கள், ஏரி ஓரங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் மேய்க்கப்படுகின்றன. விளைச்சல் இல்லாத காலங்களில், கால்நடைகளில் அறுவடை நடைபெற்ற வயல்களில் கால்நடைகள் மேய்க்கப்படுகின்றன.

தமிழகத்தில் கீழ்க்கண்டவாறு மேய்ச்சல் நிலங்கள் உள்ளன.

| வகைகள் | நிலத்தின் பரப்பளவு (ஹெக்டேர்கள்) |
|---|---|
| 1. விவசாயத்துக்கு உபயோகமில்லாத நிலங்கள் | 3,45,155 |
| 2. நிரந்தர பசுந்தீவனம் மற்றும் மேய்ச்சல் நிலங்கள் | 1,25,241 |
| 3. காடுகளில் உள்ள மேய்ச்சலுக்கான பகுதி | 14,65,028 |
| மேய்ச்சலுக்கான மொத்த நிலப்பகுதிகள் | 19,35,424 |

வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள காடுகளில் மேய்ச்சலுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி மேய்ச்சலுக்கு அனுமதிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த புவியியல் பகுதிகளிலுள்ள நிலப்பரப்புகளில் மேய்ச்சலுக்கு பயன்படும் பகுதி 15 சதவீதம் ஆகும். 1,000 கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் தரை 82 ஹெக்டேர் நிலப்பரப்பு ஆகும் (நாய்கள் மற்றும் பன்றிகள் நீங்கலாக) எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நகர்ப்புறங்களாலும், வறட்சி மிகுந்த நிலங்களில் சிறு தொழில் மயமாக்கலினாலும், தரிசு நிலங்களிலும், புறம்போக்கு நிலங்கள் மிகக் குறைந்து காணப்படுவதினாலும், மேய்ச்சலுக்கு உகந்த நிலங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

8 சதவீத நிலங்கள் பயனடைய முடியாத நிலங்கள் என பிரிக்கப்பட்டு பல்லாண்டுகளாக அப்படியே உள்ளன. பெருகிவரும் கால்நடைகளின் வளர்ச்சியை நோக்குங்கால் நிரந்தரமான பசும்புல் தீவன வகைகள் பயிரிடப்படும் நிலம் மிகவும் குறைவாகவே உள்ளது. நிறைய எண்ணிக்கையில் கால்நடைகளைக் குறைவாக வளர்த்து வரும் நம் விவசாயப் பெருங்குடிகள் உள்ள தீவனப் பயிர் பயிரிடப்படும் நிலங்களிலிருந்து கிடைக்கும் பசுந்தீவனங்களையும் தவிடு, நொய், நிலத்தின் கழிவுகளைக் கொண்டும் சில தீவனப் பயிர்களையும் கொண்டே கால்நடைகளை வளர்த்து வருகின்றனர்.

மாட்டினம், எருமையினம், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் போன்றவைகளுக்கு மாநிலத்திற்குத் தேவையான பசுந்தீவனத்தின் தேவை மதிப்பீட்டின்படி சுமார் 700 இலட்சம் டன்னாகும். உலர் தீவனத்தின் தேவை மதிப்பீடு சுமார் 240 இலட்சம் டன்னாகும். இதில் 70 முதல் 80 சதவீதம் வரை பசுந்தீவனமும், 20 முதல் 30 சதவீதம் வரை உலர் தீவனமும் குறைவு காணப்படுகிறது.

இந்தத் தேவையைச் சரிசெய்ய துறை, பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கவும், பல திட்டங்களைக் கீழ்க்கண்டுள்ள தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங்களில் செயல்படுத்தி வருகிறது :

1. படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்)

2. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)



3. செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)

4. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)

5. சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)

6. திருநெல்வேலி

7. புதுக்கோட்டை

கீழ்க்கண்டுள்ள பசுந்தீவன அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அ. தீவனப் பயிர் செயல்விளக்கப் பாத்தி விவசாயிகள் நிலத்தில் ஏற்படுத்துதல்.

ஆ. பசும்புல் தீவனப் பயிர்கள் சாகுபடி செய்ய முடியாத நிலங்களிலும் மேய்ச்சல் நிலங்களிலும் ஏற்படுத்துதல்.

இ. பசும்புல் தீவனப் பயிர்களை தோட்டப் பயிர்களுக்கிடையே சாகுபடி செய்தல்.

ஈ. தீவனப் பயிர் அபிவிருத்திக்குத் தேவையான உள்ளீடுகளான விதைகள், புல்கரணைகள் மற்றும் மரக்கன்றுகளை இலவசமாக அளித்தல்.

உ. திட்டங்கள்:

1. உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய கால்நடை அபிவிருத்தி திட்டம் :

தமிழ்நாடு வேளாண்மைத் திட்டத்தின் முக்கிய அம்சமாக இத்துறை உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய கால்நடை அபிவிருத்தித் திட்டம் 1991-92 முதல் 1997-98 முடிய ஏழு ஆண்டுகால அளவில், ரூ. 46.62 கோடி செலவில் மாநில முழுமையும் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் அடிப்படையான குறிக்கோளானது, இந்த மாநிலத்திற்கு ஏற்ற கால்நடை உற்பத்தி முறைகளை மேம்படுத்தல் ஆகும். இத்திட்டம் கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குதல் மற்றும் பால் உற்பத்தித் தொழிலை அரசு தகுந்த முறையில் மேற்பார்வையிடவும், உதவியளிக்கவும் தகுந்த வழிவகை செய்கிறது.

[1999 ஏப்ரல் 19

இத்திட்டத்தின் செயலாக்கத்தினால், பல வகைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கீழ்வருமாறு:

**அ. உறைவிந்து உற்பத்தி, கருவூட்டல் பணி அபிவிருத்தி மற்றும் இனவிருத்தி வசதிகளை மேம்படுத்துதல் :**

இத்திட்டம் ஆரம்ப காலத்தில், இத்துறையில் உறைவிந்து தயாரிக்கப் போதுமான உள்ளிருப்பு வசதிகள் இல்லாததினால், திரவவிந்து மற்றும் உறைவிந்து ஆகிய இரண்டும் உபயோகத்தில் இருந்தன. 1991-92 ஆம் ஆண்டில் 987 நிலையங்களில் திரவவிந்தையும், 1,783 நிலையங்களில் உறைவிந்து கொண்டும் கருவூட்டல் பணி நடைபெற்று வந்தது. 1993 ஆம் ஆண்டு முதல், திரவ விந்து உபயோகம் நிறுத்தப்பட்டு, அனைத்து நிலையங்களிலும் உறைவிந்தின் உபயோகம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்டுள்ளவைகளின் உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்தியதால் முன்னேற்றம் கண்டுள்ளது :

உறைவிந்து சேமித்து வைக்க தேவைப்படும் 1,027 திரவ நைட்ரஜன் குடுவைகள் பல கொள்ளளவு உள்ள அளவுகளில் வழங்கப்பட்டதாலும், செயற்கைமுறைக் கருவூட்டலுக்கு கொணடுவரும் கால்நடைகளை கட்டுப்படுத்த 100 கிட்டிகள் வாங்கப்பட்டதாலும், உறைவிந்து சேமிப்புக்குத் தேவையான திரவ நைட்ரஜனை அதிக அளவில் உற்பத்திச் செய்ய இரண்டு திரவ நைட்ரஜன் ஆலைகள் ஏற்படுத்தியதாலும், 3,350 எண்ணிக்கை செயற்கைமுறை கருவூட்டலுக்கான கருவி வாங்கி வழங்கியதாலும், விந்து உற்பத்திக்குத் தேவைப்படும் உயர்ரக பொலிகாளைகள் மற்றும் பசுவினங்களான 236 கலப்பின பொலிக் காளைகள், 492 கலப்பினப் பசுக்கள், 120 இறக்குமதி செய்யப்பட்ட கருவுற்ற ஜெர்ஸி கிடேரி கன்றுகள் இறக்குமதி செய்யப்பட்ட 21 ஜெர்ஸி பொலிகாளைகள், 10 ஹோல்ஸ்டைன் ப்ரீசியன் இன பொலிகாளைகள், 60 முர்ரா இன பொலிகாளைகள் மற்றும் 150 முர்ரா இன பெண் எருமைகள் ஆகியவை சேர்ந்து 1,089 கால்நடைகள் வாங்கப்பட்டதாலும் ஆகும்.

உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் ஆகியவைகளைச் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களுக்கு முறையாக வழங்கும் வகையில் 12 உறைவிந்து சேமிப்பு வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன.



1999 ஏப்ரல் 19]

உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலிருந்து திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகள் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கு வழங்க தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு போக்குவரத்து தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கால்நடை விரிவாக்க அலுவலர்களின் பணியினைச் சிறப்பாகப் பயன்படுத்தி 383 நடமாடும் கால்நடை மருந்தகங்களுக்குத் தேவையான பல வகையான உபகரணங்கள் இத்திட்டம் மூலம் வழங்கப்பட்டன.

கணிப்பொறி வசதிகள் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டன. கால்நடைப் பண்ணைகள் ஒரத்தநாடு, ஈச்சங்கோட்டை, ஓசூர் மற்றும் அபிசேகப்பட்டி ஆகிய இடங்களில் புதிய இடங்களில் புதிய கால்நடை வீடுகள் மற்றும் கன்று கொட்டகைகள் கட்டப்பட்டன. மேலும் பழையது ஒன்றும் புதுப்பிக்கப்பட்டது.

விந்து தயாரிப்புக்கும் மற்றும் விந்தின் திறன் மதிப்பீட்டை அறியவும், தேவையான இரண்டு டிஜிடல் போட்டோமீட்டர் வாங்கப்பட்டன. மேலும் சேகரித்த விந்தினை சேமித்து வைக்கத் தேவையான சாதனங்கள் வழங்கப்பட்டன.

**ஆ. நோய் ஆய்வு மற்றும் தொற்றுநோய் கண்டறிதல்:**

மண்டல அளவிலான நோய் ஆய்வுக்கூடம் மற்றும் தொற்று நோய்ப் பிரிவுகள் வேலூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவினை வலுப்படுத்த நோய் ஆய்வுக்கூடம், அதற்கான உபகரணங்கள் மற்றும் மின் இயக்கக் கருவிகள் (ஜெனரேட்டர்), குளிர் சாதனங்கள் மற்றும் இரசாயனம் மற்றும் வேதியியல் ஆய்வுப் பொருட்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியா நாட்டு வல்லுநர்களின் ஒத்துழைப்புடன் மாநில அளவிலான கால்நடைகளின் உடல் நலப் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கு சென்னையில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு தொடர்பான பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக நடத்தப்பட்டது.

**இ. விரிவாக்கப் பணி:**

தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்புச் சாதனங்கள் துறையின் விரிவாக்கப் பணியினை வலுப்படுத்த வழங்கப்பட்டுள்ளன.

[1999 ஏப்ரல் 19

19 எண்ணிக்கையில் 16 மில்லிமீட்டர் அளவுள்ள வண்ணத் திரைப்படங்கள் துறையின் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து தயாரிக்கப்பட்டு, விரிவாக்கப் பணிக்காக வழங்கப்பட்டது. கால்நடைப் பராமரிப்புத் துறையின் நடவடிக்கைகள் குறித்து புத்தகங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடித்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

ஈ. பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்:

நோய் ஆய்வு, இனவிருத்தி மற்றும் பசுந்தீவன உற்பத்திப் பிரிவுகளில் பணிபுரியும் கீழ்க்கண்டுள்ள எண்ணிக்கையில் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பசுந்தீவன அபிவிருத்தி .. .. | : | 642 |
| உறைவிந்து தொழில்நுட்பம் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் பணி .. .. | : | 494 |
| இனவிருத்தி மற்றும் மேலாண்மை .. | : | 17 |
| உட்கருமாற்றம் தொழில்நுட்பம் .. | : | 16 |
| கால்நடை பெருக்கம் மற்றும் கணிப்பொறி நடைமுறைப்படுத்துதல் .. | : | 15 |
| ரேடியோ ஐசோடேப் தொழில் நுட்பம்.. | : | 15 |
| இரத்த மாற்றம் மற்றும் நீர் வைத்தியம்.. | : | 15 |
| தீவன ஆய்வு .. | : | 15 |
| திரவ நைட்ரஜன் குடுவைகள் கையாளுதல் | : | 122 |
| பிண பரிசோதனை தொழில் நுட்பம் மற்றும் மாதிரிகளைச் சேமிப்பதும் மற்றும் அவைகளைப் பாதுகாப்பதும் .. .. | : | 15 |
| விரிவாக்க தொழில்நுட்பம் .. .. | : | 35 |
| மற்ற ஏனைய தொழில் நுட்பங்கள் .. | : | 565 |

துறையின் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிப்பதுபோக, கால்நடைப் பெருக்கம், உட்கருமாற்றம், பசுந்தீவன உற்பத்தி, நோய்



1999 ஏப்ரல் 19]

கண்டறிதல், தொற்று நோய் ஆய்வு போன்றவைகளில் ஆஸ்திரேலியா பன்னாட்டு அறிஞர்களின் உதவி கொண்டு துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

உ. பசுந்தீவன உற்பத்தி:

பசுந்தீவன உற்பத்திக்கான உள்ளீடுகளான பசுந்தீவன விதைகள் மற்றும் பசுந்தீவன துணுக்குகள் மற்றும் புல்கரணைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

கால்நடை, பண்ணைகளில் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க பசுந்தீவன உற்பத்தி நிலையங்களில் உள்ளிருப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டன. பசுந்தீவன உற்பத்திக்காக வேளாண்மை துறை, வனத் துறை மற்றும் ஆஸ்திரேலியா நாட்டு வல்லுநர்களின் அறிவுரைப்படி நீண்ட கால பசுந்தீவன உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

தரம்வாய்ந்த வகைகளான பசுந்தீவன துணுக்குகள், பசுந்தீவன பயறுவகைகள் மற்றும் பசுந்தீவன மரக்கன்றுகளின் விதைகள் ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்து பசுந்தீவன பெருக்கத்திற்காக அவைகள் பயிரிடப்படுகின்றன.

கால்நடைப் பண்ணைகள் ஓசூர், ஈச்சங்கோட்டை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில், மண்டல அளவிலான பசுந்தீவனம் மற்றும் பசுந்தீவன விதை உற்பத்தி, அவைகளின் பெருக்கத்திற்கான மதிப்பீடு இவைகள் குறித்து, மண்டல அளவிலான, கருத்தரங்கு இத்துறையில் சிறந்து விளங்கும் ஆஸ்திரேலியா நாட்டு அறிஞர்கள் மற்றும் வல்லுநர்களின் உதவியைக் கொண்டும் பசுந்தீவன பிரிவில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு சிறுதளை (Mini Kits) வழங்கியது தவிர பசுந்தீவனப் பெருக்கத்திற்காக, சாகுபடி செய்யமுடியாத நிலையங்களிலும், சாலையோர இடங்களிலும், தோட்டப் பயிர்களுக்கிடையேயும் விதைகள் விதைக்கப்பட்டு பசுந்தீவன உற்பத்திப் பெருக்கத்திற்காக பயிரிடப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதியுதவியுடன் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடான ரூ.46.62 கோடியில் வருடவாரியான செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருடம் | செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1991-92 | 128.99 |
| 1992-93 | 469.93 |
| 1993-94 | 925.77 |
| 1994-95 | 932.33 |
| 1995-96 | 632.53 |
| 1996-97 | 742.34 |
| 1997-98 | 328.00 |
| மொத்தம் | **4,159.89** |

**2. உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய கால்நடைப் பராமரிப்பில் விவசாய மனித வள மேம்பாடு:**

மனித வள மேம்பாடானது மற்ற ஏனைய மேம்பாடுகளுக்கு தலையானதாகும். எந்தத் துறை நிலையங்கள் மற்றும் நிறுவனம் ஆனாலும், அந்தத் துறையில் பணிபுரியும் பணியாளர்களின் அறிவுத் திறனை நம்பியே உள்ளது. எவ்வளவு பணியாளர்கள் பணிபுரிகிறார்கள் என்பதைப் பொறுத்து இந்நோக்கத்தினை கருத்தில் கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை, விவசாய மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை, 1995-96 ஆம் ஆண்டு முதல், உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.366.29 இலட்சம் செலவில் ஐந்து ஆண்டு கால அளவில் செயல்படுத்தி வருகிறது.

**இத்திட்டத்தின் நோக்கங்கள்:**

உள்ளிருப்புக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவது மற்றும் இப்பணியில் உள்ள பணியாளர்களின் பணியைப் பயிற்சிகள் அளித்து அதன் மூலம் மேம்பாடு அடையச் செய்வது.

பால் மற்றும் முட்டை இவைகளின் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன், பணியாளர்களை கால்நடைப் பெருக்கம், நோய் கண்டறிதல் மற்றும் கட்டுப்பாடு மற்றும் பசுந்தீவனம் உற்பத்தி ஆகியவைகளில் தற்கால அறிவியல் பூர்வமான முறைகளில் பயிற்சி அளித்தல்.



**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:**

**(அ) ஈச்சங்கோட்டை, ஒசூர் மற்றும் அபிசேகப்பட்டி ஆகிய இடங்களில் ஏற்கெனவே உள்ள பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல்.**

இத்திட்டத்தின் மூலமாகப் பயிற்சியாளர்களுக்கான விடுதி ஒன்று மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டியில் கட்டப்பட்டு வருகிறது. செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சி நிலையத்திற்கு ஒலிபரப்பு சாதனங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் உள்தொடர்பு தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

**(ஆ) மாநில அளவிலான பயிற்சி நிலையத்தை கால்நடைப் பண்ணை, ஒசூரில் தோற்றுவித்தல்.**

இத்திட்டத்தின் மூலமாகப் பயிற்சிக் கூடம் மற்றும் விடுதிக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பயிற்சிக்கூட அறையணிகள் அலுவலக சாதனங்கள், கணிப்பொறி மற்றும் சிறிய பேருந்து போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**(இ) பயிற்சிக்குத் தேவையான மதிப்பீட்டுப் பிரிவினை இயக்குநரகத்தில் தோற்றுவித்தல்.**

இத்துறை பணியாளர்களின் பயிற்சிக்காகப் பலவகையான திட்டங்களைத் திட்டமிடத் தேவையான மதிப்பீட்டுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் மற்ற மாநிலங்களில் சிறந்து விளங்கும் பயிற்சி நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பொருத்தமான பயிற்சியினைத் தேர்ந்தெடுத்து திட்டமிடுதல்.

வருடவாரியான செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வருடம் | | பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1995-96 | .. | 7.60 |
| 1996-97 | .. | 15.85 |
| 1997-98 | .. | 35.24 |

**3. டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்:**

டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்புத் திட்டம், 01-08-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், குன்னாண்டார் கோயில், விராலிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ. 5.46 கோடி செலவில், முதல் கட்டமாக ஆறு வருட கால அளவில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் செயலாக்கமானது தம்பதிகள் தொடர் பணியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கால்நடைப் பராமரிப்பு நடைமுறைகள், தீவன அபிவிருத்தி, விரிவாக்க தொழில்நுட்பம் ஆகியவைகளில் பயிற்றுவிக்கப்பட்டனர். இத்தொடர் தம்பதியர், இத்திட்டத்தின் முன்னோடிகள் ஆவர். மற்றவர்கள் இத்திட்டத்தின் செயல்பாட்டின் குறியீட்டினைப் பின்பற்றக்கூடிய விவசாயிகள், விவசாயிகள் சங்கம் மூலமாகவும், அரசு சாரா நிறுவனங்கள் மூலமாகவும், கால்நடை மருந்தகங்களின் மூலமாகவும் இத்திட்டச் செயல்பாட்டின் திறனையும், பயனையும் அடைகிறார்கள். இத்திட்டத்தின் தொடர் தம்பதியினர்கள் கிராம மக்களைப் பயிற்றுவிக்கிறார்கள். பயிற்றுவிக்கும் முறையானது தினசரி வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கும். ஆனால், பெரிய அளவிலான உள்ளீடுகள் கொண்டதாக இருக்காது.

இரண்டாவது கட்டத் திட்டமானது 46 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி, 01-02-1997 முதல் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ஏழு ஆண்டு கால அளவில் ரூ.27.50 கோடி செலவில் மொத்தம் 2000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 20 இலட்சம் வேளாண்குடி மக்கள் பயன்பெறும் பொருட்டு நிறைவேற்றப்பட உள்ளது.

இத்திட்டப் பகுதி-1 செயலாக்கத்தில் பயனடைந்தோர் விவரம் கீழே தரப்பட்டுள்ளது: -

| | |
|---|---|
| தொடர் தம்பதியினர் பயிற்சி பெற்றவர்கள் .. | 157 |
| விவசாயத் தொடர்பாளர்கள் பயிற்சி பெற்றவர்கள் | 7,526 |
| இரவு கூட்டங்கள் நடத்தப்பட்டவை .. | 599 |
| கிராம அளவிலான விவசாயிகளுக்கு 1 நாள் பயிற்சி | 40,002 |
| துறைப் பணியாளர்களுக்குப் புத்தாய்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது .. | 90 |
| நாற்றங்கால் பயிர்கள் வளர்ச்சி பற்றி சிறப்புப் பயிற்சி | 37 |
| செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளுக்குத் தடுப்பூசிப் பணியில் சிறப்புப் பயிற்சி .. | 28 |



| | |
|---|---|
| கோழி வளர்ப்பில் மாதர் சங்க அங்கத்தினர்களுக்குப் பயிற்சி அளித்தது .. | 20 |
| தொடர்பு தம்பதிகளுக்காக நடத்தப்பட்ட கூட்டங்கள் | 21 |

**திட்டத்தின் நோக்கம்:**

பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடையே கால்நடை இனப்பெருக்கத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் பால் வற்றும் கால அளவினைக் குறைக்க விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது ஆகும். முறையான குடற்புழு நீக்க தடுப்பூசிப் பணி, முறையான உணவுப் பழக்கம் இவைகளினால் செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளின் எடையானது 30 முதல் 40 சதவீதம் வரை கூடுவதனால் கிலோவுக்கு ரூ. 40/- வீதம் அதிக அளவிலான வருமானம் கிடைக்க வழி வகுக்கின்றது. திட்டப் பகுதியில் வெள்ளாட்டின் இறைச்சி நுகர்வு மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

5 சதவீதத்துக்கும் குறைவாகவே செம்மறி ஆடு மற்றும் வெள்ளாட்டின் இறப்பு சதவீதம் காணப்பட்டுள்ளது. திட்டப் பகுதியில் குட்டிகள் ஈனும் திறன் அதிகரித்து இரண்டிலிருந்து மூன்றாகப் பெருகியுள்ளது.

பயிற்சியின் பயனாகக் கொல்லைப்புற கோழிகளின் வளர்ப்பில் வருமானம் ரூ. 3000/- வருடத்திற்கு அதிகரித்துள்ளது. இத்திட்ட தொடர் பணியாளர் தம்பதிகள் கோழியினங்களுக்கு முறையான தடுப்பூசிப் பணி மேற்கொண்டதால், இறப்பு சதவீதம் கணிசமாகக் குறைந்துள்ளது.

கோழியின் அடைகாக்கும் எண்ணிக்கை வருடத்திற்கு மூன்றிலிருந்து நான்காக உயர்ந்துள்ளது.

கிராமங்களில் தொடர் பணியாளர் தம்பதியினர் இத்திட்டப் பணியில் ஈடுபட்டுள்ளமையால், மனித வள மேம்பாடு கூடுதலாக்கப்பட்டுள்ளது.

கால்நடை மற்றும் கோழிகளின் சிறப்பான மேலாண்மையினாலும், வாணிப முறையினாலும், நோய்த் தடுப்பு முறைகளினாலும் பொதுவாக கணிசமான அளவிலான வருமானம் உயர்ந்துள்ளது.

[1999 ஏப்ரல் 19

**பகுதி II**

| | |
|---|---|
| தொடர் பணியாளர் தம்பதியினர் பயிற்சி பெற்றவர்கள் | .. 54 |
| மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது | .. 54 |
| கிராமவாரியான பயிற்சி மேற்கொண்டது | .. 54 |
| குறியீட்டு விவசாயிகளுக்கு பயிற்சி | ..2,533 |

இரண்டாவது பகுதித் திட்டம் முடிவடையும் போது இதன் பயனாளிகள் முதல் பகுதித் திட்டத்தில் பயனடைந்தது போல் பயனடைவார்கள்.

***ஊ. கால்நடைப் பண்ணைகள் :***

கால்நடைப் பண்ணைகளில், தரம் உயர்த்த தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியல் ரீதியான மற்றும் அயலினக் காளைகளைக் கொண்டு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு, அவைகள் மக்களுக்குச் செயல்விளக்கப் பண்ணைகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கால்நடைப் பண்ணைகள் விவசாயிகளுக்கு உறைவிந்து மூலம் கருவூட்டல் பயிற்சியை அளித்து இத்துறைக்குப் பயன் அளிக்கும் வகையில், அவர்களைப் பயிற்றுவிக்கிறது. மாநிலத்தில் ஏழு கால்நடைப் பண்ணைகளும், ஒரு அயலினக் கால்நடைப் பெருக்கப் பண்ணையும் உள்ளது. அவைகள் பின்வருமாறு:-

1. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் (தருமபுரி மாவட்டம்)

2. மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை

3. மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்)

4. கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்)

5. மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)

6. மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)



1999 ஏப்ரல் 19]

7. மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

8. அயலினக் கால்நடைப் பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)

ஒரத்தநாடு மற்றும் அபிசேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் முர்ரா வகை எருமையினம் மற்றும் உதகமண்டலம் பண்ணையில் ப்ரீசியன் பசுவினமும், ஈச்சங்கோட்டைப் பண்ணையில் ஜெர்சி பசுவின வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறந்த தரம் வாய்ந்த உயரினக் கால்நடைகளை வளர்ப்பதிலும், சிறந்த உள்நாட்டினங்களைக் காப்பதில் ஆர்வம் கொள்ள உம்பளாச்சேரி இனம் கொருக்கை பண்ணையிலும், சிந்தி மற்றும் காங்கேயம் இனங்கள் ஓசூர் பண்ணையிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

சிந்தி இன வம்சாவழி ஆய்வு, ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், முர்ரா எருமை இன வம்சாவழி ஆய்வு ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

களப்பணியில் வம்சாவழி ஆய்வு தொடர்பான பணி ஒன்று, ஓசூர் வம்சாவழி ஆய்வுத் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கலப்பினக் காளைகளின் உற்பத்தி பிரிவு ஒன்று, ஓசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை பண்ணைகளில் செயல்பட்டு வருகிறது. உள்நாட்டு இனங்களில், கலப்பினக் காளைகளின் தரம் உயர்த்தப்படுவதால், நோய் எதிர்ப்பு சக்தியும், உற்பத்தி திறனும் அதிகரிக்கப்படுகிறது. உட்கரு மாற்றம் தொழில் நுட்பம் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உட்கரு மாற்ற தொழில் நுட்ப பிரிவு அயலினக் கால்நடைப் பெருக்குப் பண்ணை ஈச்சங்கோட்டையிலும், மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூரிலும் இயங்கி வருகிறது. இதன் வாயிலாகக் கன்றுகள் வெற்றிகரமாக பெறப்பட்டு உள்ளன.

கால்நடைப் பண்ணைகளின் மேம்பாடுகள் குறித்தும், அதன் பயன்கள் பொது மக்களை அடையத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் கூடுதல் இயக்குநர் (கால்நடை அபிவிருத்தி) தலைமையின் கீழ் ஓர் குழு அமைக்கப்பட்டு, அதன் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமீப காலத்தில் இத்துறை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் இயக்குநர், கால்நடை மருத்துவப் பணிகள் என்று

[1999 ஏப்ரல் 19

இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக சீரிய மேற்பார்வையாலும், பண்ணைகளில் ஏற்கெனவே உள்ள உள்ளிருப்பு வசதிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதாலும் கால்நடைப் பண்ணைகளின் பணிகள் மேலும் வளர்வதுடன், மேம்பாடு அடையவும் வழிவகை ஏற்பட்டது.

**2. செம்மறி ஆடு அபிவிருத்தி :**

செம்மறியாடு வளர்ப்பு இம்மாநிலத்தில், ஒரு முக்கிய உப தொழிலாகவும், உபரி வருமானம் கிடைக்கக்கூடிய தொழிலாகவும், கருதப்படுகிறது. இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் போன்ற பகுதிகள் ஆடு வளர்ப்புத் தொழிலுக்கு உகந்த தட்பவெட்ப நிலை கொண்டதாக உள்ளது. ஆரம்ப காலங்களில் ஆடு வளர்ப்பில் நிலமற்ற ஏழை வேளாண் தொழிலாளர்கள் பெரிதும் ஈடுபட்டனர். அதன் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குக் குறைந்த அளவு வருமானத்தை ஈட்ட அவர்களுக்குப் பேருதவியாக இருந்தது.

இறைச்சி மற்றும் தோல் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர ஆட்டினங்களை வயல்வெளியில் மந்தை பராமரித்தலால் சிறிது வருமானம் கிடைக்கிறது. பெருமளவு ஆடுகள் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளிலிருந்து மற்ற பகுதிகளுக்கு ஓட்டிச் செல்லப்படுகின்றன. மேலும் அவைகள் நல்ல தட்பவெட்ப நிலை ஏற்படும் காலங்களில் திரும்ப தனது சொந்த இருப்பிடத்திற்கு ஓட்டிச் செல்லப்படும். இக்காலங்களில் ஆடுகள் விற்பனைகள் ஏற்படுவதுண்டு.

பொதுவாக கிராமப்புறங்களில் 'கொட்டிலில் ஆடு - பெட்டியில் பணம்' என்ற பழமொழி வழக்கத்தில் உள்ளது. கொட்டகைகளில் உள்ள செம்மறியாடுகளின் இருப்பைக் கொண்டு, கையில் பணம் என்பது முழுக்க உண்மையாக உள்ளது. அதாவது தங்களுடைய ஆட்டினை எந்த நேரத்திலும் விற்று, பணத்தை அவசரத் தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

1997-98 ஆம் ஆண்டில் நீலநாக்கு நோயினால் அதிக அளவிலான ஆடுகள் இறக்க நேரிட்டுள்ளது. இந்நோய்க்கான ஊநீர் மருந்து கிடைக்காததால் முன்னெச்சரிக்கையாகத் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படவில்லை.



1999 ஏப்ரல் 19]

இந்த நீலநாக்கு நோய் தாக்கி இறந்துபோன ஆடுகளின் உரிமையாளர்களான ஏழை விவசாயிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இழப்பீட்டிற்காக 1.05 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

***(அ) ஆட்டுப்பண்ணைகள் மற்றும் ஆட்டினப் பிரிவுகள் :***

கீழ்க்கண்டுள்ள மூன்று இடங்களில் ஆட்டினப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1. சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)
2. சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்)
3. முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்)

ஓசூர், புதுக்கோட்டை, அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய பண்ணைகளில் தனியே ஆட்டினப் பிரிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்நாட்டினங்களான, சென்னை சிகப்பு, மேச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் ஆகிய இன ஆடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளில் இனப்பெருக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்டுக் கிடாக்களும், பெட்டைகளும் தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் உள்ள விவசாயிகளுக்கு ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படுகின்றன.

***(ஆ) செம்மறி ஆடுகளுக்குத் தீவிர மருத்துவ நலப்பணி :***

செம்மறியாடுகளின் உடல் கூறுகளில் ஏற்படும் இடையூறுகளினால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஏனெனில், செம்மறியாடுகள் மேய்ச்சலை நம்பியே இருப்பதால், இவ்வாறு ஏற்படுகிறது. அதன் காரணமாக, உடல் எடை குறைவும், இனவிருத்திக்கு காலம் கடந்தும் அதிக அளவிலான இறப்பு சதவீதமும், குறைவான இனப்பெருக்க சதவீதமும் ஏற்படுகிறது. மேலும். வேறு பல நோய்களும் ஏற்படக் காரணமாகிறது. இவ்வகையினால் இறைச்சி தன்மை மற்றும் இறைச்சியின் எடை குறைவும் ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு பொருளாதார இழப்பு ஏற்படாவண்ணம், ஏழை விவசாயிகள் பராமரிக்கும் செம்மறி ஆடுகளுக்கு இத்துறையின் மூலம் தீவிர நலம் பேணும் முறையின்கீழ், காலமுறைப்படி 1982-83 முதற்கொண்டு முறையாக குடற்புழு நீக்கம், சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து

[1999 ஏப்ரல் 19

மாவட்டங்களிலும் செய்யப்படுகிறது. இத்திட்டச் செயலாக்கத்திற்கு 1998-99-ல் ரூ. 40.00 இலட்சம் செலவில் பலவகையான குடற்புழு நீக்க மருந்துகள் உபயோகப்படுத்தப்பட்டன.

(இ) திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில தீவிர செம்மறியாடு வளர்ப்புத் திட்டம் :

மேற்கண்ட இரண்டு மாவட்டங்களில், உள்நாட்டு இனங்களின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு தரமான கிடாக்கள் வழங்குவதுடன், முறையான குடற்புழு நீக்க பணி மேற்கொள்ள அரசு ரூ. 8.70 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டம் திருச்சி மாவட்டத்திலுள்ள 14 பஞ்சாயத்து யூனியன் பகுதிகளையும், கரூர் மாவட்டத்தில் 8 பஞ்சாயத்து யூனியன்களையும் உள்ளடக்கிய திட்டமாகும்.

(ஈ) நிறைவேற்றப்பட்ட ஐரோப்பிய பொருளாதார திட்டப் பகுதியில் தீவிர ஆடு வளர்ப்புத் திட்டம்

இத்துறையால் ஐரோப்பிய பொருளாதார உதவியுடன் கூடிய ஆடு வளர்ப்புத் திட்டம் ரூ. 13.67 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டச் செயல்பாட்டின் பயனாக ஆடு வளர்ப்பில் பல இனங்களிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. உதாரணமாக பிறப்பு எடை, தாயின் எடை, இனவிருத்திக்கு உகந்த காலம், வயது வந்த குட்டி எடை ஆகியவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளனன. மேலும், குட்டிகளின் இறப்பு, வயது வந்தவைகளின் இறப்பு சதவீதம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டுள்ளன. இவைகளின் முன்னேற்றங்கள் இத்திட்டப் பகுதியில் நீடித்து இருக்க அரசு ரூ. 3.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 500 எண்ணிக்கையில் கிடாக்கள் வழங்குதல், 50 விவசாயிகளுக்கு ஆடு பராமரிப்பு மற்றும் உணவுப் பழக்கங்கள் மேலாண்மை குறித்து பயிற்சி அளித்தல் இவற்றுள் அடங்கும்.

**3. வெள்ளாட்டுப் பெருக்கம்**

உள்நாட்டு வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்த ஜமுனாபாரி வெள்ளாடுகளை ஆட்டுப்பண்ணை, சின்னசேலம், கால்நடைப் பண்ணை, செட்டிநாடு, கொருக்கை மற்றும் சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்திலும் இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பால் மற்றும் இறைச்சி திறனை அதிகரிக்கும் நோக்கும் உள்நாட்டினங்களை தரம் உயர்த்த இவ்வகையான ஆடுகள்



1999 ஏப்ரல் 19]

வழங்கப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டு ரூ. 9.10 இலட்சம் செலவில் 220 ஆடுகள் வாங்கப்பட்டு கால்நடைப் பண்ணையில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

**4. பன்றி இனப்பெருக்கம்**

பன்றி வளர்ப்பின் மூலமாக சுய வேலைவாய்ப்பும், சத்து மிக்கதுமான இறைச்சி நகர்புற தேவைக்கு ஏற்ப கிடைக்கவும், இத்துறை பன்றி வளர்ப்பினை கிராமப்புற ஏழை மக்களிடம் ஊக்குவித்து வருகிறது. லார்ஜ் ஒய்ட், யார்க்ஷையர் பன்றி இனங்களை கால்நடை பராமரிப்புத் துறை மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு, புதுக்கோட்டை மற்றும் சென்னை, சைதாப்பேட்டையிலும் பராமரிக்கப்படுகிறது. உயரினப் பன்றிகளைப் பன்றிப் பிரிவுகளுக்கு வழங்குவதற்கு வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டு, மேற்கண்ட பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**5. முயல் அபிவிருத்தி**

பொதுமக்களிடம் முயல் வளர்ப்பினைப் பிரபலப்படுத்தவும், முயல் இறைச்சியினை ஊக்கப்படுத்தவும், உரோம உற்பத்தியை ஊக்கப்படுத்தவும் சென்னை, சைதாப்பேட்டையிலும், திருவண்ணாமலை மாவட்டம் எஸ்.வி. நகரம் கோழி விரிவாக்க நிலையத்திலும் முயல் வளர்ப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

**6. குதிரை வளர்ப்பு**

ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் பண்ணையைச் சுற்றி கண்காணிக்க குதிரைகள் பயன்படுத்தப்பட்டன. தற்சமயம் பெருகிவரும் மோட்டார் வாகன அபிவிருத்தியின் காரணமாக பண்ணையில், குதிரையினம் படிப்படியாக குறைந்துள்ளது. குதிரையினம் பெருகவும், இனம் அழியாமல் காக்கவும், 5 பெண் குதிரையும், 1 ஆண் குதிரையும் ரூ. 5.00 இலட்சம் செலவில் வாங்கி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் இனப்பெருக்கம் செய்யப்பட்டு வருகிறது.

**. நாய்வளர்ப்பு**

மனிதனுக்கு நாய் உற்ற நண்பனாகும். தமிழ்நாட்டில் உள்ளூர் இனங்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை போன்ற இனங்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. இவ்வினங்களை அழியாமல் காக்க சென்னை, சைதாப்பேட்டை நாய்

[1999 ஏப்ரல் 19

வளர்ப்பு பிரிவில் 1980-81 முதல் வளர்க்கப்படுகின்றன. இப்பிரிவினை வலுப்படுத்தும் நோக்குடன் லேப்ரடார், கூலி மற்றும் டாபர்மேன் போன்ற இனங்கள் 1997-98 முதல் சேர்க்கப்பட்டன. விரும்பி வளர்க்க கேட்கும் பொது மக்களுக்கு நாய்க் குட்டிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

**8. கோழியினப் பெருக்கம்**

இலாபகரமான முட்டையிடும் கோழிகள் மற்றும் இறைச்சிக் கோழிகள் உற்பத்தித் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப அறிவியல் மாற்றங்களின் பயனாக, வாணிப முறையில் வளர்க்கப்படும் கோழிப் பண்ணைகள் பெரும் முதலாளிகளின் வசம் உள்ளன.

கிராமப்புறங்களில் புழக்கடை கோழி வளர்ப்பு மூலம் ஒரு வீட்டிற்கு 5 முதல் 10 கோழிகளை முதலீடுகள் இன்றி வளர்த்து வருகின்றனர். வீட்டினர் தங்களுக்குத் தேவையான முட்டை மற்றும் இறைச்சியை அவைகளிலிருந்து பெறுகின்றனர். கோழிகள் உபயோகமற்ற பொருட்களை உட்கொண்டும், வீணாகின்ற தானியங்கள் மற்றும் புழு, பூச்சி போன்றவற்றை உட்கொண்டு முட்டையாகவும், இறைச்சியாகவும் பலன் அளிக்கிறது. இக்கோழிகள் கோழிக்கழிச்சல் என்னும் நோயினால் பாதிக்கப்பட்டு இறக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆகவே இத்துறையானது இந்நோயிலிருந்து கோழிகளைப் பாதுகாக்கும் வண்ணம் அனைத்துக் கால்நடை நிலையங்களில் ஒவ்வொரு வாரத்திலும் குறிப்பிட்ட நாட்களில் மற்றும் கிளை நிலையங்களில் மாதத்திற்கு இருமுறையும் தடுப்பூசிப் பணி மேற்கொண்டு வருகிறது.

கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடனும், நோயிலிருந்து காக்கும்பொருட்டும், இத்துறையினால் மாநில அளவிலான கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசித் திட்டத்தை பிப்ரவரி 1998-ல் நடத்தப்பட்டது. இத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள பொது மக்களின் அக்கறையின்பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் மேற்கண்ட திட்டத்தினைச் செயல்படுத்த உத்தேசித்து உள்ளது.

வான்கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் தோற்றுவிக்கப்பட்டது. 2 குஞ்சு பொரிப்பகங்கள், ஒன்று காட்டுப்பாக்கத்திலும், மற்றொன்று ஒசூரிலும் 25 கோழி விரிவாக்க நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயல்பட்டு வருகிறது. கோழியினங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து, அந்நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்க வேண்டிய



1999 ஏப்ரல் 19]

முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விவரிக்க தக்க வகையில் கோழி நோய்கள் கண்டறியும் புலனாய்வுக்கூடம் இரண்டு ஏற்படுத்தப்பட்டு, ஒன்று ஈரோட்டிலும், மற்றொன்று நாமக்கல் மாவட்டம் ஆண்டலூர் கேட்டிலும் செயல்பட்டு வருகிறது.

**9. சிறப்புத் திட்டங்கள்**

பொதுவாக கிராமப்புறங்களில் உள்ள வீடுகளில் ஒவ்வொன்றிலும் கால்நடைகளில் ஒன்று அதற்கு மேற்பட்ட இனங்களை வளர்த்து வருகின்றனர். குறைவான அளவிலேயே விவசாய நிலங்கள் உள்ளதால், நிலமற்ற விவசாயிகள் பெரிதும் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். கால்நடை வளர்ப்பில் வேலைவாய்ப்பினைப் பெருக்க இத்துறையானது பயனீட்டாளர்களுக்கு உதவக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

*அ. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்*

மலையின் இயற்கை சூழலைப் பாதிக்காவண்ணம், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்குடன், நீலகிரி மாவட்டத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய உதவித் திட்டம் ஒன்று மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கன்றுகள் மற்றும் ஆட்டின அலகுகள் பழங்குடியினர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையம் உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தோற்றுவிக்கப்பட்டு, பண்ணைக்குத் தேவையான பசுந்தீவன வளர்ப்புக்குத் தேவையான உள்ளிருப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு உள்ளது. மலைப்பகுதியில் நோய்ப் புலனாய்வு வசதியை மேம்படுத்த ஒரு கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கால்நடை நலப்பணியை மேம்படுத்த உள்ளிருப்பு வசதிகளைப் பெருக்கி, புறநோயாளிகள் கட்டடம் மூன்று கால்நடை மருந்தகங்களுக்கும், ஒரு கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டட வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளின் இருப்பிடத்திற்கே கால்நடை நலப்பணியை மேற்கொள்ள இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் கோத்தகிரி மற்றும் கூடலூரில் நிறுவப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டு ரூ. 9.86 இலட்சம், மேற்கண்ட இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவு செயலாக்கத்திற்கும், உதகமண்டல

[1999 ஏப்ரல் 19

உறைவிந்து உற்பத்தி நிலைய உள்ளிருப்பு வசதிகளைப் பெருக்கவும், உதகமண்டலம் கால்நடைப் பண்ணை தீவன உற்பத்தியைப் பெருக்கவும், மருந்துகள் மற்றும் தாதுப் பொருட்கள் வாங்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நிறைவேற்றப்பட்டது.

### ஆ. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலையில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற 24 வட்டங்களை உள்ளடக்கி கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 1981 ஆம் ஆண்டு முதல் மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாகப் புல்கரணைகள், புல் நாற்றுகள், புல் விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டும், கால்நடை மருத்துவ நிலையங்களை ஒட்டி காலியாக உள்ள நிலங்களில், தீவன வளர்ச்சியைப் பெருக்குதல், கால்நடை மற்றும் ஆட்டினப் பண்ணைகளின் உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்தி தீவனப்பெருக்கம் செய்தல் ஆகிய பணிகள் அடங்கும். பண்ணைகளின் இனப்பெருக்கத் தேவைக்கென கால்நடைகளை வாங்கி வலுப்படுத்தத் தேவையான நிதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் வேட்டைக்காரன்புதூர் மற்றும் உத்தமபாளையத்திலும் நடமாடும் கால்நடைப் பிரிவு மற்றும் திண்டுக்கல் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு நிறுவனச் செலவுகளுக்கும் ஆக 1998-99 ஆம் ஆண்டு ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 200 விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பில் அபிசேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### இ. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையினரால் 1976 ஆம் ஆண்டு முதல் சேலம், தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினர் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மலைப்பகுதியில் வாழும் இத்திட்டப் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. விழுப்புரம் மாவட்டம், கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினர்களுக்கு மட்டும் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது.



1999 ஏப்ரல் 19]

### ஈ. சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்

இத்திட்டம் 1983 ஆம் ஆண்டு முதல் இந்து ஆதிதிராவிடர் சமூகத்தினருக்கென அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 1998-99-ல் 2700 வெள்ளாடுகள், 2700 செம்மறியாடுகள், 1000 கருவுற்ற கிடேரிக்கன்று அலகுகள் ஆகியவைகள் 6400 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ. 664.035 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### உ. மாதிரி வரைவுத் திட்டம்

மாதிரி அளவீட்டு வரைவுத் திட்டம் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களில் 1977-78 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் அளவீடுகள் பருவ வாரியாக, வருடந்தோறும் தொடர்ந்து நிரந்தரமாகக் கணக்கெடுப்பு மூலம் அறியப்படுகிறது.

இவ்வாறு மாநில மாதிரி வரைவுத் திட்டத்தின் மூலம் பரிசீலிக்கப்பட்டு, நவீன முறையில் அறியப்படும் பால் மற்றும் கால்நடைப் மூலமாகப் பெறப்படும் இதரப் பொருட்கள் மதிப்பீட்டினால், திட்ட மதிப்பீடு மற்றும் வருங்காலத் திட்டங்களுக்கு அடிப்படை புள்ளி விவரமாக இது அமைகிறது.

1998-99 ஆம் ஆண்டில் குளிர்காலம் நீங்கலான முதல் இரண்டு பருவ காலங்களில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் கணக்கெடுப்பு அளவீடுகள் பின்வருமாறு:

| | கோடைக் காலம் | மழைக் காலம் | கூடுதல் |
|---|---|---|---|
| 1. பால் (000. மெ.டன்) | 1404.17 | 1430.23 | 2834.40 |
| 2. முட்டை (மில்லியன்களில்) | 1165.80 | 1212.90 | 2378.70 |
| 3. இறைச்சி (மில்.கிலோ) | 9.72 | 12.51 | 22.23 |

கால்நடை கணக்கெடுப்புப் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது. இக்கால்நடை கணக்கெடுப்பில் இடைப்பட்ட காலங்களில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால

கால்நடை கணக்கெடுப்புத் திட்டம் ஒன்று இயக்குநரகத்தில் செயல்படுத்தப்படுகிறது.

### 10. கூட்டுறவுச் சங்கங்கள்

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 ஆம் ஆண்டு முதல் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்தகையச் சங்கங்களுக்கு செயல்முறைப் பதிவாளராக இயக்குநரே செயல்படுகிறார். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதியின்படி பதிவாளருக்கு உள்ள அதிகாரம் மண்டல அளவில் கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநருக்கும், கோட்ட அளவில் கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற பகுதியினரின் பொருளாதாரத்தை இடைத் தரகர்கள் இல்லாமல் உயர்த்துவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். இது தவிர, உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ நலன் அளித்து கால்நடை வளர்ப்பு மற்றும் நிர்வாகப் பயிற்சி அளிக்கிறது. மேலும், கால்நடை வளர்ப்பிற்கான உள்ளீடுகள் வழங்குவதுடன், விற்பனைக்கும் இத்துறை உதவுகிறது. இத்துறையின் கீழே குறிப்பிட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 940 |
| 2. | கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 9 |
| 3. | வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 8 |
| 4. | பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 2 |
| 5. | மாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் | .. | 1 |
| | மொத்தம் | .. | 960 |

## பாகம்-3

### கால்நடை மருத்துவ நலப்பணிகள்

பழங்காலந்தொட்டே கால்நடை மற்றும் கோழியின வளர்ப்பானது ஒரு உபதொழிலாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. கால்நடைப் பொருட்களுக்கு பெருகிவரும் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் அறிவியல்பூர்வமான தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளதாலும்,





கால்நடைப் பொருட்களுக்கு வியாபார ரீதியாக நல்ல வாய்ப்பு உள்ளதாலும், கால்நடை வளர்ப்புத் தொழில் நிலைத்து நிற்க வழி வகுத்துள்ளது. அயலின மரபு வழி வாய்ந்த கால்நடைகளை அறிமுகப்படுத்தியதால், புதிய வகையான நோய்கள் தீவிர அமைப்புகள் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு அதிக அளவில் தொற்று நோய் பாதிப்புக்கு உள்ளாக நேர்ந்துள்ளது. இந்நிலையில் இத்துறையானது அதிக கவனத்துடனும், அதிக அளவிலான பொறுப்புடனும் இருக்க வேண்டியது முக்கிய அம்சமாக உள்ளது. உடல்நலம் பேணுதல், நோய் கண்டறிதல் நோய்த் தடுப்பு, நோயை அறவே ஒழித்தல் மற்றும் இனவிருத்திக்குத் தேவையான வசதிகள் இவற்றுள் அடங்கும்.

### 1. உடல்நலம் பேணுதல்

#### அ. கால்நடை மருத்துவ நிலையங்கள்

பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள் ஆகியவைகள் கால்நடை மருத்துவ நிலையங்களாகும். இந்நிலையங்களை கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் மற்றும் உயர் மருத்துவப் பட்டதாரிகள் இவர்களில் முதுநிலைப்படியும், சிறப்பறிஞர் நிலையிலும் இயக்கப்படுகிறது. சென்னை, சைதாப்பேட்டை, மதுரை, தல்லாகுளம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 பன்முக மருத்துவமனைகளில் கால்நடைகளுக்குச் சிகிச்சை வசதி 24 மணி நேரமும் செய்யப்பட்டு வருகிறது. உள் நோயாளிகள் பிரிவு வசதி, மேற்கண்ட பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகளில் உள்ளது. மேற்கண்ட நிலையங்களில் பெரிய அளவிலான அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சேலம், கோயம்புத்தூர், வேலூர், ஈரோடு, பொள்ளாச்சி, தல்லாகுளம் (மதுரை) மற்றும் சைதாப்பேட்டை (சென்னை) ஆகிய கால்நடை நிலையங்களில் எக்ஸ்ரே வசதிகளும் உள்ளன.

கால்நடை நிலையங்களில், கால்நடை மற்றும் கோழிகளுக்கு இலவசமாகச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. நோயுற்ற கால்நடைகளுக்குச் சிகிச்சை வசதி செய்வதுடன், அவைகள் உடல் நலம் பேணும் பொருட்டு தடுப்பூசிப் பணி மற்றும் குடற்புழு நீக்கப் பணியும் செய்யப்பட்டு வருகிறது. இவை தவிர, இந்நிலையங்களில்

[1999 ஏப்ரல் 19

கலப்பினக் கால்நடைகளுக்குப் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தக்கூடிய மலட்டுத் தன்மைக்கான சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட தற்போது மக்கள் நோயுற்ற கால்நடைகளைச் சிகிச்சை செய்வதில் அதிக விழிப்புணர்ச்சி கொண்டுள்ளனர். மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும், தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படியும் கி.பி. 2,000 ஆண்டுக்குள் 5,000 கால்நடை அலகுகளுக்கு 1 கால்நடை நிலையம் தேவை என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அரசு புதிய மருந்தகங்களை திறந்தும் ஏற்கெனவே உள்ள நிலையங்களைத் தரம் உயர்த்தியும் வருகிறது.

தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரைப்படி தமிழகத்தில் 2,722 கால்நடை நிலையங்கள் செயல்பட வேண்டும். 1998-99 ஆம் ஆண்டில் 40 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் திறந்தும், முன்பிருந்த 121 கால்நடை மருத்துவமனைகளுடன் தற்போது 20 கால்நடை மருத்துவமனைகளையும் தரம் உயர்த்தி சேர்க்கப்பட்டுள்ளன.

1994-95 ஆம் ஆண்டு முதல் வருட வாரியான கால்நடை நிலையங்கள் பின்வருமாறு:

| கால்நடை நிலையங்கள் | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|---|
| பன்முக மருத்துவமனைகள் | 2 | 3 | 3 | 3 | 3 |
| பிரதம மருத்துவமனைகள் | 22 | 21 | 21 | 24 | 24 |
| மருத்துவமனைகள் | 84 | 94 | 104 | 121 | 141 |
| கால்நடை மருந்தகங்கள் | 773 | 765 | 765 | 807 | 828 |
| மொத்தம் | **881** | **883** | **893** | **955** | **996** |

**(ஆ) நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவு மற்றும் மருந்தகங்கள்**

மக்களுக்கு வசதியாக அவர்களுடைய கால்நடைகளை சிகிச்சை, தடுப்பூசிப் பணி மற்றும் இனவிருத்திப் பணிக்கு கொண்டு செல்ல ஏதுவாக கால்நடை நிலையங்கள் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளன. குக்கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் தொலைதூரம் மற்றும்



1999 ஏப்ரல் 19]

தட்பவெட்ப நிலை காரணமாக தங்களுடைய கால்நடைகளை சிகிச்சைக்காகக் கொண்டு செல்வது கடினமாக உள்ளது.

குக்கிராமங்களில் உள்ள விவசாயிகள் கால்நடைப் பணிகள் மற்றும் இனவிருத்திப் பணிக்காக தொலைதூரத்தில் உள்ள கால்நடை நிலையங்களை அணுகுவதற்குப் பதிலாக, நடமாடும் கால்நடைப் பிரிவுகளும், நடமாடும் கால்நடை மருந்தகங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

தமிழகத்தில் 54 நடமாடும் கால்நடைப் பிரிவுகள், ஒவ்வொன்றும் 1 கால்நடை உதவி மருத்துவர் தலைமையில், தேவையான பணியாளர்களுடனும், ஊர்தியுடனும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டு வருகிறது. இம்மாதிரியான வசதிகள் மக்கள் இருக்கும் இடத்திலேயே கிடைப்பதால், பொது மக்களிடையே நல்ல வரவேற்புள்ளது.

நடமாடும் மருந்தகங்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் அந்தந்த ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்டு கால்நடை பராமரிப்புத் துறையின் விரிவாக்க அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. ஊராட்சி ஒன்றியத்தில் அன்றாடப் பணி நீங்கலாகவும், அவர்களுக்கு உலக வங்கித் திட்டத்தின் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக பலவகையான உபகரணங்கள் இப்பணிக்காக வழங்கப்பட்டுள்ளன.

**(இ) கிளை நிலையங்கள்**

கால்நடைக் கிளை நிலையங்கள் கால்நடை ஆய்வாளர்கள் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. கிளை நிலையங்களில், நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதலுதவியும், செயற்கைமுறை கருவூட்டல் பணியும், கருவுற்ற கால்நடைகள் கவனிப்பும், கிளை நிலைய எல்லையில் உள்ள கால்நடைகளின் வருடாந்திரக் கணக்கெடுப்பு பணியும் நடைபெற்று வருகிறது. உதவி இயக்குநர் மற்றும் கால்நடை உதவி மருத்துவரின் தொழில்நுட்ப ஆலோசனைப்படி நோய்க் கிளர்ச்சி ஏற்பட்டுள்ள பகுதியில் தடுப்பூசிப் பணியும், குடற்புழு நீக்கப் பணிக்காகவும் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள். மாநிலத்தில் 2126 கால்நடைக் கிளை நிலையங்கள் பல்வேறு பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றன.

செயற்கைமுறை கருவூட்டல் பணியை அதிக அளவில் மேற்கொள்ள கிளை நிலையம் ஒன்றுக்கு ஒரு பார்வைக் கிளை நிலையம் வீதம்

[1999 ஏப்ரல் 19

2126 பார்வைக் கிளை நிலையங்கள் இருக்கின்ற பணியாளர்களின் பணியைப் பயன்படுத்தியே செயல்படுத்தி வருகிறது.

**2. நோய்த்தடுப்பு, ஆய்வு, கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்**

கால்நடைகளைப் பொறுத்தவரையில் நோயானது பெருக்கத்திற்கு தடையாகவும், பொருளாதார இழப்பும் ஏற்படுத்துகிறது. நோயினை கட்டுப்படுத்துவது என்பது அந்த நோயின் அறிகுறியை நோய் ஆய்வு மூலம் அறிவதாகும். முன்கூட்டியே துல்லியமாக நோயினைக் கண்டுபிடித்தல் எந்த நோயையும் விரைவாகக் கட்டுப்படுத்தலுக்கு முக்கியப் பங்கினை வகிக்கின்றது. மேலும் கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு ஏற்படும் தொற்றுநோயினை வெற்றிகரமாகச் சிறந்த தடுப்பூசிப் பணியின் மூலம் கட்டுப்படுத்தலாம்.

மாட்டினங்களில் ஏற்படும் நோய்களில் கொடூரமான நோய் கோமாரி நோயாகும். இது உயிரியல் மற்றும் பொருளாதார ரீதியாகவும், இழப்பினை ஏற்படுத்துகின்றது.

கால்நடைகளின் உரிமையாளர்கள் நோயுற்ற கால்நடைகளைக் குணப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றனர். ஆனால், நோய்த் தடுப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோய் வராமல் பாதுகாக்க அதிக அக்கறை செலுத்துவதில்லை. இத்துறை மட்டுமே தேவையான நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோயினை அறவே ஒழிக்கப் பாடுபடுகிறது.

(அ) நோய்த்தடுப்பு

"நோய்வரும் முன் காத்தல்" போன்ற சொல்லுக்கிணங்க இத்துறையில் கால்நடைகள், கோழியினங்கள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளுக்கு முக்கியத்துவம் தந்து நோய்த் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஆ. நோய்க் கடுங்கண்காணிப்பு மற்றும் தொற்று நோய் தகவல் முறை:**

கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்றுநோய்களை முன்கூட்டியே கண்டறிந்து அதற்கு ஏற்ப பலவகையான பாக்டீரியா நோய்கள், வைரஸ் நோய்கள், ஒட்டுண்ணி நோய்கள், புரோட்டோசோவல் நோய்கள், ரிக்கட்சியல் நோய்கள் இதனடிப்படையில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மாநிலத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தொற்று நோய்ப் பகுதிகளில் உள்ள விவரங்களையும் தன்மைகளையும் பெற்று,



1999 ஏப்ரல் 19]

நோய் அறவே ஒழிக்கப்படுகிறது. கிளர்ச்சி ஏற்படும் காலங்களிலே களப்பணி அலுவலர்களுக்குத் தகுந்த முறையில் நோயின் தன்மைகளைப் பற்றி எச்சரித்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொண்டு, தடுப்பூசிப் பணியினைத் தொற்று நோய்ப் பகுதியிலிருந்து கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவின் முக்கியப் பணிகளாவன:

1. நோய்க் கிளர்ச்சி ஏற்படக்கூடிய இடங்களில் நோய்க்கான காரணங்களை ஆராய்ந்துக் களப்பணி அலுவலர்களுக்குத் தகுந்த முறையில் எச்சரித்தும் உதவியும் செய்து வருகிறது.

2. தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய காரணங்களை முன்கூட்டியே கண்டறிந்து, அதைத் தவிர்க்கும் நோக்குடன் தடுப்பு வழிமுறைகளைக் குறித்த காலத்தில் மேற்கொள்ளுதல்.

3. அப்பகுதியினை ஆய்வு செய்து நோய்க் கிளர்ச்சியின் தன்மையை வரைபடம் மூலம் விளக்குதல்.

4. உடனடியாக நோயின் தன்மையைக் கண்டறிந்து அதற்குச் சரியான மருத்துவ சிகிச்சை அளித்தல்.

5. காசநோய், ஜோன்ஸ் நோய், கருச்சிதைவு மற்றும் மடிவீக்க நோய் ஆகியவைகளைக் காலமுறைப்படி பரிசோதனை செய்தல்.

6. சென்னை, சைதாப்பேட்டை தொடர்பு ஆய்வுக்கூடம் அல்லது இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய உதவியுடன் கோமாரி நோயின் அறிகுறிகளைக் கண்டறிந்து நோய்க் கிளர்ச்சியின் தன்மையை அறிந்து கொள்ளுதல்.

7. தொற்று நோய் தொடர்புடைய பலவகையான நோய்களின் (பராமரிப்புக் குறைவினால் ஏற்படும் நோய்கள் மற்றும் தொற்று நோய்கள்) கிளர்ச்சி குறித்து மண்டல அளவிலான மண் வளத்துடன்கூடிய வரைபடம், மாவட்ட அளவில் வரைந்து அந்தந்த பகுதியில் குறைவாகவுள்ள தாது உப்புச் சத்துக்கள் முதலியவைகளைக் குறித்தும் தயாரிப்பது.

இதனடிப்படையில் கால்நடை நோய்ப்புலனாய்வுப் பிரிவுகள் கீழ்க்கண்ட 15 இடங்களில் செயல்பட்டு வருகின்றன :

1. வேலூர்
2. மதுரை

[1999 ஏப்ரல் 19

3. திருநெல்வேலி
4. உதகமண்டலம்
5. கடலூர்
6. சேலம்
7. திருச்சிராப்பள்ளி
8. கோயம்புத்தூர்
9. தஞ்சாவூர்
10. சிவகங்கை
11. காஞ்சிபுரம்
12. ஈரோடு
13. திண்டுக்கல்
14. தூத்துக்குடி
15. விழுப்புரம்

கால்நடை நோய்க் கடுங்கண்காணிப்பு பிரிவு ஒன்று இத்துறையில் செயல்பட்டு, நோயின் தாக்குதல், விவரங்களைச் சேகரிப்பு செய்து வருகிறது. கால்நடை நோய் பற்றிய தகவல் அறியும் முறை மத்திய அரசின் தேசிய தகவல் மையம் மூலமாக மாவட்டத் தலைநகரங்களுடன், மாநிலத் தலைமை நிலையத்துக்குத் தொடர்பு கொண்டு இணைப்பு மூலம் அறியப்பட்டு வருகிறது. இம்முறையினால் நோயின் தாக்குதல் உடனுக்குடன் அறியப்பட்டு அந்தப் பகுதியில் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு, நோயினைக் கட்டுப்படுத்தி அவற்றினை அறவே ஒழிக்க உதவியாக இருக்கின்றது.

தடுப்பு மருந்துகள் கால்நடை மற்றும் கோழிகளின் உயிர்காக்கும் மருந்துகள் வேலூர் மாவட்டத்தில், இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் 7 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகளும், 11 வகையான வைரஸ் தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு:

நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள்

1. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆலம் பிரசிபிடேட்)
2. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (ஆயில் அட்ஜூவண்ட்)



1999 ஏப்ரல் 19]

3. மாட்டின நிணநீர் சுரப்பி நோய் தடுப்பு மருந்து
4. சப்பை நோய் தடுப்பு மருந்து
5. துள்ளுமாரி நோய் தடுப்பு மருந்து
6. அடைப்பான் ஸ்போர் தடுப்பு மருந்து
7. கருச்சிதைவு நோய் தடுப்பு மருந்து

வைரஸ் நோய் தடுப்பு மருந்துகள்

1. திசுவளர் வெக்கை நோய் தடுப்பு மருந்து
2. ஆட்டம்மை தடுப்பு மருந்து
3. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (கே)
4. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (லசோட்டா)
5. இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்து (எப்)
6. திசு வளர் கோழியின அம்மை நோய் தடுப்பு மருந்து
7. வாத்துக்கழிச்சல் நோய் தடுப்பு மருந்து
8. மேரக்ஸ் நோய் தடுப்பு மருந்து
9. வெறிநாய்க்கடி நோய் தடுப்பு மருந்து
10. நாய் டிஸ்டெம்பர் நோய் தடுப்பு மருந்து
11. கோமாரி நோய் தடுப்பு மருந்து (மோனோவெலண்ட்)

ஆ. நோய் ஆய்வு

வான்புகழ் வள்ளுவரின் கூற்றுப்படி

நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

இத்துறை, காலத்தே நோயின் தன்மை உணர்ந்து தேவையான கீழ்க்கண்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் நோய் கண்டறியும் பரிசோதனை நிலையம் நான்கும், தொற்று நோய் கண்டறியும் பிரிவுகள் நான்கும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நோய் கண்டறியும் பரிசோதனை மூலமாக களத்தில் உள்ள கால்நடை உதவி மருத்துவர்கள், நோய் கண்டறிதலில் உதவி செய்யும் காலங்களில், தொற்றுநோய் கண்டறியும் பிரிவு, பல்வேறு விதமான நோய்களின் தன்மைகளை ஆய்ந்து, அவைகளிலிருந்து கால்நடைகளை அதிக அளவில் தாக்கக்கூடிய தொற்றுநோய்களை மாநிலத்திலிருந்து அறவே ஒழிக்கப் பாடுபடுகிறது.

கோழிகளின் நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் இரண்டு செயல்படுகின்றன. ஒன்று நாமக்கல் மாவட்டம் ஆண்டலூர்கேட்டிலும், மற்றொன்று ஈரோட்டிலும், அந்தப்பகுதி கோழி வளர்ப்பு விவசாயிகளுக்கு பேருதவியாக நோய் கண்டறிதல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது.

நான்கு நடமாடும் நோய் ஆய்வுக்கூடங்கள் மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு நிரந்தர வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இவ்வகை நடமாடும் ஆய்வுக்கூடங்களுக்கு எல்லா வகையான ஆய்வுக்கூட சாதனங்கள் உள்ளன. நோய் தாக்கிய இடங்களுக்கு உடனடியாக சென்று, அவ்விடங்களிலேயே நோய் குறித்து ஆய்வு மேற்கொண்டு, மாதிரிகளை மேற்கொண்டு ஆய்விற்காக சேகரிப்பு செய்கிறார்கள்.

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணிகளை ஆய்வு செய்தல், நோய் கண்டறிதல் மற்றும் அதன் தொடர்பான புலனாய்வு பணிகளில் உதவிடவும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவ வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இத்துறையில், 714 (மைக்ராஸ்கோப்) நுண்ணுயிர் ஆய்வு உபகரணம் கால்நடை நிலையங்களில் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளின் நோய் அறிய நோய்கண்ட இடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

### (இ) நோய்க்கட்டுப்பாடு

#### கோமாரி நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

கோமாரி நோய் ஒரு நுண்ணுயிர் கிருமிகளினால் ஏற்பட்டு, நோயின் பாதிப்பினால் கால்நடைகளுக்கு பேரிழப்பு ஏற்பட்டு, பொருளாதார





இழப்பையும் ஏற்படுத்துகிறது. நல்ல திறன் வாய்ந்த உயரின மரபு வழியைச் சார்ந்த கால்நடைகளின் உற்பத்தியானது இந்நோயின் கிளர்ச்சியினால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. நல்ல மதிப்புள்ள கால்நடைகளை இக்கொடிய நோயின் பாதிப்பிலிருந்து காக்க இத்துறையானது ஊசி மருந்தின் விலையில் 50 சதவீதம் மானியமாக அளித்து ஏழை வேளாண் குடிமக்களின் கால்நடைகளுக்கு தடுப்பூசித் திட்டம் செயல்படுத்தி வருகிறது.

#### நோயற்ற மண்டலம்

கால்நடை மற்றும் கால்நடை பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இந்நாட்டின் தென்பகுதியில் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கால்நடைகளை பெரிதும் தாக்கக்கூடிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நோய்களான வெக்கை நோய் மற்றும் கோமாரி நோய் தாக்காவண்ணம் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள் விற்பனையை வெளிநாட்டு சந்தைக்கு வலுப்படுத்தவும், அதிகரிக்கவும் நோயற்ற பகுதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, திட்டப் பகுதியில் மற்றும் அதனைச் சார்ந்த திருநெல்வேலி மாவட்டத்தில், 40 கிலோ மீட்டர் உள்ளடக்கிய பகுதியில் முறையான தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தினை ஒட்டிய எல்லையோரப் பகுதியில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, நுழையும் கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. இத்திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் 29-10-1984 முதல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

### (ஈ) நோய் அறவே ஒழிப்பு

வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் இரண்டாவது 5 ஆண்டு திட்ட காலத்தில் இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இந்நோயைத் தடுக்க வெக்கை நோய் தடுப்பூசிப் பணி, 10 வெக்கை நோய் கண்காணிப்புப் பிரிவுகள், 16 வெக்கை நோய் குழுக்கள் மற்றும் எல்லையோரப் பகுதிகளில் உள்ள 10 கால்நடை சோதனைச் சாவடிகள் மூலமாக காலமுறைப்படி மாநிலத்திற்கு உள்ளே வரும் மற்றும் வெளியே செல்லும் கால்நடைகளுக்கும் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

[1999 ஏப்ரல் 19

தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின்படி 1993-94 முதல் 1995-96 வரை 100 சதவீத தடுப்பூசிப் பணி தமிழ்நாட்டிலுள்ள 14 எல்லையோர மாவட்டங்களில் போடப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மற்ற மாவட்டங்களில் 100 சதவீத தடுப்பூசிகள் போடப்படும் பணி மேற்கொள்ளப்பட்டது. எல்லையோர மாவட்டங்களில் தீவிர தேடுதல் பணிகளின் மூலம் தடுப்பூசிகள் போடப்பட்டது.

தடுப்பூசிப் பணியானது 31-12-1997-ல் முடிக்கப்பட்டது. தற்போது நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என தீவிர கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சீரோ கடுங்கண்காணிப்பு பணியின் மூலமாக தேர்வு செய்யப்பட்ட கால்நடைகளின் நோய் தடுப்புத் திறன் அளவு கண்டறியப்பட்டு வருகிறது.

இத்துறையின் கடும் முயற்சியின் விளைவாக செப்டம்பர் '95 முதல் இம்மாநிலத்தில் வெக்கை நோய்க் கிளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை. வரும் ஆண்டுகளில் தமிழகம் வெக்கை நோயில்லா மாநிலமாக அறிவிக்கப்படும்.

## பகுதி - 4

## விரிவாக்கப்பணி மற்றும் கால்நடை பொது சுகாதாரம்

பொதுமக்கள் கால்நடை பராமரிப்புத் துறையின் நவீன அறிவியல் தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சியினை கால்நடைப் பராமரிப்பில் கையாள்வது குறித்து நன்கு தெளிவாக புரியும் வண்ணம் துறையின் விரிவாக்கப் பணி வாயிலாக விளம்பரம் மற்றும் பிரச்சாரம் மூலம் அறிய வகை செய்துள்ளது.

பொதுமக்கள் தங்களுடைய கால்நடைகள் மற்றும் கோழியினங்களை நன்கு பராமரிக்கவும், கால்நடைகளை நல்ல ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளவும் அவைகளை நன்கு பயிற்றுவிக்க சிறந்த சாதனமாக கால்நடை கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகள் விளங்குகிறது.

### 1. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்

விளம்பரம் மற்றும் பிரச்சாரம் ஒரு தலைசிறந்த பணியாக இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து வாய்ப்பையும் பயன்படுத்தி விவசாயிகளுக்கு அறிவியல் பூர்வமான தொழில்நுட்ப



1999 ஏப்ரல் 19]

விவரங்களை வழங்கி வருகின்றனர். எல்லா வகையான அதிநவீன யுக்திகளையும், தொழில் நுணுக்கங்களையும், செயல்விளக்க முறையில் விவசாயிகளுக்கு விளக்கப்படுவதால், விவசாயிகளிடையே ஓர் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அவ்வப்போது நடைபெற்றுவரும் விழாக்களிலும், கண்காட்சியிலும், "பார்ப்போம், தெரிந்து கொள்வோம்" என்ற நிகழ்ச்சியின் மூலமாக இத்துறை கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறது. உள்ளூர் விழாக்களிலும், பொருட்காட்சியிலும் கலந்து கொண்டு, கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன தொழில் நுட்பங்களையும், பொது சுகாதாரம் குறித்தும், விவசாயிகளுக்கு விளக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் இத்துறை கலந்து கொள்கிறது. பல வகையான தகவல் ஒலிபரப்பு முறைகளான தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி மற்றும் நாளிதழ்கள் மூலமாகவும், விவசாயிகளுக்கு அவ்வப்போது துறையில் ஏற்படும் தொழில்நுட்ப மாற்றங்களையும், நிகழ்வுகளையும் தெரிவிக்கின்றன.

கால்நடை பராமரிப்பு மற்றும் பசுந்தீவன அபிவிருத்தி குறித்து இத்துறை 19 வகையான வண்ணத் திரைப்படங்கள் தயாரித்துள்ளது.

மேற்கண்ட திரைப்படங்கள் மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெறும் இடங்களில் திரையிட்டு காண்பிக்கப்படுகிறது. மேலும், பொருட்காட்சிகளிலும், திருவிழாக்காலங்களிலும், உள்ளூர் கால்நடை சந்தைகளிலும் திரையிட்டு காண்பிக்கப்படுகிறது. இத்துறையினால் ஒவ்வொரு ஆண்டும் 30,000 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள் ஆகியவைகளும் இத்துறையினால் விநியோகிக்கப்படுகிறது. கீழ்க்கண்டுள்ள துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சிறு புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தி

கலப்பினங்கள் பராமரிப்பு

பசுந்தீவன அபிவிருத்தி

யூரியா மூலம் ஊட்டமேற்றிய வைக்கோல் தயாரித்தல்

பசுந்தீவன உற்பத்தி மற்றும் பால் உற்பத்தி

செயற்கைமுறை கருவூட்டல்

இடையே தீவனப்பயிர் உற்பத்தி செய்தல்

வறண்ட பகுதிகளில் தீவனப் பயிர் சாகுபடி செய்தல்

கன்று வளர்ப்பு

துள்ளுமாரி

கோழிகளுக்கு போடும் ஊசி மருந்துகளின் அட்டவணை

வெள்ளாடு வளர்ப்பு

காடை வளர்ப்பு

முயல் வளர்ப்பு

கால்நடைகளின் மூலமாக மனிதனுக்கு பரவும் நோய்கள்

இத்துறையில் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பிரிவு ஒன்று அச்சுக்கூட வசதியுடன், இத்துறைக்குத் தேவையான விளம்பரம் மற்றும் விரிவாக்கப் பணிக்கு தேவையான அச்சடிப்புப் பணிக்காக சைதாப்பேட்டையில் (சென்னை) செயல்பட்டு வருகிறது. இந்த அச்சுக்கூடம் நவீன சாதனங்களான, லேசர் பிரிண்டிங் மற்றும் டெஸ்க் டாப் பப்ளிஷிங் (Desk Top Publishing) போன்ற வசதிகளைக் கொண்டுள்ளது. இத்துறை 1998-99 ஆம் ஆண்டு 3 பொருட்காட்சிகளில் பங்கேற்றும், 194 தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளது.

**2. மக்கள் தொடர்பு முகாம்**

இத்துறையானது மக்கள் தொடர்பு முகாம்களை தொடர்ந்து குக்கிராமங்களில் முன் அறிவிப்பு செய்து நடத்தி வருகிறது. வைக்கோலின் தரத்தை யூரியாக்கொண்டு சத்துமிக்கதான வைக்கோலாக மாற்றக்கூடிய செயல்முறை விளக்கங்களையும் (யூரியா ஊட்டமேற்றிய வைக்கோல்), கால்நடைகளை முறையான காலங்களில் இனவிருத்தி செய்தல், சுகாதார முறைப்படி இறந்த கால்நடைகளின் கழிவுப் பொருட்கள் மற்றும் சாணங்களை அப்புறப்படுத்துதல், தொற்று நோய்கள் பரவுவதை காலத்தே தடுத்தல், தற்கால நவீன கால்நடை





யுக்திகள் அடங்கிய திரைப்படங்களை திரையிட்டும் மக்கள் தொடர்பு முகாம்களில் பொதுமக்கள் அறியும் வண்ணம் நடத்தப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் 34189 மக்கள் தொடர்பு முகாம்களை இத்துறை 28-2-99 முடிய நடத்தியுள்ளது.

**3. வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புத் திட்டம்**

பொதுமக்களின் நலனைக் கருதி இத்துறை முக்கியமாக இப்பணியை மேற்கொண்டுள்ளது. வெறிநாய்க்கடி ஒரு அபாயகரமான நோய். நாய்களில் வெறிநோய் ஏற்படாமல் தடுப்பதுடன் அது மனிதர்களுக்கு பரவாமல் தடுக்க, வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புத் திட்டம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக எல்லா வளர்ப்பு நாய்களுக்கும் காலமுறைப்படி வெறிநோய் தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்ட செயலாக்கத்திற்குப் பின் மனிதர்களை தாக்கக்கூடிய வெறிநாய்க்கடி நோய் இப்பகுதிகளில் வெகுவாக குறைந்துள்ளது.

வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புத் திட்டப் பணிகளின் முக்கிய நோக்கங்கள்.—

1. கட்டாய நோய் தடுப்பு முறையைக் கையாள வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி மருந்தின் விலையை மட்டும் கட்டணமாக வசூலித்து தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

2. நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

3. பொதுமக்களிடையே இந்நோய் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலம் தகுந்த விளம்பரம் செய்தல், நாய் கண்காட்சி நடத்துதல்.

**4. பெருமளவில் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்**

இத்துறை கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாக தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் செய்து வருகிறது. அனைத்து கால்நடைகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. அடைப்பான், புருஸெலோசிஸ், டெட்டனஸ், நாடாப்புழு நோய் போன்ற அபாயகரமான நோய்களைத் தடுத்து, மேலும் பரவாமல்

[1999 ஏப்ரல் 19

தடுக்கப்படுகிறது. முறையான குடற்புழு நீக்கம் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்கு பரவக்கூடியதும், குடற்புழுவினால் மனித உடல் நலம் பாதிப்பு ஏற்படாவண்ணம் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ குடற்புழுக்களின் வளர்ச்சி தவிர்க்கப்படுகிறது.

**5. இறைச்சித் தரம் ஆய்வு:**

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 183 பதிவு பெற்ற இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் இறைச்சி எலும்பு நோய்கள் மனிதர்களுக்குப் பரவாமல் தடுக்கப்படுகிறது. பொதுநலப் பணிகளில், இந்தப் பணி ஒரு தலையாய பணியாக இத்துறை மேற்கொண்டு வருகிறது.

**பகுதி - 5**

**1999-2000 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:**

1. ரூ. 40.60 இலட்சம் செலவில் புதிதாக 10 கால்நடை மருந்தகங்களை திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. ரூ. 9.00 இலட்சம் செலவில் பசுந்தீவன உற்பத்தி நிலையங்களில் பசும்புல் விதை உற்பத்தியினை அதிகரிக்க ஆழ்துளை குழாய் கிணறு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. ரூ. 20.00 இலட்சம் செலவில் இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையத்தில், ஊசி மருந்து தயாரிப்பு பிரிவினை விரிவுபடுத்துதல்.

4. ரூ. 10.00 இலட்சம் செலவில் கணிப்பொறி மற்றும் அதன் தொடர்புடைய சாதனங்கள், தலைமையிடம் மற்றும் குறிப்பிட்ட மண்டல அலுவலகங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. ரூ. 7.00 இலட்சம் செலவில் ஒரத்தநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு புதிய கட்டடம் கட்டவும், பழைய கட்டடத்தைப் புதுப்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 19]

**தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்:**

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) 12-07-1973 அன்று ஒரு அரசு நிறுவனமாக ரூ. 100.00 இலட்சம் மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 200.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது. தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 126.68 இலட்சம் ஆகும்.

2. தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு முட்டைகள் வழங்கும் பணி மற்றும் அனைத்து சத்துணவு மையங்களுக்கு தனியார் ஒப்பந்தக்காரர்கள் மூலம் வழங்கப்படும் முட்டைகளின் தரத்தைக் கண்காணிக்கும் பணியே தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் தற்போதைய முக்கியப் பணிகளாகும். மேலும், இக்கழகம் முட்டைகள், உயிர்கோழிகள், கோழி இறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனையிலும் ஈடுபட்டுள்ளது.

3. கடந்த பல ஆண்டுகளாக இக்கழகத்தின் நிதி நிலைமையில் உயர்வும் தாழ்வும் ஏற்பட்டுள்ளன. சமீப காலத்தில் ஏற்பட்ட மிகையான நிர்வாக செலவு, குறைவான விற்பனை மற்றும் கோழிக் குஞ்சு உற்பத்தி செலவின அதிகரிப்பு ஆகிய பல காரணங்களினால் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டது. இதனால் இந்நிறுவனம் 31-3-98 முடிய ரூ. 359.58 இலட்சம் தோராயமாக நட்டம் அடைந்துள்ளது.

4. அரசு நிறுவனங்களின் செயல்பாடுகளை அறிய திரு. எஸ்.வி.எஸ். இராகவன் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு இக்கழகத்தின் செயல்பாடுகளை ஆராய்ந்து தனது பரிந்துரையில் இக்கழகத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் இணைத்து ஒரு கூட்டுத் துறை திட்ட முயற்சிக்கு வாய்ப்பளித்து இந்த கழகத்தின் முழுத் திறனை முழுமையாகப் பயன்படுத்தலாம். அவ்வாறு செயல்படுத்த இயலவில்லையாயின், ஏற்கெனவே இராமநாதன் குழு பரிந்துரைத்தப்படி இந்நிறுவனத்தை மூடிவிட்டு இதனுடைய விரிவாக்கப் பணிகளை கால்நடைப் பராமரிப்புத் துறையிடம் ஒப்படைககலாம் என பரிந்துரைத்துள்ளது.

5. இந்நிறுவனத்தின் எதிர்காலம் குறித்து ஆய்வு செய்து அரசு தொடர்ந்து இழப்பு ஏற்படாமலும், பணியாளர்களின் நலன்கள் பாதுகாக்கும் வகையிலும் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு விரைவில் தீர்வு காணப்பட உள்ளது. அதே சமயம் இந்நிறுவனத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகள் யாவும் தடையின்றி செயல்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்.**

**பொது:**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், உயர்கல்வி அளிக்கவும், சிறந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், கால்நடை உற்பத்தியை உயர்த்துவதற்காக கால்நடைப் பண்ணையாளர்கள், கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை உடனுக்குடன் வழங்கி வருகின்றது. அத்துடன், மக்களுக்கு கிடைக்கக்கூடிய ஊட்டச்சத்து மிக்க உணவுகளின் உற்பத்தியைப் பெருக்கி அதன்வழி, தமிழகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவி வருகின்றது.

இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல், மீன்வளம், அடிப்படை அறிவியல் ஆகிய மூன்று புலன்களை கொண்டுள்ளது. மூன்று கல்லூரிகளையும், ஆறு ஆராய்ச்சி நிலையங்களையும் கோழி நோயாய்வுக் கூடம் ஒன்றையும், கால்நடை தீவன தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் ஒன்றையும், பதினேழு பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களையும், இரண்டு வேளாண் அறிவியல் மையங்களையும், ஐந்து மீன்வள ஆராய்ச்சி மையங்களையும், மூன்று உழவர் பயிற்சி நிலையங்களையும் தன்னகத்தே கொண்டு இப்பல்கலைக்கழகம் ஒரு வலுவான உள்கட்டமைப்பு வசதிகளை தமிழகமெங்கும் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. இவ்வாண்டில் திண்டுக்கல் மற்றும் செய்யாறு ஆகிய இடங்களில் இரண்டு புதிய பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் திறக்கப்பட உள்ளன.



நிதி நிலைச் செயல்பாடு (ரூபாய் இலட்சத்தில்) 1997-98 மற்றும் 1998-99-ல் பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையின் விவரம் பின்வருமாறு:-

| | நிதிநிலை மதிப்பீடு 1997-98 (நிகழ்ந்த செலவு) | திருத்திய மதிப்பீடு 1998-99 | 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடு |
|---|---|---|---|
| திட்டம் | 1152.91 | 1350.34 | 1456.47 |
| சாராதவை திட்டம் | 1276.63 | 1360.68 | 459.64 |
| வே.ம.வ.மே. திட்டம் | 464.26 | 66.55 | 1480.40 |

**திட்டம்:**

வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உயர் பயிற்சி ஆய்வுப் பயணம் மேற்கொள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்துடன் 121 தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்நாட்டில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர்.

| அனுப்பப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை | திட்ட விவரம் | கால அளவு |
|---|---|---|
| மூன்று பேர் | பயிற்சிக்காக | 12 மாதங்கள் |
| ஐந்து பேர் | பயிற்சிக்காக | 6 மாதங்கள் |
| பதினொரு பேர் | பயிற்சிக்காக | 3 மாதங்கள் |
| ஆறு பேர் | ஆய்வுப் பயணம் | 2 முதல் 4 வாரங்கள் வரை |

**கல்வி:**

இப்பல்கலைக்கழகத்தின் மூன்று கல்லூரிகளிலும் தற்சமயம், பல்வேறு நிலைகளில் 1,558 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். தற்பொழுது 388 மாணவியர்கள் (25 விழுக்காடு) இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருவது ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

[1999 ஏப்ரல் 19

*மாணவர் சேர்க்கை:*

| பட்ட வகுப்புகள். | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை. | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி. | மொத்தம். |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்சி., | 147 | 80 | .. | 227 |
| பி.எப்.எஸ்சி., | .. | .. | 25 | 25 |
| எம்.வி.எஸ்சி., | 97 | 64 | .. | 161 |
| எம்.எப்.எஸ்சி., | .. | .. | 22 | 22 |
| பி.எச்டி (கால்நடை மருத்துவர்) | 87 | 10 | .. | 97 |
| பி.எச்டி (மீன்வளம்) | .. | .. | 13 | 13 |
| முதுநிலைப் பட்டயம் | 15 | .. | .. | 15 |
| மொத்தம் .. | **346** | **154** | **60** | **560** |

**ஆராய்ச்சி :**

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் கால்நடை மற்றும் மீன் உற்பத்தி மற்றும் உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக 70 சிறப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கீழ்க்கண்ட பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ரூபாய் 1221 இலட்சம் வரை பெற்று ஐம்பத்தைந்து ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்
2. உயிர் தொழில் நுட்பவியல் துறை
3. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை
4. ஊரக பகுதி மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம்
5. அணு சக்தித் துறை
6. தேசிய தரிசுநிலம் மேம்பாட்டு வாரியம்
7. தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம்



1999 ஏப்ரல் 19]

8. கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை
9. தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றம்
10. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்
11. இந்திய விலங்கு நல வாரியம்
12. தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி
13. குழும அமைப்புகள்

கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியலில் ஐந்தும், மீன்வள அறிவியலில் இரண்டுமாக ரூ. 69.90 இலட்சம் அளவில் ஏழு புதிய ஆய்வுத் திட்டங்கள் 1999-2000 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ளது. சென்ற ஆண்டில் நெருப்புக்கோழி ஆய்வுப் பிரிவு ஒன்றை காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் அமைக்க அனுமதிக்கப்பட்டு அதற்கான வேலியிடும் பணி நடைபெற்று வருகிறது. நெருப்புக்கோழி, குஞ்சுகள் மற்றும் முட்டைகள் ரூ. 1.00 இலட்சத்திற்கு வாங்க ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்கா நாடுகளிடமிருந்து தருவிக்கப்படவுள்ளது. இவ்வாண்டு, இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதற்காக, உள்ளூர் வெள்ளாட்டுடன் கலப்பினம் செய்து வளர்க்க வெளிநாட்டு போயர் இன வெள்ளாட்டுப் பிரிவு ஒன்று அமைக்கப்பட உள்ளது. கால்நடைகள், பறவைகள் மற்றும் மீன்களைத் தாக்கும் நோய்களை ஆராய்ந்திட ஆய்வுக்கூட வசதியமைப்பு, கால்நடை உற்பத்திப் பொருட்களில் எஞ்சியுள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளை கண்டறிதல் மற்றும் காளான் நச்சுக்களை மதிப்பிடுதல், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறைச்சி தொழில்நுட்பம் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் சிறிய பிராணிகளுக்கான ஒரு அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்தல் ஆகியவை இவ்வாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் உலக வங்கி நிதி உதவியுடன் தேசிய வேளாண் தொழில்நுட்பத் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகின்றது. கால்நடை உயிர் தொழில் நுட்பவியல் மற்றும் நோய் எதிர்ப்பு நிலை ஆகியவற்றில் சிறப்பாக செயல்படும் மையமாக இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பலகலைக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்துடன் பதினைந்து உடனியங்கு ஆராய்ச்சிப் பிரிவுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கான விரிவான ஆராய்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

[1999 ஏப்ரல் 19

பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டு முயற்சி அடிப்படையில் அகமதாபாத் கடிலா ஹெல்த் கேர் நிறுவனம் மூலம் ரூ. 22.99 இலட்சம் பெற்று வெறிநோய்க்கு எதிரான மரபுக்கூறு ஒருங்கிணைப்பு மூலம் புதிய தடுப்பூசி உருவாக்கும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை மருந்தாக்க இயலில் ஆராய்ச்சிக்கு ஊக்கம் கொடுக்கும் மூலமாக, இத்திட்டத்திற்கு ரூ. 48.60 இலட்சம் நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளது.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த ஐதராபாத்திலுள்ள தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை நிறுவனத்துடன் 'கற்பிக்கும் முறை ஆற்றுப்படுத்தும்' (Teaching Orientation Programme) திட்டத்தின்கீழ், இப்பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஓர் உடன்படிக்கையில் பல்கலைக்கழகம் கையொப்பமிட்டுள்ளது.

**விரிவாக்கக் கல்வி :**

தமிழகத்திலுள்ள ஏழை எளிய மக்களின் பயன்பாட்டிற்காக, பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 27 மையங்களில் நடத்தப்படும் களநிலைப் பயிற்சிகள் மூலம், நவீன தொழில் நுட்பம் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பல தமிழக மாவட்டங்களிலுள்ள பிற்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளன.

ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த உழவர் பெருமக்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் மக்கள் தொடர்பு முகாம், பண்ணையைப் பார்வையிடல், கண்காட்சிகள், ஆலோசனை வழங்குதல், நோயைக் கண்டறிதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் மூலம் 12,332 உழவர் பெருமக்கள் பயனடைந்துள்ளனர். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் படித்த வேலையில்லாதோர் / பணியிலுள்ளோர்களுக்குக் கற்பித்திட, 'வணிக முறை கோழி உற்பத்தி' எனும் பயிற்சித் திட்டம் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, பத்திரிகை போன்ற பல்வேறு [illegible] தொடர்புச் சாதனங்கள் மூலம் நவீன தொழில்நுட்பங்கள் [illegible]ஆய்வகத்திலிருந்து உழவர்களின் இல்லங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வேளாண் பள்ளிப் பாடங்கள் உழவர்களுக்காக



1999 ஏப்ரல் 19]

நடத்தப்படுகின்றன. சென்ற ஆண்டில் மூன்று வேளாண் பள்ளிப்பாட வகுப்புகள் நடத்தப்பட்டன. "கறவை மாடு வளர்ப்பு", "வெள்ளாடு வளர்ப்பு" ஆகியவற்றில் தலா 127 பேர்களுக்கு இரண்டு சுயநிதி அஞ்சல் வழிக் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டன.

உழவர் பெருமக்களின் பயன்பாட்டிற்காக, நவீன தொழில்நுட்ப முறைகள் குறித்த கட்டுரைகள் அடங்கிய "கால்நடை கதிர்" தமிழிலும் மற்றும் "செய்தி மடல்" போன்றவை தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. அத்துடன் "செய்ரான்" எனும் ஆராய்ச்சி இதழும் வெளியிடப்பட்டு வருகின்றது.

**திட்டம் :**

பல்கலைக்கழகம், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூபாய் 2,780 இலட்சத்திற்கு மாறாக, ரூபாய் 4,657 இலட்சம் அளவிற்கு பயன்படுத்தி, 158 விழுக்காடாகத் தனது செயல்பாட்டில் பெரும் சாதனை படைத்துள்ளது. வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டம் உட்பட ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீடு ரூபாய் 9,365 இலட்சமாகும். இதில் முதல் இரண்டாண்டில் ரூபாய் 3,222 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டு உத்தேச மதிப்பீடு ரூபாய் 2,940 இலட்சமாகும்.

D
V211,31'N99
N99.732
221802

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.